கிருஷிகன்

325

(கிராம முன்னேற்ற இதழ்)

வன வளர்ப்பு மலர்

பயிர்த்தொழில் பண்ணை

மாத வெளியீடு

விலை ரூபாய் ஒன்று

வான்பொழிந்து வையகம் சிறந்து

பஞ்சமும் பட்டினியும்

பறந்தோட

கிருஷிகன்

வன மகோத்சவ விசேஷ மலர்

1953

FEB 1954

சமர்ப்பணம்

நமது நாட்டின் நலம் கருதி
நல்லதொரு மரங்களை நட்டு வளர்க்கும்
வனமகோத்சவ (மரம் நடும்) இயக்கத்திலே
ஈடுபடும் அனைவரது சேவைக்கும்
இம்மலரை சமர்ப்பணம்
செய்கிறோம்.

விலை ரூபாய் ஒன்று

(தபால் செலவு 0—1—3)

கிடைக்குமிடம் :

பயிர்த்தொழில் பண்ணை

ஹனுமந்தபுரம் - அன்னியூர் B. O. - விழுப்புரம் S. I. Ry.

வெட்டிய மரத்திற்கு உயிரூட்டினாள் ஔவையார்!

வாடிய முல்லைக்கு தேரீந்தான் பாரி வள்ளல்!

ஔவையும் பாரியும் பிறந்த நாட்டில்

உங்கள் கடமை என்ன?

கிருஷிகன்

வனமகோத்சவ விசேஷ மலரில் காணுங்கள்

அரிய ஆராய்ச்சிக்கட்டுரைகள், கவிதைகள், சுகாதாரம், வைத்தியம், கைத்தொழில், சிறு கதை, நாடகம், சித்திரப் படங்கள் பலவும் நிறைந்த விசேஷ வெளியீடு. ஆர்ட் மூவர்ண அட்டைப்படத்துடன்

டெமி 1/8 அளவு 100 பக்கங்கள்

விலை ரூபாய் ஒன்று.

கிருஷிகன்

1954ஆம் பஞ்சாங்க காலண்டர்

மூவர்ண கலர் படத்துடன் 1 பவுண்டு அட்டையில்
விவசாயிகளுக்குத் தேவையான பல அரிய விஷயங்களுடன்
புதிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது
விலை அணா எட்டு

உறுதியானது! அழகானது!

திருப்தியளிக்கக்கூடியது.

கிருஷிகன் பௌண்டன் பேனா

உயர்தர எபோனைட் பொருளினால் தயாரிக்கப்பட்டது
பேனா 1-க்கு விலை ரூ. 1—2—0

நேயர்களுக்கு அறிவிப்பு

1954 ஜயஹூ கிருஷிகன் காலண்டரும், பௌண்ட்டன் பேனுவும் தயாராகி நேயர்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. தற்கால தபால்பார்சல், ரிஜிஸ்டர் கட்டணங்கள் உயர்த்தப் பட்டிருப்பதாலும், பாக்கிங் செலவு அதிகமாவதாலும், பேனுவை பந்தோபஸ்தாக அனுப்பவேண்டி யிருப்பதாலும், தங்களுக்குத் தேவையான காய்கறி, தழை உர, மரவிதைகள் ரூ. 2—8—0க்கு குறையாமல் ஆர்டர் கொடுக்கும் (தபால் செலவுக்கு அனுப்பியிருக்கும்) நேயர்களுக்கு மட்டும் தபால் செலவின்றி கிருஷிகன் அழகிய 3 வர்ண நிரந்தர (Perpetual) காலண்டரும், பேனுவும் ரூ. 2—8—0 V P. P. மூலம் அனுப்பி வைக்கப்படும். சந்தா பாக்கியும் தபால் செலவும் அனுப்பாத நேயர்களுக்கு சந்தா, தபால் செலவு சேர்த்து V. P. P.ல் அனுப்பப்படும்.

நேயர்களின் சௌகர்யத்தை அனுசரித்து, சீமை வேலன், கிளிரிசிடியா, செஸ்பேனியா, மூங்கில், புங்கன், வாகை, சீமை வாகை, யந்தாரை, கொன்னை வேலன் தினுசுகள், சோல்டு மோஹர், அசோகு, பெல்டோபோரம், சவுக்கு, தேக்கு, சவுண்டல் போன்ற பலதினுசு மர விதைகள் 4 அணு பாக்கெட்டுகளாகவும், காய்கறி விதைகள் 2 அணு பாக்கெட்டுகளாகவும் தயாரித்து வைத்துள்ளோம். அதிகமாக தேவையுள்ளவர்கள் கிருஷிகன் ஏப்ரல்-மே இதழை பார்க்கவும்.

மானேஜர்,

கிருஷிகன்.

வெட்டிய மரத்திற்கு உயிரூட்டினாள் ஔவையார்!
வாடிய முல்லைக்கு தேரீந்தான் பாரி வள்ளல்!

ஔவையும் பாரியும் பிறந்த நாட்டில்
உங்கள் கடமை என்ன?

கிருஷிகன்

வனமகோத்சவ விசேஷ மலரில் காணுங்கள்

அரிய ஆராய்ச்சிக்கட்டுரைகள், கவிதைகள், சுகாதாரம், வைத்தியம், கைத்தொழில், சிறு கதை, நாடகம், சித்திரப் படங்கள் பலவும் நிறைந்த விசேஷ வெளியீடு. ஆர்ட் மூவர்ண அட்டைப்படத்துடன்

டெமி 1/8 அளவு 100 பக்கங்கள்

விலை ரூபாய் ஒன்று.

கிருஷிகன்
1954௵ பஞ்சாங்க காலண்டர்

மூவர்ண கலர் படத்துடன் 1 பவுண்டு அட்டையில்
விவசாயிகளுக்குத் தேவையான பல அறிய விஷயங்களுடன்
புதிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது

விலை அணா எட்டு

உறுதியானது! அழகானது!

திருப்தியளிக்கக்கூடியது.

கிருஷிகன் பௌண்டன் பேனா

உயர்தர எபோனைட் பொருளினால் தயாரிக்கப்பட்டது
பேனா 1-க்கு விலை ரூ. 1—2—0

விதைகள்

எங்களிடம் பலவிதமான உயர்தர உள்நாட்டு, வெளிநாட்டுக் காய்கறி விதைகளும், பூ விதைகளும், தழை உர விதைகளும், வேலிப்பயிர் விதைகளும், புல் விதைகளும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

நாங்கள் நன்கு தேர்ந்தெடுத்து பரிசோதிக்கப்பட்ட விதைகளையே விற்பனை செய்கிறோம்

வியாபாரிகளுக்குத் தக்க கழிவு தருகிறோம். எங்கள் விவரமான விலைப்பட்டிக்கு எழுத வேண்டுகிறோம்.

M. ஆறுமுகம்பிள்ளை சன்ஸ்,
விதைகள் வியாபாரம்,
243, காந்தி மார்க்கெட்,
திருச்சிராப்பள்ளி.

இண்டியன் பார்மிங்

(இந்திய விவசாயம்)

இந்திய விவசாய ஆராய்ச்சி குழுவினரால் பிரசுரிக்கப்படுவது
(ஆங்கில மாத வெளியீடு)

படித்துப் பாருங்கள்

இது விவசாயிகளின் சொந்த பத்திரிகை. இதில் விவசாய ஆராய்ச்சிகள், விவசாய முன்னேற்றத்திற்காக சர்க்காரும் மக்களும் செய்யும் முயற்சிகள் இவைகள் வெகு சரளமான பாஷையில் எழுதப்படுகிறது. மேலும் 'இந்த மாத விவசாயி', 'விவசாயிகளுக்கான குறிப்புகள்', 'கேள்வியும் பதிலும்' 'கால்நடை', 'மீன் வளர்ப்பு', 'வன விருத்தி', 'பயிர் பாதுகாப்பு' முதலிய கட்டுரைகளும் பிரசுரிக்கப்படுகிறது. தேசிய விஸ்தரிப்பு திட்டம், சமூக நல திட்டங்களைப்பற்றியும் விசேஷ விவரங்கள் வெளியிடப்படுகிறது. "இண்டியன் பார்மிங்" என்றாலே கிராமநல ஊழியர்களுக்கும், விவசாயிகளுக்கும் ஓர் பொக்கிஷம் என்று தான் பொருள்.

நல்ல ஆர்ட் காகிதத்தில் இரண்டு கலரில் சித்திரப்படங்களும் நிறைந்துள்ள

"INDIAN FARMING" "இந்தியன் பார்மிங்"

வருட சந்தா ரூ. 9. தனிப்பிரதி அணா 12.

—— கூப்பன் ——

Business Manager,

'INDIAN FARMING' 505, Arthur Road, Tardeo Bombay 7.

I am interested in Indian Farming. Kindly enroll me as a member and send the First issue by V. P. P. covering Annual/ Half yearly subscription.

Name:

Address:

கிருஷிகன்

(கிராம முன்னேற்றப் பத்திரிகை)
(பயிர்த்தொழில் பண்ணை வெளியீடு)

ஆசிரியர் :
A. S. வெங்கட் ராவ்.

சந்தா விபரம் :

வருட சந்தா	ரூ, 3—0—0
தனிப்பிரதி	ரூ. 0—4—0

மாதிரிப்பிரதி வேண்டுவோர் 0—5—0 ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

விளம்பர விகிதம்:

முழு பக்கம்	ரூ. 15—0—0
அரை ,,	,, 8—0—0
கால் ,,	,, 5—0—0

மானேஜர்
கிருஷிகன்
பயிர்த்தொழில் பண்ணை
ஹனுமந்தபுரம்
அன்னியூர் B. O. விழுப்புரம் S. Ry.

கிருஷிகனில் வெளியாகும் கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள் கற்பனையேயன்றி எவரையும் குறிப்பிடுபவைகளல்ல.

பொருளடக்கம்

1. தலையங்கம் ... 1
2. ஆசிரியர் குறிப்புகள் ... 4
3. காடு செழித்து நாடு வளம் பெற மரம் நடுவோம் வாரீர் ... 9
4. அறியாமையா? ஆத்திரமா? 23
5. எதிர்கால சுபிட்சத்திற்கு இன்று செடி நடுவோம் 25
6. வறுமையை நீக்க வன மகோத்சவம் ... 29
7. வனமகோற்சவம் வாழ்க! வாழ்கவே!! ... 30
8. காசநோய் ... 33
9. சாப்ரா சாயமரம் ... 37
10. வனமகோத்சவம் வளர்ந்த கதை ... 39
11. காட்டுவளமே— நாட்டுவளம் ... 42
12. மரங்களும் மருந்துகளும். 44
13. சீமை வேலன் ... 49
14. கிளரிசிடியா ... 52
15. நமது களஞ்சியம் ... 55
16. வனவளம் தரும் தொழில்வளம் ... 56
17. மழையை விருத்தி செய்வது சாத்தியமா? ...
18. வனங்களும் நமது தேசீய செல்வமும் ... 62
19. குடியானவனின் காடுகள் 64
20. உங்களுக்குத் தெரியுமா? 66
21. பாரதநாட்டு பயிர்த் தொழில் செய்திகள் ... 68
22. உணவும் விஞ்ஞானமும் 70
23. சாத்தியமா? ...
24. உழவினை செய்திடுவோம் 73
25. விருக்ஷங்களும் சோதிட சாஸ்திரமும் 74
26. மரம் செடி செழிக்க ... 75
27. குறிப்புகள் ... 76
28. மரங்களின் அட்டவணை 79
29. உழைப்பும் பலனும் (சிறுகதை) ... 93
30. தங்கப்பழம் (நாடகம்) ... 94



உதிர்ந்த மணிகள்

1925

எல்லாமத கோட்பாடுகளும் சமூக முன்னேற்றத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டதாகும். ஒவ்வொரு சமூகத்தினர் கடமையையும் வற்புறுத்துவதே அந்த சமூகத்தின் அடிப்படை லக்ஷியம். மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது "பசு" ஆகவே பசு வளர்ப்பு (கோ சம்ரக்ஷணம்) மத தர்மமாக்கப்பட்டது. உயிர் வாழ இன்றியமையாதது தண்ணீர். அதனுல்தான் குளம் கிணறு வெட்டுவதும் மததர்மமாக்கப்பட்டிருக்கிறது. இதைப்போலவேதான் மரம் நட்டு வளர்ப்பதும். இந்தியாவில் பல பாகங்களிலும் மரங்களை தெய்வமாக வணங்குவதும் மததர்மமாக்கப்பட்டுள்ளது. ஏனெனில் ஒரு நாட்டின் மழைவளம் அந்த நாட்டில் மரங்களை நட்டு வளர்ப்பதையும் வெட்டி அழிப்பதையும் தான் பொருத்திருக்கின்றது.

1947

மரம் நடும் விழாவை ஆரம்பித்தவர் வேடிக்கைக்காகவோ அல்லது பணக்காரர்களின் பொழுது போக்குக்காகவோ அதை ஆரம்பிக்கவில்லை. நாட்டின் மழைவளம், விவசாயம், பொருளாதாரம் விருத்தியாக்கப்பட, அவர்களைப் பார்த்து மற்றவர்களும் மரங்களை நட்டு வளர்க்கவேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதேயாகும்.

—மகாத்மாஜி.

THE KRISHIKAN

A Tamil Monthly Journal Devoted to Agriculture and Rural Welfare

கிருஷிகன்

(கிராம முன்னேற்றப் பத்திரிகை)

"இரவார் இரப்பார்க் கொன்றீவர் கரவாது
கை செய்தூண் மாலையவர்" —குறள்.

பயிர் 1	விஜய௵ ஆடி—ஐப்பசி௴	கதிர் 6-9

வன மகோத்சவம் கொண்டாடுவோம்!

நாளது ஜூலை௴ 1௳ முதல் 4-வது வனமகோத்சவம் தொடங்குகிறது. இச்சமயத்தில் வனங்கள் மரங்கள் இவைகளின் உபயோகத்தைப்பற்றி தெரிந்துகொண்டால் இவ்வன மகோத்சவத்தின் அவசியத்தையும், இதை இன்னும் சிரத்தையோடு கொண்டாடுவதற்கும் உதவியாக இருக்குமென நம்பி இவ் விசேஷமலரை நேயர்களுக்கு அளிக்கின்றோம்.

நாம் பிரதிதினமும் உபயோகப்படுத்தும் விறகு, மரச்சாமான்கள் மட்டுமின்றி நாட்டின் விவசாயம், கைத்தொழில், விஞ்ஞானம், பொருளாதாரம், இயற்கைவளம் இவைகளின் அபிவிருத்திக்கும் மரங்கள், வனங்கள் மிகவும் அவசியமென்பதை நாமெல்லோரும் உணர்ந்தால், இவ்வன மகோத்சவ இயக்கம் பாதி வெற்றியடைந்ததாகும் என்பதே நம் கருத்து. அதாவது மரங்களின் அவசியத்தை மக்கள் நன்குணர்ந்தால் உற்பத்தியில் ஊக்கம் தானாகவே ஏற்படுமென்பது நமது ஆழ்ந்த நம்பிக்கை. ஆகவே இந்த நம்பிக்கையின் காரணமாகவே சிறிது தாமதத்தையும் பொருட்படுத்தாது கூடிய வரையில்

அவசியமான விஷயங்களை சேகரித்து நமது நேயர்களுக்கு அளித்துள்ளோம். நேயர்கள் மேலும் பல விஷயங்களை அனுப்பி நாட்டிற்கு அவசியமான இப்பணியில் மேலும் ஈடுபட நம்மை ஊக்குவிப்பார்களாயின் இதுவே நமது உழைப்பின் பயனெனக் கருதுவோம்.

சென்ற ஆண்டிலே சுமார் 4 கோடி மரங்கள் நடப்பட்ட தாகவும் அதில் பாதிதான் பிழைத்திருப்பதாகவும் சர்க்கார் அறிக்கையொன்று கூறுகிறது. இதற்கு காரணம் மழை யின்மை, வரட்சி, என்று சொல்லலாம்-அதோடு அசிரத்தை, கவனக்குறைவும் ஓரளவு இருக்கிறதென்பதை நாம் ஒப்புக் கொண்டே யாகவேண்டும்.

இவ் வனமகோத்சவத்தில் மற்றெல்லாரையும்விட விவசாயிகள் ஊக்கம் காட்டுவது மிகவும் அவசியமாகும். அவர் கள் தங்களுடைய வயல், தோட்டம், வீடு இவைகளினிடையே விறகு, தழை விவசாயக்கருவி, கனிவகை ஆகியவைகளில் (சீமைவேலன், கிளரிசிடியா கருவேல், மா, தென்னை போன்ற) வகைக்கு ஏக்கர் 1-க்கு 2 மரம் வீதம் நட்டாலும்கூட கோடிக் கணக்கான மரங்கள் உற்பத்தியாகிவிடும்.

அதோடு மட்டுமல்ல இன்று கிராமாந்தரங்களிலுள்ள நீண்டநாளைய புளி, இலுப்பை, ஆல், அரசுபோன்ற மரங் களெல்லாம் வெட்டி அழிக்கப்பட்டு விட்டன. மீண்டும் அவ்வித தோப்புகளைவைத்து பலனடைய பல ஆண்டுகள் காத் திருக்கவேண்டும். இவ்வித நாசவேலை சொந்தப்பட்டாக் களில் மட்டுமல்ல. சர்க்கார் சாலைகளிலும் புறம்போக்கு களிலும்கூட நடந்துள்ளது. இதற்கு காரணம் விறகின் விலை யேற்றம் ஒருபக்கம் இருந்தாலும்கூட மழையின்மையால் ஏற்பட்ட பஞ்சமும் பட்டினியும் மற்றொரு காரணமாகும். ஆகவே அழிக்கப்பட்டதுபோக மீதியுள்ள மரங்களையாவது பாதுகாக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். அதோடு இந்த ஆண்டில் எங்கும் மழைபெய்து இயற்கையும் அனுகூலமாக உள்ளதால் இதைப்பயன்படுத்திக் கொண்டு எவ்வளவு மரங் கள் நடச்சாத்தியமோ அவ்வளவும் நட்டு விருத்திச்செய்ய வேண்டுமெனக் கோருகிறோம்.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான்கண் படின்"

என்ற திருவள்ளுவனார் வாக்கின்படி, உலகநலம் கருதி அசோ கர், மூவேந்தர் போன்ற மன்னர்களும் நமது முன்னோர்களும்

நட்டு வளர்த்த சாலை மரங்களும் சோலைமரங்களும் நல்லோருடையச் செல்வம்போன்று இன்று நம்மவர்களின் பஞ்சத்தையும் பட்டினியையும் தணிக்க ஓரளவு பயன்பட்டது. எனவே,

> மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
> பெருந்தகை யான்கண் படின்.

என்னும் வள்ளுவனார் சொல்போல் நாட்டினுடையவும் பின்வரும் நம் சந்ததியாரினுடையவும் நலங்கருதி நன்மைசெய்யும் நல்லோருடையச் செல்வம்போன்று (பஞ்சம், பட்டினி, பிணியைத்) தீர்க்கும் மருந்துப் (உணவு) பொருள்களை தரும் மரங்களை நட்டுவளர்ப்பது நாட்டு மக்களின் கடமையாகும்.

இதனாற்றான் நமது முன்னோர்களும் இக்கடமையை தெய்வ-மத நம்பிக்கையுள்ள அக்காலத்தில் தெய்வீக-மத தர்மங்களோடு பிணைத்துவிட்டனர் போலும். தெய்வ-மத நம்பிக்கை குறைந்தும், விஞ்ஞானம் முன்னேற்றமடைந்துள்ள இந்நாளில் மரங்கள் எவ்வளவு முக்கியமானதென்பதை ஆராய்ச்சியாளர்கள் தெளிவாக கூறி வருகிறார்கள். ஆகவே தெய்வ-மத நம்பிக்கையுள்ள அக்காலத்திலும் சரி-விஞ்ஞான ஆராய்ச்சிகள் மிகுந்துள்ள இக்காலத்திலும்சரி மரங்கள் நாட்டிற்கு இன்றியமையாத இயற்கைச்செல்வம் என்பதை யறிந்து நாட்டின் மக்கள் யாவரும் கருத்து வேறுபாடின்றி இவ்வாக்க முயற்சியில் ஈடுபட்டு எங்கும் மரங்களை நட்டு சோலைகளாக்குவார்களென எதிர்பார்க்கிறோம்.

நமது முன்னோர்கள் வைத்துச்சென்ற மரங்களை (இயற்கைச் செல்வங்களை) அழித்து அதனால் கிடைத்த பலனை நாம் அடைந்தோம். இப்பாதகச் செயல்மூலம் நாட்டுக்கும் நமது சந்ததியார்களுக்கும் பெருந்தீங்கிழைத்து விட்டோம். ஆகவே இதற்கு பரிகாரமாகவும், நமது பின் சந்ததியார்களின் நன்மைக்காகவும் நமது கடமையைச் செய்யவேண்டாமா?

எனவே இக்கடமையில் நாட்டிலுள்ள எல்லா ஸ்தாபனங்களும், பொதுமக்களும் ஆண் பெண் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி, கக்ஷிபேதங்களின்றி நாட்டின் பிரஜை யென்ற எண்ணத்துடன் நாட்டின் நலங்கருதி நல்ல மரங்களை நட்டு வனமஹோத்சவத்தை கொண்டாடுவோமாக!

வாழ்க வனமஹோத்சவம்!

ஆசிரியர் குறிப்புகள்.

வழியனுப்பும் வரவேற்பும் :—

சென்னை ராஜ்யத்திலிருந்து ஆந்திரா பிரிந்து போனதின் காரணமாகவும் பெல்லாரி ஜில்லாவின் ஒருபகுதி மைசூரில் சேர்க்கப்பட்டதனாலும் இதுவரை விவசாய இலாகா மந்திரியாக இருந்த ஸ்ரீநாகண்ண கௌடு அவர்கள் மந்திரி பதவியிலிருந்து விலகி மைசூர் ராஜ்யத்திற்குச் செல்லுகிறார். இன்னாள்வரை இங்கு விவசாயி விவசாய முன்னேற்றத்திற்காக பணியாற்றி, பதவியிலிருந்து விலகிச்செல்லும் அவருக்கு நமது நேயர்கள் சார்பில் நன்றி செலுத்தி வாழ்த்தி யனுப்புவோம்.

ஷை விவசாய இலாகாவிற்கு புதிய மந்திரியாக ஸ்ரீ பக்தவத்சலம் நியமிக்கப்பட விருக்கிறார். நமக்குப் புதியவரல்லர். எற்கனவே மராமத்தி லாகா மந்திரியாக இருந்து, விவசாயத்தொழிலுக்கு இன்றியமையாத பல நீர்த்தேக்க (அணைக்கட்டு) திட்டங்களை நடத்தியவர். ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள், சுதந்திர இந்தியாவில் நீண்டகாலம் மந்திரிபதவி வசித்தவர் அவரே. விவசாயம், விவசாயி கிராம முன்னேற்றம் இவைகளில் மிகுந்த சிரத்தையுடையவர். ஆகவே அவருடைய நிர்வாகத்தில் விவசாய இலாகா விவசாயிகளுக்கு இன்னும் நன்கு பணியாற்றுமென நம்பி, புதிய அமைச்சர் கனம் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் நீண்டகாலம் சேவை செய்ய வாழ்த்தி வாரவேற்போம்.

சாலை மரங்களை பாதுகாக்க :—

புதிய மரங்கள் வைத்து பயிரிடுமுன் உயிருள்ள பெரிய சாலைமரங்கள் அழிக்கப்படுவது தடுக்கப்படவேண்டியது அவசியமென முன் இதழ்களில் குறிப்பிட்டிருந்தோம். இப்போது சர்க்கார் சாலை மரங்களை பாதுகாக்கச் சட்ட மியற்ற உத்தேசித்துள்ளார்கள். அச்சட்ட மியற்றுமுன் அதைப் பற்றி பொதுமக்களின் கருத்தையறியவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஷை சட்டம் சௌராஷ்டிராவில் உள்ளதுபோல் சர்க்காருக்குச் சொந்தமான எந்த மரங்களை வெட்டுவதுக்கும் குற்றமாக்கப்பட வேண்டும். அதுமட்டு மல்ல. அம்மரங்களை பாதுகாக்கும் வேலை அண்மையில் உள்ள நிலச்சொந் தக்காரர் பொருப்பில் விட்டுவிட்டு, அம்மரங்கள் வெட்டப்பட்டிருந்தால் அதற்கு அவரையே பொருப்பாளி யாக்கவேண்டும் அதற்கு ஈடாக ஒரு கட்டணம் செலுத்திவிட்டு அம்மரத்தின் மகசூலை அவரேயடைந்து கொள்ள விட்டுவிடலாம். சொந்தப்பட்டாவில் உள்ள புளி, இலுப்பைபோன்ற மரங் கள் வெட்டப்படுவதையும் தடைசெய்யலாம். அப்படி அவசியமாக வெட்டு பவர்கள் முன் அனுமதி பெறவேண்டுமென்றும் எற்படுத்தலாம் முன் அனு மதி பெருவதற்குமுன் வெட்டவேண்டிய மரங்களுக்கீடாக புதிய மரங்கள் நட்டு வளர்ந்திருக்கவேண்டு மெனவும் விதிக்கலாம் என கருதுகிறோம். நேயர்கள் தங்கள் கருத்தை நமக்கு அனுப்பிவைக்கக் கோறப்படுகிறார்கள்.

சர்க்கார் கவனிக்குமா?

தென்னாற்காடு ஜில்லாவில் செஞ்சியிலிருந்து திருச்சிவரை செல்லும் சாலை மிகவும் பிரசித்தமானது என்பது ஷை சாலையில் எஞ்சி நிற்கும் இடிந்து போன மண்டபங்களும் (தங்குமிடம்) குளங்களும் ஒரு சான்றாக உள்ளது நாளடைவில் வெள்ளையர் ஆதியில் புதிய பாதைகள் தோன்றி விட்டபடியால் அதை கவனிப்பாரின்றி சீர்கேடடைந்து இன்று வண்டிகள் போவதற்குகூட லாயக்கில்லாததாகிவிட்டது. இப்பாதையானது இச்சில்லாவில் செஞ்சி, விழுப்புரம், திருகோவிலூர் தாலுக்காக்களை இணைக்கும் முக்கிய சாலையாவதுடன், திருக்கோவிலூர் சேலம் மார்க்கமாக சென்னை செல்வதற்கு ஒரு குறுக்கு பாதையாகவும் உபயோகப்படும். ஆகவே திருவண்ணாமலை திண்டிவனம் சாலைக்கும், திருவண்ணாமலை விழுப்புரம் சாலைக்கு மிடையே, சுமார் 15, மைல் தூரம் உள்ள இவ்விணைப்பு சாலைச்சாலையை அமைப்பதின் மூலம் பல கிராமங்களுக்கு போக்குவரவு வசதியேற்படும். விவசாய, கிராம அபிவிர்த்திக்கு போககுவரவு சாதனம் மிகவும் இன்றியமையாதது ஆனபடியால், ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் இவ்வேலையை உடனடியாகத் துவக்கி, பாதையை அமைத்துக்கொடுக்க வேணுமாகக் கோருகிறோம். இதை சர்க்கார் கவனிக்குமா?

புதிய கல்வித்திட்டமும் - கிருஷிகனும்

இப்புதிய ஆண்டிலிருந்து கிராமக் கல்வித்திட்டத்தில் மாறுதல் செய்யப்பட்டிருப்பதை யொட்டி நமது ராஜ்யத்தில் கிளர்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதை நேயர்கள் அறிவார்கள். இப்போதுள்ள கல்வித்திட்டத்தில் மாறுதல் அவசியமா என்றால், அவசியம், என்றே நாம் கருதுகிறோம். எனெனில், பழைய திட்டம் மனிதனுக்குத் தேவையான உணவு உடைகூட எப்படி கிடைக்கிறதென்பதை போதிக்காத திட்டம். உதாரணமாக நாம் (ஆசிரியர்) 1926ம் ஆண்டில் மதுரையில் (8-வது) வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்தபோது சென்னையில் படித்துக்கொண்டிருந்த பந்து ஒருவர் (தற்போது தென்னாற்காடு ஜில்லா போர்டு ஆசிரியராக உள்ளார்) மதுரைக்கு வந்தார். அச்சமயம நெல் அறுவடை செய்து வீட்டுக்கு வந்திருந்தது. இது என்னவென்று கேட்டார். இது "நாம் சாப்பிடும் அரிசியைக் கொடுக்கும் நெல்லப்பா" என்று சொன்னதும், இவ்வளவு நெல் காய்க்கும் மரம் எவ்வளவு பெரியதாக இருக்கும் என்று கேட்டார். உடனே அங்கிருந்தவர்களெல்லாம் கொல்லென்று சிரித்தார்கள். நேயர்களே! சற்று சிந்தித்துப பாருங்கள். உணவு எபபடி வருகிறதென்பதைக்கூட தெரிந்துகொள்ள முடியாத ஒரு கல்வியைக் (அடிமைக்கல்வி) கற்று, அதிகார பீடத்திலமரும் ஒருவருக்கு உண்மை பாட்டாளி உணவு, உடையை உற்பத்திச் செய்பவனுடைய—கஷ்டம் சிறிதளவாவது தெரியுமா? அவர்களின் தொழிலில் உள்ள கஷ்டங்கள் களையப்படுமா! என்று இன்று நாம் படும் அவதிக்கெல்லாம் காரணம் பழைய கல்வி முறையே என்பதை கூறத் தேவையில்லை.

ஆனால் சுதந்திர நாட்டில் மக்கள் ஒவ்வொருவரும் சுயத்தேவையைப் பூர்த்தி செய்துக்கொள்ளும்படியான ஒரு தொழில் கல்வித்தான் தேவையாகும். அதுதான் மகாத்மாஜியின் ஆதாரக் கல்வித்திட்டமாகும். இத்திட்டப்படி ஒவ்வொருவருக்கும் தேவையா குறைந்தபக்ஷக் கல்வியாகும். இதில் தான் கட்டாயமும், திட்டமும். ஆனால் மேற்கொண்டு படிப்பவர் எவருக்கும் எவ்விதக் கட்டாயமும் திட்டமும் இருக்கக்கூடாது.

எனவே இவ்வித கருத்தை அடிப்படையாகக்கொண்டதே புதிய கல்வித் திட்டமென நம்புகிறேம். இத்திட்டப்படி 3 மணி நேர பள்ளிப்படிப்பும் 3 மணி நேரம் நேரடித் தொழில்படிப்பும் அளிக்கப்படுமென நம்புகிறேம். இத்திட்டத்தை எதிர்த்து தான் இன்று கிளர்ச்சிகள் நடத்தப்படுகிறது.

இத்திட்டந்தான் இன்று சாதகமோ, பாதகமோ அடையப்போகிறவர்கள் கிராம மக்களேதான். இத்திட்டத்தை எதிர்த்து கிளர்ச்சி செய்கிறவர்களோ நகரிலுள்ள அரசியல் கக்ஷிக்காரர்கள் பல ஆசிரியர்கள், அவர்களால் தூண்டப்படுபவர்களுமாவார்கள்.

இப்புதிய திட்டத்தினல் ஏதோ ஆபத்து வந்துவிடப்போகிதே என்று கூறுபவர்கள் இதுவரை இருந்துவந்த பழைய திட்டம் பயனுடையதாக்கவாவது உழைத்தார்களா என்பதை சிந்திக்கவேண்டும்.

கிராம ஆரம்பக் கல்வித் திட்டத்துக்காக சர்க்கார் செய்துவந்த செலவு எவ்வளவு, அதனல் பயனடையவேண்டியவர்கள் எவ்வளவு? உண்மையிலேயே பயனடைந்தவர்கள் எல்வளவு? என்று கவனித்தால் உண்மை ஒருவாறு விளங்கும்.

பல கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் பெயரளவிலே இருந்ததேயொழிய அவை சரிவர பயன்படவில்லை, மக்களும் பயன்படுத்திக்கொள்ளவில்லையென்பதை எவரும் மறுக்கமுடியாது.

இன்று இவ்வெதிர்ப்பு திட்டத்தை நடத்துபவர்கள் அன்று பள்ளிக்குச் சென்று கல்வியின் பயனை அடையும்படி மக்களை தூண்டியிருப்பாரராயின் இன்னும் எவ்வளவோ பேர்கள் கல்வி கற்றிருப்பார்கள். தவிர இன்று இத்திட்டத்தை எதிர்ப்பதிலும் அர்த்தமுண்டு, ஆதரவுமுண்டு. அன்று கிராம வாசிகள், கிராமங்கள் எல்லாராலும் கீழாக மதிக்கப்பட்டார்கள், புறக்கணிக்கப்பட்டார்கள். இன்றே அவர்களை பல அரசியல் கக்ஷிக்காரர்கள் தங்கள் போராட்டத்திற்கு பக்கபலமாக்கிக்கொள்ள விரும்புகிருர்கள். ஆனல் கிராம வாசிகள் சுயநலம் மிக்க எந்த அரசியல் கக்ஷிக்கும் பலியாக விரும்பமாட்டார்கள் என்று திடமாக நம்புகிறேம். அவர்களுக்கு எதிராக பாதகமடையச்செய்யும் திட்டத்தைக் கொண்டுவரும் எந்தக் கக்ஷியும் அவர்கள் ஆதரவை இழக்கவேண்டிவரும் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேம். இதுபோல நல்ல திட்டங்களை எதிர்க்கும் எந்தக்கக்ஷியும் அவர்களின் ஆதரவை பெறவும் முடியாது. இதற்கு உதாரணம் சமீபத்தில் நடந்த தேர்தலேயாகும். உணவுக்கொள்கைமூலம் மக்களின் அதிருப்தியை பெற்ற காங்கிரஸ் பல இடங்களில் தோல்வியடைந்ததேயாகும்.

இத்திட்டத்தைப்பற்றிய நமது விமரிசனம் அடுத்த இதழில் வெளியாகும். நேயர்கள் தங்கள் கருத்தையும் தெரிவிக்கக் கோருகிறேம். இதற்குக் காரணம் புதிய அரசியல் திட்டப்படி அரசியலை நடத்தும்படியான அதிகப்படியான ஓட்டுரிமை பெற்றவர்கள் விவசாயிகள்தானகும்.

நாமும் நமது பத்திரிகைகளும் :—

நமது கிருஷிகனின் லக்ஷியம் விவசாயி, விவசாயம், கிராமமுன்னேற்றமே தவிர அரசியல், சமூகச்சிக்கலில் ஈடுபடுவதல்ல, இருந்தபோதிலும் விவசாயி, விவசாயம், கிராம முன்னேற்றம் ஆகியவைகளை பாதிக்கக்

கூடிய சந்தர்ப்பங்கள் எழுமாயின் அதைப்பற்றி நமது கருத்தை வெளியிடுவது அவசியமாகிறது. அதையொட்டியேதான் அறியாமையா, ஆத்திரமா என்னும் கட்டுரை இதில் பிரசுரிக்கப் படவேண்டியிருந்தது.

வனவிருத்தி யென்பது நாட்டின் முன்னேற்றப்பாதை. சுபிக்ஷத்திற்கு மூலாதாரம். இது எவருக்கும் அல்லது எந்த கக்ஷிக்கும் சொந்தமானதல்ல. இதில் அரசியலார், பொது மக்கள் பலவரும் மதம் கக்ஷிபேதமின்றி ஒத்துழைப்பது அவசியம். ஏனெனில் பிறந்தது முதல் இறந்து சாம்பலாகும் வரையில் ஒவ்வொருவருக்கும் மரம் அவசியம். ஆகவே செடிகள் நடுவதலோ நட்ட செடிகள் மரங்களாகும்வரை காப்பதிலோ அல்லது இருக்கும் மரங்களை அழிக்காமல் காப்பதிலோ ஒத்துழைப்பது ஒவ்வொருவருடைய கடமையாகும். இதில் கக்ஷிபேதத்திற்கு இடமேயில்லை. ஆகவேதான் குறை கூறுபவர்களை கண்டிக்கிறோம். அதிலும் குறைகூறி நையாண்டி செய்பவர்களை வன்மையாகக் கண்டிக்கிறோம். எத்திட்டத்திலும் குற்றம் இருக்கலாம்; குறை இருக்கலாம். திட்டம் நல்லதா, கெட்டதா? என்பதைதான் முக்கியமே தவிர திட்டம் கொண்டுவருபவன் நல்லவனா, கெட்டவனா? என்பதும்; நண்பனா, விரோதியா? என்பதும் அவ்வளவு முக்கியமல்ல. திட்டம் கொண்டுவருபவனை சீர்த்திருத்த வேண்டியது முக்கியமல்ல. திட்டத்திலுள்ள குற்றம் குறைகளை சீர்திருத்துவதுதான் முக்கியம். இதைச்செய்ய வேண்டியது பத்திரிகைகள் தான். ஏனெனில் எந்த நாட்டிலும் நல்ல அல்லது கெட்டசெயலை தூண்டி ஊக்கமளிப்பது பத்திரிகைகள் தான். ஆகவே பத்திரிகைகள் நாட்டுக்கு நல்ல சேவை செய்யவிரும்பினால் தங்கள் கடமையை விரோத, பராபக்ஷமனப்பான்மையின்றி, சீர்தூக்கி நேர்மையாகச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதுபோல் இன்று 'தினத்தந்தியும்' 'விடுதலையும்' தற்கால அரசியல் கக்ஷி (காங்கிரஸுக்கு)ச்கு எதிரிடையாகும் அவ்விரோத மனபபான்மையுடனே அக்கக்ஷியின் எல்லாத் திட்டத்தையும் பார்ப்பதென்பது நாட்டுக்குக் கெடுதலாகவே முடியும். நத்தையின் வயற்றில் முத்து பிறக்கவில்லையா? காங்கிரஸ் கக்ஷியோ அல்லது கக்ஷியிலுள்ளவர்களோ கெட்டவர்களாக (தினத்தந்தியில் எண்ணுவதுபோல்) இருப்பினும் வனவளர்ப்புத்திட்டம் ஓர் முத்துக்குச் சமானமாகும். அப்படியிருக்க வன ஒத்துழைக்க முன்வரவில்லை? ஒத்துழைக்க முன் வராததோடு இவ்வரிய ஆக்க வேலையை, விரோத மனப்பான்மையுடன் கேலியும் கிண்டலும் செய்திருக்கிறது என்றும், இது விவசாயிகளுக்கும் விவசாய நாட்டுக்கும் பாதகமானது யென்று நாம் கருதியதாலும் இக்கட்டுரை இதில் இடம் பெற்றுள்ளது.

ஆகவே நேயர்கள் இதைப்பற்றி தங்கள் கருத்தை நமது பத்திரிகையின் மூலமாக வெளியிடுவார்களென எதிர் பார்க்கிறோம். மேலும், இனிமேலாவது இவ்வித (நாட்டுக்குப் பயன்படும்) திட்டங்களை அரசியல் கக்ஷி விரோத மனப்பான்மையுடன் பார்க்காமல் நாட்டுக்குப் பயன்படும் வகையில் அதிலுள்ள குற்றம் குறைகளை எடுத்துக்காட்டி நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்யுமென எதிர்பார்க்கிறோம்.

கிருஷிகனுக்கு

நீங்கள் சந்தாதாரர்களாக சேர்ந்துவிட்டீர்களா ?

இல்லையேல்

இன்றே பதிவு செய்துக்கொள்ளுங்கள்.

வருட சந்தா ரூபாய் மூன்றுதான்

ஜப்பானிய நெல் சாகுபடி & வனமகோத்சவ மலர்கள்
உள்பட 1953-ம் வருஷத்துக்கு
சந்தாதாரர்களாக சேர்ந்துகொள்பவர்களுக்கு
1954 கிருஷிகன் காலண்டர் & கிருஷிகன் பேனா
இனாமாக அளிக்கப்படும் தபால் செலவுக்கு ரூ. 1—0—0
அனுப்பவேண்டும்.

1953லும் & 1954லும்

சந்தாதாரர்களாக பதிவு செய்துகொள்பவர்களுக்கு
கிருஷிகன் பேனா & காலண்டர் தபால் சிலவின்றி அனுப்பப்படும்

1954-ம் வருஷத்துக்குமட்டும்

சந்தாதாரர்களாக பதிவுசெய்துகொண்டால் ஜப்பானிய நெல் சாகுபடி மலர் மட்டும் இலவசமாக அனுப்பப்படும். ரூ. 1—8—0 சேர்த்து (ரூ. 4—8—0) அனுப்பினால் கிருஷிகன் காலண்டர் & பேனா சேர்த்து அனுப்பப்படும்.

ஜப்பானிய நெல் சாகுபடி மலர்

ஜப்பானிய முறையில் நெல் சாகுபடி செய்து அதிக உற்பத்தியை பெருக்க பல விரிவான கட்டுரைகள் அடங்கியது. பல சித்திரப்படங்கள் கொண்டது. இன்னும் சொல்ப பிரதிகளே உள்ளன. அழகிய ஆர்ட் அட்டைப் படத்துடன் டெம்மி 1/8 அளவு 64 பக்கங்களுக்குமேல் கொண்டது.

விலை அணா எட்டு. தபால் செலவு 0—1—3.

விபரங்களுக்கு :—

பயிர்த்தொழில் பண்ணை

ஹனுமந்தபுரம் :: அன்னியூர் B. O., :: விழுப்புரம் S. Ry.

காடு செழித்து நாடு வளம்பெற

மரம் நடுவோம் வாரீர்!

நாம் பிறரிடம் பிச்சை கேட்கும் பிழையை திருத்தவல்லது நாம் பிறந்த மண்தான். அதை வளமாக்கவல்லது மரங்கள்தான். இதுவே நம் சுயதேவையை பூர்த்திசெய்ய வழி காட்டும். சோலை ★ உற்பத்தி திருவிழாவில் நாட்டின் ★ ஆண் பெண் குழந்தைகள் எல்லோரும் தலைக்கொரு மரமாக நட்டு பயிராக்கி காத்து வரவேண்டும். காலி யிடங்கள், வீட்டு புறங்கள் எங்கும் மரங்களை நட்டு சோலைகளாக்கவேண்டும்.

மரங்களின் உபயோகம்

- மனிதர்களும் ஜீவராசிகளும் சுவாசிக்கும் காற்றிலுள்ள கரிமலவாயுவை நீக்கி பிராணவாயுவை விருத்திசெய்து சுத்தப்படுத்துகிறது.
- நிழலைத்தருகிறது. ஈரத்தை காப்பதுடன் உஷ்ணமான காற்றை குளிர்ச்சி யடையச்செய்கிறது.
- உஷ்ணமான அல்லது குளிர்ச்சியான பெருங் காற்றை தடுக்க தடுப்பாக (Wind Screen) ஆக உதவுகிறது.
- காற்று, மழை இவைகளால் ஏற்படும் மண் அரிப்பை (Soil Erosion) தடுத்து மண் வளத்தை விருத்தி செய்கிறது.
- களர் சதுப்பு நிலங்களை சீர்திருத்த உதவுகிறது.
- மரங்கள்–தழைஉரம், கால்நடை தீவனம், பழ உணவுகள், விறகு, மரம், சாயம், கோந்து, முதலிய உணவு, கைத்தொழில். வியாபார பொருள்களை கொடுத்து பொருளாதாரத்தை விருத்தி செய்கிறது.
- பசுமையான மரங்கள், வீடு, கிராம, நகர் புறங் களின் அழகை விருத்தி செய்கிறது.
- மேகமண்டலத்தை குளிரச்செய்து மழையை விருத்தி செய்கிறது.
- வெள்ளத்தை தடுத்து ஊற்றுக்கண்களை பெருக்கி ஜலதாரத்தை விருத்தி செய்கிறது.
- கிணறு, குளம், குட்டைகளிலுள்ள ஜலம் உஷ்ணம் காற்று இவைகளால் நீராவியாக மாறுவதை தடுக்கிறது; ஜலத்தேவையை குறைக்கிறது.

காடு செழித்து நாடு வளம்பெற மரம் நடுவோம் வாரீர்?

ஏ. எஸ். வெங்கட் ராவ், ஆசிரியர்

1. மழையின் சிறப்பு

விசும் பிற்றுளி வீழினல்லான் மற்றுங்கே
பசும் புற்றலை காண்பதரிது'' என்னும் குறள்

வாக்கின்படி மழை பெய்யாவிடில் பசும்புல் தரையைக்கூட காண்பதரிதாகும். இதை கடந்த 6 ஆண்டுகளாக நிதரிசனமாகப்பார்த்து வருகிறோம்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூம் எல்லாமழை'' (பெய்யாமல்

கெடுக்கவல்லதும், பெய்து காகிகவல்லதும் மழை) என்ற திருவள்ளுவர் வாக்கின்படி 6 ஆண்டுகளாக மழை பெய்யாத காரணத்தால் நாட்டில் பசி, பஞ்சம், பட்டினி மிகுந்து மக்கள் அவதியுற்றனர். நடக்கும் ஆண்டில் கால மழை பெய்துவருவதால் ஓரளவு கஷ்டங்கள் குறைந்து எதிர்காலம் இன்னும் நம்பிக்கையளிக்க கூடியதாகவும் இருக்கிறது.

ஏனெனில் நமக்கு வேண்டிய உணவை உற்பத்திச்செய்துக்கொடுக்கவும் உண்பதற்கு அவசியமாக இருப்பதுவும் தண்ணீர் (மழை) தான். இதனை லன்றோ,

"துப்பார்க்குத்துப்பாய் துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை'' என்று

வள்ளுவனார் மழையின் பெருமையைப்பற்றி பாடியுள்ளார்.

2. மழையும் மரமும்

இதிலிருந்து எல்லா ஜீவராசிகளும் தாவாராசிகளும் உயிர்வாழ இன்னியமையாத ஜலம் மழை மூலமாகத்தான் கிடைக்கிறதாகையால் அம் மழையைப்பற்றி சிறிது நாம் தெரிந்து கொள்ளவேண்டியது. அவசிய மென்பது நன்கு விளங்குகிறதல்லவா?

உதாரணமாக ஒரு செடியைப்பிடுங்கி வெய்யலிலே போடுவோம். அதுசிறிது நேரத்தில் சுருங்கி வாடிப்போவதை காண்கிறோம். இவ்வாறு குறைந்தபாகம் அக்கொடியிலுள்ள ஜலபாகமேயாகும். இதிலிருந்து புல், பூண்டு, செடி, மரங்கள் ஆகியவைகள் செழித்துவளர எவ்வளவு ஜலம்தேவை யென்பது தெளிவாகிறது. மேலும் ஒரு முகம்பார்க்கும் கண்ணடியை எடுத்து அதன்மேல் மூச்சு விடுவோமானல் கண்ணடி மங்கலாகி விடுகிறதை காண்கிறோம். இப்படி கண்ணடியில் படிந்திருக்கிற ஆவியை துடைத்தால் பளிச்சென்றுகிவிடுகிறது. இவ்விதம் நாம் மூச்சுவிடும்போது நமது உடலிலுள்ள ஜலம் சதா ஆவியாகி வெளியேறிக்கொண்டேயிருக்கிறது

இப்படி நமது வாயின்மூலமும் மூக்கின் மூலமும் வெளியேறும் ஆவியை மழை, பனிக்காலங்களில் நன்கு பார்க்கலாம். ஒரு பாத்திரத்தில் ஜலத்தை விட்டு வெளியில் வைத்திருப்போமானல் சூரிய உஷ்ணததாலும் காற்ருலும் அப்பாத்திரத்திலுள்ள ஜலம் குறைந்து வருவதை காண்கிருேம். இவ்வாறு பூமியிலுள்ள நீரை தாவரராசிகளும், நீர் நிலைகளிலுள்ள (ஆறு, எரி, குளம், கிணர், சமுத்திரம் போன்ற) தண்ணீரை ஜீவராசிகள் குடிப்பதாலும், சூரிய உஷ்ணம் காற்று இவைகளாலும் எப்போதும இடைவிடாது ஆவியாகிக் கொண்டே இருக்கிறது

இவ்விதம் மேலேசெல்லும் நீராவியானது ஆகாயத்தில் காற்றின்மேல் பாகத்தை யடைந்தவுடன் குளிர்ச்சியாகி நீர்த்திவலைகளாக மாறுகிறது இத்திவலைகளின் கூட்டங்களைத்தான் மேகங்கள் என்கிருேம். இந்த மேகங்களின் மீது குளிர்ந்த காற்றுபட்டு மேகங்கள் குளிர்ச்சியடைந்தால் அவைகள் ஒன்ருேடொன்று மோதி இடியும் மின்னலும உண்டாகிறதுடன், மேகங்களிலுள்ள சன்ன நீர்த்திவலைகளெல்லாம் சேர்ந்து மழைத்துளிகளாக மாறி கீழே விழுகிறது. இதைத்தான் மழை யென்கிருேம்.

இவ்விதம் பெய்யும் மழையானது. சமுத்திரம், மலைப்பிரதேசம், வனப்பிரதேசம், வரண்டபிரதேசம் முதலிய இடங்களில் வீசும் குளிர்ந்த காற்றுக்கு எற்றபடி சமுத்திரத்தில் அரைப்பங்கும், மலைகளில் காலே வீசம் பங்கும் வனங்களில்அரைக்கால் பங்கும் மீதி வரண்ட பிரதேசங்களிலும் பெய்கிறதாக வானசாஸ்திரிகள் கூறுவதும் உண்மையென்றே கருதவேண்டியிருக்கிறது.

உதாரணமாகக் கோடை காலத்தில் பெய்யும் தென்மேற்கு பருவமழை மேற்குத்துடர்ச்சி மலைகளிலும் மலையாளப் பிரதேசத்திலும், அரபிக்கடலிலும் எராளமாகப் பெய்தும், தமிழ்நாட்டில் குறைவாகப் பெய்வதை காண்கிருேம். இதற்குக்காரணம் அரபிக்கடலிலிருந்து வரும் தெ. மே. பருவ

"மரங்கள் அதிகமாக இருப்பது மழை பொழியவும் விறகு போன்ற வீட்டுத்தேவைகளுக்கும் உதவியாகும்"

ஸ்ரீ குமாரசாமிராஜா.

மழையை குளிர்ச்சியான உயர்ந்த மேற்குத்தொடர்ச்சி மலைச் சிகரங்களும், வனங்களும் தடுத்துவிடுவதேயாகும். இந்தக் காலங்களில் மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள சிறு கணவாய்களின் வழியாகவரும் தென்மேற்கு பருவக்காற்று கீழ் ஜில்லாக்களின் வரண்ட பிரதேசத்தில் சிறிது அளவு மழையாகப்பெய்கிறது. இதையே நிச்சயமற்ற கோடைமழை யென்று சொல்லுகிறோம். இக்காலங்களில் தான் மேற்குத்தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகும் காவேரி, பெரியாறு, கோதாவரி, கிருஷ்ணா போன்ற ஆறுகளுக்கும் தண்ணீர் கிடைக்கிறது.

இவ்விதம் கோடைகாலத்தில் தமிழ் நாட்டில் மழை குறைவாக பெய்வதற்கு காரணம் மேற்கு கரையைப்போல் இங்கு உயர்ந்த மலை சிகரங்களும் வனப்பிரதேசங்களும் இல்லாததேயாகும். இருந்தாலும் புறட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வரும் வடகிழக்கு பருவக்கக்றறு, மேறத தொடர்ச்சி மலைவரைச்சென்று தமிழ்நாடு பூராவும் மழையாக பெய்கிறது. இவ்விதம் மழைபெய்து நாடு செழிக்க வேண்டுமானல் இயற்கையான உயர்ந்தமலை சிகரங்களும் வனங்களும் இருப்பது அவசியமென்று தெரிகிறது ஆனல் இவ்விதம் மழையை விருத்திசெய்யும் மலைகள், சமுத்திரங்கள் இவைகள் இயற்கையாகவே ஏற்பட வேண்டியவையான போதிலும் இக்குறையை **செயற்கை வனங்களை** விருத்தி செய்துக்கொள்வதின் மூலம் ஓரளவு மழையையும் விருத்தி செய்யலாம் என்பதும் கவனிக்கததக்கதாகும்.

"செயற்கை வனங்களை" விருத்தி செய்வதென்பது பிளாஸ்டிக், செயற்கைப்பட்டு போன்றவைகளைப்போல் தொழிற்சாலையில் உற்பத்தி செய்துக்கொள்வது என்பதல்ல. காற்று, வெள்ளம், பக்ஷிகள், மிருகங்கள் இவைகளால் தாய்மரத்திலுள்ள விதைகள் பரவச்செய்யப்பட்டு, தானகவே முளைத்து உண்டாகும் இயற்கை வனங்களைப் போலன்றி, நமக்கு தேவையான உபயோகமுள்ள, பலன் தரக்கூடிய குறிப்பிட்ட உயர்ந்த ஜாதி மரங்களை ஒழுங்காக நட்டு விருத்திசெய்து கொள்ளும் செயற்கைவனம் என்றுதான் பொருள்.

ஆகவே எந்த தேசத்திலும் ஜலாதார அபிவிருத்தி ஏற்படவேண்டுமானல் (காடுகள்) வனங்கள் விருத்தி செய்யப்படுவது அவசியமாகும். ஜனங்கள் இதை ஊன்றி கவனிக்காமல் காடுகளை அழித்து வெட்டவெளியாக்கி விட்டார்கள். சென்ற பல ஆண்டுகளாக நாட்டில் சம்பவித்த பல காரணங்களால் அநேக காடுகள் அழிந்தன. மேலும் சமீப காலத்தில் ஏற்பட்ட யுத்தத்தின் காரணத்தால் தனிப்பட்டவர்களும் பணத்தாசையால் தங்கள் தோட்டங்களிலும், வயல்களிலும் இருந்த மரங்களை வெட்டி சோலைகளை பாலைவனமாக மாற்றிவிட்டார்கள். ஜமீன் ஒழிப்பு சட்டத்தினல் நாட்டின் நலனில் அக்கரையில்லாத பல ஜாகிர்தார்கள், ஜமீன்தார்கள், குட்டிராஜாக்களும் தங்கள் ஆதீனத்தின் வனங்களிலிருந்த பெரிய விருக்ஷங்களையெல்லாம் வெட்டி நாசமாக்கிவிட்டார்கள் மேலும் பஞ்சம், பட்டினியின் காரணமாக ஏழைமக்கள் சாலைகளிலுள்ள மரங்களைக்கூட வயிற்று ஜீவனத்திற்காக வெட்டி பாழ்படுத்திவிட்டார்கள்.

அதிகரித்துவரும் ஜனத்தொகையின் தேவையை ஈடுகட்ட வன வளர்ச்சி மூலம் மண்ணரிப்பை தடுக்க ஜனங்களிடம் மர உணர்ச்சி வளரவேண்டும்.

—ஸ்ரீ ராஜன் பாபு.



இவ்விதம் பல காரணங்களால் மரங்கள் அழிந்தபின்பு பூமியில் வரட்சி எற்பட்டு மழை பெய்வதும் குறைந்துவிட்டது. அபபடியே பெய்யும் குறைந்த மழை ஜலமும பூமியில் தங்கி ஊற்றுக்கண்களை போஷிக்காமல் உருண்டு ஓடி சமுத்திரத்தில் சேர்ந்துவிடுகிறது. இசனால் முன்பு ஜீவநதிகள் என்று பெயர்பெற்ற ஆறுகளில் சில இபபோது நிர்ஜீவநதிகளாக போய்விட்டன குளம்குட்டைகளில் தங்கும் ஜலமும் குளிரச்செய்யும் மரஙகளற்றுப்போனதால், காற்று உஷ்ணத்தால் சீக்கிரமே ஆவியாகமாறி வரண்டுவிடுகின்றன ஆகவே வரட்சியடையும் பூமி குளிர்ச்சியடைந்து, ஊற்றுக்கண்பெருகி, நீர்நிலைகள் விருத்தியடைந்து நாடு செழிப்புறவேண்டுமானால் காடுகள் செழிப்புறவேண்டுமென்பது புலனாகிறதல்லவா?

இவ்விதம் மழை வளம் பெருகி நாட்டுவளம் செழிப்புற காடுகள் விருத்தியாக்கபபடவேண்டுமாதலால் அழிந்துபோன காடுகள எவ்வளவோ அவ்வளவு காடுகள் மறுபடியும் உண்டாக்கப்படவேண்டியது அவசியமாகும், மேலும் சமுத்திரத்தில் பெய்யும் மழையினால் நமக்கு எவ்விதபிரயோசனமும் இல்லை மலைகளிலும் காடுகளிலும பெய்யும் மழை மரம், செடி, கொடி இவைகளின் வேர்களினால் தடுக்கப்பட்டு பூமியில் உறிஞ்சப்படுவதுடன் ஊற்றுக்கண்களை நிரப்பியும் ஆறுகளாக பாய்ந்தும் ஏரி, குளங்களை, நிரப்பியும் நமக்கு மிக்க பலனளிக்கச் செய்கிறது.

எவ்வளவுகாலம்?

“மருமகள் வரும்வரையில்தான் மகன் நம் மகனாவான் நாம் சம்பாதிக்கும் அல்லது பொருளுடையவனாக இருக்கும் வரையில்தான் பந்துக்கள் நம் பந்துக்களாவார்கள். ஆனால் நம் செடிகளோ நாம் சாகின்றவரையில் நம் செடிகளாகும்.”



ஆதலால் நாட்டில் அக்கரையுள்ள ஒவ்வொருவரும் மரங்களை வேலியாகவாவது நிழலுக்காகவாவது சாலைகளிலாவது, அலங்கார சோலைகளிலாவது, தோட்டங்களில் கனிதரும் பழ மரங்களாகவாவது. வயல்களில் தழையுர மரங்களாகவாவது, விறகுக்காகவாவது தேவையானபடி நட்டு விருத்தியாக்கவேண்டியது அவசியமாகும் இவ்விதம் மரங்கள் நட்டு விருத்தி செய்யப்பட்டால் வருடததில் ஒரே தடவையாக பெய்யும் மழை குளிர்ச்சியினால் பல தடவைகளிலும் "மாதமும்மாரியாக பெய்யும்" என்பதில் சந்தேகமில்லை.

நாம் ஏன் மரங்களை நட்டு (காடுகளை) விருத்தி செய்யவேண்டும்?

1. 'மரங்கள் அதிகம இருந்தால் மழையை விருத்திசெய்யும்என்று அறிந்தோம். அது மட்டுமேல்ல. மரங்கள் இருந்தால் மழைத்துளிகள் கிளைகளின் மேலும் இலைகளின்மேலும் விழுந்து அங்கங்கே அவைகள்கூடி பெருந்துளிகளாகி மெல்லமெல்ல நிலத்தினமேல் பொட்டுபொட்டாக விழுந்து, மரங்களின்வேர்கள் மூலம் தடுக்கப்பட்டு, உருண்டு ஓடாமல், பூமியில் உறிஞ்சப்படும். இதனால் நிலம் குளிர்ந்து பூமியில் நீர் ஊற்றுபெருகுவதால் ஆறு, குளம், ஏரிகளில் ஜலம் தேங்கி அதிக நாட்பாயும். கிணறுகளிலும் நீர் ஊற்று பெருகும். வரட்சியினாலும் காற்றினாலும் ஆறு, கால்வாய், குளம், ஏரி, கிணறு முதலியவைகளின் கரையில் உள்ள மரங்கள் ஷை நீர்நிலைகளிலுள்ள ஜலம் சீக்கிரமாக ஆவியாகப்போகாமல் தடுக்கும். சாதாரணமாய் ஒரு வருடத்தில் பெய்யும் மழைஜலம் கட்டாந்தரைகளில் 40 பாகமும் வயல்களில் 30 பாகமும், காடுகளில் 12 பாகமும் ஆவியாக மாறுகிற தென அமெரிக்க விவசாய இலாகாவினர் கூறுகின்றனர். இதிலிருந்து மரங்களடர்ந்த பிரதேசத்தில் நீராவியாக மாறும் ஜலம் குறைந்த அளவுதான் என்பதும் எற்படுகிறது.

2. விவசாய அபிவிருத்தியானது மண் வளத்தையே பொருந்திருக்கிறது. மழை, காற்றினால் வளமான மேல்மண் அரிக்கப்படாமல் (Soil erosion) பாதுகாப்பதைபபற்றி ஏராளமாக பிரசாரம் செய்யபபடுகிறது. ஆனால் பூசாரத்திற்கு தேவையான, பாஸ்பேட், பொடாஷியம், நைட்டுரஜன், கால்ஷியம, மாக்ன்ஷிஸம் என்ற 5 வகை தாதுபபொருள்களும் மண்

அரிப்பினால் கரைந்துபோய் உணவு உற்பத்தியை பெரிதும் பாதித்து கொண்டுவருகிறது. மரங்களுக்கும் பூமிக்கும் நெருங்கிய சம்பந்தம் உள்ளது பூமியானது மரங்கள் வளர உதவிசெய்கிறது. மரங்களோ மண் அரிப்பை தடுத்து பூமியை வளபபடுத்துகிறது. இவை இரண்டும் சேர்ந்து நாட்டின் விவசாயத்தையும் நாகரீகத்தையும் மேம்படுத்துகிறது.

3. மண் கரைதலை தடுத்து பூமியை வளமடையச் செய்வதுடன் விவசாயிகளின் பயிர்களை அழிக்கும் பூச்சிகளைக் கொன்றுதின்று எருவை அளிக்கும் பறவைகளின் இருப்பிடமாகவும் மரங்கள் உபயோகப்படுகின்றது. உயிர்வாழ இன்றியமையாத உணவு உற்பத்திக்கு வேண்டிய பசுந்தழையுரம், சருகு, எரு முதலியவைகளைக் கொடுக்கின்றன. மேலும் விவசாயத்திற்கு தேவையான கலப்பை, வண்டி, போன்ற பல கருவிகள் செய்வதற்கு வேண்டிய மரங்களையும் தருகின்றன.

நாட்டின் கைத்தொழில் வளர்ச்சிக்கு மரங்கள் பெரிதும் உதவுகின்றன. பல கைத்தொழில்களுக்கு மூலப்பொருளை இம்மரங்கள் கொடுக்கின்றன. உதாரணமாக, எண்ணை மில்கள், சோப்பு, சாயம் தோய்த்தல் துணிநெய்தல், தோல் பதனிடுதல், பழங்கள் பக்குவப்படுத்துதல், மருந்துகள் தயாரித்தல், மரப்பட்டரைகள், தீப்பெட்டிச்சாலைகள், ஏரோபிளான், ரயில், மோட்டார் வாகனங்கள் தயாரித்தல்போன்ற பல பெரிய கைத்தொழில்கள் இன்று இம்மரங்களையே பெரிதும் நம்பியிருக்கின்றன.

பூமியை பண்படுத்துவதுடன் வரட்சியான காலங்களில் கால்நடைகளுக்கு வேண்டிய தீனியை உற்பத்திச்செய்தும் மேய்ச்சல் தரைகளையும் விருத்தி செய்வதுடன் உழவுக்கும், பால்கறவைக்கும் கால்நடைகளை போஷிக்க உதவுகின்றது.

சூரிய வெப்பம் அதிகமாக உள்ள கோடைகாலத்தில் நமக்கு குளிர்ந்த நிழலைத் தருவதுடன் பசுமையான இலைகளும் அழகிய பல வர்ண புஷ்பங்களும் கண்ணுக்கினிமையளிக்கின்றன. நல்ல புஷ்டியுள்ள மதுரமான கனிகளை (ஆகாரமாக) தருகின்றன. காற்றை தடுத்து அதிலுள்ள துர்கந்தங்களை நீக்கி, காலராபோன்ற வியாதிகள் பரவவொட்டாமல் தடுப்பதுடன், பல வியாதிகளையும் நீக்கும் குணம் பொருந்தியுள்ளது. தவிர வீடு கட்டவும், வீட்டை அழகுபடுத்தும் கட்டில், மேஜை, நாற்காலி போன்றவைகள் செய்துகொள்ளவும் விறகுக்கும் உபயோகப்படுகிறது.

மொத்தத்திலே மரங்களை தங்கச் சுரங்கத்திலே வேலை செய்யும் தொழிலாளிக்கு ஒப்பிடலாம். எப்படி ஒரு தொழிலாளி பூமியை வெட்டி எடுத்து,

அதிலிருந்து, நமக்கு உபயோகமுள்ள உயர்ந்த வஸ்துவான தங்கத்தை பிறித்தெடுத்துத் தருகிருனே அதைப்போன்றே மரங்களும், ஆகாயத்து விருந்தும், பூமிக்கடியிலிருந்தும் இலேகளின்மூலமும, வேர்களின்மூலமும் பல சத்துக்களே கிரகித்து, நமக்கு தேவையான சத்துள்ள தழை, உரம், வாசனையுள்ள புஷ்பங்கள், மதுரமான கனிகள், மற்றும் சர்க்கரை எண்ணே, சாயம். மருந்து, கோந்து. அரக்கு, ரசாயனப்பொருள்கள்போன்ற பல இன்றியமையாத வஸ்துக்களே அளிக்கின்றன. பொதுவாக நாட்டின் வளததை பெருக்காத மரஙகள் ஒன்றுகூட இல்லேயென்றே துணிந்து கூறி விடலாம்.

இவ்வளவு உபயோகமுள்ள மரங்களே மக்கள் அறியாமையினுல் வெட்டி விட்டு, அவைகளுக்குப் பதிலாக வேறு மரங்கள் நட்டு உற்பத்திச் செய்யாத காரணத்தால் மரங்கள் அழிந்து பல தீமைகள் எற்பட்டிருக்கின்றன.

மரங்களில்லாத பிரதேசத்தில் சூரிய உஷ்ணத்தாலும், காற்றினுலும் ஏரி, குளம், குட்டை, கிணறு இவைகளிலுள்ள ஜலம் ஆவியாக வெளியேறி; நிலங்களும் அளவுகடந்து வரட்சியடைந்துள்ளன. அதனுல் அந்நிலங்களே கொழுபபடையச்செய்யும் கிருமிகள் இறந்து நிலங்கள் வளம் குறைந்துள் ளன. இவ்வாறு வரட்சியடைந்துள்ள பிரதேசத்தில் நிலவளமும் குறைந்து போய், மழையும் குறைந்துபோனதால், உற்பத்தியும் குறைந்து மக்கள் உணவுக்கும் திண்டாடவேண்டிய நிலமை எற்பட்டுள்ளது இதே நிலேமை நீடித்தால நாளடைவில் இப்பிரதேசங்கள் மழையற்ற பாலேவனமாக மாறி மக்கள் வசிப்பதற்கும் லாயக்கற்றதாகவும் ஆகிவிடக்கூடும்.

ஆகவே இந்நிலமை எற்படாமல் தடுக்கவும் "காடு செழித்து நாடு வளம்பெறவும்" தத்தம் வீட்டை சுற்றிலும் காலி இடஙகளிலும், தோட்டங களிலும் வயல் வரப்புகளிலும் நல்ல மரஙகள் நட்டு உற்பத்திச் செய்யவேண்டி யது ஒவ்வொரு தேசபகதனுடைய கடமை யென்பதை உணரவேண்டும். இவ்வித (மர) உணர்ச்சி நமக்கு எற்பட்டு, எவ்வளவுக் கெவ்வளவு மரங்கள் நட்டு உற்பத்தி செய்கிருேமோ அவ்வளவுக் கவ்வளவு நமது நாட்டின் வளம் பெருகி செல்வம் வளர்ந்து சுபிக்ஷமடைவோம் என்பதில் சந்தேகமில்லே.

இவ்வித நன்மைகளே உத்தேசித்துத்தான் மரம் வைத்தவர்கள் மோக்ஷம் அடைவார்கள் என்றும் எட்டிமரமாஞலும் பச்சை மரத்தை வெட்டாதே" என்னும் பழமொழிகள் நாட்டில் வழஙகிவருகிறது போலும். இன்றும் மேல் நாடுகளில் வருடம்தோரும் மரம்நடும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றையதினம் தலேக்கு ஒரு செடியாவது நட்டு அதை எந்நாளும் காப்பாற் றும்படி செய்துவருகிருர்கள் இதேபோன்று நமது பாரத நாட்டிலும் பிரதி வருடம் ஜூலே முதல் அக்டோபர் முடிய ஒவ்வொருவரும் தலேக்கு ஒரு

வாயில்லாத ஜீவன்!

"குழந்தைகள் பசியெடுத்தால் அழும்; இதர ஜீவன் களோ சததம்போடும்; ஆனுல் செடிகளோ வாயிலலாத ஜீவன்—அழாது—சத்தமும்போடாது. ஆகையால் அவை களுக்கு என்ன தேவையோ அதை நாமே கவனித்து நம் குழந் தைகளே கவனிப்பதுபோல் கவனிக்கவேண்டும்."

மரமாவது நட்டு விருத்திச் செய்யவேண்டும் மென்மதற்காகவே "வன மகோத்சவ" விழா கொண்டாடி வருகிறோமென்பது எல்லோரும் அறிந்ததே.

மரங்களை எங்கே நடலாம்?

ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் இடவசதிக்கு ஏற்ப மரங்களை தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். உதாரணமாக நகரங்களில் ஆங்காங்கே உள்ள நந்தவனங்களில் (Parks & gardens) வீடு, பங்களாக்கள் இவைகளை சுற்றிலும் அழகிய பூக்களுடைய நிழல்தரும் மரங்கள், பழ மரங்கள் இவைகளை நடலாம் கிணற்றடியிலும், புழக்கடையிலும், வீணை நீர்பாயும் வீட்டு தோட்டங்களில் வாழை, பப்பாளி, முருங்கை, எலுமிச்சை, கருவேப்பிலை, அகத்தி போன்றவைகளும், வேலி, எல்லையோரங்களிலும், வயல் வரப்புகளிலும்; கிணறு, குளம், ஏரிகரைகளிலும்; வாய்க்கால், ஆறு, இவைகளின் கரைகளிலும், —



— சொந்த அல்லது சர்க்கார் காலி புறம்போக்கு இடங்களிலும், தங்குமிடம், சர்க்கார் சாவடி, சர்க்கார் இதர அலுவலகக்கட்டிடங்கள், சத்திரம், கோவில், மசூதி, ஆஸ்பத்திரி, கலாசாலை இவைகளை சுற்றியும், காம்பவுண்டு காலி இடங்களிலும், கிராம, நகர தெருக்களிலும், கிராமங்களை சுற்றிலும், மற்றுமுள்ள காலி இடங்களிலும் நடலாம். மற்றும் கோவில், மடங்கள், பஞ்சாயத்துபோர்டு, ஜில்லா போர்டுகள் ரயில்வேக்கள், P. W. D. இவைகளுக்கு சொந்தமான சாலைகள், வண்டிப்பாதைகளிலும், காலியிடங்களிலும் நடலாம்.

"வனமகோத்சவம் வெற்றிபெற முக்கியமாக விவசாயிகள் மனப்பூர்வமாக ஒத்துழைக்கவேண்டும்"

—ஸ்ரீ ஷெட்டி.

நாடு வளம்பெற காடு செழிக்க
ஒன்று சேர்ந்துழைப்போம் வாரீர்!

தேசீய — கிராம — பொருளாதார முன்னேற்றத்திற்கு மரங்கள் மிகவும் முக்கியமானவை. ஆனால் இம்மரம் நடும் பணிக்காக லக்ஷக்கணக்கான ரூபாய்கள் வீணாக்கப்படுவதாக பலர் குறைகூறி வருகிறார்கள். இதுவரை சுமார் 46,000 ரூபாய்கள்தான் இவ்வரிய பணிக்கு செலவிடப்பட்டுள்ளது. அதுவும் ரூ. 24,000 ராஜ்யங்களுக்கிடையே பரிசுகள் (கேடயங்கள்) வழங்கிய செலவேயாகும்.

மரங்கள் நட்டு வளர்ப்பதின்மூலம் வயல்களை வளப்படுத்தி "உற்பத்தி பெருக' தழை (உரம்) சருகு கொடுப்பதுடன் எரிக்கப்படும் சாணமும் எருவாக்கப்பட தேவையான விறகும் கொடுக்கிறது.

ஆகவே சாலைகள், கரைகள் காலியிடங்கள் எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் மரம் நட்டு வளர்க்கவேண்டும்; சாலைகளிலுள்ள மரங்களை வெட்டி அழிக்காமல் பாதுகாக்கவேண்டும். சாலைகளிலுள்ள பெரிய மரங்களெல்லாம் இரக்கமின்றி வெட்டி அழிப்பதைத் தடுக்கவேண்டும்.

ஆகவே **நாடு வளம்பெற காடு செழிக்க** (ஒதுங்கி நின்று குறை கூறுவதைவிட) **ஒன்று சேர்ந்துழைப்போம் வாரீர்.**

—ஸ்ரீ பஞ்சாப்ராவ் தேஷ்முக்.

தோட்டக்கலையில் இன்பம்!

"தோட்டங்களில் மரம் செடிகள் வளர்த்து பயிர் செய்வதில் ஏற்படுகிற இன்பம் வேறு எதிலும் உண்டாவதில்லை. பஞ்சேந்திரியங்களுக்கும் இன்பத்தை தரக்கூடியது இத்தோட்டக்கலை ஒன்றுதான். பசுமையடர்ந்த வானளாவிய மரங்கள், அங்கு விளையாடும் சிறுவர் சிறுமியர் கூட்டம், அம்மரங்களிலுள்ள பலவித வர்ண மலர்கள்—கனிகள் ஆகியவை கண்களுக்கு இன்பமும்; அதைச்சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருக்கும் வண்டினங்கள்—பக்ஷி ஜாதிகளின் கீதமும், காற்றின் ரீங்காரமும் காதுகளுக்கு இன்பமும்; மலர்—கனிகளிலிருந்துவரும் மணம் மூக்கிற்கின்பமும்; அமிர்தத்திற்கொப்பான கனிகளின் ருசி நாவிற்கின்பமும், அங்கு வீசும் குளிர்ந்த தென்றல் உடலுக்கும் மனதிற்கு இன்பத்தை அளிக்கின்றன. இம்மாதிரி இன்பத்தை கொடுக்கக்கூடியது இத்தோட்டக்கலையைத் தவிர வேறு எதை ஒப்பிட்டுக் கூறமுடியும்?"

என்ன மரங்களை நடுவது?

இது நடப்போகும் இடத்தின் மண்வயணம், ஜலாதாரவசதி, சீதோஷ்ணம் இவைகளை அனுசரித்தும் அதற்கு ஏற்றவாறு மரங்களை நடவேண்டும் மேலும் ஒரே இடத்தில் பல மரங்கள் நடுவதற்கு ஏற்றதாக இருப்பின், நடக்கூடிய மரங்கள் என்ன உபயோகப்படும், அதிலிருந்து கிடைக்கக்கூடிய தழை பூ, காய் கனி, சாயம், மருந்து போன்றவைகளில் நமக்கு தேவையான வற்றை கவனித்து, நடுவது மிகவும் அவசியமாகும். ஏனெனில், நட்டபல ஆண்டுகளுக்கு பிறகு நமக்கு பலன்தரும்போது அவைகளை நீக்கி வேறுமரங்களை உற்பத்தி செய்வதால், காலம், பொருள், உழைப்பு இவைகள் நஷ்டமாவதுடன் பிறகு பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலமை ஏற்படும் ஆகவே முதலில் நடும்போதே நமதுதேவை, இடம், குணம், இவைகளை ஆராய்ந்து பயிரிடுவது அவசியம். இவ்விதம் நட்டு பயிரிடக்கூடிய சில மரங்களின் அட்டவணை கீழே தரப்படுகிறது.

பழந்தரும் மரங்கள்:— மா, ஆரஞ்சி, பொம்பளிமாஸ், நாரத்தை, எலுமிச்சை, கொடி எலுமிச்சை, மாதுளை, கொய்யா, முந்திரி, சீத்தா, சபபோட்ட விளா, நெல்லி, அருநெல்லி, பாதாமி, எலந்தை, பலா, சீமைப் பிலா, நாவல், புளி.

நிழலும் அலங்கார பூக்களும் கொடுக்கக்கூடியவை :

காட்டு மந்தாரை, காட்டு முருக்கு, கொன்றை, செம்முருங்கை, பூனைத் தேக்கு, பூமருது, மலைவேம்பு, சிறுநாகப்பூ, காட்டுமல்லிகை, பெருங் கொன்னை, மயில்கொன்னை, கருங்கொன்னை, அசோகு நாகலிங்கம் சீமை ஆவாரை (gliricidia maculata) Spathodia componulata- பன்னீர் பூ.

அலங்காரத்தழை மரங்கள்:

மா மனோரஞ்சிதம், கொடிவேலம், காட்டுப்பூவரசு, சிவன்குண்டலம் வேம்பு, ஆமெருது, முருவல் Parkia Roxburghi.



சாலைகளுக்கான மரங்கள்:

காட்டுப்பூவரசு பெருங்கொன்னை, சீமை வாகை, வாகை, அரசு, ஆல், அத்தி, புளி, இலுப்பை, புங்கன், தென்னை.

விறகுக்கும் காற்றை மறைக்கவும் உபயோகமுள்ளது:—சவுக்கு, தென்னை, சீமை வேலன், காட்டுப்பூவரசு, பெருங்கொன்னை கொடுக்கா புளி, கருவேலன். வெள்வேலன், சீமைவேலன், சவுண்டல், வாகை.

தழை உரத்துக்கு ஏற்றமரங்கள்:— வாதநாராயணம், துருஞ்சி, அகத்தி, பூவரசு, வாகை, தூங்குமுஞ்சி, சீமை ஆவாரை, வேம்பு, சவுண்டல் புங்கன்.

தழைக்கும் மாட்டு தீவனத்துக்கும் ஏற்றவைகள்:— மந்தாரை, ஆடா மருது, கரணைமூங்கில், தூங்குமூஞ்சி, கலியாணமுருங்கை, எட்டி, உஞ்ஞ், புங்கன், சீமைவேலன், அகத்தி ஆகாசவேங்கை, கருவேலன்.



உயிர் வேலிக்கும், ஓரங்களிலும் நடக்கூடியவை:— கருவேல், வெள் வேல், சீமைவேல், பீவேலன், வாகை, வேம்பு, கொடுக்காபுளி, மருதாணி, காட்டு எடுமிச்சை, மத்தி, மூங்கில், அகத்தி, சித்தகத்தி, பனை, தென்னை, கிளுவை, முள்கிளுவை, கத்தாழை, கள்ளி, சதுரகள்ளி, கொடிகள்ளி, திருகுக்கள்ளி, சவுக்கு, சவுண்டல், காட்டா மணக்கு, சீமைகாட்டாமணக்கு, ஆடாதோடை, நொச்சில், அழிஞ்சில் முதலியன.

எண்ணை எடுப்பதற்கு லாயக்குள்ள மரங்கள்:— தென்னை, இலுப்பை, வேம்பு, புங்கன், வரிமாரை, வாதுமை. முந்திரி, புன்னை.

கோந்து சாயம் தோல்பதனிடை:— கருவேல், இலைப்பொரசு, ஆவாரம், சவுக்கு, நாகல், ஆச்சா, நெல்லி, நூணு, சாப்பராவிதை, குரங்கு மூஞ்சி.

கைத்தொழிலுக்கானவை:—

(a) (பிளைவுட்) ஈட்டிமரம், எட்டிமரம், தேக்கு, வாகை சீமைவாகை, பலா, சந்தனவேம்பு, சம்பா, Odinacordifolia, இலவம் Boswella Serrata கிடியா கால்சியாணு, மா, ஜிங்கன், கூத்தான், சாலை

(b) (காகிதத்தொழில்) மூங்கில்.

(c) (பென்சில்) கிடியாகால் சியாணு

(d) (பாக்கிங் பெட்டிகள்) இலவன், மா, கிடியா கால்சியாணு

கடல்கரையோரங்களுக்கும் மணல் பாங்கான பூமிகளுக்கும்:

கடம்பம், இலுப்பை, சீமைப்பலா, பின்னை, பவளப்பூண்டு, சவுக்கு, தென்னை, பனை, பூவரசு, பன்னீர்பூ, அசோகு, குடை.

நீர்பிடிப்புள்ளதும் ,சதுப்புபூமிகளுக்கும் :—கருவேல், Anona plastris, நாகம், காட்டரளி, முந்திரி கொன்னை, பூனைதேக்கு, நீர்பருத்தி, புங்கம், சீமை வேலன், பூவரசு, முருக்கு (பொரசு)

வரட்சியான பிரதேசங்களுக்கு :—காட்டு அத்தி, கொடிவேலம், கொடுக்காபுளி, வேம்பு, புளி, சீமை வேலன், வேலன், வெள்வேலன்.

உயர்ந்த வேலைக்கு லாயக்குள்ள மரங்கள் :—பூவரசு, மாமரம், பலா, காட்டுப்பலா, வேங்கை, தேக்கு, வாகை, வேம்பு, நாவல், நாகலிங்கம், ஆச்சா, பரம்பை, நூக்கம், வெண் தேக்கு, சந்தனம்.

விவசாயக்கருவிகள் செய்வதற்கு ஏற்றவை:— பூவரசு, வேம்பு, கருவேலன், வெள்வேலன், சீமை வாகை, வாகை கொடுக்காபுளி, எட்டி, வெப்பாலை, நுணா.

எப்போது நடுவது?

நட்ட செடிகள் வேரூன்றி வளருவதற்கு அவைகளை தக்க பருவகாலங்களை கவனித்து நடுவது அவசியம் உஷ்ணமான காய்ச்சல் காலம், வரண்ட காற்று அடிக்கும்காலம், கடுமழைபெய்யும் காலம் இவைகள் நடுவதற்கு ஏற்றவை அல்ல. நடப்போகும் இடம் மேட்டுப்பாங்கானதாக இருந்து வடிகால் வசதியுடையதாக இருக்கும் பக்ஷத்தில் பருவமழை ஆரம்பிக்கு முன்பாக நடலாம். தண்ணீர் தேங்கும் இடமாகவோ பள்ளத்தாக்காகவோ இருந்தால் மழைக்காலம் கடந்ததும் நடுவது சிலாக்கியமானது பொதுவாக செடிகளை காலையில் நடுவதைவிட மாலையில் நடுவதே விசேஷமானது.

மரங்களை எப்படி நடுவது ?

ஒவ்வொருவரும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்துவது அவசியம். ஏனெனில் அவர்களுடைய உழைப்பின் பலனை அனுபவிக்க—மரங்கள் செழிப்பாக வளர்ந்து பலன் கொடுக்க அடிப்படையான அம்சம் இதுதான்.

முதலில் மரங்களை நட உத்தேசித்திருக்கும் இடத்தின் வளத்தையும் மரத்தின் தன்மையையும் கவனித்து அவைகளை நேராகவும் ஒழுங்காகவும் நன்றாகவேரூன்றி வளருவதற்கு வேண்டிய சௌகரியங்களை நாம் செய்து கொடுக்கவேண்டும்.

சாதாரண நிலங்களில் 3' x 3' x 3' அடி ஆழமுள்ள குழிகளையும். சரளை அல்லது கல்பாங்கான பூமிகளில் 4' x 4' x 4' அளவுள்ள குழிகளையும், நல்ல வளமான மண்கண்ட பூமிகளில் 2' x 2' x 2' அளவுள்ள குழிகளும் வெட்டிக் கொள்ளவேண்டும். ஒரு குழிக்கும் மற்றொரு குழிக்கும் இடையில் இருக்க வேண்டிய தூரம் *நடப்போகும் மரத்தின் வளரும் தன்மையை பொருத்ததாகும்.

சாதாரண பூமியாக இருந்தால் குழிகளில் 1!3 அடிக்கு தொழு உரம் மக்கின தழைஉரம் இவைகளையும் 1!2 ரூத்தல் எலும்புத்தூளையும் கொட்டி கலந்து, குழிகளை மூடி நன்ருக மிதித்து, ஜலம் ஊற்றி, முன்போலவே கெட்டிப்படுத்திக் கொள்ளவேண்டும்

களிமண் பூமிகளில், முன்போல் தொழு எருபோட்டு 1!2 ரூத்தல் எலும்புத்தூளுடன் 1!2 சுண்ணும்பும் சேர்த்து குழிகளில் போடுவதுநலம்.

செழிப்பான வண்டல் பூமிகளில் ஒன்றும்போட வேண்டியதில்லை. ஆனலும் ஒவ்வொரு குழியிலும் 1!2 ரூத்தல் எலும்புத்தூள் சேர்ப்பது நல்லதாகும்.

மேலே கூறியபடி குழிகளை தயார்செய்து, 2.3 மாதங்களுக்கு பிறகு மரம் நடுவது சிலாக்கியம். நடக்கூடிய சரியான காலத்தில் கிடைக்கும்படி நாற்றுகளுக்கு முன் கூட்டியே எற்பாடுசெய்து வைத்துக்கொள்ளவேணடும்.

குழிகளில் நடு முன்பாக, நாற்றுகளின் (செடிகளின்) வேரில் உள்ள உருண்டை மண், வேர்கள் இயற்கை நிலையில் அடங்குவதற்கான அளவு சிறுகுழிகள் தோண்டிக் கொள்ளவேண்டும். தவிர நடுவதற்கு முன் வாங்கிய செடியாக இருந்தால் மண் உருண்டையை வேர் பரவலாக இறங்கும்பொருட்டு தண்ணீரில் நனைத்து, தளர்ச்சி கொடுக்கும்படி செய்து கொள்ளவேண்டும். மண் கண்டம் பூராவும் கரைந்து போகாமலும் வேர்கள் தன்நிலைமைக்கு பரவி இருக்கும்படியும் கவனித்துக் கொள்ளவேண்டும். ஒடிந்துபோன வேர்கள், கெட்டும் அழுகிப்போனவேர்கள் இவைகளை கூர்மையான கத்திரியால் கத்தரித்து எடுத்துவிடவேண்டும். செடிகளை நட்டு மண்ணை மூடும்போது வேர்கள் வளைந்து போயோ—ஒடிந்தோ—கெட்டுபோனதாகவோ காய்ந்துபோனதாவோ இல்லாமல் பார்த்து நடவேண்டும்.

நாற்றுகள் நடும்போது வேரும் தண்டும் ஆரம்பமாகும் இடமானது பூமி மட்டத்தில் இருக்கும்படியாகவும், தண்டானது செங்குத்தாக நிற்கும்படியாகவும் நடவேண்டியது வேர்கள் அதிக ஆழத்தில் இருக்கும்படியாக நடக்கூடாது பின்பு செடியை சுற்றியுள்ள மண்ணை நன்ருக மிதித்து கெட்டிப்படுத்தி ஜலம் ஊற்றி காற்றினல் அலையாமல் பக்கத்தில் ஒரு மூங்கில், அல்லது இரும்பு கம்பியை நட்டு அதில் சேர்த்து கட்டிவைக்க வேண்டும். ஒரு அடி உயரத்துக்கு குறைவான செடிகளுக்கு இக்கம்பு அவசியமில்லை.

மரங்களை நட்டபின் செய்யவேண்டியவைகள்

ஒவ்வொரு செடியையும் எவ்வளவு சிரத்தையுடன் நடுகிருர்களோ அதைவிட எண்மடங்கு சிரத்தையுடன் பாதுகாப்பதில் தான் இருக்கிறது உண்மை வெற்றி. அதிகமான எண்ணிக்கையுள்ள செடிகளை நடுவதை விட அதிகமாக பாதுகாப்பது தான் நல்ல பயன் தரத்தக்கது ஆகவே புதிதாக நட்டசெடிகளுக்கும், வேரூன்றி பெரிய மரங்களாகும் வரையிலும் சிரத்தையோடு கவனித்து பாதுகாத்தல் அவசியமாகும்.

ஒரு புதியதாக நடப்பட்டுள்ள செடி வேரூன்றி துளிர்விடும் வரைக்கும் கவனித்து சீராக ஜலம்விட்டு வரவேண்டும். ஆனல் தண்ணீர் தேங்கக்கூடாது.

அச்சிறு செடிகள் மரங்களாக வளர்ந்து நல்லநிலமைக்குவரும் வரையில் கால்நடைகள், சிறுவர்கள், முதலியவைகளால் சேத முருதபடி வேலியிட்டு காபந்து செய்யவேண்டும்.

இவ்விதவேலி தோட்டம் பூருவுக்குமோ அல்லது தனித்தனியாகவோ, நிலமைக்குத் தக்கவாறு இருக்கலாம். தனித்தனி மரங்களுக்கும், சாலையில் நடப்படுபவைகளுக்கும் தனித்தனியாக வேலி அமைப்பதுதான் நல்லது.



அது மண்சுவர் முள்வேலி, செங்கல். சிமிட்டிக் கல்சுவர், இரும்பு முள்கம்பி, இதைகளில் சிக்கனமாக கிடைக்கக்கூடியதைக் கொண்டு வேலி அடைக்கலாம். பெரிய-விசாலமான தோட்டங்களாக இருந்தால் முள்கம்பி, பின்னல்கம்பி, தாவரவேலி போன்றவைகளும் இருக்கலாம்.

இவ்விதம் தகுந்த சிரத்தையுடன் நட்டு பாதுகாத்து வளர்க்கப்பட்ட செடிகள் வளமாகவும் பலமாகவும் வளர்ந்து மரங்களாகிய நமக்கு தழைஉரம், பூக்கள், காய், பழங்கள் விறகு, மரம் மற்றும்பல கைத்தொழிலுக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பொருள்களை கொடுத்து வயோதிக்காலத்திலும (இன்ஷியூரன்ஸ் போல்) வருமானத்தை கொடுத்து நமது நிலமையையும நாட்டின் நிலமையையும் வளமடையச் செய்கிறது. ஆகவே வாரீர் காடு செழித்து நாடு வளம்பெற இன்றே மரம் நடுவோம்

மரம் வளர்ப்பதை மறந்தால் ?

மரங்களிலிருந்து உரம், விறகு, டர்பண்டைன், சாராயம், ரேயான், சாயம், கோந்து, மருந்து, பிளாஸ்டிக், பிரஷ், எண்ணை, காகிதம், பென்சில், தீப்பெட்டி, பிளேவுட், டெலிபோன் கருவியிலுள்ள நூற்றுக்கணக்கான நுண்ணிய பாகங்கள், இப்படி ஓர் ஆயிரம் பொருள் கிடைக்கின்றன. இதனல் உலகில் மரத்துக்கு தேவை அதிகம் என்பது விளங்கும். மரத்தாளினல் புதுப்புதப்பொருள் காணக்காண தேவையும் அதிகமாகிறது. இப்படி வளர்ந்துகொண்டே போகும் தேவைக்குத் தக்கபடி மரங்களும் ஏராளமாக கிடைக்கவேண்டும். மரங்களைமட்டும பயன்படுத்தி மரங்கள் வளர்ப்பதை மறந்தால் நாம் மரமில்லாமல் இருக்கும்படி நேரலாம்.

அறியாமையா, ஆத்திரமா?

உலகத்தில் மனிதனின் வாழ்க்கையில் தினசரி தேவையான பொருள்களில் மரங்கள் மிகவும் முக்கியமானதென்பது உலகிலுள்ள எல்லா தேசத்தார்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாகும். ஏனெனில் மனிதனின் ஒவ்வொருத் தேவையையும் அளிக்கவல்ல வற்ருத ஊற்று மரங்கள்தான். ஆகவே மரங்களை வளர்த்து போஷிக்கும் வேலை உலகத்தின் எல்லாப்பாகங்களிலும், எல்லாத்தேசங்களிலும், எல்லாக்கக்ஷியினராலும், எல்லா மதத்தினராலும் கையாளப்பட்டு வருகிறது. இவ்வரிய பணியில்—தேசிய நல ஆக்க வேலையில்—எந்த நாட்டிலும் சொந்த அல்லது அரசியல், மத, சமூக பேதங்களை புகுத்தி இடையூறு விளைவிப்பதில்லை.

ஆனல் இந்தியாவிலோ அவ்விதமில்லை அதிலும் சென்னை ராஜ்யத்தின் நிலைமையே விசித்திரமானது. இங்குள்ள ஜாதிகளும், மதங்களும், கக்ஷிகளும் பல. எந்த திட்டத்தையும் நல்லதா-கெட்டதா? அவசியமா-இல்லையா? என்னும் பொது நோக்குடன் பார்ப்பதில்லை. ஆனல் அத்திட்டம் நல்லதோ-கெட்டதோ? அவசியமோ அவசியமில்லையோ? எதுவானலும் அது யாரால் எந்த கக்ஷியினரால், எந்த ஜாதியினரால் கொண்டுவரப்படுகிறது என்று கவனித்தே அத்திட்டங்களின் தன்மையையும் முடிவுகட்டி விடுகிருர்கள். இம்மாதிரி கொள்கை நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு குந்தகம் விளைவிக்குமென்பதை எண்ணிப்பார்ப்பதில்லை. இது நமது மாகாணத்திற்கேற்பட்ட ஒரு சாபக்கேடுதான் என்றே கருதுகிருேம்.

இதற்கு உதாரணம் வனமகோத்சவ (வனவளர்ப்புத்திட்ட) இயக்கமாகும். இவ்வனமகோத்சவ இயக்கமானது உலகில் எல்லாதேசத்தினராலும் பல ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்விதமே நம் நாட்டிலும் செடி நடும் வாரம் (Tree plantiing Week) என்று வெள்ளையர் அரசாட்சி நாட்களிலிருந்தே நடந்து வந்துள்ளது. ஆனல் இதிலுள்ள வித்தியாசம் என்னவென்ருல் இவ்விழாவை அவ்வளவு முக்கியமானதாகக் கருதி தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை அன்றிருந்த சர்க்கார். ஆனல் இன்றைய சுதந்திர சர்க்காரோ நாட்டின் விவசாயக்கைத்தொழில் பொருளாதார, சமூக, அரசியல் முன்னேற்றத்திற்கு மரங்கள் (வனங்கள்) மிக முக்கியமானதென்பதை அறிந்து அதை தேசிய விழாவாக ஆக்கி, இதைச் செய்யவேண்டியது நாட்டில் ஒவ்வொருவருடைய கடமையென்று உணர்த்தியதுதான். மேலும் நமது நாட்டில் கடந்த 6 ஆண்டுகளாக ஏற்பட்ட வரட்சி, பஞ்சம், பட்டினி இவ்விஷயத்தை மேலும் தீவிரப்படுத்தத் தூண்டியதென்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆதலால் இத்திட்டமானது இங்குதான் நடத்தப்படுகிறதென்பதையோ அல்லது இன்று ஆட்சி பீடத்திலுள்ள காங்கிரஸ் சர்க்கார் தான் ஆரம்பித்தார்கள் என்ருே கூற முடியாது. அப்படியிருக்க இத்திட்டத்தைப்பற்றி பலர் குறைகூறிவருகிருர்கள் இதற்கு ஆதாரமாக இரண்டு தினசரிகளில் வந்த கேலிச்சித்திரங்களை நமது நேயர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்ருேம்.

(1) இச்சித்திரம் தினத்தந்தியில் வனமகோத்சவம் என்றதலைப்பில் வெளியாகியிருந்ததை நேயர்கள் கவனித்திருக்கலாம். இதிலே மரம் நடுகிறவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்கள் அவர்கள் நடும் மரத்தை ஆடுகள் மேய்ந்துவிடுகின்றன. மறுபடியும் மேய்வதற்கு வேண்டியமரங்களை இந்த ஆண்டிலும் காங்கிரஸ்காரர் நடுகிறுரென்று ஆடுகள் சந்தோஷபபடுகின்றன். இது தான்.

செடி நடுதலும் மரம் வெட்டுதலும்!



[illegible] "திருப்பதி" செய்கிறார்கள்! ஆடு-மாடு [illegible] "கிராப்" செய்துவிடுகிறார்கள்! [illegible] செடி நடுகிறார்கள்: [illegible]

(2) இது விடுதலையில் வெளியானது. தந்தி, டெலிபோன், மின்சாரம் இவைகள் போகும் வழியில் உள்ள மரங்களை ஷை இலாகா வெட்டிவிடுகிறதென்றும் ஆடுமாடு வைத்திருப்பவர்கள் தழைகளை வெட்டிவிடுகிறார்களென்றும், ஏழைகள் விறகுக்காக மரத்தையே வெட்டிவிடுகிறார்களென்றும் இதைத் தடுக்காத காங்கிரஸ்காரர் மரம் நடுகிறார்கள் என்கிறது இப்பத்திரிகை.

தினத்தந்தியிலுள்ள சித்திரத்தை கவனிப்போம். இதில் காங்கிரஸ்காரன் மரம நடுகிறுன். இவ்வியக்கத்துக்கு ஆதரவளிக்கும் காங்கிரஸ்காரனைப்போலுள்ளவர்களை வரவேற்று ஊக்கமளிக்கவேண்டும் மற்றும் இவ்வியக்கத்திற்கு இடையூறுசெய்யும் ஆடுகள் போலுள்ளவர்களை கண்டித்து சீர்திருத்தவேண்டும். இதன் பயன்தான் இக்கட்டுரை.

அமெரிக்காவில் மரப்பண்ணைகள்!

அமெரிக்காவில் 36,300 'மரப்பண்ணை' இருக்கின்றனவாம் அப்பண்ணைகளின் மூலம் மரங்கள் குறைவின்றி கிடைப்பதுடன் மண்ணரிப்பு வெள்ளச்சேதங்களும் தடுக்கப்படுகின்றனவாம் 3 ஏக்கர் முதல் 1,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள மரப்பண்ணைகள் உள்ளனவாம் இப்பண்ணைகளில் ஆண்டுதோறும் 30 லக்ஷம் ஏக்கரில் மரங்கள் நடப்படுகின்றது. இம்மரப்பண்ணைகளில் 10-க்கு 7 விவசாயிகளுக்கு சொந்தமாம்.

விடுதலையிலுள்ள சித்திரத்தை கவனிப்போம். இதில் வெட்டப்படும் மரங்களை பாதுகாக்க இயலாத காங்கிரஸ்காரன் மரம்நடுகிருனே என்கிறது அப்பத்திரிகை. மரம் நடுவதை ஆதரிக்கிறோம். அவசியமாக உள்ள சமயத்தில்—இடத்தில் வெட்டுவதையும் ஆதரிகிறோம். ஆனுல் அத்யாவசியமான (சாலைகள்) குளம், கரைகள்போன்ற இடங்களில் உள்ளமரங்கள் அடியோடு அழிக்கப்படுவதை கண்டிக்கிறோம் இதன்பலன் தான இக்கட்டுரை.

மேல்கூறிய இரண்டுச்சித்திரங்களிலும் காங்கிரஸ்காரர்களையே தான் குறிப்பிப்பட்டிருக்கிறது. இவ்வனவளர்ப்பு—நீண்டகால தேசிய ஆக்கவேலையில் காங்கிரஸ்காரருக்குமட்டும் தானு அக்கரை, சொந்தம்—மற்றவர்களுக்கு அக்கரையில்லையா? சொந்தமில்லையா? அல்லது நாட்டின் நலனுக்குச்சேவை செய்யவேண்யது மற்றவர்கள் கடமையில்லையா? என்பதுதான் நமதுகேள்வி.

நாட்டின் முன்னேற்றத்தில் அக்கரையுள்ள எந்தக்கக்ஷியோ அல்லது பத்திரிகையோ செய்யவேண்டி கடமை என்ன? அந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைப்பதல்லவா? அப்படியாளுல் இவ்வடிப்படையான, நிரந்தர நீண்டகால திட்டத்திற்கு ஒத்துழைக்காமல்—நாட்டின் பொதுச்சொத்து செலவுசெய்யப்படும் இவ்வாக்கவேலைக்கு ஆதரவு அளித்து, இவ்வியக்கம் பலம்பெற்று மக்களிடையே பரவ, ஊக்கம், உணர்ச்சியைத் தூண்டிவிடாமல் கேலியும் கிண்டலும், செய்வதேன்?

இன்று காங்கிரஸ் சர்க்கார் 30 கோடி மரங்கள் நடதிட்டமிட்டால் நாளை நமது நாட்டின் 300 கோடி ரூபாய் ஆஸ்தியல்லவா அது? இன்று ஏற்பட்டதுபோல் மீண்டும் வரட்சி பஞ்சம் ஏற்படுமாயின், அக்காலத்தில் ஏழை மக்களையும, கால்நடைகளையும் காப்பாற்றும் களஞ்சியமல்லவா அது? கைத்தொழிலைக்காப்பாற்றி பொருளாதாரத்தை உயர்த்தும் பொக்கிஷமல்லவா அது? அப்படியிருக்க இத்திட்டத்தைப் பற்றி குறைகூறுவதேன்?

ஒரு குடும்பத்திலே பெற்ளுேர்கள் நட்டு வளர்த்த மரங்கள், தோப்புகள் பின்வரும் சந்ததியார்களுக்கு ஒரு மூலதனமாவது போல், இன்றுள்ள சர்க்கார் விருத்திசெய்யும் வனங்கள் பின்வரும் சர்க்காருக்கும் ஒருமூலதனச் சொத்தல்லவா? இச்சொத்தை அனுபவிக்க விரும்பும் பிள்ளைகள் பெற்ளுேருடன் சேர்ந்து, செடிகளை நட்டு, தண்ணீர்விட்டு, எருவிட்டு, வேலிபோட்டு காபந்துசெய்தாலன்ளுே அதன்பலனை பின்னர் அடையலாம். நாட்டின்—நாட்டு மக்களின் நலனுக்கு சேவை செய்வதாகக்கூறும் தினத்தந்தியாரும் விடுதலையாரும், நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் நாட்டுமக்களின் முன்னேற்றத்திற்காகவும் அரசியலைக் கைப்பற்றத் துடிக்கும் தினத்தந்தி கக்ஷியாரும் விடுதலைக்கக்ஷியாரும் இன்றுள்ள காங்கிரஸ் சர்க்கார் செய்யும் எதிர்கால—இயற்கைச் செல்வத்தை விருத்திசெய்யும் இத்தேசியப் (மரம் நடும்) பணியில் ஒத்துழைக்கவல்லவா வேண்டும்?

ஆனுல் தினத்தந்தியாரோ ஏராளமாக பொது மக்களின் பணத்தை செலவு செய்து மரம் நடுகிருர்கள். நான் அவைகளை ஆட்டை மேயவிட்டு அழிக்கிறேன் என்கிருர். விடுதலையாரோ, விறகு, தழை, வீடுகட்ட, தீவனம் போன்றவைகளுக்கு வெட்டி விடுவதாலும் திருடர்கள் வெட்டிக் கொண்டு போய்விடுவதாலும் என் இந்த (மரம்நடும்) வேலையென்றும் கூறுகிருர். செடிகளை நட்டால் பெரியதாகும் வரை காபந்துச்செய்யத்தான்

[94-ம் பக்கம் பார்க்க]

GOVERNOR'S CAMP,
UTTAR PRADESH.

June 5, 1953.

Tree is life; it means water, fruit, manure and shade when tree and house when timber. If trees had not been, there would have been no fertility and no man on earth.

No ceremony either at birth, marriage or death should be complete, nor would a religious act bring its reward, unless a tree is planted.

K. M. Munshi.

முன்னாள் (மத்திய சர்க்கார்) உணவு அமைச்சரும், தற்போதைய உத்திர பிரதேச கவர்னருமான ஸ்ரீ K. M. முன்ஷியவர்களின் செய்தி

கவர்னரின் முகாம்,
உத்தர பிரதேசம்,
ஜூன் 5, 1953.

"மரம் தான் ஜீவன்; எப்படியென்றால் உயிருள்ளவரையில் மரங்கள் தண்ணீர், பழங்கள், உரம், நிழல் இவைகளை கொடுக்கிறது. அவைகள் உயிரற்ற மரமாக ஆனால் இருக்க வீடுகட்ட உதவுகிறது. ஆகவே மரங்கள் இல்லையென்றால் பூமியில் வளப்பமே இருக்காது; மனிதனும் இருக்கமாட்டான்."

"ஒரு மரத்தையாவது நட்டு வளர்க்காத எந்தச் (பிறந்த நாள், மணநாள், இறந்தநாள்) சடங்கும் பூர்த்தியானதாகாது; மேலும் எந்த வைதீகச் சடங்கும் பூர்ண பலன் தராது."

(ஒப்பம்) கே. எம். முன்ஷி.

நமது 11 கடமைகள்

- மழையை விருத்தி செய்வதற்கும், மண் கரைதலை தடுத்து பூமியை வளப்படுத்தி உணவு உற்பத்தியை பெருக்கவும் தக்கதோர் மரங்களை நட்டு வளர்ப்பது "விவசாயிகளின் கடமை".
- நாட்டின் தொழில் பெருகி பொருளாதாரம் உயர்ந்து மக்கள் நலம்பெற நல்ல மரங்களை நட்டு வளர்ப்பது "பாட்டாளி களின் கடமை".
- ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு குழந்தை பிறக்கும்போது அக்குழந்தை பெரிதாகி வளர்ந்து நீண்டகாலம் சுற்றத்தார் கள் சூழ வாழக்கோரி, ஆல், அரசு போன்ற மரங்களை நட்டு வளர்ப்பதே "பெற்றோர் கடமை".
- நமது குழந்தைகளுக்குச் செய்யும் ஒவ்வொரு சடங்கின்போ தும் அவர்களின் நன்மைக்காக நல் வளந்தரும் மரங்களை நட்டு வளர்ப்பது சுற்றத்தார் கடமை.
- பள்ளி—கலாசாலை பரீக்ஷைகளின் தேர்வின்போதும், எதிர் கால வளர்ச்சியின் அறிகுறியாக நல்ல பலன் தரும் மரங் களை நட்டு வளர்ப்பது "மாணவர்கள் கடமை".
- நமது குடும்பத்தில் நடக்கும் ஒவ்வொரு திருமணச் சடங்கின் போதும் எதிர்கால இன்ப வாழ்க்கை யனுபவிக்க, மதுர மான கனிகள் தரும் மரங்களை நட்டு வளர்ப்பது "மண மக்கள் கடமை".
- ஒவ்வொருவரும் தம் முயற்சியின் வெற்றிக்கறிகுறியாக ஒரு மரம் நட்டு வளர்ப்பதே வாழ்க்கையில் முன்னேறும் "வாலிபர் கடமை".
- சீதோஷ்ண நிலைமையை சீர்ப்படுத்தி மணமுள்ள காற்று, மதுரமுள்ள கனிகள், பசுமையான காட்சி, இவைகளுடன் அழகுபெறச்செய்யும் மரங்களை (வீட்டைச்சுற்றி) நட்டு வளர்ப்பதே "ஸ்ரீகளின் கடமை".
- யாத்திரை முதலியன செல்லும் ஒவ்வொரு சமயத்திலும் அந்த நல்ல காரியத்தின் பயனையனுபவிக்க ஜீவராசிகளின் இருப்பிடமாக ஒரு மரம் நட்டு வளர்ப்பதே "நல்லோர் கடமை".
- ஒவ்வொரு குடும்பத்திலும் இறந்துபோனவர்களுக்குச் செய் யும் ஈமச்சடங்குகளின்போது சாலைகளிலே ஒரு மரமாவது நட்டு (அம்மரங்கள் உள்ளவரை சொர்க்கத்திலிருக்க) வளர்ப்பதே "மக்கள் கடமை".
- நமது வாழ்க்கையின் பாதையிலே மைல் கற்களைப்போன்று நமது குடும்பத்தில் செய்யும் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு போன்ற ஒவ்வொரு மதச் சடங்கின்போதும் ஒரு மரம் நட்டு வளர்ப்பதே "நமது கடமை".

எதிர்கால சுபிக்ஷத்திற்கு இன்று செடிகள் நடுவோம்

"இந்தியாவின் சுயத்தேவையை பூர்த்திசெய்யும்பொருட்டு நிலவளம், நீர்வளம், கால்நடை, விஞ்ஞானமுறை ஆகியவற்றை அபிவிருத்தி செய்து பூரணமாக பயன்படுத்தும் ஒரு முக்கியமான உற்பத்தி திட்டத்தின் முக்கிய அம்சம்தான் "இவ்வன மகோற்சவ விழாவாகும்" இதன் பிரகாரம் 30 கோடி மரங்கள் நடப்பட்டு காடுகள் அபிவிருத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்படும். உண்மையை அறியாதவர்கள் கண்டித்தனர். அது கற்பனையின் கனிவல்ல. பிரமிக்க வைக்கும் கோலாகலமல்ல. நில சீரமைப்பின் பிரதான அம்சமாகும்."

"நாட்டின் பல பாகங்களிலும் காடுகளின்மையால் லக்ஷக்கணக்கான ஏகராக்களில் வளமிகு மேல்மண் அடித்துபோகப்படுகிறது. அடுப்பு எரிக்க சரியான மரமின்மையால் சாணத்தை எரித்து எருவை பாழாக்குகிறோம். விவசாய நிலங்களை விஸ்தரித்து மேய்ச்சல் தரைகளை குறைத்து காடுகளை அழிக்கிறோம். இதனால் மழை குறைந்து நதிகளும் வரண்டு போகின்றன. சாகுபடி நிலத்தின் சரிபாதி மண் அரிப்பினால் பாதிக்கப்படுகிறது. இதை சீர்ப்படுத்தினால் ஒரு கோடி டன் உணவு தானியம் அதிகம் கிடைக்கும் இவற்றிற்கு மரங்கள் அவசியம். மரங்களால் நீர் கிட்டும். நீர் கிடைத்தால் உணவு கிடைக்கும். உணவு கிடைத்தால் உயிர் நீடிக்கும்."

"இன்றைய மாணவர் நாளைய நாட்டின் பிரஜையாவதுபோல்—இன்றைய செடி நாளைய விருக்ஷமாகி பலனளிக்கப்போகிறது. எனவே உயிர் வாழ அவசியமான பூமியின் எதிர்காலத்தை வளமாக்க நாட்டின் பிரஜைகள் ஒவ்வொருவரும் ஒரு செடியாவது நட்டு பாதுகாக்கவேண்டியது மிக முக்கியமாகும்."

"எல்லா உயிர்களையும் ஒருயிராக பேணி வளர்ப்பது ஒரு காலத்தில் நமது முக்கிய கலாச்சார பண்பாடாக இருந்துவந்தது ஆனால் நாம் இன்று ஷை கலையை மறந்துவிட்டோம். அதனால் ஷை கலையை நாம் அறிந்துகொள்ளும் வரையில்—அதன்படி நடந்துகொள்ளும் வரையில், இப்போதுள்ள இக்கஷ்டமான நிலைமையிலிருந்து வெளியேறுவது கடினமென்பதை உணரவேண்டும். இதையும் தேசீய உணர்ச்சியுடன் கவனிக்கவேண்டும். உதாரணமாக இன்று நமது முன்னுள்ள உணவு பிரச்னையை எடுத்துக் கொள்ளுவோம். இந்தியா உணவு மிகுந்த நாடாக இருந்துவந்தது. ஆனால் இன்று பற்றாக்குறை நாடாக இருக்கிறது."

"சுஜலாம் சுபலாம் ஸஸ்ய ஸ்யாமலாம்" என்று கவிகளால் புகழ்ந்து பாடப்பட்ட நாடு இது—

"ஆல், அரசு, அத்தி வகைக்கு ஒன்று. வில்வம், விளாநெல்லி வகைக்கு மூன்று. தென்னை, மா வகைக்கு ஐந்து. புளி ஒன்று வைத்து பயிர் செய்பவர்களுக்கு நரகமே கிடையாது." —ஸ்ரீ மத்சய புராணம்.

—ஆனல் இன்று எப்படி இருக்கிறது? வறுமையிலும் எழ்மையிலும் வாடிப்போயுள்ளது. இன்று தன் மக்களுக்குக்கூட உணவளிக்க முடிய வில்லை. இதற்குக் காரணம் நாம் நமது கலாச்சார பண்பாடுகளை ஊக்கத் துடன் பின்பற்ருததேயாகும்.

நான் சமீபத்தில் பம்பாயில் பேசியபோது "மரங்கள் நீர் கொடுக்கும், நீர் உணவு கொடுக்கும்' 'உணவு உயிர் கொடுக்கும்' என்று சொன்னேன். அது வெறும் வாய்ப்பேச்சல்ல. முற்றிலுங் உண்மையான விஷயம். இது எனது தீவிர நம்பிக்கை. இன்று நமக்கு போதிய உணவு இல்லை. ஏனென்ருல் ஜலத்தை எப்படி சேகரித்து பாதுகாப்பது என்னும் நமது முன்னோர் களின் வழிமுறைகளை மறந்தோம்; அதற்குப் பதிலாக புது வழிகளையும் கற் றறிந்தோம் இல்லை—நாம் மரங்களை நட்டு வளர்ப்பதை கைவிட்டபடியால் மழை பெய்வதும் நிச்சயமற்றதாகிவிட்டது. 'மரங்களில்லாததால் தண்ணீ ருக்கும். தண்ணீரில்லாததால் உணவுக்கும், உணவு இல்லாததால் உயிருக் கும் கஷ்டமான நிலமை எற்பட்டுள்ளது"

"வன உணர்ச்சி பெற்றவர்களாக இருந்தவரை சுபிக்ஷமான நிலமையில் வாழ்ந்து வந்தோம் ஆனல் நமது குறுகிய புத்தியாலும் செய்கையாலும் மர உணர்ச்சியிலிருந்து நழுவிவிட்டோம். அக்கரையின்றி மரங்களைவெட்டி வீழ்த்திவிட்டோம். இப்போது மரங்கள் நடுவதுகூட எதோ ஒரு பொழுது போக்காக இருக்கிறதேயன்றி சமூக உணர்ச்சியுடன் இல்லை. நமது சமூக கலாச்சார பண்பாடுகளும் வன உணர்ச்சியும்தான் நாட்டின் வளர்ச்சியென் பதைகூட உணரும் சக்தியற்றிருக்கிறோம்".

"வனங்களை போஷித்து வளர்க்கவேண்டியதின் அவசியத்தை ரிக் வேதம் கோஷிக்கிறது 'பச்சை மரங்களை வெட்டுவது பாபம்' என்பதை யும், அதற்கு நரகத்தில் கொடிய தண்டனை உண்டென்பதும் மனுதர்ம சாத் திரத்தில் கூறப்பட்டுள்ளது. அதனல்தான் ஒருக்கால் "எட்டி மரமானலும் பச்சை மரத்தை வெட்டக்கூடாது" என்னும் பழமொழி எற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது எஜமானரின் கட்டளைப்படி பச்சைமரத்தை வெட் டிய வேலைக்காரன்கூட தண்டிக்கப்பட்டதாக மத்சய புராணத்தில் கூறப்பட் டுள்ளது. குளம், கிணறு, சாலை ஆகியவிடங்களிலிருக்கும் மரங்களை வெட்டி ஞல் அது கடுங்குற்றமாக்கப்பட்டு தண்டனைகள் விதிக்கப்பட்டு வந்திருக் கிறது".

"எவனொருவன் கிணறு (அ) குளம் வெட்டுகிருனே அவன் அக் கிணறு அல்லது குளத்தல் ஒரு சொட்டு ஜலம் உள்ளவரை சொர்க்க போகத்தை அனுபவிப்பான் என்று மத்சய புராணம் கூறுகிறது. ஆகவே அவ்விதம் 10 கிணறு வெட்டிய பலன் ஒரு குளம் வெட்டினல் கிடைக்கும்.

"நமது இந்தியாவை ஒரு பசும் நிறம் கொண்ட குளிர்ந்த நாடாக செய்வதற்கு மக்களின் மனதில் மரங்கள் நடுவதற்கான விருப்பத்தை எற்படுத்தவெண்டும் இதற்கு இவ்விஷயம் தெரிந்தவர்கள் தெரியாதவர் களுக்குச் சொல்லவேண்டும். மதங்களில அன்பு கொள்வதுபோல் மரங் களிலும அன்பு கொள்ளவேண்டும. அப்பொழுதுதான் பாலைவனங்கள் போல் உள்ள சில இடங்களில் மரங்கள் நட்டு குளிர்ச்சிபொருந்திய இடங் களாக மாற்ற முடியும்."

—லோபோ பிரபு.

10 குளம் வெட்டுகிற பலன் ஒரு எரியை கட்டுவதாலும் 10 எரியை கட்டும் பலன் ஒரு உத்தம புத்திரனை பெறுவதாலும், பத்து உத்தம புத்திரனை பெறும் பலன் ஒரு மரத்தை நட்டு வளர்ப்பதாலும் உண்டாகிறதென்று மத்சய புராணத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் எவனொருவன் ஒரு மரத்தை நட்டு வளர்க்கிறானோ அவன் 30,000 பிதுர்க்களை சந்துஷ்டி செய்தவனாகிறான் என்றும் மறுபிறப்பில்லாத சுவர்க்கத்தை அடைகிறான் என்றும் கூறுகிறது.

குழந்தைகளைப்போல் வளர்க்க

எவரொருவர் பொது நலத்திற்காக உபயோகமுள்ள மரங்களை நட்டு வளர்க்கிறாரோ அவர் நல்ல பதவியை அடைகிறார். ஆகவே ஒவ்வொருவரும் எப்போதும் உபயோகமுள்ள நல்ல மரங்களை நட்டு குழந்தைகளைப் போல் பாதுகாப்பாற்றவேண்டியது அவசியமென்று அக்கினி புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அதிலும் சிறிது தாரதம்மியம் கூறப்பபட்டுள்ளது. அதாவது குழந்தைகளை பெற்று வளர்ப்பதாவது சுயநல நோக்கம் கொண்டதாகும். ஆனால் மரங்களை நட்டு வளர்ப்பதோ பல ஜீவன்களுக்கும் உபயோகமுள்ள பரோபகாரச் செயலாகும் என்றும் கூறப்பட்டுள்ளது''.

''எதிலும் பற்றில்லாத நிஷ்காம்ய யோகிகளை வணங்குவதைப்போல் விருக்ஷங்களையும் வணங்குவது அவசியமென்று கூறுகிறார் கிரந்தகர்த்தா. எனெனில் ஷை யோகிகளுக்கு எப்படி சர்வமும் ஒன்றேயோ அப்படியே விருக்ஷங்களும், நண்பனென்றும் விரோதியென்றும் பாராட்டாமல் தன்னை வெட்டி வீழ்த்தவரும் மனிதனுக்குக்கூட வித்தியாசமின்றி, மனக்கசப்பின்றி, நிழல், புஷ்பம், கனிகள் ஆகியவைகளைத் தந்து உதவுகிறது. புத்திசாலியாக உள்ள எவரும் அவசியமான விருக்ஷங்களை நட்டு, பெற்ற மக்களைப் போல் கண்ணும் கருத்துமாக வளர்ப்பாரென்பதில் சந்தேகமில்லை.

''சொர்க்கம் வேறு வேண்டுமோ? என்—பசுமையான மரங்களடர்ந்த சோலைகளே சொர்க்கமல்லவா? இதைத்தான் முன்னாள் நமது பாரதநாட்டை ஆண்ட அசோக சக்ரவர்த்தியும் சொன்னார்—செய்தார். ''மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் நிழல் கொடுக்கும் ஆல மரங்களை நான் சாலைகளில் நட்டு வளர்த்தேன்—மாமர சோலைகளை உண்டாக்கினேன்'' என்றார். இது சுமார் 2300 ஆண்டுகளுக்குமுன் அசோகர் செய்த அரிய பெரிய காரியமென்பதை இன்றும் பார்க்கிறோம்—அவருடைய உபதேசத்தை நாம் மனதில் பதிய வைத்துக்கொள்ளவேண்டாமா? அவ்விதம் நாமும்—(மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் நிழல் தரும்) மரங்களை சாலைகளிலே நட்டிருக்கிறோம்; மாமர சோலைகளை உண்டாக்கியிருக்கிறோம் எனனும் பெருமையை நமது பிற்கால சந்ததியாருக்கு எடுத்துச் சொல்லவேண்டாமா?

''வன மகோத்சவம் வெற்றிபெற முக்கியமாக விவசாயிகள் மனப்பூர்வமாக ஒத்துழைக்வேண்டும்.''

—ஸ்ரீ ஷெட்டி.

உயர்ந்த கலாச்சார பண்பாடுகளெல்லாம்

நமது இந்த உயர்ந்த சிலாக்கியமான கலாச்சார பண்பாடுகளெல்லாம் சரஸ்வதி நதி தீரத்திலுள்ள ஆச்ரமங்களில் பிறந்ததென்பதையும்; சௌனக மஹரிஷி மஹா பாரதத்தை போஷித்த புண்ய நைமிசாரண்யவனத்திலே வளர்ந்ததென்பதையும். தன்னடக்கம், அன்பு, சமத்வம் நிறைந்த ரிஷிகள் வசித்துவந்த தபோவனங்களில்தான் வளம்பெற்றனவென்பதும் நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

நமது பழங்கால புராண இதிஹாசங்கள் எல்லாம் அழகிய நந்தவனங்களிலும் தண்டகாரண்ய வனத்திலும் நிகழ்ந்திருக்கின்றன. உத்தம சீதா தேவியும் தவமிருந்து ஸ்ரீ ராமபிரானை அடைந்தது அசோகவனத்தில்தான் என்பதும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவது அவசியம்''

''நமது வாழ்க்கையின்பமும், ஆத்மீக மார்க்கத்திற்கு வழிகாட்டி (கீதை) உபதேசம் செய்த கிருஷ்ணனின் குழல் நாதத்திலே மிதந்து கிடக்கும் (புஷ்பங்களும் கனிகளும்கொண்ட மரங்களடர்ந்த) பிருந்தாவனத்துடன் பிணைக்கப்பட்டிருக்கிறதென்பதையும் நாம் மறப்பதற்கில்லை. ''மரங்களிலே நான் அஸ்வத்த (அரச) மரமாய் இருக்கிறேன்'' என்று கீதையில் கண்ணன் கூறியதை என்றும் நமது எண்ணங்களிலே ஒலித்துக்கொண்டிருக்கவேண்டும்.''

நன்றியற்ற வார்சுகளாக

''உத்தம பெண்மணி சகுந்தலையின் உயர்ந்த கருத்துக்களை கவி காளிதாசர் எடுத்து கூறியிருக்கிறார். தான் நட்டுள்ள செடிகள், மரங்களுக்கு தினமும் தண்ணீர் ஊற்றாமல் உணவு கொள்ளமாட்டாள். அந்த மரம் செடிகளிலிருந்து சிறு அரும்பைகூட கிள்ளியெடுத்து அதன் அழகை குறைத்து, அதற்கு துன்பத்தை உண்டாக்கினதில்லை—செடிகளிலேமலர்ந்த மலர்களின் அழகைக் கண்டானந்திப்பதிலேயே அவளுக்கு எல்லையில்லாத இன்பம்.''

''பார்வதிதேவிகூட தேவதாரு என்னும் மரத்தை நட்டு சொந்த குழந்தைக்கு பாலூட்டி வளர்ப்பதுபோல் தண்ணீர் ஊற்றி காப்பாற்றியதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது''

நற்சுவை அறியும் ஞானமானது நமக்கு மழுங்கியுள்ளது. பசுமையடர்ந்த வனங்களின் பெருமையை அறிந்து நமது முன்னோர்கள் செய்தபடி நாம் செய்ய தவறிவிட்டோம்—அதனால் மரங்களை வெட்டி வனங்களை அழித்தோம். மரங்களை நடவேண்டிய கடமையையும் செய்யத் தவறினோம்—

[31-ம் பக்கம் பார்க்க]

" காடுகளை கண்மூடித்தனமாக அழிக்கக்கூடாது. காடுகளழித்தால் மழை குறையும். மழை குறைந்தால் உணவு உற்பத்தி குறையும். ஆகவே மரங்கள் வெட்ட வெட்ட புதிய மரங்கள் பயிரிடப்பட்டு காடுகளின் செல்வத்தை காப்பாற்ற வேண்டும்.''

—மைசூர் மகாராஜா.

வறுமையை நீக்க வனமகோற்சவம்.

(கூத்தாடி)

1. நாகரீகமென்று சொல்லிப் போகப் போகவே—ஜனங்கள்
தேகம் குன்றி பலவழியில் செத்துமடியுது.

2. உழைத்து உழைத்து உடல்மெலிந்து சளைத்துப் போகுது—கிணறு
ஊற்று வற்றி பயிர் வதங்கி சாவியாகுது.

3. பட்டம் தவறி மழை பெய்வதால் நட்டமாகுது—பயிர்கள்
இட்டபிறகு ஈரமின்றிக் கெட்டுப்போகுது.

4. சொட்டுமழை யின்றிபூமி கட்டுவிடுகுது—கால்நடை
சோக்கங்கொண்டு தாகத்தாலே நாக்கைநீட்டுது.

5. மனிதன்கொண்ட மூடப்பழக்கம் மடிந்துபோகணும்—மழையைக்
கனிந்துபெய்ய யுக்தியொன்று செய்துதீரணும்.

6. வானம்நோக்கி தியானம்செய்யும் மானிடர்களே—நீங்கள்
வனம் வளர்க்கும் உற்சவத்தை செய்துபாருங்கள்.

7. அடர்த்தியாக இலைகள்தாங்கி வளர்ந்த மரங்களே--காற்றை
குளிர்ச்சியாக்கி மேகம்நீரைப் பொழிய வைத்திடும்.

8. ஊர்ப்புறத்தில் சாவடியில் ஒற்றைப்பாதையில்—மரங்கள்
நேர்மையாக வைத்து நீரைவார்த்து வாருங்கள்.

9. மரம்பெருத்துப் பார்ப்பதற்கு மகிழ்ச்சி யூட்டிடும்—அதோடு
பலர் இருக்க நிழலைத்தந்து களைப்பைப் போக்கிடும்.

10. பருவக்காற்று மழையும்பெய்ய தவறிப்போகாது—எங்கும்
கருவுகாலம் வந்து நம்மைக் கஷ்டபபடுத்தாது

11. வழிவழியாய் வளர்ந்துவந்த காட்டையழித் திட்டோம்—அந்த
பழியும் நீங்க மரங்கள் வைத்துப் பாதுகாத்திட்டால்

12. அரிசிப்பஞ்சம் விறகுப்பஞ்சம் அடங்கி யொழிந்திடும்—அதோடு
ஆலையோட்ட கரிவிலையும் குறைந்துபோயிடும்.

13. செயற்கைமுறையில் மழையையுண்டு பண்ணமுடியுமா—மனிதன்
செத்தபிறகு உயிரை உடம்பில் புகுத்தமுடியுமா?

14. மரங்களின்றி பூமிசெழிக்க மார்க்கமொன்றில்லை—மழையைக்
கரணம் போட்டுப் பார்த்திட்டாலும் காணமுடியலே.

15. சிரமமின்றி தோப்புத் துரவை சீர்படுத்தினல்—இனிமேல்
பரமனுளும் தேவலோகம் பார்க்கலா மிங்கு.

16. வனமகோற்சவத் தைச்செய்ய கவனம் செலுத்தினல்—உயர்ந்த
வான கங்கை தானிறங்கி வளர்த்திடும் உலகை.

இக்கட்டுரை எழுதியனுப்பிய ஸ்ரீ V. சபாபதி அவர்களுக்கு "கிருஷிகன்" பேனு ஒன்று பரிசளிக்கப்பட்டிருக்கிறது. —(ஆசிரியர்)

உணவுப் பெருக்கத்தை உற்பத்தி செய்யும் வன மகோற்சவம் வாழ்க! வாழ்கவே!!

'பாவம், அவள் என்னசெய்வாள், வறுமையின் கொடுமை. வண்டு மொய்க்கும் வகைவகையான மலர் சூடவேண்டிய தலையில் கூடையைச் சுமந்து கூலிவேலை செய்யவேண்டிய காலம் பிறந்து, வருடங்கள் எட்டுக்குமேல் ஆகிவிட்டது.

எல்லோரையும்போல கன்னிப்பெண்ணாயிருந்த கமலத்திற்கும் காலாகாலத்தில் கலியாணமும் நடந்தேறியது. அவள் கண்களுக்கு நிறைந்த கணவனாக வந்தவன் வேலுசாமிதான். திரண்ட புயமும் திண்ணிய வலுவும் கொண்டு வேளைக்கு ஒரு ரூபாயாக தினம் தினம் ரூபாய் மூன்றுக்குக் குறையாமல் மூட்டை தூக்கி சம்பாதித்துவந்த வேலுசாமி திடீரென்று நோய்வாய்ப்பட்டான். கற்கண்டுபோல் இனித்த வாழ்க்கைப் பாதை கல்லும் முள்ளும் நிறைந்து காக்ஷி அளித்தது கமலத்தின் கண்களுக்கு தன்னைத் தாங்கிநிற்கும் விருக்ஷம் வேலுசாமிதான். அவன் உயிருக்கு ஏதாவது வந்தால்......! என்று நினைக்கும்போதே கமலத்தின் கண்கள் கடகடவென்று நீரைச் சொறிந்தன. ஆனால் அவள் எண்ணத்திற்கும் ஏக்கத்திற்கும் காத்துக்கொண்டா இருக்கும் காலச்சக்கரம். நோய்வாய்ப்பட்ட வேலுசாமி ஒரு நாள் தன் கண்களை இறுக மூடிக்கொண்டதுமல்லாமல் கமலத்தின் கண்களிலும் மண்ணைப் போட்டுவிட்டான்,

கொழுக்கொம்பிலாத அபலை கமலத்திற்கு அந்த ஊர் கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தாக்களுக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டுபோய் கொடுத்துக் கூலி வாங்கிக் காலத்தைக் கழிப்பதைத் தவிர வேறு வழி ஒன்றும் கிடைக்கவில்லை.

நல்ல வெய்யில் தார் ஊற்றிய ரஸ்த்தா, இரண்டு பக்கங்களிலும் அடர்ந்து வளர்ந்த மரங்களல்ல, வறண்டு உருகி

“ மரம் நடுவதை நமது மதாசாரங்களில் ஒன்றாக கொள்ள வேண்டும். இவ்விதம் கொண்டு அதிக மரங்கள் உற்பத்தி செய்வதால் சுபிக்ஷத்திற்கு வழி ஏற்படும்.”

—பவநகர் மகாராஜா.

யோடும் மணல், காலில் செருப்புக்கூட இல்லை. மணி பனி ரெண்டிற்குமேல் ஆகிவிட்டது காரியாலய குமாஸ்தாக்கள் சாப் பிடவேண்டிய நேரம். 'பாழும் ரஸ்த்தாவில் ஒரு பச்சை மரங் கூட கிடையாதே' என்று அல்லல்பட்டுக்கொணடு கால் பூமியில் பாவாமல் நடராஜனைப்போல் நர்த்தன ரூபமாக ஓட்டமும் நடையுமாய் விரைந்து செல்லும் காட்சி. மாடியில் உட்கார்ந்த படியே பார்த்த என் மனது அனலிலிட்ட புழுவாய்த் துடித் தது. ஒரு முனிஸிபல் சேர்மேன் என்ற ஹோதாவில் எவ் வளவோ நன்மைகளைச் செய்திருந்தும் பொது மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் யான் தவறியதாக எண்ணி னேன். அன்றைக்கே எடுத்துக்கொண்டேன் அழகாக நகர் முழுவதும் மரங்கள் வைத்து நிழலைப் பரப்பும் பணியை' என்று படித்துக்கொண்டே போன என் எண்ணம் பூராவும் கனம் பொருந்திய முன்ஷி ஐயா அவர்களின் திட்டத்தில் சென்றது. அப்படியே புத்தகத்தை மூடி வைத்துவிட்டு சிந்தித்தேன். சிந் தனைச் சுழல் என்னை ஜூலை மாதம் நடக்கவிருக்கும் வன மகோற்சவத்தில் பங்கெடுத்துக்கொள்ளும்படி தூண்டிற்று. காரணம் நம் இன்றைய சிக்கலான உணவுப்பஞ்சம்தான்.

[28-ம் பக்கத் தொடர்ச்சி]

விருக்ஷங்களை எப்படி நட்டு வளர்ப்பதென்பதைகூட மறந்திருக்கிறோம். இச் செய்கைகளாலே, பெருமைகொண்ட நமது முன்னோர்களுக்கு இதுவரை நாம் நன்றிகெட்ட வாரிசுகளாகிவிட்டோம்''

ஆகவே இனிமேலாவது நாம் செய்துள்ள தவறுகளை களைந்து நமது மேலான பண்பாடுகளையறிந்து நடந்துகொள்ளுவோமாகவும். நமது கலாச் சார பண்பாடுகளுக்கு மூலகாரணம் வனங்கள்—அவைகள் வானளாவிய விருக்ஷங்களின் நிழலிலே பிறந்து அவ்விருக்ஷங்களின் இலைகளிலிருந்து சொட்டும் மதுரத்திலிருந்து உண்டு வளர்ந்து வனங்களின் வளத்திலே உறம் பெற்றதாகும்.

மனித வர்க்கத்தின் க்ஷேமத்திற்கு தவம் கிடக்கும் உத்தம யோகிகள்- ரிஷிகள் வாழும் வனங்களையும் உயிர் பிராணிகளுக்கும் மனித வர்க்கத்திற்கு சுபிக்ஷமும் செல்வத்தையும கொடுக்கும் பல விருக்ஷங்களையும் போற்றத்தக்க உயர்ந்த மகிழ்ச்சியையும், மேன்மையானகௌரவத்தையும். ஒவ்வொருவீடு- கிராமம்—நகரமும் பசுமையான செடிகளடர்ந்து அழகிய மலர்களும கனி களும் நிறைந்து சோலைகளுடன் விளங்கும் காக்ஷியை என்றும் மறக்கவே முடியாது.

''ஆதலால் நமது நாட்டில் ஒவ்வொரு (ஆண் பெண்) பிரஜையும் தவறு மல் பார்வதி தேவியைப்போல் ஒரு மரமாவது நட்டு, தாய் தந்தையைப் போல் அதைப் போற்றி வளர்ப்பதால் நாமும் நலமடைவோம். நாடும் நலமடையும்''

—(இந்திய உணவு மந்திரி ஸ்ரீ முன்ஷியின் பிரசங்கத்தின் சில பகுதிகள்.)

உயர்ந்த மலைகளையும், அடர்ந்த காடுகளையும் கொண்ட இயற்கை வளம் நிறைந்ததல்ல நம் தமிழ் நாடு. காவிரிப்படுகையைத் தவிர மற்றெல்லா விடங்களிலும் "மாரியல்லது காரியமில்லை"யென்று வானத்தை நம்பி வயிறு வளர்க்கும் நிலை. சேரனுடைய சோழவளநாடும் இன்று மேட்டூர் தண்ணியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கேட்டு வாங்கிவரும் நிலைக்கு வந்து விட்டது. இவ்விதம் நாட்டில் கோளாறு உண்டாகக் காரணம் என்ன என்று சிந்தித்தால் பருவ காலங்களில் மழை பெய்யத் தவறியதுதான் என்ற பதில் சொல்லாமலே விளங்கும். பருவகாலங்கள் தலைதடுமாறியதால் பயிரிடும் நிலங்கள் பாளம் பாளமாக வெடிக்கின்றன. பசும் புல்லும் தலைகாட்டாத அளவு மழையின்றி வருடக் கணக்கில் இப்படியே போய்க்கொண்டிருந்தால் என்ன ஆவது; உலகம் எப்படி உய்யும்; உயிர்கள் வாழ வேண்டாமா என்ற எண்ணங்கொண்ட பெரியவர்கள் மழையை உண்டுபண்ண ஒரு வழியைக் கண்டுபிடித்துள்ளனர். அதுவே ஜூலைமாத ஆரம்பத்தில் நாம் கொண்டாடப்போகும் வனமகோற்சவம். இந்த நன்னாளில் அவரவர்களும் தன்னாலான ஒரு சிறு தொண்டு—வீட்டிற்கு ஒரு விருக்ஷம் உண்டு பண்ணுவதே. பணச்செலவும் சிரமமுமின்றி ஒரு சிறு வித்து ஆழ ஊன்றினால் அதிலே ஆறு மாதங்களில் அழகாக வேர் ஓடி தளிர்களுடன் கண்ணிற்குக் குளிர்ந்த காட்சி, ரம்யமான காற்று; இனிய நிழல்; இன்பமான கனி இவ்வளவையும் நாளடைவில் தந்து தனக்கென வாழாப் பெருந்தகையாக வீட்டிற்குச் செல்வமாய், விழுந்தால் விறகாய் மறையும் வரையில் மனிதனுக்கு உதவக்கூடியது மரம். அம்மரத்தை உற்பத்திசெய்ய முன் வரும் ஒவ்வொருவரும் தன் கடமையைச் செய்தவர்களாவார்கள்.

இப்படியே பலரும் பல மரங்களை உற்பத்தி செய்தால் அவை அடர்ந்து வளர்ந்து, ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மேகங்களைத் தம்மிடம் இழுத்துக் குளிர்ந்த காற்றைக் கிளப்பி மழையாக மாற்றவல்ல சக்தி அவைகளுக்கு உண்டு. இவ்வுண்மையை அறியாது அரசர்களால் வளர்க்கப்பட்டுவந்த காடுகள் அழிக்கப்பட்டன. அதன் கேடுதான் இன்று மழையில்லாது வானம் பார்க்கவேண்டிய நிலை. எனவே சாலைப்புறம், தோட்டங்கள்,

---

"சாலை ஓரங்களில் மரம் நடுபவர் அம்மரங்களில் இலைகளும், பூக்களும், பழங்களும் எவ்வளவு வருடங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு காலம் சுவர்க்கத்தில் பேரின்பம் அனுபவிப்பார்கள்."

—ஸ்ரீ பத்ம புராணம்.

ஜீவன் சக்கரம் 1

(தண்ணீர்)

பூமியில் ஒரு பகுதி ஜலபாகமாகும். அதாவது பூமியின் நீரூற்றுகள், குட்டைகள், குளங்கள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள், ஆறுகள், சமுத்திரங்கள் போன்றவைகளாகும்.

பூமியிலுள்ள நீரைத் தாவரராசிகள் வேர்களின்மூலம் உரிஞ்சி நீராவியாக ஆக்கிக்கொண்டே இருக்கிறது. நீர் நிலைகளிலுள்ள ஜலத்தை ஜீவராசிகள் குடிசது ஆவியாக மாற்றிக்கொண்டேயிருக்கிறது. மேலும் உஷ்ணத்தாலும் காற்றாலும் நீராவியாக மாறிக்கொண்டேயிருக்கிறது இவ்விதம் ஆகாயத்திற்குச் செல்லும் நீராவி மேகங்களாக மாறி மழையாகப் பெய்கிறது



1951 ல் ஜலாதாரச் சக்கரம்

ஓடும், தேக்கப் படும், உபயோகப் படுத்தப்படும் ஜலத்தின் அளவு.

மொத்த அளவு 13,500 லக்ஷம் ஏக்கர் அடி.

(a) தற்காலம் தேக்கப்படுத்தப்பட்டு உபயோகப்படுத்தப்படும் அளவு 800 லக்ஷம் ஏக்கர் அடி

(b) எதிர்காலத்தில் ,, ,, அளவு 4500 ,, ,,

தாவரங்களின் வேர் மூலம் தடுக்கப்பட்டு பூமிக்குள் உறிஞ்சப்பட்டு ஊற்றுக்கண்களை நிறப்புகிறது. மீதியுள்ள ஜலம் வழிந்தோடி குளம், குட்டைகளை நிறப்பி, ஆறுகளில் விழுந்து, ஏரிகள், நீர் தேக்கங்களை நிறப்பி, கடைசியாக சமுத்திரத்தில் கலந்துபோகின்றது, இவ்விதமே மாறி மாறி ஜலாதார சக்கரமானது இயற்கையாக இடைவிடாமல் சுற்றிக்கொண்டே இருக்கிறது. இவ்விதம் இஜ்ஜலாதாரச் சக்கரமானது பூரணத்வமடைந்திருக்க வேண்டுமானால் தேவையான நீர்—கிடைக்கக்கூடிய நீரின் அளவுக்குச் சரியாக இருக்கவேண்டும். அதாவது கி. நீ. - தே. நீ. ஆகும். அப்படியின்றி கி. நீ. யைவிட தே. நீ. அதிகமாக இருக்குமானால் (காஷ்மீர், அஸ்ஸாம் வடக்கு பீஹார் போன்ற வெள்ளத்தின்) இயற்கையின் கொடுமைக்கு மனிதன் இரையாகவேண்டும். அப்படிக்கின்றி ராஜஸ்தான்போன்ற இடங்களி

லுள்ளதைப்போல் கி. நீ. யைவிட தே. நீ. அதிகமாக இருக்குமானல் மனிதன் (வரட்சியினல்) இயற்கையின் சோதனையினல் வாடி, வதங்கி இறக்க நேரிடுகிறது. இரண்டு விசங்களிலும் மனிதன் இயற்கையின் சமநிறைவு இல்லாததால் அவதிப்படுகிருன்.

ஆகவே கிடைக்கும் நீரைவிட தேவை அதிகமாக இருக்குமாகிலும், தேவையைவிட கிடைககும் நீர் அதிகமாக இருந்தாலும் ஆறுகளில் அணைகள் கட்டியும், ஆற்று பள்ளத்தாக்கு திட்டங்கள் ஆரம்பித்தும் தண்ணீரை தேக்கிக்கொள்ளவேண்டும். இவைகளெல்லாவற்றையும்விட சீதோஷ்ணத்தை சமநிலைப்படுத்தவும், மண்கரைதலை தடுக்கவும், வெள்ளத்தையும், வரட்சியையும் குறைக்கவும், மழையை அதிகரிக்கவும் ஏராளமான மரங்கள் தேவையாகும்.'' இப்படி 1961-ம் ஆண்டுக்குள் 30 கோடி மரங்கள் நடுவதின்மூலம் இதைச்செய்வது சாத்தியமாகும்.

1961-ல் ஜலாதாரச் சக்கரம்

ஓடும் - தேக்கப்படும் - உபயோகப்படுத்தப் படும் மொத்த தண்ணீரின் அளவு

13500 லக்ஷ ஏக்கர் அடி.



1961-க்குள் 30 கோடி அதிக மரங்கள் நடுவதின்மூலம் நீராவியாக வெளியேறும் ஜலம் குறைந்து தேக்கப்படும் அளவை அபிவிருத்தி செய்திருப்பதை விளக்கும் படம் கடல்நீரின் அளவில் வித்தியாசத்தையும் காண்க.

N. B:- இந்தியன் பார்மியிலிருந்து எடுக்கப்பட்டது.

எந்தப்பிரதேசத்திலும் தேவையைவிட கிடைக்கும் நீர் குறைவாக இருந்தால் தேவைக்கேற்ற அளவு, கிணறு, குளம், குழாய்க்கிணறு, நீர்த்தேக்கங்கள், அணைகள் அபிவிருத்திச் செய்யப்படவேண்டும். அதைவிட மண்ணரிப்பைத் தடுத்து, பூமியைக்குளிர்ச்சி செய்து, மழையை விருத்திசெய்ய அதிகமான மரங்கள் நடப்படவேண்டும்.

—ஸ்ரீ முன்ஷி.

எது சரி?

அமெரிக்கர்கள் மரப்பண்ணைகளை வளர்த்து மரக்கட்டைகளுக்கு குறைவில்லாமல் பார்த்துக்கொள்ளுகிறார்கள். காடுகளை அழியாமல் காப்பாற்றுகிறார்கள். மழைநீர் மண்ணை அரித்து வீணாக்காமல் தடை செய்கிறார்கள். பெருவெள்ளம் ஏற்படாமல் தடுக்கிறார்கள். காடுகளில் வெட்டப்படும் மரங்களுக்குப் பதில் மரங்களை வைத்தும், மரத்தூள்கள், துண்டுகள், சருகு முதலியவற்றை துப்புரவுசெய்து தீப்பிடிக்காமலும் வனவிருத்தியிலே மக்கள் நன்கு ஒத்துழைக்கிறார்கள். பத்திரிகைகளும் மரம் வளர்ப்பதை எடுத்துக் கூறி ஆதரிக்கின்றன.

ஆக்கப்பாதையும் - அழிவுப்பாதையும்

இந்தியர்கள் காடுகளை வெட்டியும், ஆடுமாடுகளை மேயவிட்டும் அழித்து வருகிறார்கள். மண் அரிப்பினால் வளமான மண்ணை இழந்துவருகிறார்கள். வெள்ளத்தாலும் பஞ்சத்தாலும் மக்களை மடியச் செய்கிறார்கள். புதிய மரங்களை நட்டு வளர்க்கவேண்டுமென்ற உணர்ச்சியின்றி மரங்களை அழித்து மரப்பஞ்சத்தை விருத்திசெய்து வருகிறார்கள் வனங்கள், மரங்களின் விருத்தியிலே ஒத்துழைப்பதுமில்லை. உழைப்பவர்களை குறைகூறாது விடுவதுமில்லை, பத்திரிகைகளோ மரம் வளர்க்கும் இயக்கத்தை கேலி செய்கின்றன.

நேயர்களே சிந்தித்துப்பாருங்கள்.

ஜீவன் சக்கரம் 2

(உணவு)

மனிதர்கள், மிருகங்கள் முதலிய ஜீவராசிகள் தங்களுக்குத் தேவையான உணவை (போஷாக்கு சத்தை) பூமியிலுள்ள தாவர (மரம், செடி, கொடி,) வர்க்கங்களின்மூலம் கிடைக்கும் பொருள்களிலிருந்து கிரகித்துக்கொள்ளுகின்றன- தாவரங்களைக்கொண்டு உயிர்வாழாத ஜீவராசிகள், தாவரங்களைக் கொண்டு உயிர்வாழும் பிராணிகளைத் தின்று வாழுகின்றன. உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் தாவரங்கள் உணவளித்து வருகின்றன. சாகுபடி செய்யப்படுபவைகளோ அல்லது தானாக உற்பத்தியாகக்கூடியவைகளோ எதுவானாலும்) அவைகள் தங்களுக்குத் தேவையான போஷணைச் சத்துக்களைப் பூமியிலிருந்தே எடுத்துக்துக்கொள்ளுகின்றன.



உணவு வட்டம்

அதாவது மண்ணிலிருந்து தாவர வர்க்கங்களுக்கும் தாவர வர்க்கங்களிலிருந்து மனிதர்களுக்கும் ஜீவராசிகளுக்கும் மறுபடியும் தாவரங்கள், மனிதர்கள், ஜீவராசிகளிலிருந்து மண்ணுக்குமாக மாறிக்கொண்டிருக்கும் போஷாக்குச்சத்தை காட்டும் படம்.

பூமியோ வற்றாத சமுத்திரமல்ல. அதற்கும் போஷாக்குத் தேவையாக இருக்கிறது. இது ஜலம், கால்நடை, மனிதன், தாவரங்களின் கழிவுமூலம் கிடைக்கிறது. இது குறைவாக உள்ள இடங்களில் ரசாயன உரங்களின்மூலம் தான் கிடைக்கச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போஷாக்குச் சத்தின் சக்கரம் இடையூறின்றி சுழலவேண்டுமானால் மனிதன் கால்நடை இவைகளின் போஷாக்குத் தேவையானது, பூமிக்கு திருப்பியளிக்கும் போஷாக்குச்சத்தின் அளவுக்குச் சரியாக இருக்கவேண்டும். அதாவது (ம+உகா.) தே=பூதிபோ. என்னும் முறையானது சரியாக காக்கப்படவேண்டும்.

ஆகவே இவ்விதம் ஜீவராசிகள் தாவரங்கள் இவைகளின் வளர்ச்சிக்கு உணவாக கிரகிக்கப்படும் உணவுச் (போஷாக்குச்) சத்துக்களை ஈடுசெய்ய, மனிதர்கள், ஜீவராசிகள், தாவரங்களின் கழிவுகளை பூமிக்கே திருப்பியளித்து மண்வளத்தை பாதுகாப்பதின்மூலம் உணவு சமநிறை திட்டத்தை பாதுகாக்கவேண்டும்.

N. B:- இந்தியன் பார்மிங்கிலிருந்து எடுக்கப்பட்டது.

காசநோய் (க்ஷயரோகம்)

A. அம்பலவாணன்,
(சுகாதார இன்ஸ்பெக்டர், விழுப்புரம் மேற்கு ரேஞ்சு.)

காசநோய், காசநோய்க் கிருமிகளால் உண்டாகிறது. மனித உடலில் எந்த பாகத்தையும் பீடிக்க வல்லது. இதை எலும்புருக்கி நோய் என்றும் கூறுவர். இது பசு, கோழி போன்ற பிராணிகளையும், பீடிக்கிறது. சென்னை மாகாணத்தில் இது அதிகமாய்ப் பரவியுள்ளது. இந்நோய், ஆண், பெண் இருதிறத்தாரையும் தாக்குவதுடன், இளங்குழவிகள் என்றும், இளங் காளைகள் என்றும், இளங் கன்னிகைகள் என்றும், வயதில் முதி யோர்களென்றும், விடுவதில்லை.

காசநோய்க் கிருமிகள், மனித உடலிலும், பிராணிகளின் உடலிலும் நுழைந்து, இந்நோயை யுற்பத்தி செய்து, பரப்புகிறது. இக்கிருமிகள் நான்கு வகைப்படும். (1) மனிதரைப் பீடிக்கும் வகை. (2) பிராணிகளைப் பீடிக்கும்வகை (3) பறவைகளை (கோழி முதலியவற்றை) பீடிக்கும்வகை. (4) குளிர்ரத்தம் பிராணிகளை (தவளை போன்றவை) பீடிக்கும் வகை. காச வியாதி தாக்குண்டவர்களின் கபத்திலிருக்கும் கோழையில் இக்கிருமி கள் ஏராளமாக இருக்கின்றன. இக்கோழை மூலம் இவ்வியாதி பரவுகிறது.

[32-ம் பக்கத் தொடர்ச்சி]

ஊர், சாவடி, குளக்கரை, கோவில், கொல்லைப்புறம், வயல் வெளி, முதல் எல்லா இடங்களிலும் பலவிதமான மரங்களை வைத்துப் பயிர் செய்தால் அதன் பயனை அடுத்த 10, 15 வரு டங்களில் காணலாம். காவியங்களிலும், கதைகளிலும் ராஜா என்று வந்தால் அவன் வேட்டைக்குப் போனான் என்று படிக் கிறோம். அப்பொழுது மாத்திரம் காடுகள் ஏது என்ற கேள்வி உடனடியாகப் பிறக்கிறது நம்முள். ஆம்! காடுகளை மன்னர்கள் உற்பத்திசெய்து பாதுகாத்தனர்தான். ஆனால் மிருக வேட் டைக்காக அல்ல; காட்டையடுத்த நாட்டில் மழைபெய்து சுபீக்ஷமுண்டாக்கவே. இதையறிந்து நாமும் வருடத்திற் கொரு செடியாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு செடி நட்டால் அவை வளர்ந்து விருக்ஷங்களாகி "அணி, தேர், புரவி, ஆட் பெரும்படையொடு மன்னர்க்கிருக்க நிழலாகி", "துப்பார்க்குத் துப்பாயதுமான மழை"யைத் தப்பாமல் தந்து மண்ணில் ஏரை இறக்கி மன்னன் கோலை உயர்த்தும்—உணவுப் பெருக்கத்தை உற்பத்திசெய்யும் மட்டற்ற நன்னாளை எதிர்பார்க்கலாம்.

V. சபாபதி, பி. எஸ்சி.,
அண்ணாமலை பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்.

காசவியாதியால் தாக்குண்ட ஒருவன், கண்டவிடங்களில் கோழையைத் துப்புவதால், காசவியாதிக் கிருமிகள் நிறைந்த கோழிகள் உலர்ந்து, தூசியில் கலந்து காற்றில் பரவுகிறது. இதனருகிலிருப்பவர்கள், இக்கிருமிகள் கலந்த காற்றை சுவாசிப்பதனுல், சுவாசவாயில்கள் வழியாக நுரையீரலுக்குச் சென்று, அவர்களைத் தாக்குகின்றன. மற்றும், காசவியாதியுள்ளவனை சமையல் செய்யச் சொல்லுவதாலும், ஆகாரம் சாப்பிடும்போது, க்ஷயரோகி பக்கத்திலிருந்து இரும்புவதனுலும், உணவை ஈ மொய்க்க விடுவதனுலும், சிற்றுண்டிசாலைகளிலும், இதர இடங்களிலும், சரிவர கொதித்த ஜலத்தில் சுத்தஞ் செய்யப்படாத கோப்பைகள், தட்டுகள் கரண்டிகள் மூலம் சாப்பிடுவதனுலும், இந்நோய் உடல் முழுதும் பரவுகிறது.

காசநோய்க் கிருமிகள் மனித உடலில் புகுந்தவுடனே இவ்வியாதியின் குறியைக் காட்டவேண்டிய அவசியமில்லை. வியாதிகளை எதிர்க்கும் சக்தி (Immunity) தேகத்திலிருக்கும் வரை, அக்கிருமிகள் உயிர் வாழ்வதில்லை ஆனுல் மனிதன் திடகாத்திரனுக வாழ, அவன் சூழ்நிலை, சுகாதாரத்திற்கு கேடாக இருக்கும்போது, அவன் தாக்கப்படுகிருன். அதாவது, ஜன நெருக்கம் உள்ளவிடம், வீட்டுவசதி யின்மை, ஒரு வீட்டில் பலர் வாசஞ்செய்வது, போஷிப்புக்கு வேண்டிய சத்துணவு இன்மை, சுகாதார வசதியற்ற நெருக்கடியான இயந்திர சாலைகளில், மெய்வருந்த உழைத்தல், சுரங்கத்தொழில் போன்ற சிலவற்றில். தூசிகள் கலந்த காற்றை சுவாசித்தல், காற்ருேட்டமில்லாத இடங்களில் அநேக மணி நேரங்கள் வேலைபார்ப்பது முதலியவற்ருல், மக்கள் இந்நோயால் தாக்கப்படுகின்றனர்.

குழந்தைகள் எடை, வயதாக ஆக ஒழுங்காக கூடி வரவேண்டும், குழந்தைகளுக்கு ஆரோக்கியம் குறைந்தால் க்ஷயம் பீடிக்கலாம். குழந்தை சுணங்கியிருத்தல், விளையாடாமல் படுத்த படுக்கையிலிருக்க விருப்பமுறல், உடலில் இழுப்பு தோன்றல். அடிக்கடி சுரம் காணல், இன்னசுரம் என்று கண்டுபிடிக்க முடியாத வகையில் சுரம், கக்குவான், இரும்பல் கபவாத சுரம், முதலியன தோன்றிய பிறகு க்ஷயம் பீடிக்கலாம், வயதுவந்த ஆடவர்களுக்கு காய்ச்சல் உண்டாவது. இரண்டு மணிக்கொருதடவை உடற் சூட்டை கணக்கெடுக்க வேண்டும். நோயாளி கொஞ்ச உடற் பிரயாசை பட்டால் கூட, உடற் சூட்டில் தெரியும், பெண்களுக்கு மாதவிடாய் நின்றபிறகும் உடற்சூடு எழுச்சி பெற்றிருக்கும். கணீர், கணீர் என்று இரும்பல் உண்டாகும். கோழை வரும், கோழையில் இரத்தங் காண்பதுண்டு, இடை குறைவு ஏற்படும் சிலருக்கு பகலிலும் இரவிலும் வியர்வை உண்டாகும். நவீன சிகிச்சை முறையின் பயனுகவும், காற்ருேட்டம் முதலிய வாசஸ்தல வசதிகளாலும், தற்காலம் வியர்வை வருவதில்லை. பசியின்மை, வாந்தி, வயிற்று போக்கு முதலியன மூலமாய் ஆரம்பக்குறி தோணலாம். மாாபில் வலியுண்டாகும். குரல் கம்மல் ஏற்படலாம் பெண்களில், கலியாணமாகாத கன்னிப் பெண்களது மாதவிடாய் நின்றுவிடுகிறது நாடித்துடிப்பு அதிகம் ஏற்படுகிறது. மூச்சு வாங்குதல் காணப்படுகிறது. மேற்கண்ட குறிகள் தோன்றினுல் உடனே வைத்திய பரிசோதனை செய்யவேண்டும். வியாதி சாக்கியிருந்தால் முறைப்படி தகுந்த சிகிச்சை செய்து கொள்ளல் அவசியம்.

"உனது குடும்பம் க்ஷேமமாக இருக்கவேண்டுமானுல் நல்ல பூக்களும் கனிகளும்கொண்ட எந்த மரத்தையும் வெட்டாதீர்கள்."

—அக்நி புராணம்.

இது பரவவொட்டாமல் தடுக்கும் முறைகளை, மக்கள் தினசரி வாழ்க்கையில், அனுஷ்டிக்கவேண்டும். மக்களுக்கு வாழ்க்கைத்தரம் உயர வேண்டும். சத்துள்ள ஆகாரம் சாப்பிடும் அளவிலாகிலும் வருவாய்க்கு வழி தேடல் அவசியம். உடல் நலம் உறம்பெற்றிருந்தால் க்ஷயம் எளிதில் அணுகாது.

சூரிய வெளிச்சம், நல்ல காற்றும் ஆரோக்கிய வாழ்விற்கு அத்தியாவசியம். நகரங்களைவிட கிராமங்களில் நல்ல காற்று, ஜனநெருக்கமில்லாத விசாலமான இடங்களிருந்தாலும், மக்கள் வசதி செய்துகொள்வதில்லை. நல்ல காற்று அவசியம். அதற்கு மரங்களடர்ந்த தோப்புகள் தேவை. தற்போது மக்கள் மரத்தை வெட்டி பல தோப்புகளை வெட்ட வெளியாக்கி விட்டனர். நல்ல வெளிச்சம் சூரியனால் உண்டாகிறது. நல்ல காற்று மரங்களினால் கிடைக்கிறது. சோற்றுணவினும் காற்றுணவே சிறந்தது. மரத்தழைகள் வழியாக கதிரவன் தன் கடனாற்றுகிறான். மனிதன் மரத்தை வெட்டி கதிரவன் வேலையைத் தடுக்கிறான். ஆகவே மழையும் காற்றும், அருமையாகப்போனது ஒரு வியப்பில்லை. பழையபடி மரங்கள் வளர்த்து நல்ல காற்றை உற்பத்தி செய்தல்வேண்டும். அதுபற்றி நம் சர்க்கார் வனமகோத்சவம் கொண்டாட ஏற்பாடு செய்திருப்பது நாடு செழுமைக்கும்; உடல் நலத்துக்குந்தான். ஆகவே நல்ல மரங்களடர்ந்த இடத்தில், காற்று வசதி, வெளிச்சம் உள்ள வீடுகள், அல்லது குடிசைகள் அமைத்து வாழ்தல் வெண்டும்.

மக்கள் உடல் நலனை பேணும் சுகாதார விதிகளை கைக்கொள்ளவேண்டும். சத்துள்ள உணவை தேர்ந்து சாப்பிடவேண்டும், உலர்ந்த, காய்ந்த காய்கறிகளை யகற்றி, அன்றாடம் பறித்த புதிய காய்கறிகள், கீரை வகையறாக்களை புசிக்கவேண்டும். குடும்பத்திற்கு வேண்டிய காய்கறிகளை வீட்டுத் தோட்டத்திலெயே பயிர் செய்தல் அவசியம். காப்பி, "தேயிலை பானம் முதலியன நம் நாட்டிற்குப் பொருந்தா பானங்கள் அவற்றை நீக்கி நம் நாட்டில் விளையும்" ஆரோக்கியமுள்ள இளநீர், தயிர், மோர் பருகல்வேண்டும். காச வியாதியுடையவர்கள் உணவு பண்டங்களைத் தீண்டவிடக்கூடாது. பாடசாலை ஆசிரியர்கள், செவிலித்தாய்மார்கள், வேலைக்காரர்கள் இந்நோய் அணுகாதவர்களா என்று அடிக்கடி பரிசோதனை செய்து, சிறுவர்களையும் சிறுமிகளையும் அவர்கள்வசம் விடவேண்டும். சினிமா கொட்டகைகளிலும், தொழிற்சாலைகளிலும் க்ஷயரோகிகளை ஒதுக்கிவைக்கவேண்டும். அவர்களை அனுமதிக்காமலிருப்பது நலம்.

காசவியாதி வைத்தியசாலையில், சிகிச்சை செய்வதுமட்டுமில்லாமல் (1) நோயாளிகளைப் பரிசோசித்தல், (2) நோயாளிகளை வியாதிக்குத் தகுந்தபடி பிரித்தல் (3) நோயாளிகளுடன் பழகியவர்களையும், பழகுபவர்களையும் பரிசோதனை செய்தல் (3) பிரசாரஞ்செய்தல் (4) ஆரோக்கியசாலையிலிருந்து வீடு திரும்பிய நோயாளிகளைப்பற்றி கவனித்தல், முதலியன கையாளப்படுகின்றன.

"ராஜ்யம் பூராவும் மரங்கள் நட்டால்தான் நாடு பசுமையான தோற்றத்துடன் இருக்கும். காற்றும் குளுமையாக வரும். நிலங்களில் ஈரப்பசை இருக்கும். நம்முடைய சந்ததியார் அதன் நிழலை அனுபவிப்பார்கள். போதிய மழை பெய்ய உதவும். பூக்களும், பழங்களும், விறகு முதலிய தேவைகளும் அம்மரங்களில் கிடைக்கும்." —ஸ்ரீ லோபோ பிரபு.

இவ்வியாதியைத் தடுக்க பி. சி. ஜி. ஊசி மருந்து உபயோகப்பட்டு வருகிறது. க்ஷயம் பீடிக்காதவர்களுக்கு பி. சி. ஜி. மருந்து கொடுக்கலாம். மாணவர்கள், நர்சுகள், மருத்துவ மாணுக்கர்கள், தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள் இம்மருந்தை ஏற்றுக்கொள்வது அவசியம்.

தடுக்கும் முறை:—

நோயாளியின் கோழையை மருந்து சிறிதளவுள்ள துப்பற்படிக்கத்திலேயே துப்புதல் வேண்டும். துப்பற்படிக்கம் ஈக்கள் மொய்க்காதபடி மூடியிருக்கவேண்டும். கோழையை எரித்துவிடுவது நலம். நோயாளி இரும்பும்போது வாயை மூடி இரும்பவேண்டும். நோயாளிகள் அறைகளின் கதவுகளும் ஜன்னல்களும் திறந்தே இருக்கவேண்டும்.

நோயாளியின் உடை, பருத்தி நூலில் நெய்யப்பட்ட பனியனும் சல்லாத்துணியுமே, சிலாக்கியம். தினசரி அவைகளை தனியே துவைத்தல் நலம். நோயாளியின் பாத்திரங்கள் தனியே ஒதுக்கி யிருக்கவேண்டும் கொதித்த தண்ணீரில் கழுவவேண்டும்.

நல்ல உணவு மலிவாக விருக்கவேண்டும். சூரிய வெளிச்சமும், நல்ல காற்றும் அவசியம். ச ரு ம த் தை சுத்தமாக வைத்திருக்கவேண்டும். அடியிற்கண்டபடி, கலப்புணவு உண்ணல். நலம்

புழுங்கலரிசி	8	அவுஸ்	எண்ணெய்	1	அவுஸ்
கேழ்வரகு மாவு	2	,,	நெய்	1	,,
கோமை	4	,,	பால்	8	,,
துவரம்பருப்பு	3½	,,	சர்க்கரை	7	,,
மரக்கறி	8	,,	பழங்கள்	4	,,
மீன்	2½	,,	தயிர்	3	,,
முட்டை	1	,,			

மேற்கூறிய வற்றில் கவனஞ்செலுத்தி அதன்படி ஒழுகுவார்களாகின் காச நோய் பரவாமல் தடுக்கலாம்.

மழைக்கு ஆதாரம்.

"எங்சள் பிரதேசத்தில் 4 வருஷங்களாக தொடர்ந்து பருவ மழை ததறிவிட்டது ; இப்படி பருவமழை பெய்யாது பொய்துபோனதற்கு காரணம், புத்தகாலத்தில் எங்கள் பக்கங்களில் காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டதுதான் என்று நான் தைரியமாக கூறுவேன். காடுகள் கவனமாக பாதுகாக்கப்படவேண்டும். வன மஹோத்சவத்தையொட்டி ஆங்காங்கு மரங்கள் நட்டு வளர்க்கப்பட்டுவருவது நல்லதோர் முயற்சியாகும்."

—குமாரசாமி ராஜா.

சாப்ரா சாயமரம்

அ, ராமலா

இதை இங்கிலீஷில் அன்னுட்டோ, அர்னுடோ அல்லது பிக்சா என்னும், தாவர சாஸ்திரத்தில் பிக்சாகி என்றும் கூறுவார்கள். இதன் தாயகம் மேற்கிந்தியத் தீவுகள் எனத் தெரிகிறது. இப்பொழுது மத்திய, தென் அமெரிக்க நாடுகளில் வெகுவாகப் பயிரிடப்படுகிறது.

செடி என்றோ, மரமென்றோ திட்டமாகச் சொல்லமுடியாத இரண்டுங் கெட்ட தாவரமிது இதன் உருவத்தைப் பார்த்து சிறு மரம் என்றும் பெருஞ்செடி என்றும் சொல்லலாம். மேல் நாட்டார்கள் இதை மர இனத்தோடுதான் சேர்க்கிறார்கள். இதன் இலைகள் எக்காலத்திலும் பசுமையாக இருக்கக்கூடியவை. மரத்தில் பல கிளைகளும், கொபபுகளும் உண்டு அவற்றின் நுனியில் பூக்கள் கொத்துக் கொத்தாய் மலர்ந்திருக்கும். மலர்களின் நடுவே மகரந்தப பொடிகள் நிறைந்திருக்கும். அவற்றைச்சுற்றி ஐந்து பூவிதழ்கள் இருக்கும். மலர்களிலிருந்து காய்கள் தோன்றும், இக்காய்கள் பார்க்க இரண்டு அரச இலைகளை ஒன்றன்மீது ஒன்று வைத்து பொருந்தினால் எந்த உருவிலிருக்குமோ அந்த உருவில் இருக்கும். காய்களின்மீது ஒருவித சுனை மூடி இருக்கும். காய்களை அப்படியே மரங்களில் விட்டுவிட்டால் அவை முற்றி வெடிக்கும் அப்பொழுது உள்ளே பார்த்தால் மாதுளையில் முத்துக்கள் நிறைந்திருப்பதுபோல் ஒருவித பளபளப்பான சதை மூடிய முத்துக்கள் நிறைந்திருக்கும். விதைகளை மூடியுள்ள பளபளப்பான சதைப் பொருளிலிருந்தே அன்னுட்டோ சாயம் எனப்படும் சாப்ராச்சாயம் தயாரிக்கப்படுகிறது.

இம்மரம் குளிர்காலத்தில் 60°—70° எப். கோடை காலத்தில் 75°—85° எப உஷ்ணநிலை உள்ள எல்லா இடங்களிலும் நன்கு பயிராக்கக்கூடியது. எல்லாவித நிலங்களும் பயிர்செய்ய எற்றவையே. ஆனால் இருமண்பாடுள்ள நிலங்கள் விசேஷம் அடியில் பாறையோ, சரளையோ இல்லாமலுமிருக்கவேண்டும். 12 அடிக்கொன்றாக 2'x2'x2' அளவில் குழிகள் தோண்டி ஒரு மாதம் வரை ஆறப்போடவேண்டும். பின் மண்ணிலுள்ள கற்கள், வேர்கள் முதலியவற்றை நீக்கிவிட்டு அதோடு ஒரு பங்குக்கு இரண்டு பங்கு வீதம் கம்போஸ்ட் உரம் கலந்து குழிகளை மூடவேண்டும். மழைகால ஆரம்பமே இப்படிச் செய்ய எற்ற காலம். பொதுவாக இதை நாற்றுப்பாவி நடுவது வழக்கமில்லை. முற்றிய மரங்களிலிருந்து கிளைகளை வெட்டி எடுத்து மரவள்ளிக்கிழங்குக் குச்சிகளை நடுவதுபோல் சற்றுச் சாய்வாகக் குழிகளில் நட்டுப் பயிராக்குவதே வழக்கம். நட்டவுடன் தண்ணீர் பாய்ச்சவேண்டும். மழை இல்லாவிட்டால் வாரம் இரண்டுமுறை பிறகு

"மரத்தை வெட்டியும் காடுகளை அழிக்கலாம் சாகுபடிக்கென்று பெரிய காடுகளை மாய்க்கலாம் ஆடு மாடுகளை அளவுக்குமிஞ்சி மேயவிட்டு காடுகளை கெடுக்கலாம் பல நாடுகளிலும் இந்த காடுகளின் அழிவால் பாலைவனங்கள் தோன்றியுள்ளன இவ்விதம் காடுகளை அழிப்பதால் மண் அரிப்பெடுத்து, ஓடைகளில் நீர்மட்டம் குறைந்து வெருங் காடுகளும் பாலைவனங்களும் உண்டாகின்றன."

—ஸ்ரீ படேல்.

தண்ணீர் பாய்ச்சிவருவது நல்லது. குச்சிகள் துளிர்த்து வளர ஆரம்பித்ததும் மூன்றுமாதத்துக்கொருமுறை 80 பங்கு தண்ணீரில் 3 பங்கு சிலியன் நைட்ரேட் இரண்டு பங்கு சோடியம் பாஸ்பேட் கலந்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு வாளித் தண்ணீரிலும் 20 துளி இக்கலவையைக் கலந்து ஊற்றுவது நல்லது. பூக்களெடுக்க ஆரம்பித்ததும் தண்ணீரில் அம்மோனியம் நைட்ரேட்டைக் கலந்து சல்லிவேர்கள் பரவியுள்ள பக்கம் ஊற்றவும். இப்படிச் செய்தால் பலன் அதிகமாகக் கிடைக்கும்.

நட்ட இரண்டு வருடங்களுக்குப் பிறகு பலன்தர ஆரம்பிக்கும். வெயில் காலத்திலேயே பூக்கள் தோன்றிக் காய்க்கத் தொடங்கும் காய்கள் நன்றாக முற்றி வெடித்ததும் அவற்றைப் பிடுங்கி உள்ளே உள்ள விதைகளை எடுத்து தண்ணீரில் போட்டு மேல் சதை போகும்படி நன்றாக கழுவ வேண்டும். மேல் சதை நீங்கிய விதைகள் பார்க்க இலவம்பஞ்சு விதைகளைப் போன்றிருக்கும். சதை கரைந்த நீரை நன்றாக கையால் கரைத்து ஒரு சல்லடை வழியாக ஊற்றி தூசி துப்புகளை நீக்கிவிடவேண்டும். இப்படி வடிக்கட்டின நீரை சிலமணி நேரம் அப்படியே வைத்துவிட்டால் அது நன்கு தெளிந்து விடும். இத்தெளிந்த நீரை பிறகு மெதுவாகச் சாய்த்து வெளியேற்றிவிட்டால் அடியில் சதைப்பொருள் மாத்திரம் எஞ்சியிருக்கும். அதை எடுத்து ஒரு அகலமான தட்டில் பரப்பி வெயிலில் காயவைத்தால் அது எண்ணெய் பசை நிறைந்த ஒரு கெட்டிப் பொருளாகும். பார்க்க இருண்ட ஆரஞ்சு சிகப்பு நிறத்திலிருக்கும். இதை "அன்னட்டோ ரோல்" அல்லது "அன்னட்டோ பிளாக்" எனக் கூறுவார்கள். இதை இன்னும் உலர்த்தினால் நன்றாகக் கெட்டியாகிவிடும் அப்பொழுது இதை "கேக் அன்னட்டோ" எனக் கூறுவார்கள். இதை தண்ணீரில் கரைத்தால் ஒரு வகைச் சிறந்த செந்நிறச் சாயமாகும். இதை அமெரிக்காவிலுள்ள செவ்விந்தியர் தங்கள் உடம்பு முழுவதும் பூசிக்கொண்டு பார்க்க செக்கச்சிவப்பாகத் தோற்றமளிப்பர். இப்படிச் சாயம் பூசிக்கொள்வது பூர்வகாலம் தொட்டு அவர்களிடையே உள்ள ஒரு வழக்கம். நாகரீக நாடுகளில் இச்சாயத்தை பால் கட்டிகளுக்கும், வெண்ணெய் போன்ற உணவு பண்டங்களுக்கும், பலவித அழகுப் பொருள்களுக்கும் சாயம் கொடுக்கப் பயன்படுத்துகிறார்கள். உயர்ந்த சில்குகள், காலிகோ முதலியவற்றிற்குச் சிகப்பு சாயம் ஏற்றவும் இது பயன்படுகிறது சிகப்பு வார்னிஷ்கள், பெயிண்டுகள் தயாரிக்கவும் பயன்படுகிறது. ரசாயனக் கூறுபாடு செய்து பார்த்ததில் இதில் பிக்சின் என்னும் ஒருவகைச் சாயப்பொருள் அடங்கி இருப்பதாக தெரியவந்தது. பிக்சினைக் கூறுபாடு செய்துபார்த்ததில் அதில் கார்பன் 16 பங்கு, ஹைட்ராஜன் 26 பங்கு, ஆக்ஸிஜன் 2 பங்கு அடங்கியிருப்பதாகத் தெரியவந்திருக்கிறது. பிக்சா ஒரிலனு, பிக்சா பார்பரி என இதில் இரண்டு ஜாதிகளுண்டு முந்தியது லேசான சிகப்பு புஷ்பங்களும், பிந்தியது இருண்ட சிகப்பு புஷ்பங்களும் பூக்கும்

இம்மரம் ஒருதடவை நட்டுப் பயிரிட்டு விட்டால் வெகு காலத்திற்குப் பலன் கொடுக்கக்கூடியது. ஆகையால் பயிரிடுபவருக்கு தொடர்ந்து நல்ல வருவாயைக் கொடுக்கும். நம் நாட்டு வார்னிஷ், ஜவுளித்தொழில்களுக்கும் ஒரு புதுச்சாயப் பொருள் கிடைக்கும். இது பயிராகுமிடம் தளிரும் பூவுமாக பார்க்க மிகவும் ரமியமாக வேறு இருக்கும்.

வனமகோத்சவம் வளர்ந்த கதை

காடுகள் ஒரு களஞ்சியம். காட்டிலிருந்து விறகு கிடைக்கிறது. கட்டைகள் கிடைக்கின்றன. காகிதம் செய்ய மரங்கள் ஏராளமாக தேவை. மற்றும் பலகைத் தொழில்களுக்கும் மரங்கள் உபயோகப்படுகின்றன. இவைகளுக் கெல்லாம் கோடி கோடியாக மரம் வேண்டியிருக்கிறது. எனவே பல நாடுகள் தமது காடுகளை அழியாமல் பாதுகாக்கின்றன. அழிந்த காடுகளை மரம் நட்டு விருத்தி செய்கின்றன. வெறும் வெளிகளை பண்படுத்தி மரம் வைத்து காடுகள் வளர்க்கின்றன. இக்காடுகளை யெல்லாம் விஞ்ஞான முறைப்படி செம்மையாக பாதுகாத்து செழிப்பாக்குகின்றன. இவ்விதம் காடுகள் அழிவதை முதன் முதல் தடுத்த நாடுகள் ஐரோப்பிய நாடுகளே.

ஆனால் நமது நாட்டில் ஜூலை மீ பிறந்தாலே வனமகோத்சவத்தையும் ஸ்ரீ முன்ஷி அவர்களையும் ஞாபகப் படுத்திக்கொள்ளுவதுடன் இவ்வியக்கத்தையும் ஸ்ரீ முன்ஷி அவர்களையும் தூற்றிப்பேசுபவர்களும் போற்றி பேசுபவர்களும் இன்னும் நம் நாட்டில் பலர் உள்ளனர். இவ்வியக்கமானது நீண்டகாலமாகவே நமது நாட்டிலிருந்து வந்தபோதிலும் இதை நாடு பூராவும் விளம்பரம் செய்து தீவிரப்படுத்திய பெருமை முன்னாள் உணவு அமைச்சர் ஸ்ரீ முன்ஷி அவர்களையேச்சாறும். இவ்வியக்கத்தையும் ஸ்ரீ முன்ஷி அவர்களையும் தூற்றுபவர்கள் இம்மரங்களின் பெருமையையும், இதை ஆரம்பித்தது அமெரிக்காவில் தான் என்பதையும் அறிய மாட்டார்கள் என்றே நம்புகிறோம் (ப-ர்)

அமெரிக்காவில் வளம்பொருந்திய காடுகள் ஏராளமாக உள்ளன. மரமே இல்லாத பொட்டல் பிரதேசங்களும் உள்ளன. பல மரங்களும் வெட்டி அழிக்கப்பட்டன. ஆனால் வெட்டிய மரங்களுக்கு பதில் வேறு மரங்கள் நட்டு வளர்க்கப்பட வில்லை. இதனால் ஏற்படப்போகும் தீங்குகளை உணர்ந்தார் J. S. மார்ட்டன் அவர் நெவ்ராஸ்கா ராஜ்ய சமவெளி பிரதேசத்தில் குடியேறி தன் குடும்பத்தாருடன் மரங்களை நடத்தொடங்கினர். தன் நண்பர்களிடமும் மற்றவர்களிடமும் பிரசாரம் செய்யத்தொடங்

நேயர்களின் சிந்தனைக்கு!

மொத்த நிலப்பரப்பிலே பின்லாந்தில் 74%; ஸ்விட்ஜர்லாந்தில் 55% ரஷியாவில் 44% ஆஸ்திரேலியாவில் 38% செகோஸ்லேவியாவில் 38% விஸ்தீரணம் காடுகளாகும் ஆனால் இந்தியாவில் மொத்த விஸ்தீரணத்தில் 14% தான் காடுகளாகும்.

னார்-அதனாலும் நல்ல பலனேற்படாததால் நெவ்ராஸ்கா ராஜ்ய விவசாய இலாகாவை அணுகி தன் கருத்தை வெளியிட்டார். நெவ்ராஸ்கா ராஜ்ய விவசாய இலாகா இதை ஏற்றுக்கொண்டு 1872௵ எப்ரல்௴ 10௳ மரம் நடும் முதல் திருநாளாக ஏற்படுத்தியது. அதிகப்படியான மரங்கள் நட்டு வளர்ப்பவர்களுக்கு பல பரிசுகளும் வழங்கினார். அந்த ஆண்டிலேயே 10 லக்ஷம் மரங்களுக்குமேல் நடப்பட்டது. 'காட்டு வளம் நாட்டுக்கு வேண்டு' மென்பதை இளைஞர்களுக்கும் உணர்த்த இவ்வியக்கம் அமெரிக்க பள்ளிக்கூடப்பிள்ளைகளும் கொண்டாடத் தொடங்கினார்கள். இவ்விதமே இவ்வியக்கமானது அமெரிக்க நாடு முழுவதும் பரவியது மன்றி 'இவ்வன மகோத்சவ வாரமானது இன்று உலகின் பல பாகங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் **1951-ம்** ஆண்டில் மட்டும் **4½** லக்ஷம் எக்கர் நிலத்தில் மரங்கள் பயிரிடப்பட்டு இதுவரை மொத்தம் **80** லக்ஷம் எக்கர் நிலம் காடாக்கப்பட்டிருக்கிறது.

தலை சிறந்த மண்பாதுகாப்பு திட்டத்தை நடத்திவரும் அமெரிக்கா, அர்ஜெண்டினா இவைகளிலும் காடுகளை பாதுகாப்பதும் வளர்ப்பதும் முக்கியமாக செய்துவருகிறது. டென்மார்க்கில் காடுகள் மிகவும் குறைவு. ஆனால் அந்நாடு கடந்த பல ஆண்டுகளாக மரம் நட்டு பராமரித்து தனது நாடுகளை இரண்டு மடங்காக்கி யுள்ளது. நிபுணர்களின் உதவியால் கணக்கற்ற வகை மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன டென்மார்க்கு தேச காடுகளைப்போல அவ்வளவு கட்டைகள் கொடுக்கும் காடுகள் வேறு எங்கும் கிடையாது.

நார்வேயில் பாதிபூமி காடுகள் அடர்ந்தது. அங்கே மரங்களே இல்லாத 2 லக்ஷம் எக்கர் பூமியில் காடுகள் வளர்க்கும் திட்டங்கள் நிறைவேறி வருகிறது. மரங்கள் குறைவாகவுள்ள காடுகளிலும், வெளிகளிலுமாக 8 லக்ஷம் எக்கரில் மரங்கள் நடப்படுகின்றன. காடு வளர்க்கும் ஆராய்ச்சிக் கூடங்கள் இரண்டு உள்ளன. அங்கே காட்டிலாகா சிறந்த முறையில் வேலை செய்து வருகிறது.

ஸ்வீடன் நாட்டிலும் பாதிக்குமேல் காடுகளே. நாட்டுக்குச் செல்வந் தரும் இக்காடுகளை அழியாமல் காப்பதே அந்நாட்டு காட்டிலாக்காவின் முக்கியவேலை. ஆயின் மரங்கள் குறைவாக உள்ள சுமார் 10 லக்ஷம் எகரில் மரங்கள் நட திட்டமிட்டுள்ளன. அந்நாட்டு காட்டிலாகா **2** வருஷம் சகதியும் சுழியுமாயுள்ள இடங்களெல்லாம் சீர்திருத்தி மரங்கள் வளர்த்துள்ளார்கள். இதைச்செய்தவர்கள் சர்க்கார் மட்டுமெல்ல பொது மக்களும் சேர்ந்து செய்ததேயாகும்.

மரங்கள் வைத்து வளர்ப்பதற்கும், சதுப்பு நிலங்களை திருத்தி காடுகள் வளர்க்க ஏற்றவைகளாக செய்வதற்கு ஸ்வீடன், டென்மார்க்கு, நார்வே ஆகிய நாடுகளில் பொது மக்களுக்கு பண உதவி செய்ய சட்டங்கள் உள்ளன. மரத்தை வைக்காமல் ஒரு மரத்தை வெட்டுவதற்கும் அங்கு தண்டனை உண்டு

ஸ்பெயினில் பெரும்பகுதி காடின்றி அழிந்துகிடந்தது. **1940** ௵ முதல் அங்கு காடு வளர்ப்பு திட்டம் அமல் நடத்தப்பட்டுவருகிறது. இப்போது சுமார் **7** லக்ஷம் எகர் காடாகி காட்சியளித்துவருகிறது. ஆண்டு தோறும் **75,000** எக்கர் மரங்கள் நட்டு காடாக்கப்பட்டு வருகிறது.

தேசத்தின் சிறந்த செல்வம்!

“இன்னும் சுமார் 200 வருடங்களில் நம் நாட்டின் பெரிய பாகம் ஒரு பாலைவனமாகவோ பொட்டலாகவோ மாறிவிடக் கூடும் ஏராளமான மரங்கள் நடுவதின்மூலம் மண்ணரிப்பையும் பொட்டலாவதையும் தடுக்கலாம். தவிர அதிக மரங்கள் நடுவதால் நமது வேறு பிரச்னைகளும் தீர வழி ஏற்படும். இப்போது பிரதி வருடமும் பெரிய அளவில் மழைஜலம் நீர்ப்பாசனத்திற்குக் கிடைக்காமல் கடலில் சேர்ந்து வீணாகிறது. அதிக மரங்களடங்கிய தோப்புக்களிருந்தால் அந்த நாசத்தைத் தடுக்க முடியும் மரங்கள்தான் தேசத்தின் செல்வமாகும். மரங்கள் நடுவது ஒவ்வொரு இந்தியனின் கடமை. ஆகவே மரம் நடும் வேலையை வெற்றிகரமாக நடத்துங்கள். அதாவது செடிகளை நட்டபின் அவைகளை போஷித்து மரங்களாக வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருங்கள். ஒரு புதிய செடி புதியதாக பிறக்கும் குழந்தைக்கு சமானமாகும்”.

—ஸ்ரீ ராஜன் பாபு.

செய்நன்றி மறக்காத செடிகள்

★

"'மின்னலுக்குப்பின் மழை', 'கஷ்டத்துக்குப்பின் சுகம்' என்கிற பழமொழிகள்படி நாம் இச்சிறு (பழ) செடிகளை வளர்ப்பதற்கு முதலில் கஷ்டப்பட்டால் பிறகு நமக்கு சுகம் கொடுக்கும் என்பதை நாம் மறக்கவே கூடாது. செடிகளை வளர்க்க நாம் படும் கஷ்டம் வீணுகாது. மனைவி மக்கள் பெரியவர்கள் ஆனதும் நம்மைவிட்டு பிரிந்துபோய் விடக்கூடும். சினேகிதர்கள், சுற்றத்தார்கள், முன்னுக்கு வந்தபிறகு செய்த நன்றியை மறந்துபோய் நமக்கு துன்பத்தைச் செய்யலாம். ஆனுல் நாம் நட்டு வளர்த்தச் செடியோ பெரிய மரமானதும் அதை வளர்த்த நமக்கு 'நின்று தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தறுதலால்' என்றபடி தன் ஜீவன்போன்ற அமிர்தத்திற்கொப்பான கனிகளைத் தந்து வயோதிகத்திலும் நம்மை காப்பாற்றுகின்றன".

கடந்த 25 ஆண்டுகளாக காடு வளர்ப்பு திட்டத்தில் ஆஸ்திரேலியாவும், நியூஜீலந்தும் சுறுசுறுப்பாக வேலைசெய்து வந்துள்ளன. நியூஜீலந்து மட்டிலும் அமெரிக்காவிலிருந்து பல தினுசு விதைகளை பெற்று 3,44,000 ஏகரில் புதிய காடுகளை உண்டாக்கி யிருக்கின்றன.

மற்றும் வெளிநாடுகளின் உதவியைக் கொண்டு ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களிலுள்ள பல நாடுகள் தங்கள் காடுகளை விருத்திசெய்ய முயற்சி செய்துவருகிறது.

இதர நாடுகளைப்போல் இந்தியாவிலும் இம் முயற்சி துரிதமாக செய்யப்படுகிறது. இத்துரையில் காட்டிலாக்கா கடந்த 90 ஆண்டுகளாக சேவை செய்துவந்துள்ளது. இதற்கென டேராடூனிலும், கோவையிலுமாக இரண்டு ஆராய்ச்சிக் கூடங்களும் வனக்கல்லூரிகளும் உள்ளன. இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்தில் 100-க்கு 14 சதமே காடுகளாகும். இதர நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது இது மிகவும் குறைவாகும். ஆகவே அதிக தீவிரமாக சாகுபடி செய்வதற்கென 36 உள்நாட்டு மரங்களை தேர்ந்தெடுத்து, 5 ஆண்டுகளில் காடுகளை 2,50,000 ஏகர் அதிகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

உலக முழுவதிலும் பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு முக்கிய அடையாளம் மரத்தையும் மரச்சாமான்களையும் ஒவ்வொருவரும் உபயோகிக்கும் அளவெயாகும். மரத்தை அதிகமாக உபயோகிப்பதின் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தலாம்.

—(அமெரிக்கன் ரிபோர்டர்.)

செயற்கரிய செய்த பெரியார்

ஆப்பில் விதைகளை ஊன்றவேண்டும்—ஆப்பில் தோட்டங்கள் போடவேண்டும் இதுவே அமெரிக்க ஆப்பில் ஜானி (ஜானதன் சேப்மன்) யின் ஒரே நோக்கம்—ஒரே முயற்சி—ஒன்றையே நன்றெனக்கொண்டு செய்யும் ஒருவகை பைத்தியம் போலும் அவருக்கு. இதனுல் பலருக்கும் நன்மையே விளைந்தது. ஒருவரும் கால்வையாத இடத்திற்குபோய் ஆப்பில் விதைகளை ஊன்றிவிடுவார் நம் ஜானி. அக்கன்றுகள் வளர்ந்தபின் அதை பிடுங்கி வளமுள்ள இடங்களில் நடுவார்கள் மற்றையோர். மரங்களை வெட்டி துன்புருத்துவது கொடுஞ்செயல் என்பது அவர் கொள்கை. அதனுல் மரங்களை வெட்டக்கூடாது என்று சொல்லுவார். இவ்விதம் அவர் போட்ட தோட்டங்களில் ஒன்று ஈசக் ஸ்டாடென் பண்ணையில் இன்றும் உள்ளது. அவர் மறைந்தார். அவர் கல்லறை இருக்குமிடமும் ஒருவருக்கும் தெரியாது. எனினும் ஆப்பில் செடிகள் உள்ளவரை செயற்கரிய செய்த பெரியார் (ஆப்பில் ஜானியை) ஒருநாளும் மறக்கமுடியாது.

—(அமெரிக்கன் ரிபோர்டர்)

7—8—53.

காட்டுவளமே - நாட்டுவளம்

[ஆராய்ச்சியும்—அபிவிருத்தியும்]

ஒரு நாட்டின் செல்வநிலையை அந்நாட்டின் வன வளத்தைக்கொண்டே அளவிட்டு கூறிவிடக்கூடும். எப்படி யெனில், மரங்களிலே தங்கம் விளைகிறதென்றே கூறலாம். அவ்வித மரங்களடர்ந்த காடுகளே ஒரு செல்வக் களஞ்சியம். இச்செல்வக் களஞ்சியம் நாட்டுக்கு பயன்பட வேண்டுமானால் காட்டில் உற்பத்தியாகும் பொருள்களை பயன்படுத்தும் வழித்துறைகளை ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம். இத்துறையில் டேராடூனிலுள்ள வனவள ஆராய்ச்சி பயிற்சி நிலயத்தின் அரிய சாதனைகளை விளக்குகிறது இக்கட்டுரை. நேயர்கள் படித்து பயன் பெறுவார்களென நம்புகிறோம் (ப-ர்)

இந்த நிலயம் 1867-ல் உத்திர பிரதேசத்தில் டேராடூன் என்கிற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் விஸ்தீரணம் 1300 ஏக்கர்களாகும் இந்நிலயமே ஒரு தனி ஊராகும். இங்கு சுமார் 5000 பேர்கள் வசிக்கிறார்கள். இங்கிருந்து ஆண்டுதோறும் 35 ஆபிசர்களும் 75 ரேஞ்சர்களும் பயிற்சி பெற்று வெளியேறுகிறார்கள். இவ்வாறு இதுவரை சுமார் 600 ஆபீசர்களும் 2000-க்கு மேற்பட்ட ரேஞ்சர்களும் பயிற்சிபெற்று வெளியேறியுள்ளார்கள். இங்கு காட்டுச்செல்வத்தைக் காப்பாற்றி வளர்ப்பதற்குரிய ஆராய்ச்சியும், காட்டுக் கலை வளர்ச்சியும் நடைபெறுவதுடன் பயிற்சியும் அளிக்கப்படும் நிலயம் இது ஒன்றுதான்

உணவு உற்பத்திக்கு மிகவும் இடையூராக உள்ளது வன அழிவுதான். இதை தடுக்கவும் பாலைவனங்களை சோலை வனங்களாக மாற்றவும் இங்கு பல முயற்சிகள் நடைபெற்று வருகிறது. மண் வளம் பாதிக்கப்படாமலிருக்க காடுகள் அவ்விதம் பிரயோசனமுள்ளது என்பதை கண்டுபிடித்துள்ளார்கள்.

மேலும் இவ்வித ஆராய்ச்சியின் பயனுல் மூங்கிலிலிருந்து காகிதங்கள் செய்வது சாத்தியமாகியது. மரக்கட்டைகள் கெட்டுப்போகாமல் இருக்க உலக புகழ் பெற்ற (ஆஸ்க்யூ) மருந்துகண்டு பிடிக்கப்பட்டுள்ளது துளசிச் செடியிலிருந்து கல்பூரம் தயாரிக்கும் முறை, கமலா மரத்திலிருந்து வர்ணப் பூச்சுக்கு உபயோகமுள்ள எண்ணெ கண்டு பிடித்துள்ளார்கள் வெளி நாடு களிலிருந்து இறக்குமதியாகும் மரங்களுக்கு பதில் நம்நாட்டு தேவதாரு என்னும் மரத்திலே பென்ஸில்கள் செய்யலாமென கண்டு பிடித்துள்ளார்கள். மாமரத்திலிருந்து ஆலைகளுக்குத் தேவையான கண்டுகள் தயாரிக்கலாமென நிரூபித்துள்ளது (Plywood) பிளைவுட் செய்வதற்கு ஏற்ற பல மரங்களை கண்டுபிடித்து கொடுத்ததின் மூலம் வருடாவருடம் 2 கோடி ரூபாய் வெளி நாட்டுக்கு போவதை மிச்சப்படுத்தியுள்ளார்கள்.

புளியங் கொட்டையிலிருந்து மாவுச்சத்து (Starch) செய்யவும், வீணு கும் மரத்தூள்கள் வீடுகளை அழகுபடுத்தவும் உபயோகிக்கலாம் என்று கண்டு பிடித்துள்ளார்கள்.

மரத்தூள்களை கொண்டு மறைவுகள் கதவு, நாற்காலி முதலியவை களுக்கு ஏற்ற பலகைகள் தயாரிக்கவும், டை மிருதுவான பலகைகளைக் கொண்டு ஒலித்தடை, மித உஷ்ணநிலை முதலிய வேலைகளுக்கு உபயோகப் படுத்தலாமென கண்டு பிடித்துள்ளார்கள்.

மேலும் தீப்பிடிக்காத கூரைக் குடிசை மூங்கிலும் சிமிட்டியும் சேர்ந்த சுவர்கள் மற்றொரு விசேஷ சாதனையாகும். மேலும் குறைந்த செலவில் ரசாயன முறையில் பதப்படுத்தப்பட்ட மூங்கிலைக்கொண்டு வீடுகளுக்குக் கூறைகளாக போடவும் முடியுமென்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. தவிர மாக்கழிவுகளையும் இழைப்புத்தூள்களையும் பசைகொண்டு ஒட்டி உறுதிப் படுத்தப்பட்ட மர இழைப்புகளைக் கொண்டு பாய்கள் பின்னலாம் என்பதை யும் கண்டுபிடித்துள்ளார்கள்.

சாதாரண மனிதனுக்கு மரம் ஒரு திடப்பொருளாகவே தோன்றுகிறது. ஆனுல் விஞ்ஞானியோ புதிதாக வெட்டப்பட்டுள்ள மரத்தில் சுமார் 95 சத விகிதம் தண்ணீரும் மீதியெல்லாம் உப்புக்களாக இருப்பதாக கருதுகிருர். பதப்படுத்தப்பட்ட வெட்டு மரத்தில் 10 சதவிகிதம் ஈரசத்து இருப்பதாகவும் அறிகிருர். இவ்வித விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் மரங்களின் நூதன உபயோகங்களும், தயாரிக்கும் பல நூதன முறைகளையும் கண்டு பிடித்து, மரங்களை நாம் விருத்தி செய்வதின் மூலம் நாட்டின் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் பொருளாதாரம் ஆகியவைகளை விருத்தி செய்து கொள்ளலாம் என்பதை நிரூபணை செய்து காட்டுவதுதான் டேராடூன் வன வள ஆராய்ச்சி நிலயத்தின் அறிய பணி ஆகும்.

உங்களுக்குத் தெரியுமா?

விம்கோ (VIMCO) வெட்டும்புலி தீப்பெட்டி கம்பெனியாரின் வரு டாந்திர தேவை சுமார் 80,000 டன் மரம். வருடாந்திர உற்பத்தி 1,70,000 குரோஸ் தீப்பெட்டிகளாகும். சர்க்காருக்கு செலுத்தும் வரி மட்டும் சுமார் 6 கோடியாகும்.

(1950 OUTPUT பக்கம் 49)

மரங்களும் மருந்துகளும்

(நாட்டு வைத்தியர்)

ஆண்டவனுல் சிருஷ்டிக்கப்பட்டுள்ள தாவர வர்க்கங்கள் ஒவ்வொன்றும் சகல ஜீவராசிகளுக்கும் உணவு கொடுப்பதுமன்றி உடலுக்கு உண்டாகும் வியாதிகளையும் போக்க வல்லது. சஞ்சீவி பர்வதத்திலுள்ள மூலிகைகளைக் கொண்டு இறந்துபோன வானரங்களையெல்லாம் உயிர்ப்பித்ததாக கூறும் ராமாயணமும் இதற்கு ஒரு சான்று ஆகும். இம்மரங்கள் இசா வேலைகளுக்குமட்டுமின்றி எவ்விதம் நமது உடலுறுப்புக்களில் காணும் வியாதிகளுக்கு மருந்தாகிறது என்பதையே ஓரளவு விளக்குகிறது இக்கட்டுரை. "தேடிப்போன மூலிகை காலில் பட்டதுபோல" என தமிழ் நாட்டில் பழமொழி யுண்டு. இன்னுளிலுள்ளதுபோல் எண்ணற்ற வைத்தியர்களும் கிடையாது; வியாதிகளும் கிடையாது. ஆனுல் அன்னுளில் தாவர மூலிகைகளாலேயே திடகாத்திரர்களாகவும் பல ஆண்டுகள் சுகஜீவிகளாகவும் வாழ்ந்துவந்ததாகவே அறிகிருேம். இவ்வித குணமுள்ள மரங்களின் மருந்து சக்திகளை ஓரளவுவிளக்கியுள்ளோம். யர்கள் படித்து பயன் பெருவார்களென எதிர்பார்க்கிருேம். [ப—ர்.]

அரசமரத்தின் இலையை, கொழுந்துடன் பாலில் அறைத்து சாப்பிட்டுவர தாதுவிருத்தி எற்படும்.

ஷை மரத்தின் பழத்தை உலர்த்தி சூரணம் செய்து வேளைக்கு உளுந்து பிரமாணம் தினம் 2 வேளை 15 தினங்கள் சாப்பிட்டுவர உப்புச வியாதிகள் நீங்கும். விதையை பொடி செய்து பாலில் கலந்து சாப்பிட்டுவந்தால் சுக்கில நோய், வரட்சி நீங்கும்.

மரம், வேர் இவைகளின் பட்டையை தூள்செய்து புண்களில் தூவிவர புண்கள் ஆறும். இம்மரத்தின் பாலை பித்த வெடிப்புக்களுக்கு தடவிவர குணமுண்டாகும்.

அத்தி மரத்தின் (பிஞ்சு) காயை சமைத்து உண்ண மூலவாயு, மூலக்கிராணி, இரத்தமூலம், வயிற்றுகடுப்பு ஆகியவை நீங்கும். பழம் இரத்தத்தை விருத்திசெய்யும், மலத்தை கழிக்கும்.

ஷை மரத்தின் (சாறு) பால் இரத்தபேதி, பெரும்பாடு, வெள்ளை மதுமேகம், தாதுக்குறைவு இவைகளுக்கு எற்ற மருந்து ஆகும். கீல்வாயு, முட்டுவாயு இவைகளுக்கு பற்றிட்டுவர நன்மைதரும்.

அழிஞ்சில் மரத்தின் பட்டை மாந்தம் சன்னி சுரம் இவைகளை தீர்க்கும் (த. வா.) இப்பட்டையின் கஷாயத்தில் நெய் சேர்த்து கொடுத்தால் பாம்புக்கடி, நாள்பட்ட விஷக்கடி இவைகள் தீரும்.

இதன் கொட்டையை கல்லில் உரைத்து தேள் கடித்த இடத்தில் வைத்து அனலில் காட்ட தேள் கடி குணமாகும்.

அகத்தி செடியின் இலை இடமருந்தின் தோஷம், பித்த சமனம், அஜீர்ணம், இவைகளுக்கு ஏற்றது. மருந்தின் தோஷத்தை முறிப்பதுபோல் குணத்தையும் கொடுக்குமாதலால் மருந்துண்ணும் காலத்தில் இதை உபயோகிக்கக்கூடாது.

ஆடாதோடை இலை ரசத்துடன் தேன் சேர்த்து கொடுக்க வாந்தி, விக்கல், இருமல், தாகம், மூலம், அண்டவாயு இவைகளை நீக்கும்

இலையை உலர்த்தி சுருட்டாக பிடிக்க சுவாசகாசம் தீரும்.

பட்டையை கஷாயம் செய்து சாப்பிட சுரம் இருமல் தீரும்.

ஆலமரத்தின் வேர், பட்டையை சாறு எடுத்து பாலுடன் சாப்பிட்டு வர மேக வெள்ளை தீரும். வெட்டை நீங்கும்.

ஷை மரத்தின் விழுதை பசுமோரில் அரைத்து பசுமோரில் சாப்பிட்டு வர அதிசார வியாதியைப் போக்கும்.

ஆலம் பழம் வேர் கொழுந்து பால் இவைகள் சுக்கிலத்தை பலப்படுத்தி வலுவுண்டாக்கும்

ஆனை குண்டுமணி இலையை கஷாயம் செய்து சாப்பிட்டுவர வயிற்றி லிருந்தாவது ஆண் குறியிலிருந்தாவது வரும் ரத்தம் நிற்கும். விதையை அறைத்து கட்டிகளுக்கு வைத்து கட்ட கட்டி கறைந்துபோகும் அல்லது பழுத்து உடைந்துவிடும்.

இலந்தை மரத்தின் பச்சையிலையை அறைத்து சிறு எலுமிச்சங்காய் அளவு மோரில் கொடுத்துவர மூலம் குணமாகும். பழத்தை உலர்த்தி கொட்டை நீக்கி கொடுத்தால் கபத்தை தள்ளும. பட்டையை கஷாயம் செய்து கொடுக்க சுரம் சன்னி தோஷங்கள் சொஸ்தமாகும்.

உசில் (துரிஞ்சா) மரத்தின் வேர், பட்டை கஷாயம் அள்ளுமாந்தத்தை குணமாக்கும்.

ஊமூலாற்றி இலையினல் மேக ரணம், அரையாப்பு, வெள்ளை, பெரு நோய், கொருக்கு இவைகள் நீங்கும். இதன் தைலத்தால் ஸ்நானம் செயது வர வெட்டை, மேக புண்கள் தினவு குட்டம் முதலியவை தீரும்.

எட்டி மரத்தின் இளந்தளிரை அறைத்து வெண்ணையுடன் கலந்து பூச கட்டி அமுங்கிவிடும்.

கலியாணமுருங்கை சாறுடன் தேக்கரண்டி விளக்கெண்ணை சேர்த்து சாப்பிட சீதபேதி நீங்கும். இதன் ரசத்தை தொடர்ச்சியாக 2, 3 மாதம காலை மாலை உண்டுவரின் ருதுக்கால வயிற்றுவலியைப் போக்கி சுகம் தருவதுடன் பருத்த உடலை சுட்கச்செய்து மலட்டு நோயை நீங்கச் செய்யும்.

ஷை சாறு மூத்திர எரிச்சல், மூத்திரத்தடை முதலிய வியாதிகளுக்கு 1—2 தேக்காண்டி சாப்பிட்டுவர கணடிக்கும் ஷை விதையை தோல் நீக்கி, தூள் செய்து (வஸ்தரகாயம்) 1—2 குண்டுமணி எடை சர்க்கரையுடன் கலந்து சாப்பிட்டு (இரவு) மறுநாட் காலை விளக்கெண்ணை சாப்பிட பூச்சிகள் விழுந்துவிடும்.

சரக்கொன்றை—மரத்தின் பூவையும் கொழுந்தையும் அறைத்து தேனுடன் உட்கொண்டால் வெட்டை, பாண்டு, காமாலை தீரும். பூவை பாலுடன் காய்ச்சி உட்கொண்டால் உள்ளுறுப்புகள் பலப்படும்.

கருஞ்சம்பை வேரை இடித்து நீர் அல்லது காடியில் குழைத்து தேள் கடிவாயில் தேய்க்க சுகமாகும்.

தானிக்காய், ஆண் குறியின்மீதுண்டாகும் புண், காசம் இவைகளை குணப்படுத்தும். இதன் தைலம் தலை மயிரை வளர்க்க உதவும்.

நாவல் பழச்சாறு மாவிலைச்சாறு இரண்டையும் கடுக்காய் தூளுடன் கலந்து கொடுக்க சீதபேதி தீரும். பச்சை நாகப்பழக்கொட்டையின் ரசத்தில் 1—2 தோலா தினம் பாலுடன் கலந்து சாப்பிட்டுவந்தால் அதிமூத்திர (Diabetes) வியாதி நீங்கும். இதன் ரசத்தில் அயம் செந்தூரமாகும்.

நுணா மரத்தின் இலை மந்தம், மேகம் இவைகளை கண்டிக்கும். ஒளியைத் தரும். நுணாப்பட்டை 20 பலம், தண்ணீர் 4 படி சேர்த்து எட்டொன்றாக காய்ச்சி இளநீர், பழச்சாறு $\frac{1}{2}$ படி வீதம் சேர்த்து எண்ணெ $1\frac{1}{2}$ படியும் கூட்டி தைலம் செய்து முழுகி வர காய்ச்சல், முறைக்காய்சசல் அறையாப்பு எல்லாம் தீரும்.

நுணா, நொச்சி, வேலிப்பருத்தி, பொடுதலை, கழற்சிக்கொடி, இலைகள் சமனெடை எடுத்து கஷாயம் செய்து, ஓமம், வசம்பு, சுக்கு, மிளகு, பெருங்காயம், திப்பிலி இவைகளை நல்லெண்ணெயில் வருத்து, பொட்டலம் கட்டி போட்டு எட்டொன்றாக காய்ச்சி ஒரு பாலாடை கொடுக்க சகல மாந்தங்களும் பறந்துபோம்.

நெல்லி மரத்தினால் 15 வகை சன்னி, பாதை, மயக்கம், மனோ வியாதிகள் நீங்கும். காய சித்தியாகும். நெல்லி வற்றலை கஷாயம்செய்து கொடுக்க பித்த மயக்கம், மயக்கம், ஒக்காளம் நீங்கும். ஆண் குறிப்புண் தீரும். இலைக் கொழுந்து அறைத்து மோரில் கலந்து சீதபேதிக்கு கொடுக்கலாம். சிறந்த லேகியம் தைலம் செய்யலாம்.

நொச்சில் இலை, மிளகு, பூண்டு, இலவங்கம் சேர்த்து சிறிதளவாக மென்று தின்ன காச எழுச்சி அடங்கும்.

பலாமரத்தின் பாலுடன் காடி சேர்த்து நெரிக்கட்டிகளின் மேல் பூச அவை அமுங்கும் அல்லது சீக்கிரத்தில் பழுத்து உடையும்.

பனையோலை விசிறியினால் தினம் விசிறிக்கொள்ள வாத தோஷம், சிலேத்தும ரோகம் அரோசகம் நீங்கும். பனைவெல்லத்தில் வாத பித்த, சிலேத்தும தோடம், சன்னி பாதை நீங்கும்.

பாதிரிப்பூவின் ரசத்தில் தேன் கலந்து சாப்பிட விக்கல் நிற்கும்.

வெட்பாலை பாலை வாயில் அடக்கி மெல்ல பல்வலி நீங்கும்.

புங்கன் இலை—புளி, நொச்சி, மா, வேம்பு, பொடுதலை, உத்தாமணி, கருவேம்பு, நாரத்தை, சங்கஞ்செடி, அவுரி, பொன்னாவாரை இவைகளின்

இலை சார்க்கு 1 பலம் வீதம், 1 படி நீரிலிட்டு, கடுகுரோகணி இந்துப்புபொட்டலம் கட்டிபோட்டு காய்ச்சு கஷாயம் கொடுக்க மாந்தம் கணம் எல்லாம் தீரும்.

புன்னை விதை எண்ணை 10, 20 துளி கொடுக்க மூத்திரதாரை விரணம், வெள்ளை, வெட்டை, முதலியன தீரும்.

ஷை மரப்பட்டையின் சாறு அல்லது கஷாயத்தால் புண்களை கழுவி வர ஆராத ரணங்களும்,

இம்மரத்தின் பிசினை தண்ணீரில் போட்டுவைத்தால் எண்ணை மிதந்து நிற்கும் அதை கண்ணில்போட கண்ணோய் நீங்கும் ரணங்களுக்கும் போடவும்.

பூவரசுமரத்தின் பட்டை, இலை, பூ, காய் இவைகளை அரைத்து தடவ, எச்சிற்றழும்பு, சருமநோய், புண் ரணங்கள், முட்டுவீக்கம் இவைகள் நீங்கும். பட்டை, காய் இவைகளைக்கொண்டு தைலம் காய்ச்சி தடவ சருமநோய்தீரும்.

மருதமரத்தின் இலை, பட்டை, வித்து இவைகளை அரைத்து இஞ்சிச் சாறுடன் கலந்து கால்களில் பூச குளிர்ச்சி நீங்கி உஷ்ணமுண்டாகும். ஊழி நோய்களில் கைகால் சில்லிட்டிருக்கும்போது பூசிவர குணமுண்டாகும்.

மாமரத்தின் இலைச்சாறு 2 பலம், தேன் 1 பலம், பால் 1 பலம், பசு நெய் 1 பலம் கலந்து 3 வேளைக்கு கொடுத்தால் ரத்தமூலம் தணியும்.

உலர்ந்த மாம்பூவினால் புகைபோட கொசு உபத்திரவம் ஒழியும், உப்பிட்ட மாவடு உபயோகிக்க பசி தீவனம் உண்டாகும் அரோசகம் நீங்கும். மாங்கொட்டை பருப்புத்தூள் ரத்தபேதி, சீதபேதி, வயிற்றுக்கடுப்பு இவைகளுக்கு ஒரு சஞ்சீவியாகும். மாமரத்தின் பட்டையை இடித்து அரை அணு எடை சாறு எடுத்து பஞ்சில் நனைத்து அபானத்தில் (மலத் துவாரத்தில்) கட்ட மூலம் வெளிப்படுதல் குணப்படும்.

மாவிலிங்க மரத்தின் பட்டையை இடித்து சன்னி கண்டவர்கள் தலையில் கட்டிவைக்க சன்னி இறங்கும். பட்டை கலந்த நீர், (அ) எண்ணை குழந்தைகளுக்கு வரும் மாந்தரோகம், வலிகளை நீக்கும். பெரியோர்களுக்கு கல்லடைப்பு ரோகத்தை போக்கும். பட்டை வைத்து கட்ட கட்டிகள் குணமாகும்.

முருங்கை மரத்தின் இலை, பட்டை, வேர், பூ, காய், பிசின் எல்லா பாகங்களும் மருந்து குணமுள்ளவையாகும்.

வன்னிமர இலைச்சாறு 10 பலம் நெய் 10 பலம் கலந்து, வெண் குங்கிலியம் $1\frac{1}{2}$—$2\frac{1}{2}$ பலம் கூட்டி எரித்த நெய்யில் கால்—அரை பலம் தினம் 2 வேளை உட்கொள்ள மேகவெட்டை, சொரி சிறங்கு நீங்கும்.

வாதநாராயணமரத்தின் இலை சாறு ஆமணக்கெண்ணை சமபாகம் சேர்த்து காய்ச்சி வடிகட்டி அரை—ஒண்ணரை பலம் உள்ளுக்கு கொடுக்க நன்றாய் மலம் கழியும் வாதநோய் நீங்கும்.

வில்வமரத்தின் தளிர் சகல மேகத்தையும் பூ மந்தத்தையும்; பிஞ்சு, பழம் பிசின் க்ஷீணவிந்துவையும் குணப்படுத்தும். வேருக்கு வாதம் குன்மம் நீங்கும் அழகுண்டாகும்.

வில்வ கிளை சாற்றுடன் மிளகுத்தூள் தேன் கலந்து கொடுக்க சன்னி தோஷம் சுரம் நீங்கும்

விளாங்காயை ஓடு நீக்கி தேன் சேர்த்து கொடுக்க சீதபேதி குணமாகும் பித்த ரோகங்கள் நீங்கும். ஓட்டுடன் அரைத்து கொடுக்க இடுமருந்து தோஷம் முறியும்.

விளாம்பிசின் சூரணம்செய்து அல்லது மாத்திரையாக செய்து உட்கொண்டால் அதிக புணர்ச்சியால் வந்த வெள்ளை, வெட்டை, வெகு மூத்திர ரோகம் நீங்கும்.

வேங்கைமரத்தின் இலையை அரைத்து கட்டிகளுக்கு கட்ட, கட்டி பழுத்து உடைந்துபோகும் அல்லது அமுங்கிப்போகும்.

ஷை மரத்தின் பிசினை பொடிசெய்து உட்கொண்டால் இருமல், வெள்ளை சீழ் ஒழுகல், புண் முதலானவை தீரும். கண் பார்வை பெரும். பலநோய் தீரும்.

வேப்பமரத்தின் துளிரை கொண்டுவந்து உலர்த்தி, இரும்பு உரலிலிட்டு இரும்பு உலக்கையால் மைபோல் தூளாக்கி பசுவின் நெய் கலந்து கண்ணில் தடவிவர எல்லாவித கண்ணோய்களும் தீரும்

ஷை இலை ரசத்துடன் தேன் கலந்து அரை மண்டலம் உட்கொண்டுவர சர்ம வியாதிகள் நீங்கி தேகம் காந்திபெரும். ஷை எண்ணை 2 பலம் வசம்பு $\frac{1}{4}$ பலம் ஒத்தைப்பூண்டு 1/8 பலம், கரிமஞ்சள் $\frac{1}{4}$ பலம் தூள் செய்து காய்ச்சி காதில் அடைத்துவர காது வலிகள் நீங்கும்.

ஷை மரத்தின் இளந்தளிரை இடித்து தூளாக்கி அதன்னெடையில் பாதி ஓமம் பாதி உப்பு சேர்த்து மறுபடியும் இடித்து, $\frac{1}{2}$ விராகனிடை வீதம் ரோகணி நட்சத்திரம் முதல் 40 நாட்கள் சாப்பிட எவ்வித நோயும் அணுகாதொழியும்.

வேல் (கருவேல்) கொழுந்தை அரைத்து சர்க்கரை கலந்து நீரில்கலக்கி காலையில் உட்கொள்ள இருமல்தணியும். பட்டையை சூரணம் ஆக்கி தேய்க்க பல்வலி நீங்கும்.

வேலம் பிசினி நீத்துப்போன சுக்கிலத்தை கெட்டிப்படுத்தும் எரிச்சலோடு விழும் கீழ்பிற மேகத்தை நிறுத்தும்.

வெள்வேல், குடைவேலன் இதற்கும் இக் குணங்கள் உண்டு. பீக்கரு வேலின் இலை, பூ, பட்டை பிசின் இதனல் வெள்ளை வெட்டை குணமாகும்

இளங்கொழுந்தை அரைத்து கழற்சிபிரமாணம் நீரில் கொள்ள வெள்ளை மாறும். பூவிலிருந்து மணமுள்ள எண்ணை எடுக்கலாம். அதில் இரண்டொரு துளி சாப்பிட உஷ்ணத்தை மாற்றும்—பிசின் தாதுபுஷ்டிக்கு எற்றது.

இலுப்பைப்பூவை உட்கொண்டுவந்தாலும் மூத்திர வியாதிகள் நீங்கும்.

ஆவாரம்பூ இலை, வேர், நரம்பு இவைகளை காயவைத்து சூரணம் செய்து இஞ்சி ரசத்தில் சாப்பிட்டுவந்தாலும் மூர்த்திர வியாதிகளை போங்கும்.

கருவேலங்கொழுந்தை முலைப்பாலில் அரைத்து அடையாக தட்டி உள்ளங்காலில் கட்டிவர கண்வலி கண்கடுப்பு இவைகள் நீங்கும்.

சீமை வேலன் அல்லது புரோசாபிஸ் ஜூலிப்லோரா

[கிருஷிகன் ஆசிரியர்]

இம்மரத்தை ஆங்கிலத்தில் "மஸ்கித்பீன்" என்றும் தமிழில் சீமை வன்னி என்று கூறப்படுகிறது. இதன் பிறப்பிடம் தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் பிரதேசமாகும். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் இதை இங்கு கொண்டு வந்து பயிரிடப்பட்டது. அது முதல் இந்தியாவின் பல பாகங்களிலும் இது பரவிவிட்டது.

எமது பண்ணையிலும் 1943-ல் ஹகரி விவசாய பண்ணையிலிருந்து விதையை வரவழைத்து பயிரிட ஆரம்பித்தேன். 10 ஆண்டுகளுக்குள் லக்ஷக்கணக்கான மரங்கள் நமது ராஜ்யத்தின் பல பாகங்களிலும் நமது பண்ணையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த 10 ஆண்டுக்குள் பல மரங்கள் 30 அடி உயரமும் 20" கனமுள்ள வளர்ந்திருக்கிறது.

இது குடைபோன்ற உருவத்தை உடையது. வரட்சி, குளிர்ச்சியான பிரதேசங்கள், களிமண், களர்மண், மணல், கல்கரடு முதலிய இடங்களிலும் நன்கு வளருகிறது. ஆனால் நல்ல மண் கண்டமுள்ள இடங்களிலும் ஜல வசதி உள்ள இடங்களிலும் இம்மரம் வெகு சீக்கிரமாகவும், பெரியதாகவும், வளர்ச்சி யடைகிறது. இம்மரம் பார்வைக்கு அழகாகவும் இருக்கிறது:

இம்மரங்கள் பல குணமுடையனவாக தோற்றுகிறது. சிலவற்றில் உறுதியான நீண்டமுட்கள் நெருக்கமாகவும் சிலவற்றில் குறைவாகவும் மற்றும் சிலவற்றில் சிறியதாகவும், பச்சையாகவும், கூர்மையாகவும், மொட்டையாகவும் மரத்துக்குமரம் மாறுபட்டே காணப்படுகிறது. மரங்களின் உருவம், தழைகூட முள் அதிகமுள்ளதற்கும் குறைவாகவுள்ளதற்

கும் வித்தியாசப்படுகிறது. இவ்விதம் முள் அதிகமாக உள்ள மரத்திலிருந்தும் முள் குறைவாக உள்ள மரத்திலிருந்தும் விதைகள் சேகரித்து பயிரிடப் பட்டுவருகிறது. மரங்கள் முதிர்ச்சி யடைந்ததும் முட்கள் தானுகவே மறைந்து விடுகின்றன. மரங்களை வெட்டினுல் சில மரங்களின் உட்புரத்திலும் முட்கள் வளர்ந்திருக்கின்றன.

கிளைகள் நீளமாகவும் வளைந்து கொடுக்கும் குணமுடையசாக இருக்கின்றன. இசனுல் இம்மாக்தை சுற்றிலும் வெட்டாமல் விட்டுவிடுவதால் அதிக விஸ்தீரணத்தில் நிலம் தரிசாகிறது. ஆனுல் கிளைகளை பக்கவாட்டில் ஒன்ருேடொன்றை பிணைத்து விடுவதால் நல்ல வேலியாக செய்துவிடலாம் வெட்டப்படும் ஒரு கிளைக்கு பதில் பல புதிய கிளைகள் அடர்த்தியாக கிளைப்பதால் இடைவெளி ஏற்படாது; மனிதர்கள், ஆடுமாடுகள் நுழையாத படி உருதியான உயிர் வேலியாகிறது.

மரங்கள் மிக உயரமாகவும் நேராகவும், வளருகிறது. சீக்கிரமாக வைரம் பிடிக்கிறது. மரங்களைக் கொண்டு தட்டுமுட்டு சாமான்கள் செய்யப் பட்டுள்ளன. அவைகள் பார்வைக்கு அழகாகத்தான் இருக்கின்றன. ஏற்றம், ஏர்க்கால், மேழிபோன்ற விவசாயக்கருவிகளும் செய்திருக்கிறது. அவைகளும் உறுதியாகவே இருக்கினறன ஆனுல் இம்மரம் வெடித்தும் வளைந்தும் போகின்றன. சீக்கிரம் ஒடிவதில்லை. இதன் பட்டை கனமாகவும் உறுதியாகவும், நாராகவும் இருக்கிறது. பட்டையைக் கொண்டு கயிறுகள் திரித்து பார்த்ததில் சில நாட்கள் வரை அவை உறுதியாக இருக்கிறது.

இம்மரத்திற்கு எவ்விதமான நோயும் காணப்படவில்லை. பூச்சிகளும் தாக்கினதாக தெரியவில்லை. ஆடுமாடுகளாலும் சேதமடைவதில்லை. வேண்டுமென்றே யாராவது சேதம் விளைவித்தாலோ அல்லது ஆடுமாடுகளால் சிறிது சேதமாக்கப்பட்டாலோ ஒன்று பத்தாக விருத்தியாகிறதே தவிற அழிந்து போவதில்லை. ஆனுல் வெட்டிப்போடப்பட்ட மரங்களும் கிளைகளும் வெகு சீக்கிரத்தில் வண்டுகளால் துளைக்கப்பட்டு விணுக்கப்படுகின்றன. இது நன்கு முற்றிய மரத்தைவிட முற்ருத மரங்களிலும், வைரமில்லாத பாகங்களிலும் பட்டையுடன் கூடிய மரங்களிலும் தான் அதிகமாக பூச்சிகள் தாக்கி அழிகின்றன. அதிலும் சிலசமயங்களில் வெட்டப்படும். மரத்தில் பூச்சிகள் தாக்குவதில்லை. சில சமயங்களில் வெட்டப்படும். மரம் வெகு சீக்கிறமாக அழிக்கப்படுகின்றன. ஆகவே இப்பூச்சிகளுகரு இம்மரத்தை வெட்டும் காலத்திற்கும் ஏதாவது சம்மந்தம் உள்ளதா என்பது ஆராய்ச்சி செய்யப்படவேண்டிய விஷயமாகும்.

இம்மரங்கள் விறகுக்கு மிகவும் ஏற்றது. கிளைகளும் முட்தூருகளும் ஈரமாக இருக்கும்போதுகூட நன்ருக எரிகிறது, குறைந்த அளவு விறகு தான் சாதாரணமாக தேவைப்படுவதால் இதன் நெருப்பு ஜுவாலை மிக உஷ்ணமுள்ளதாக தெரிகிறது. இம்மரங்களின் பூக்களில் நிறைய தேன் இருக்கிறது. சில நாட்கள் தவிர வருடமுழுதும் இவ்விதம் தேன் சேகரிக்கப்படுகிறது. ஆனுல் தேனீக்கள் இம்மரத்தில்மட்டும் தேன் கூண்டை கட்டுவதில்லை. அடுத்துள்ள வேறு மரங்களில்தான் தேன் கட்டப்படுகிறது. இம்மரங்களிலிருந்து கோந்தும் கிடைக்கிறது. இதன் காய்கள் மிகவும் இனிப்பாக இருப்பதால் இதைக் கால்நடைகள் பெரிதும் விரும்புகின்றன. மற்றும் பக்ஷி ஜாதிகள், அணில், எலி, பன்றி முதலிய ஜீவராசிகளும் இதன் காய்களைத் தின்று ஜீவிக்கின்றன. உயிருள்ள அல்லது வெட்டப்பட்ட மரங்களிருக்கும் இடத்தில் ஏராளமாக எறும்புகளும்கூட சேர்ந்துவிடுகின்றன.

இந்த மரத்தின் விதைகள் மிகச் சிறியதாக கொள்ளு (காணம்) போனறு இருக்கிறது. இதன்மேல் கெட்டியான தோல், பிறகு பிசின் போன்ற தித்திப்பான வஸ்து, மேற்தோல் ஆக மூன்று பாகங்கள் இருக்கின்றன. அசனுல் காயிலிருந்து விதையை பிறித்து எடுப்பது கடினமாகவே உள்ளது. காய்களே கந்தக திராவகம் கலந்த தண்ணீரில் ஊறப்போட்டு பிறகு காயவைத்து (மணல் கலந்து குத்தி எடுக்கவேண்டும்) சாதாரணமாக மாடுகளுக்கு தீனியாக கொடுதது, அதன் சாணத்தைப் பிறகு கரைத்து வடிக்கட்டி விதையை வேறுபடுத்தியும் எடுக்கலாம். பெரும்பாலும் இவ்விதைகள் பூருவும் முளேக்கிறதில்லே 100-க்கு 25 முதல் 75 வரைதான் முளேக்கின்றன. 100 ருத்சல் காய்களிலிருந்து 10 ருத்தல்வரை விதை கிடைக்கும் 1 ருத்தல் விதையில் 16000, 17000 விதைகள் வரை இருக்கும்.

இம்மரங்களே எங்கு வேலிக்கு வளர்க்க விரும்புகிருேமோ அங்கு ஒரு அடி அகலமும் ஒரு அடி ஆழமுமுள்ள கால் வெட்டி அதை சில நாள் ஆரப்போடவேண்டும் பிறகு உரம் கலந்த அல்லது வேறு நல்ல மண் இட்டு அதிக விதைகளே நெருக்கமாக 1 அல்லது 2 அங்குலத்தற்கு ஒருவிதை வீதம் ஊன்றவேண்டும். மழையில்லாவிடில் தண்ணீர் ஊற்றிக்கொண்டுவரவேண்டும் செடிகள் முளேத்த 3—4 அங். வளர்ந்தபின் அரை அல்லது முக்கால் அடிக்கொன்ருக வைத்து மற்றதை எடுத்துவிடுவது அவசியம். 4 அடி உயரம் வைத்து செடிகளே வெட்டிவிடவேண்டும். பக்கத்தில் வரும் கிளேகளே ஒன்ருேடொன்ருகப் பின்னிவிடவேண்டும். ஆனல் சாகுபடி நிலத்தில்

"பஞ்சத்திற்கு காரணம் விளேவு இல்லே. விளேவு இல்லாததற்கு காரணம் மழை இல்லே. மழை இல்லாததற்கு காரணம் நாட்டில் மாரங்களழிந்து போனது ஆகவே நாம் பஞ்சத்தை போக்கவேண்டுமானல் முதலில் இருக்கும் மரத்தை வெட்டாமல் இருக்கவேண்டும், இரண்டாவது தலேக்கு ஒரு மரமாவது நட்டு உற்பத்தி செய்யவேண்டும்".

—ஸ்ரீ முன்ஷி.

கிளீரிசிடியா மெகுலேடா (அல்லது)

சீமை ஆவாரை.

(எருத்தழை மரம்)

"உழவன்"

விவசாயத்திலீடுபட்டுள்ள அனைவருக்கும் நன்சை நிலத்திற்கு உரமிடுவதில் தழைஉரம் எவ்வளவு முக்கியமானது என்பது நன்கு தெரியும். தழை உரமிடுவதால் விளைவு பெருகுவதோடல்லாமல் பூமியின் வளமையும் பெருகும். இதர ரசாயன உரங்களைப்போல் பூமிக்கு கெடுதல் செய்யாது. ஆகவே பூமியின் செழிப்பையும் விளைவையும் பெருக்கவேண்டுமானால் தழை உரத்தை தவறாமல் உபயோகிப்பது அவசியம்.

தழை உரத்தை அருகிலுள்ள காடுகளிலிருந்து சேகரித்துக்கொள்ளலாம். அல்லது நாமே உற்பத்திச் செய்துக்கொள்ளலாம். முதலாவதைவிட இரண்டாவதுதான் சிறந்தது; சிக்கனமானது. உற்பத்தி செய்துகொள்ளுவதிலும் இரண்டு வகையுண்டு. அதாவது—அவுரி, தக்கை, செஸ்பேனியா, சணப்பு, பில்லிப்பசரா போன்ற குறுகியகால தழை உரங்களை உற்பத்தி செய்துகொள்ளுவது ஒன்று. புங்கன், பூவரசு, வேம்பு, வாகை, கிளீரிசிடியா போன்ற நீண்டகால தழை உர மரங்களை வளர்ப்பது இரண்டாவது.

பருவமழை தவறிவிடுவதாலும் வரட்சியினாலும் காலாகாலத்தில் குறுகியகால தழையுரங்களை உற்பத்திச்செய்துக்கொள்ள முடிவதில்லை.

அதிக உயரம் வளரவிடக்கூடாது. அதிக உயரமாக வளரவிட்டாலும், வேறினாலும் மகசூல்கள் சிறிதளவு பாதிக்கப்படுகின்றன (ஓரங்களில்மட்டும்தான்). இம்மரங்கள் வரட்சியை நன்கு தாங்குவதால் 6" வளரும் வரை கவனித்துவந்தால் போதுமானது. பிறகு தண்ணீர் ஊற்றவேண்டிய அவசியமே கிடையாது. ஆடுமாடுகள் இதர ஜீவஜந்துக்கள் காற்று இவைகளின்மூலம் இம்மரங்கள் எங்கும் பரவி வருகின்றன. கால் நடைகள் இவைகளை தின்பதால் அவ்வுரத்தை போடும் வயல்களிலெல்லாம் இச்செடி தானாகவே முளைத்துவிடுகின்றன. கால்நடைகள் மேயப்போகும் தரிசு, ஏரி, புறம்போக்கு முதலிய இடங்களிலெல்லாம் தானாகவே முளைத்துவிடுகின்றன.

எராளமான மரங்கள் அழிக்கப்பட்டும், அழிந்துபோயும் வரும் இக்காலத்தில், மரங்களின் உபயோகத்தையும் அதன் தேவையையும் உணர்ந்துவரும் இக்காலத்தில், மரங்களை வளர்த்து செழிப்பாக்கவேண்டிய முயற்சிகள் எடுத்துவரும் இக்காலத்தில், மர உணர்ச்சியற்றோ அல்லது இம்மர உணர்ச்சி பெற முடியாமலோ இருப்பவர்கள்கூட, நமது நாட்டின்—கிராமத்தின் வருங்கால சந்ததியாரின் நலனைக்கருதி, குறைந்தபக்ஷம் கிராமத்துக்கு ஒருவராவது ஒரு சில மரங்களை முளைக்கச் செய்துவிடுவாராகில் அவருடைய பெயர் என்றும் அழியாதென்றும் பல ஜீவராசிகளுக்கு உணவும் இருப்பிடமும் கொடுத்த பலனையடைந்து தனக்கும் தன் சந்ததியாருக்கும் விறகு மரப்பஞ்சத்தை போக்கிக்கொண்டவராவாரென்பதையும்கூறி இம்மரத்தின் கதையை முடித்துக்கொள்ளுகிறோம்.

ஆகவே நிரந்தரமாகவும் நீண்டகாலமும் தவருமல் தழையுரம் கிடைக்க வேண்டுமானல், சிறந்த தழை உரம் கொடுக்கவல்ல மரங்களை நட்டு உற்பத்திச் செய்துக்கொள்வது மிக அவசியம். இம்மாதிரி தழை உரம் கொடுக்கும் மரங்களில் சிறந்தது எருத்தழைமரம் அல்லது கிளரிசிடியாமெகுலேடாவாகும்.



கிளரிசிடியா மெகுலேடா (எருத்தழைச்செடி) சீக்கிரமாகவும் சுமார் 25–30 அடி உயரம்வரை வளரக்கூடியதும், அதிக தழைகொடுக்கக்கூடியது மான சிறுமரம். இதன் தழையில் அதிக இந்திரிய சத்து இருக்கிறதாக தெரிகிறது. இதன் பூவில்மட்டும் 3·36 சதம் இந்திரியசத்து இருக்கிறதாக தெரிகிறது. இது வெட்டவெட்ட துளிர்த்துக்கொண்டே இருக்கும் இயல்புடையது. ஆனதால் வருடத்தில் 3–4 தடவை தழையைவெட்டி சேகரம் செய்துகொள்ளலாம். மழை அல்லது நீர்பாசனவசதி அனுகூலமாக உள்ள இடங்களில் இரண்டு மாதத்துக்கு ஒருதடவைகூட தழைவெட்டி சேகரம் செய்துகொள்ளலாம். வயலுக்குப்போடும் காலம்தவிர மற்ற நாட்களில் வெட்டி கம்போஸ்டு உரமாக தயாரித்துக்கொள்ளலாம்.

இதை மே அல்லது ஜூன் மாதங்களில் நாத்து விட்டுவைத்திருந்து ஆகஸ்டு செப்டம்பர் மாதங்களில் நட்டு உற்பத்திச்செய்யலாம். 1½" கனமுள்ள கட்டைகளாக வெட்டியும் நடலாம். நஞ்சை நிலங்களின் வரப்புகளிலும் நட்டு வளர்க்கலாம் தோட்டம், வயல்களின வேலிகளாகவும் வளர்க்கலாம் வீடு, தோட்டம் (நந்தவனம்) இவைகளில் அலங்கார தழைக்கும், பூவிற்கும் இதை வளர்க்கலாம். நட்ட ஓராண்டுக்குபபின் இதிலிருந்து தழை வெட்டி எடுக்கலாம். அதற்குப்பிறகு பிரதி வருடமும் மரமொன்றுக்கு சுமார் 30 ருத்தல் தழை கொடுக்ககூடியது இம்மரம். இவ்விதம் ஏகர் ஒன்றுக்கு சுமார் 300 மரங்கள்வரை நடலாம். வேலியாக நடும்போது

2 அடிக்கு ஒரு செடியாக நடவேண்டும். வரப்புகளில் (நஞ்சை) நடும்போது 5 அடிக்கொரு செடி நடுவது நல்லது. இதனால் ஏற்படும் இதர பிரயோசனங்களாவது:—

(1) வாழை, கரும்பு தோட்டங்களில் நட்டுவளர்த்தால் காற்றினால் பயிர் சாய்க்கப்படாமலிருக்கும்; தழையும் கொடுக்கும்.

(2) அடிக்கடி கழிக்கும்போது விழும்தழை உரம், கம்போஸ்டுக்கும், குச்சி, கிளைகள் விறகுக்கும் உபயோகப்படும்.

(3) ஆடுமாடுகள் மேய்ந்து சேதப்படுத்துவதில்லை ஆதலால் சேதாரமின்றி நிறையதழையுரம்கிடைக்கும். வேலியும் அடர்த்தியாக இருக்கும்.

(4) தோட்டம், நந்தவனம், வீடு இவைகளைச்சுற்றி நட்டால் கண்ணுக்கு ரம்மியமானதழை, அழகிய சிகப்பு ஊதாநிறமுள்ள புஷ்பங்களால் கண்ணுக்கினிய காக்ஷியாக தோன்றும்.

(5) அடிக்கடி கழித்து (கவாத்து) விடுவதாலும் ஆழமாக வேர்போகுமானதாலும் பயிர்களும் சேதமாவதில்லை.

(6) கூடுமானவரை வரட்சியையும் தாங்குவதால் நன்கு பயிரானபிறகு அதிக கவனமும் தேவையில்லை.

மேலே கூறப்பட்ட பல விசேஷ குணங்களுடை இச்செடியை விவசாயிகள் ஒவ்வொருவரும் நட்டு வளர்ப்பதின் மூலம், தங்களுக்கு வேண்டிய தழையுரம், விறகு இவைகளை விர்த்தி செய்துக்கொள்வதுடன் அதிக உணவு உற்பத்தியின் மூலம் நாட்டின் உணவுப் பஞ்சத்தையும் தீர்க்க முடியும்.



ஜலப் பஞ்சத்திற்கு காரணம்?

அக்காலத்தில் காடு வளர்த்தும், குளம் வெட்டியும், கிணறு தோண்டியும், வறண்ட பகுதிகளுக்கு வாய்க்கால் வெட்டியும் தண்ணீரை சேமித்து வைத்தார்கள். ஆனால் இன்று ஏரிகள், குளங்கள் பல மண்மூடிப்போய் விட்டன. காடுகள் மறைந்து விட்டன. ஒரு கிராமத்தில் 10—20 வருடங்களுக்கு முன் ஏராளமான வேப்பமரங்கள் இருந்தன. இன்று ஒன்று கூட இல்லை. அங்கு இருந்த பெரிய குளம் இப்போது மண்மேடாகிவிட்டது. நூற்றுக்கணக்கான கிராமங்களில் இவ்விதம் இயற்கைச்செல்வத்தை மனிதன் அழித்துவிட்டான்.

—ஜே. சி. குமரப்பா.



நமது களஞ்சியம்

உழவர்கள் சொல்லுகிறார்கள் :— சென்னை சர்க்கார் செய்தி இலாக்கா வெளியீடு

நமது சுதந்திர சர்க்கார் அதிக உணவு உற்பத்திக்காக விவசாயத்துறையில் செய்துவரும் சேவை பாராட்டிற்குறியதாகும். புதிய விஞ்ஞான முறைகள் சாக்கார் விவசாய ஆராய்ச்சி பண்ணைகளில் நடந்து வருகின்றன அவற்றின் பயனை, அவர்கள் சோதனைகளின் மூலம் கண்டறிந்து, ஷை முறைகளை விவசாயிகளின் வயல்களிலேயே விவசாய இலாகாவினர் நேரில் செய்து காட்டி வருவதனால், இன்று பல விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு அதன் பயனாய் பெரும் ஊதியம் அடைந்து வருகிறார்கள். இவ்விதம் புதிய முறைகளை பின்பற்றியதனால் அடைந்த பலாபலன்களையும முறைகளையும் நன்கு விளக்கியுள்ளார்கள். அவர்களின் அனுபவம் மற்ற விவசாயிகளுக்கும் வழிகாட்டியாக உபயோகப்படும் வகையில் தாயாரிக்கபட்டுள்ளது இப்புத்தகம், நிறைய படங்கள் உள்ளன. உழவர்கள் சொல்லுகிறார்கள் என்னும் பெயர் மிகவும் பொருத்தமாக உள்ளது—வேண்டுவோர் சர்க்கார் செய்தி இலாகா தலைவரிடமிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

Cottage Industries in Madras State :— Published by Director of Information and Publicity Government of Madras.

[58-ம் பக்கம் பார்க்க]

“ மக்களுக்காக நல்ல புத்தகங்களை சேர்ப்பதுதான் முதல் வேலை. மக்கள் அறிவு அடையாவிட்டாலும் குணமடைய வேண்டும். இதற்கான புத்தகங்களை சேர்க்கவேண்டும். புத்தகங்கள் அசலாக இருந்தாலும்சரி மொழிபெயர்பாக இருந்தாலும்சரி ஜனங்களின் மனதை கெடுத்துவிடக்கூடாது.”

—ஸ்ரீ ராஜாஜி.

வன வளம்தரும் தொழில்வளம்

நமது நாட்டு மக்கள் பெரும்பாலும் மரங்கள் வீடுகட்ட, விறகு, விவசாய வேலைகள், தட்டுமுட்டு சாமான் (Furniture)கள் இவைகளுக்கு தான் பிரயோசனமுள்ள தென்று அறிவார்களேயன்றி, மரங்கள் நாட்டின் கைத்தொழில்களை எவ்வாறு விருத்தி செய்கிறதென்பதை அறிந்திருக்கமாட்டார்கள் என்றே நம்புகிறோம். தவிர விவசாயத்தையே நம்பியிருக்கும் எந்த நாடும் பொருளாதாரத் துறையில் முன்னேறுவது கடினம். ஆகவே பொருளாதாரம் விருத்தியடைய வியாபாரம் பெருகவேண்டும்; வியாபாரம் பெருக கைத்தொழில்கள் வளரவேண்டும்; கைத்தொழில்கள் வளர மூலப்பொருள்கள் உற்பத்தி பெருகவேண்டும். இவ்விதம் கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களை வற்றாத ஊற்று போல் கொடுக்கவல்லது வனங்களேயாகும். ஆகவே வனங்களை வளர்ப்பதின் மூலம் தொழில்களை வளர்க்கலாம் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் (ப-ர்)



உயர்ந்த தேக்கு மரக்காடு

வனங்களிலிருந்து கிடைக்கும் அநேக பொருள்களில் மரங்கள் தான் மிகவும் முக்கியமானது. இம்மரங்கள் பெரும்பாலும் விறகுக்கு, வீடுகட்டுவதற்கு தட்டுமுட்டு சாமான்கள், விவசாய கருவிகள் போன்றவைகளுக்கு உபயோகபடுவது மட்டுமின்றி, மரங்களையே ஆதாரமாகக்கொண்ட பல கைத்தொழில்களில் பிரதானமானது பிளைவுட், தீப்பெட்டி, காகிதம், பென்சில், பாக்கிங் கேசுகள், விளையாட்டுக்கருவிகள், தரிக்கண்டுகள், கருவிகளின் கைப்பிடிகள், மின்சாரபாட்டரியின் பாகங்கள் ஆகியவைகளுக்கும் உபயோகப்படுகிறது இத்தொழில்களுக்குமட்டும் ஆண்டுதோரும் பலகோடி ரூபாய் பெருமானமுள்ள 8 லக்ஷம் டன்மரங்களுக்குமேல் தேவைப்படுகிறது. இத்தொழில்களின் அபிவிர்த்தியினால் லக்ஷக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை



கிடைப்பதுடன் அன்னிய நாட்டுக்கு வெளியேறும் கோடிக்கணக்கான ரூபாய்கள் மீதியாகி நம்நாட்டு பொருளாதார நிலையும் உயருகிறது. இவைகளில் முக்கியமான கைத்தொழில்களாவன:—

(1) பிளைவுட்:— நமது நாட்டில் முதன்முதலில் அஸ்ஸாமில் தான் இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. சாதாரண மரப்பலகைகளால் செய்ய முடியாத பலவித வேலைகளை இவ்விணைப்பு (Plywood) பலகைகளால் செய்து முடிக்கலாம். சாதாரண பலகையைவிட 3 மடங்கு உறுதியானது. நமது தேவைக்கு ஏற்ற அகல நீளத்திற்கு தயாரித்துக் கொள்ளலாம். ஆனால் மரங்களில் இது முடியாது. சாதாரண மரங்களைக் கொண்டும் இவ்வித பலகைகள் தயாரித்துவிடலாம் ஆதலால் விலையுயர்ந்த மரங்கள் வீணாக்கப் படுவதில்லை. எனவே இந்தநாட்டில் இத்தொழிற்சாலைகள் துரிதமாக முன்னேற்றம் அடைந்து வருகிறது. நம்நாட்டின தேவை ஆண்டு 1-க்கு 4 கோடி ரூபாய் மதிப்புள்ள 1500 லக்ஷம் சதுர அடி அளவுள்ள பலகைகளாகும் ஷை உற்பத்தியில் 3-ல் 2 பாகம் தேயிலை அடைக்கும் பெட்டிகளாகவும், மீதி ஒரு பங்கு தட்டுமுட்டு சாமான்கள், நாற்காலி வகையரு, மோட்டார், ரயில், ஆகாய விமானம் முதலியவைகளுக்கும் உபயோகப்படுகிறது. இவ்விதம் தயாரிக்கப்படும் 55 லக்ஷம் பெட்டிகளில் அடைக்கப்படும் 5500 லக்ஷம் பவுண்டு தேயிலையின்மூலம் வருடம் 1-க்கு 64 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

பிளைவுட்பட்டை இயந்திரத்தின்மூலம் உரித்தெடுத்தல்.

1946—1949 வரை இறக்குமதி செய்யப்பட்ட (Plywood) பலகைகளின் மதிப்பு ரூ. 4 கோடிகளாகும் 1938-ம் ஆண்டில் 3 தொழிற்சாலைகள்தான் இருந்தன. இன்று சுமார் 80-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவைகளில் பெங்களூர், திருவாங்கூர், உத்தரப்பிரதேசம் ஆகிய இடங்களில் ஒன்று வீதமும, அஸ்ஸாமிலும் பம்பாயிலும் இரண்டு வீதமும், மற்றவைகள் கல்கத்தாவிலும் மலையாளப்பிரதேசத்திலும் உள்ளன. இத் தொழிலுக்கு ஏற்ற நாட்டு மா தினுசுகளாவன:— தேக்கு, வாகை, பலா, சந்தன வேம்பு, சீமை வாகை, ஈட்டி, எட்டி, மா, முள்ளிலவம், நூக்கு, கிடியாகாலிசிஞ மஞ்சக்கடம்பை—முதலியன.

(2) தீப்பெட்டி:— நமது நாட்டில் சுமார் 80-க்கு மேற்பட்ட பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவைகளில் 20 தொழிற்சாலைகள் நீங்கலாக மற்றவைகள் சிறிய அளவில் குடிசைத்தொழில்களாக உள்ளவை. அவைகளுக்குத் தேவையான பெட்டி, குச்சி ஆகியவைகளை விலைக்கு வாங்கிக்கொள்ளுகின்றன. மற்ற இருபது தொழிற்சாலைகள் தங்களுக்கு தேவையானவற்றை தாங்களே தயாரசெய்து கொள்ளக்கூடியவை. இவைகளில் 8 சென்னைராஜயத்தையும் அடுத்த பிரதேசங்களிலும், 6 உத்தரபிரதேசத்திலும்; இரண்டு வங்காளத்திலும் காஷ்மீர், அஸ்ஸாம், மத்யபிரதேசம், பம்பாய் இவைகளில் ஒன்றுவீதமும் உள்ளன. மொத்தம் ஆண்டு ஒன்றுக்கு உற்பத்திசெய்யப்படும் சுமார் 300 லக்ஷம் தீப்பெட்டிகள் நாட்டின் தேவைக்கு சரியாக உள்ளது. இத்தொழில் மூலம்மட்டும் நாட்டுக்கு சுமார் 15 கோடி ரூபாய் மீதியாகிறது:- தவிர சர்க்கார் மரங்களுக்கு வரியாக (அ) உரிமை கட்டணமாக டன் ஒன்றுக்கு ரூ. 750 கிடைக்கிறது. ஆண்டொன்றுக்கு சுமார் 1,20,000 அல்லது 60,00,000 கன அடி மரங்கள் தேவையாகும். இதற்கேற்ற நாட்டு மரங்களாவன. முள்ளிலவன் (Senal) கிடியாகாலிசியானு, மா, ஜிங்கான் போன்றவை.

(3) **காகிததொழில்:—** நவீன இந்தியாவில் விஞ்ஞானம் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய எல்லாத்துறைகளிலும் காகிதத்தின் அவசியம் நன்குணர்ந்ததே. இவ்விதத் தேவை நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. சராசரி ஒரு மனிதன் உபயோகிக்கும் அளவு அமெரிக்காவில் 300 பவுண்டு, கானடாவில் 75 பவுண்டும், ஐரோப்பாவில் 150 பவுண்டும் இந்தியாவில் 1.4 பவுண்டுமாகும் 1950-ம் ஆண்டு முடிவில் இந்தியாவிலுள்ள 16 காகிதத் தொழிற்சாலைகள் உற்பத்திசெய்த அளவு 1,10,000 டன்களாகும். இது தவிர 60,000 டன் பத்திரிகை (Newsprint) காகிதமும், 12000 டன் இதர காகிதங்களும் இறக்குமதி செய்யப்பட்டன. ஆகவே வளர்ந்துவரும் தேவையை உத்தேசித்து 1956-க்குள் 4 லக்ஷம் டன்னுகவும் 1961-ம் ஆண்டுக்குள் 6 லக்ஷம் டன்னுகவும் (1.5 டன் பத்திரிகை காகிதம் 4.5 லக்ஷம் டன் காகிதங்கள்) உற்பத்தியை பெருக்க திட்டமிட்டுள்ளார்கள்.

இதற்கேற்ற முக்கியமான மரங்கள் மூங்கில் தினுசு, ஒதியன், (Bodilla Serrata) போன்றவை தான்.

(4) தரிக்கண்டுகள் (Bobbin):– இதற்கு கல்கத்தா, அமாதாபாத், பம்பாய் மற்றும சில இடங்களில் தயாரிப்பு தொழிசாலைகள் உள்ளன வருடாந்திரத்தேவையின் மதிப்பு சுமார் $3\frac{1}{2}$ கோடி ரூபாயாகும். இப்போது பாதிக்குமேல் இறக்குமதி செய்யப்பட்டுவருகிறது. வருடமொன்றுக்கு 36000 டன் அல்லது 1800000 கன அடிமரம் தேவையாகும்.

இதற்கு ஏற்ற சில நாட்டுமரங்களாவன:- மஞ்சக்கடம்பு, மா, சந்தணவேம்பு, வில்வர் ஓக் (Gmelina arborea) முதலியவை.



தென்னை மரமும் அதைச் சார்ந்த கைத்தொழில் பொருள்களும்

[55-ம் பக்கத் தொடர்ச்சி]

இப்புத்தகத்தில் சென்னை ராஜ்யத்திலுள்ள குடிசைத் தொழில்களையும் இக்கைத்தொழில்கள் முன்னேற சர்க்கார் கைத்தொழில் இலாகா செய்துவரும் உதவிகளும் திட்டங்களும் விளக்கப்பட்டுள்ளன. இபுத்தகம் ஆங்கிலத்தில் எளிய நடையில், பல சித்திரங்களுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது. தேவையுள்ளோர் சர்க்கார் செய்தி இலாகா டைரக்டர் சென்னை என்று எழுதி இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

புதிய கல்விதிட்டம்:– சென்னை கல்வி இலாகா பிரசுர வெளியீடு:– இப்புதிய கல்விதிட்டம் கிராமங்களிலே இன்று அமுலுக்கு வந்துள்ளது. இதனுல் விளையும் நன்மையோ தீமையோ அது கிராமவாசிகளையே சேர்ந்தது. இத்திட்டத்தைப்பற்றி ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் இன்று உள்ளனர். ஆகவே, அவர்களின் மாறுபட்ட அபிப்பிராயங்களினுல் குழம்பிப்போயிருப்பவர்களுக்கு உதவியாக இருக்கும் இப்புத்தகம். இச்சிறு புத்தகத்தில் இத்திட்டத்தின் விபரம், இதனுல் விளையும் நன்மை முதலியன விபரமாக விளக்கப்பட்டுள்ளன. இதைக்கொண்டு இத்திட்டத்தின் பயனை கிராமவாசிகள் தாங்களாகவே தெரிந்துகொள்ளலாம். இதுவும் (செய்தி இலாகா டைரக்டர்) சென்னையிலிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

மழையை விருத்திசெய்வது சாத்தியமா?

ஸ்ரீ B. K. சாஹாய் எம். எஸ். ஸி , ஏ. ஐ. எப்., ஸி.,

இன்று நாட்டின் முன்னுள்ள முக்கிய பிரச்னை பருவ (மழை) பெய்யாதபோகும் காலங்களில் மழையை விருத்திசெய்வது சாசதியமா என்பதே? விஞ்ஞானரீதியில் மழையை பெய்விக்க முயற்சிகள் செய்யும் இககாலத்தில், இயற்கையானதும், சிக்கலமானதும், நிரந்தரமானதுமான வழி—வனங்களை விருத்தி செய்வது, நீர் நிலைகளை பெருக்குவது; பூமியிலுள்ள (நீர்தேக்கங்களிலுள்ள) தண்ணீர் நீராவியாகப் போவதை கூடுமானவரை தடுப்பது; இப்படி பூமியின் வரட்சியை குறைத்து, தண்ணீர மட்டத்தை எவ்வளவு உயர்த்துகிறேமோ அவ்வளவு மழை பெய்கிறது என்பதைத்தான் இக கட்டுரையில் விளக்குகிறுர் இதன் ஆசிரியர். அதாவது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள நீர் தேக்கங்களிலிருக்கும் (கோடை காலத்தில்) தண்ணீர் மட்டத்தைக்கொண்டு பருவமழையின் அளவைமுன்னுடியே அறிந்து கொள்ளலாம் என்பது தான் – இதில் காணப்படும். புள்ளி விபரங்கள் 23 ஆண்டுகள் செய்த பரிசோதனையின் முடிவாகும் நமது நேயர்களுக்கு இக் கட்டுரை பெரிதும் பயன்படுமென கருதுகிறேம். (ப—ர்)

---

(5) விவசாயக்கருவிகள், கைப்பிடிகள், (6) பாக்கிங்பெட்டிகள், (7) பென்சில், (8) விளையாட்டு சாதனங்கள், (9) ஏரோப்பிளான், (10) துப்பாக்கி கட்டைகள், (11) ரயில் ஸ்லீப்பாகள், (12) பாட்டிரியின் பாகங்கள் போன்ற இன்னும் பல கைத்தொழிகளும் மரத்தையே அடிப்படையாகக்கொண்டுள்ளது. மரத்திலிருந்து கிடைக்ககூடிய தழை, உரம், கனி, மருந்து, சாயம், கோந்து இவைகளல்லாமல் இம்மாதிரி மரத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும், பொருள்களின் மதிப்பு பலகோடி ரூபாய்களாகும் ஆகவே நாட்டின் பொருளாதாரமும் கைத்தொழிலும் விருத்தியடைய வனங்கள் விருத்தி செய்யப்படவேண்டுமென்பது அவசியகும்

(இந்தியன் பாரஸ்டரிந்து எடுத்தது)

தொழில் வளம்பெருக.

ஆண்டுதோரும் வேண்டும் மரங்கள்

காகிதம்	செய்யும்	தொழிலுக்கு	4,00,000	டன் மரம்
பிளேவுட்	செய்யும்	தொழிலுக்கு	150000	,,
தீப்பெட்டி	,,	,,	120,000	,,
பாக்கிங்பெட்டி	,,	,,	75000	,,
தரி ஆலைகள்	,,	,,	36000	,,
விளையாட்டு சாமாகள்	,,	,,	20,000	,,
பென்சில்	,,	,,	2500	,,
பாட்டரி சாமான்கள்	,,	,,	* 2500	,,
கருவிகள் கைப்பிடி	,,	,,	2000	,,

* மதிப்பு ரூபாய் 20,00,000 ஆகும்.

1924-ம் ஆண்டில் பாட்டியாலா சமஸ்தானத்தில் மான்பூம் ஜில்லாவில் தோப் சாஞ்சி என்னுமிடத்தில் ஒரு பெரிய நீர்த்தேக்கத்தை ஜாரியா நீர்க் குழுவினர்கட்டி முடித்தார்கள். இத்தேக்கத்திற்கு மூன்று பக்கங்களிலும் பெரிய மலைகளும் வனங்களும் உள்ளன. வடப்புறத்தில் தான் பீஹாரின் உயர்ந்த மலைச்சிகரமெனப்படும் "பரசுநாத்" இருக்கிறது. இத்தேககத்தின் மொத்த ஆழம் 72 அடியாகும். இதில் தேக்கப்படும் தண்ணீரின் மொத்த அளவு 11640 லக்ஷம் காலன்கள். இதிலிருந்து தணணீரை பக்கத்திலுள்ள ஜாரியா சுரங்கத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளப்படுகிறது. இவ்விதம் 1948—49, 1949—50-ம் ஆண்டுகளில் மட்டும் உபயோப்படுத்திக்கொள்ளப் பட்ட தண்ணீரின் அளவு 8672 ; 9472 லக்ஷம் காலன்களாகும். இதன் அருகில் மழை அளக்கும் கருவி ஒன்றும் வைக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக இப்பிரதேசத்தில் ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் தான் பருவமழை பெய்யும் ஆகவே ஜூன்மீ கடைசியிலோ (அ) ஜூலைமீ ஆரம்பத்திலோ இத்தேக்கத்திலுள்ள தண்ணீர் மட்டம் குறைவாக இருந்தால் அந்த ஆண்டில் குறைந்த மழையும், உயர்ந்த அளவு இருந்தால் அதிக மழைபெய்து வந்துள்ளது என்பது 23 ஆண்டுகள் செய்த பரிசோதனையிலிருந்து தெரிகிறது.

டாக்டர் மஹாஜன் என்பவர் பாட்டியாலா பிரதேசத்தில் தண்ணீர் நீராவியாகமாறும் அளவையும் பருவமழையின் அளவையும் பற்றி செய்து வந்த ஆராய்ச்சியின் பயனாக எப்ரல், மே மாதங்களில் நீராவியாக மாறும் தண்ணீரின் அளவைக்கொண்டு அடுத்த பருவமழைக்காலத்தில் பெய்யக் கூடியமழையின் அளவை நிர்ணயித்துவிடலாம் என்று தெரிகிறது. ஏனெனில் நீர்நிலைகளிலுள்ள தண்ணீர் மட்டத்தின் ஏற்றத்தாழ்வுக்கு (வரட்சிக் காற்றினால்) நீராவியாக மாறுவதும் ஒரு காரணமாகும் என்று கூறுகிறார்.



o…o…o மழை அளவு.
●—●—● தண்ணீர் மட்டம்.
+படம்

நீர்த்தேக்கங்களிலுள்ள தண்ணீர் அதிக அளவில் நீராவியாகமாறி அதிகமாக வரட்சி ஏற்படும் காலங்களில் மழை குறைவாகவும், நீர் நிலைகளின் தண்ணீர்மட்டம் அதிகமாக இருக்கும் காலத்தில் அதிக மழையும் பெய்கிறதென்பதை இப்புள்ளி விபரங்களிலிருந்து காணலாம்*புள்ளிவிபரத்தையும்+படத்தையும் பார்க்கவும்.

* 1928 முதல் 1950 வரை 23 ஆண்டுகளில் தோப்சாஞ்சி நீர்த்தேக்கத்திலிருந்து (கோடையில்) தண்ணீர் மட்டத்தின் அளவும் பருவ மழைக்காலத்தில் பெய்தமழையின் அளவையும் காட்டும் புள்ளி விபரங்கள் அட்டவனை.

அட்டவணை

தேதி.	மழைக்கு முன் ஏரியிலிருந்த ஜலத்தின் அளவு.			பெய்த மழையின் அளவு.
	தண்ணீர் மட்டம் அடி.	அங்	தண்ணீர் அளவு. (காலன்)	
6—6—28	58	7	583·73	54·89
7—7—29	57	5	544·00	55 93
24—6—30	60	2.5	642 07	72·03
30—6—31	59	9.5	626·75	64·24
5—7—32	56	5	511·29	56 24
23—6—33	53	6.5	424·10	52.67
15—6—34	57	9	556·10	57·70
1—7—35	45	4.5	226 65	46·51
21—6—36	53	7.5	426·48	47 59
31—7—37	61	11.5	708·88	69·89
31—7—38	57	5	544·00	56·18
31—5—39	42	6	171·66	36·34
31—7—40	59	8	622·24	63.88
10—6—41	48	4	290 38	44·24
23—6—42	57	7	549·57	60·98
12—7—43	58	8.5	558·06	67 59
25—6—44	56	9.25	522·69	64·06
24—6—45	50	9	348·72	49.00
20—6—46	37	11.5	102·77	46.90
29—7—47	36	10	87·48	46.75
25—6—48	36	2.5	79·55	42.19
29—6—49	29	3	607·22	56.90
10—6—50	65	4.5	478·52	60.28

இவைகளிலிருந்து மழையை விருத்தி செய்வதற்கு—குட்டை குளங்கள் ஆகிய நீர்த்தேக்கங்களை அபிவிருத்திசெய்து வீணாக சமுத்திரத்திற்கு போகாமல் தடுத்து தண்ணீரைத் தேக்குவது என்பதுதான். ஆகவே நாம் எவ்வளவுக்கெவ்வளவுநீர்த்தேக்கங்கள் (கிணறு, குட்டை, குளம், ஏரி, அணைக்கட்டுகள்) ஏற்படுத்தி, ஷை நீர் நிலைகளிலிருந்து தண்ணீர் காற்றாலும், உஷ்ணத்தாலும் ஆவியாக மாறாமலிருக்கவும்; வயல்களில் ஏற்படும் வரட்சியையும் தண்ணீர் தேவையை குறைத்து வளப்பதை விருத்தி செய்யவும், கரைகள், வேலிகள், வரப்புகள், காலி இடங்களிலெல்லாம் மரங்களை நட்டு வளர்ப்பது அவசியம். இவ்விதம் வரட்சியை குறைத்து ஜல மட்டத்தை அபிவிருத்தி செய்வதின் மூலம் மழையை விருத்திசெய்வது சாத்தியமாகும்.

மழைவளமும் மண்வளமும் பெருக. மரம் நடுவீர் இன்றே?

Abstract of an article from "Indian Forester"
page 289–291 of June 1952 by B. K. Sahay M. Sc. A. I. F.
D. F. S. Monbum Division.

*வனங்களும் நமது தேசிய செல்வமும்

கதிரவன் தனது ஓராண்டு யாத்திரையை முடித்துக்கொண்டு தன்னிலைக்கு வந்துவிட்டான். மீண்டும் வனமகோத்சவத்தை கொண்டாடப் போகிருேம் இந்த தேசீய விழாவை 4-வது ஆண்டாக கொண்டாடுகிருேம். இச்சமயத்தில் வனத்திற்கும் நமது தேசீய அபிவிர்த்திக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தத்தை குறிப்பிடவேண்டியிருக்கிறது. வன அபிவிர்த்தியும் விவசாயத்தைப்போலவே முக்கியமானது என்பது கடந்த சில ஆண்டுகளாக நிரூபிக்கப்பட்டுள்ளது. தினசரி நம் வாழ்க்கையில் வனப்பொருள்களின்றி நாம் இருக்கமுடியாது. அதாவது வாழ்க்கையிலே தினசரி மரங்களாகவோ விறகாகவோ அல்லது வேறு விதமாகவோ உபயோகப்படுத்தி வந்தபோதிலும் ஷை பொருள்கள் நிரந்தரமாக எப்போதும் கிடைத்து வரும்படி அவைகளை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. ஆனுல் அவைகளை அழித்துவருகிருேம் கடந்த இரண்டு மகாயுத்தங்களும் நமது கஷ்டங்களை மேலும் அதிகரிக்கச்செய்தன. சர்க்கார் வனங்கள் ஓரளவு பாதுகாக்கப்பட்டபோதிலும் யுத்த கால தேவைக்கு பொதுக்காடுகள் அழிக்கப்பட்டன. அதிக விலை, வரட்சியின் காரணமாகவும மரங்கள் ஏராளமாக அழிக்கப்பட்டன. மேலும் ஜமீன்தாரி ஒழிப்புச்சட்டத்தினுல் பல காடுகளும் அழிக்கப்பட்டன.' இவ்விதம் பல வழிகளிலும் அழிந்தது போக மீதியுள்ள காடுகளையாவது பாதுகாத்து விருத்திசெய்யும் முயற்சியை காலத்தில் செய்யத் தவறுவோமேயானுல் இவ்வழிவினின்றும் மீள ஏராளமாக பொருள் விரயம் செய்யவேண்டி வரும் என்பதையும் கவனிக்கவேண்டும்.

சமீப காலத்திய புள்ளி விபரப்படி இந்தியாவின் நிலப்பரப்பு 1·27 மில்லியன் சதுர மைல்கள் ஆகும். இதில் வனங்களின் விஸ்தீரணம் ஏறக்குறைய 0·242 மில்லியன் எக்கர் அல்லது 19·1 சதமாகும். தவிர எல்லாக் காடுகளும் ஒரேமாதிரியாக பொது மக்களுக்கு உபயோகப்படக்கூடியதாக இல்லை. ஏனெனில் பல காடுகள் சாதாரண முட்புதர்களையுடையவை. இவை நமக்கு அதிகம் உபயோகம் உள்ளவையல்ல. நமது தேவைக்கு எவ்வளவு விஸ்தீரணம் காடுகளாக இருக்கவேண்டுமென்பதே இன்றைய பிரச்னையாகும். மலைப்பிரதேசங்களிலும் மலைச்சரிவுகளிலும் ஈரம், மண்வள பாதுகாப்பு இவைகளுக்கு பெரும்பாலும் காடுகளாக இருப்பது அவசியம். சமவெளிகளில் குறைந்த அளவு போதுமானுலும் காட்டுப்பொருள்களின் தேவைகளை கவனிக்கும்போது அதிக அளவில் மரங்கள் தேவை என்பது புலனுகும்.

ஆனுல் விவசாய உற்பத்தி நிலங்களை இனி பெரிய அளவில் காடுகளாக மாற்றுவது சாத்தியமில்லை. ஏனெனில் ஷை வளமான வயல்கள் நீண்ட காலமாகவே விவசாயம் செய்துவரப்படுகிறது. மீண்டும் அவைகளை காடுகளாக மாற்றுவதென்ருல் விவசாய நிலப்பிரச்னையை தீர்க்கவேண்டிய புதிய கஷ்டம் ஏற்படக்கூடும். ஆகவே இதைப்பற்றி தீர்க்கமாக சிந்தித்து சமவெளியில் உள்ள மக்கள் வனங்களினுல் கிடைக்கும் பலன்களை அடையக்கூடிய வழிகளைப்பற்றி திட்டம் வகுக்கவேண்டியிருக்கிறது. அதிக விஸ்தீரணத்தில் காடுகள் தேவையென்பதை நாம் எல்லோரும் நன்குணர்ந்திருந்த

---

* இந்திய வன சஞ்சிகையின் கௌரவ ஆசிரியர் ஸ்ரீ வி. எஸ். கிருஷ்ணஸ்வாமி எம். ஏ., ஐ. எப். எஸ். டோராடுன் அவர்களின் கட்டுரையின் சாராம்சம்.

போதிலும் தற்கால அவசர நிலமையில் உணவு உற்பத்திக்குத்தான் பிர தான்யம் அளிக்கப்படவேண்டியிருக்கிறது.

மேலே கூறப்பட்ட நிலையில் நாம் எங்கெல்லாம் (சொந்த நிலங்கள் புறம்போக்கு, சாலைகள், ஆறு, ஏரி, கால்வாய்க்கரைகள், ரயில் ரோடுகள்) சாத்தியமோ அங்கெல்லாம் பொருத்தமான உபயோகமுள்ள மரங்களை நட்டு வளர்ப்பதுடன் திருப்தியடையவேண்டியிருக்கிறது. நமக்கு வனங்களோ தேவை: அதற்காக நமது கிராமங்களிலே—ஏன, நமது வீடுகளிலேயே வனங்கள், வனப்பொருள் வந்து சுயத்தேவையை பூர்த்திசெய்துகொண்டவர் களாகவேண்டும். இதன் மூலம் ஒவ்வொரு பண்ணை, பண்ணைக்குடும்பம் இவைகளுக்குத் தேவையான விறகு, மரம் இவைகளை உற்பத்தி செய்து கொள்ளக்கூடும். இம்முயற்சி வெற்றிபெற போதிய பிரசாரமும் ஊக்கமும பொது மக்களுக்கு அளிப்பது அவசியமாகும். இந்த நோக்கத்துடன்தான் ஸ்ரீ K. M. முன்ஷி அவர்களால் இவ்வன மகோத்சவமானது தேசிய திரு விழாவாக ஆரம்பிக்கப்பட்டு புதிய உணர்ச்சியை உண்டாக்கியுள்ளது. இது மிகவும் உயர்ந்த சேவையாகும். இன்றும் கிராமங்களிலே அரசமரத்திற்கும வேப்ப மரத்திற்கும் கலியாணம் செய்துவைப்பதை காண்கிறோம். இத னுடைய கருத்து இரண்டு வேறு ஜாதி மரங்களை நட்டு வளர்ப்பது என்ப தல்ல. கிராமங்களுடன் வனங்களை ஒன்றுபிணைப்பதாகும். அரசமரமானது மக்கள் வாழுமிடத்தையும் வேம்பானது வனத்தையும் சேர்ந்ததாகும். இத னுடைய வேர்களிரண்டும் ஒன்றுசேராவிடில் நமது முன்னேற்றமானது சீர்குலைந்துவிடும். ஒவ்வொரு கிரகஸ்தனும்—குடும்பத்தலைவனும் மரங்களை நட்டு வளர்ப்பது கடமையென கருதவேண்டுமென்று ஹிந்து சாஸ்திரத்தில் விதிக்கபபட்டிருக்கிறதை ஒவ்வொரு வாசகரும் அறிவர். அப்படித்தெரிந் தும் அநேகர் தங்களுடைய கடமையைச் செய்யத் தவறியதனுல்தான் இன்று விறகு, மரம், உணவுக்கும் கஷ்டப்படவேண்டியிருக்கிறது.

நாம் நமது பண்பாடுகளையும் கலாச்சாரங்களையும் கைவிட்டோம். ஆனல் மேனாட்டாரின் (புதிய) கலாச்சாரங்களையோ (கட்டுப்பாடு, உணர்ச்சி) பண்பாடுகளையோ முற்றிலும் கற்றுக்கொள்ளவும் இல்லை; அதனுல் நாம் நம் மால் சிருஷ்டிசெய்துக்கொள்ளப்பட்ட இரண்டுக்கெட்டான் நிலைமையிலே தான் இன்று இருக்கிறோம். இந்த நிலைமையில் நமது நாட்டின் பாலை வனங்கள் மறைந்து பசுமையான மரங்களடர்ந்த இடமாக மாறுவிட்டால் மேலும் வரட்சி, பஞ்சங்களுக்கு இரையாகவேண்டும்.

"அதிக மரங்கள் நடு" என்கிற இயக்கம் வெற்றி பெறுவிட்டால் "அதிக உணவு உற்பத்தி" என்கிற திட்டமும் வெற்றிபெறுது. ஏனெனில் ஒரு அங்குலம் வளமான மேல்மண் தயாராக இயற்கைக்கு 1000 ஆண்டுகள் ஆவதாக சொல்லப்படுகிறது. ஆனல் திறந்த (பொட்டல்) வெளிகளிலே ஒரே கனத்த மழையில் அரித்துக்கொண்டு போகப்படுகிறதாம் இது. ஆகவே இவ்விதம் மண் அரித்துக்கொண்டு (Soil Erosion) போவதைத் தடுக்க எல்லாவித மண்களிலும் நிலமைக்கேற்ற அளவில் மரங்கள் நட்டு வளர்ப்பதும் அவசியமாகிறது. வனங்களை அழித்து வயல்களாக செய்து வந்தகாலம் ஒன்று இருந்தது. ஆனல் இன்று வயல்களை வளமாக்க வனங் கள் தேவையாகிறது. மேலும் இன்றையத்தேவை அதிக விஸ்த்தீரண விவ சாயத்தைவிட அதிக தீவிர விவசாயமே (அதிக உற்பத்தி) யாகும் அதிக உணவு உற்பத்தி வெற்றிபெற அதிக மரங்கள் உற்பத்தியாகவேண்டும். எனவே நமது முன்னேற்றத்திற்கு மார்க்கம் "அதிக உணவு—மரங்கள்" என்பதை லக்ஷியமாகக்கொள்வதேயாகும்.

குடியானவனின் காடுகள்

(ஸ்ரீ K. வரதாச்சாரி)

இதாலி தேசத்தில் ஆர்ஸா என்ற இடத்தில் படிப்பு இலவசம் என்றும் எலக்ட்ரிக் விளக்கு இலவசம் என்றும் டிராம் வண்டிகளில்கூட இலவசமாக பிரயாணம் செய்யலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது குடிகளாலும் பொதுவில் பரிபாலிக்கப்பட்ட காடுகளிலிருந்து உண்டான வரும்படியைக் கொண்டு இம்மாதிரி இலவசமான சௌகரியங்கள் ஏற்படுத்த சாத்தியமாக இருந்தது. நாலாயிரம் வருஷங்களாக விவசாயத்தில் பெயர்போன சைனு தேசத்தில் அனேக குடியானவர்கள் தங்கள் தங்கள் நிலங்களின் சில பாகத்தை இதற்காகவே ஒதுக்கிவைத்து அதில் காடுகளை உற்பத்தி செய்கிறார்கள். இதனால் அவர்களுக்கு இரண்டுவிதத்தில் ஆதாயம் உண்டு. முதலாவது, காடுகளிலிருந்து ஏற்படும் வருமானம்; இரண்டாவது அவைகளிலிருந்து கிடைக்கும் தழைகளை மற்ற நிலங்களுக்கு உரமாக உபயோகப்படுத்துவதினால் ஏற்படும் அதிகப்படியான மாசூல். இதேமாதிரியாக நாமும்கூட பிரத்தியேகமாகவோ, அல்லது பலர் கலந்தோ காடுகளை ஏற்படுத்தி பிரயோஜனம் அடையலாம்.

மரங்கள் நமக்கு ஒரு செல்வம். வீடுகள் கட்டுவதற்கும், விவசாய கருவிகளுக்கும், மேஜை, நாற்காலி, கட்டில்கள் முதலிய மர சாமான்கள் செய்யவும் உபயோகமாகும் மரங்களும் பல வகைகளும் கிடைக்கின்றன. தினசரி நமக்கு பிரயோசனமாகும் அநேகவிதமான இன்றியமையாத வஸ்துக்கள், அதாவது நெருப்புக்குச்சி, காகிதம், ரப்பர், பிஸின், விளக்குகளுக்கு எண்ணை தீவனத்திற்கும் நிலத்தின் உரத்திற்கும் உபயோகமாகும் தழைகள், புஷ்பங்களிலிருந்து தேன், அடிமரத்திலிருந்து படகுகள், பட்டைகளிலிருந்து கொயினு முதலிய மருந்து சாமான்கள். இவைகள் தவிர நமக்கு மிகவும் முக்கியமான விறகு இவைகளெல்லாம் மரம் வைத்து பயிராக்குவதினால் நாம் அடையும் பிரயோஜனங்கள். மரங்கள் இயற்கையை அழகுசெய்து, நமக்கு நிழலும் குளிர்ச்சியும் தந்து எண்ணிக்கையில்லாத சிறிய பிராணிகளுக்கும், பக்ஷி இனங்களுக்கும் வாசம்செய்ய இடமாகிறது. இவைகளில் அநேகவித பக்ஷிகள் மனோ உற்சாகம் கொடுப்பதன்னியில் நம் பயிர்களை அழிக்கும் புழு பூச்சிகளைத்தின்றும் நமக்கு உதவுகின்றன.

முன்காலத்தில் முன்னோர்கள் மரங்களைவைத்து பயிரிட்டு வந்ததினால் நாம் அவைகளின் பிரயோஜனத்தை இப்பொழுது அனுபவித்துவருகிறோம். ஆனால் நாம் அவைகளை விரைவில் அழித்துவருவதை கவனித்தால் நம் சந்ததியார்கள் நம்மிடமிருந்து பிரயோஜனம் அடையப்போகிறதாக தெரியவில்லை. ஜனசங்கியை அதிகமாக ஆக ஜனங்களின் சௌகரியத்தின்நிமித்தம் காடுகள் எவ்வளவு விரைவில் அழிக்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக புதியதாக காடுகளை ஏற்படுத்தினாலன்றி நாம் நஷ்டத்தையே அடைவோம்.

திறந்த பொட்டல்களான பிரதேசங்களில் ஏற்பாடாக அங்கங்கே பத்தி பத்தியாக மரங்களை பயிரிட்டால், காற்றின வேகத்தை தடுத்து பூமியின் மேல்பாகத்திற்கு செழுமையான மண்ணை கரைத்துக்கொண்டு போகாமல் கார்க்கலாம் புரம்போக்குகளிலும் காலியாக விடப்பட்ட இடங்களிலும் ஏரிகள் எதிர்வாயிலிலும் மரங்களை நட்டு பிரயோஜனமடையலாம்.

மரவேலைக்கும்விறகுக்கும் மாட்டுத் தீவனத்துக்கும் உரத்துக்குமாக உபயோக மாகும் தழைகளுக்காகவும் பிரயோஜனப்படும்படி பலவித மரங்கள் உண்டு. ஆச்சா, உசில் இந்த மரங்களின் தழைகள் மாட்டு தீவனத்திற்கு லாயக்கானது. இவைகளின் மரம் பலவிதமான மரவேலைக்கும் உபயோகமாகும். ஆச்சா மரத்திலிருந்து கயிற்று கட்டில்களுக்கு கயிறுபின்னுகிறார்கள். வாதநாராயணன், வாகை, புங்கம், வேம்பு இவைகளில் சில மரங்கள் மரவேலைக்கும் விவசாயக் கருவிகளுக்கும் லாயக்கான மரம் தருவதற்கும், சில மரங்கள் தழைக்கும், சில இரண்டு விதத்திலும் பிரயோசனப்படும். கருவேல மரமும் மூங்கிலும் எவ்வளவு உபயோகமானது என்பது சாதாரணமாக தெரிந்த விஷயம் மரங்கள் நெருங்கியிருப்பதின் அளவைப்பொருத்து ஒவ்வொரு வருஷமும் கிளைகளை கழிப்பதனாலேயே ஒரு ஏக்கர் காட்டிலிருந்து இரண்டு டன் விறகு கிடைக்கும். கிளைகளை கழித்து தழைகளை எருவாகவோ மாட்டுத்தீவனமாகவே உபயோகப்படுத்தலாம். கழித்த கிளைகளை விறகாக உபயோகப்படுத்துவதனால் தற்சமயம் அடுப்பு எரித்து வீணாகும் ஏராளமான சாணத்தை மிச்சப்படுத்தி எருவாக உபயோகப்படுத்தி விசேஷ மகசூலை அடையலாம். மழைத்துளிகள் வேகமாக நேராக தரையில் விழுந்து மண்ணை அரித்துக்கொண்டு பிரவாகமாக ஓடவிடாமல் மரங்களின் இலைகள் தாங்கிப்பிடித்து அடக்கி விடுகின்றன. நெருக்கமாக நடப்பட்ட பிரதேசங்களில் அநேக காலமாக கீழே விழுந்து கனமாக சேர்ந்திருக்கும் இலைகள் ஏராளமாக மழைஜலத்தை கிரஹித்து உள்ளுக்கு இழுத்துக்கொண்டு பிற்பாடுமெள்ள வெளியேற்றும். இந்த மாதிரியாகத்தான் நம்நதிகளில் மழை நின்று கொஞ்சகாலம் ஆனபிறகும்கூட பிரவாகம் வருகிறது.

ஜனநாயகத்தின் ஆதீனத்தின் கீழாக நம் ராஜதானியில் 3000 சதுர மைல் விஸ்தீரணத்துக்கு மேலாகவே காடுகள் இருக்கின்றன. ஆனால் சரியான கட்டுப்பாடு இல்லாமல் வெட்டப்பட்டும், கால்நடைகளால் மேய்க்கப்பட்டும் கவனிக்கப்படாமலும், இவைகளில் அநேகம் தரைகாடுகளாகி, அங்கங்கே சில புதர்களும் புதர்களின் கீழ் சொற்ப புல்முளைத்தும் மற்ற இடங்கள் மழை ஜலத்தால் அரிக்கப்பட்டும் இளப்பமான ஸ்திதியில் இருக்கின்றன. இந்தக்காடுகளில் பஞ்சாயத்தார்கள் என்ன செய்யவேண்டுமென்றால் ஒழுங்காக ஒரு வருஷத்துக்கு இவ்வளவு என்று மரங்களை நடவேண்டும். தகுதியான புல் வளர்க்கவேண்டும், மரங்களை கண்டபடி வெட்டாமலும், கால்நடைகள் கண்டபடி மேயாமலும் கட்டுப்பாடு செய்யவேண்டும். இப்படிச் செய்தால் மேய்க்காலும் விருத்தியாகும் காட்டிலிருந்து வருமானமும் அதிகமாகும். விசேஷமாக விறகும் கிடைக்கும் செழுமையான காலங்களில் புல்லை அறுத்து உணர்த்தி சேமித்துவைத்து மாடுகளுக்கு தீனிப்பஞ்சம் வராமலிருக்க சேகரித்து வைக்கலாம்.

காட்டு இலாகா உத்தியோகஸ்தர்களும் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களும் குடித்தனக்காரர்களுக்கு ஆலோசனை சொல்லவும், விதை கன்றுகள் கொடுத்து உதவவும் மிகவும் ஊக்கமாக இருக்கிறார்கள். காடுகள் அபிவிருத்தியாகவும், குடியானவர்களும் பிரயோசனம் அடையும்படி "குமரி" என்று சொல்லப்படும் ஒருவிதமான ஏற்பாட்டில் காட்டில் பயிரிடுவதற்கு காட்டு இலாகா அனுமதிக்கிறார்கள். இது என்னவென்றால் காடுகளில் சில இடங்களில் இதற்கென்று ஒதுக்கிவைத்து உபயோகப்படும் மரம் செடி வகையறாக்களை வெட்டி எடுத்த பிறகு மிகுதியை எரித்து அந்த சாம்பலை அந்த இடத்திலேயே உரமாக உழுதுவிடுகிறது. பிறகு அங்கே வரிசை வரிசையாக மரங்களை நட்டு, வரிசைகளின் மத்தியில் ஒன்று அல்லது

உங்களுக்குத் தெரியுமா?

பப்பாளிப்பழத்தின் சத்துணவுகள்

பப்பாளிப்பழத்தில் A B C D வைடமின்கள் உள்ளன இலைகள் இருதய வியாதிக்கு மருந்தாகிறது. பழங்கள் தேகத்திற்கு புஷ்டியளிக்கும் டானிக் செய்ய பிரயோசனப் படுகிறதாம். காயின்பாலில் மிகுதியான மருந்து பாபெயின் இருக்கிறது. அஜீரண வியாதிகளை கண்டிக்கிறது. கட்டி பிளவை குடற்பூச்சிகள், எச்சிற்தழும்பு முதலியவைகளுக்கும் மருந்தாகிற தாம். துணிகளிலுள்ள கறைகளை எடுப்பதற்கு அதன் பச்சிலைகள் உபயோ கமாகிறது. (ஹிந்து 1942)

நெல்லிக்காயும் ஆரஞ்சுப்பழமும்

ஒரு நெல்லிக்காய் இரண்டு ஆரஞ்சுபழத்திலுள்ள C வைடமின் சத்தை அளிக்கிறதாம். தக்காளி, எலுமிச்சை, ஆரஞ்சுப்பழ ரசத்திலுள்ள C வைட மின் சத்தைவிட 10 மடங்கு அதிக சத்து நெல்லி ரசத்திலிருக்கிறது. நெல்லிக்காய் ஊருகாய், வத்தல், தூள் இவைகளிலுள்ள வைடமின் சத்துக் கள் நீண்டகாலம் வைத்திருந்தாலும் கெடுவதில்லை. குறைவதுமில்லை தினசரி ஒரு கிராம் அளவுள்ளதூள் ஒருமனிதனுக்கு தேவையான வைட மின் சத்தை கொடுக்கக்கூடியது. (இந்திய விவசாயம் 194!)

சூளைபோடாத செங்கல்

பிடுமின் என்ற (சார்போன்ற பொருளை மண்ணோடு கலந்து சூளை போடாமலேயே செங்கல் தயாரிக்க முடியுமென தப்தி மண்வள ஆராய்ச்சி நிலயத்தில் கண்டுபிடித்துள்ளார்களாம். இவ்விதம் தயாரிக்கப்பட்ட செங் கல் தண்ணீரில் கரைவதில்லை பரீக்ஷார்த்த முறையில் கட்டிடங்களும் கட்டப்பட்டு வருகிறதாம் இம்முறை பயனளித்தால் ஓரளவு மரங்களின் அழிவு குறையுமென்று கூறப்படுகிறது.

இரண்டு வருஷங்களுக்கு பயிரிட்டுக்கொள்ளுகிறது. இதன் பிறகு புதிதாக பயிரிடப்பட்ட மரங்களுடன் காட்டு இலாகாவுக்கு ஒப்படைத்துவிடுகிறது பழையபடி இதே மாதிரி பயிரிடுவதற்கு புதிய இடம் கொடுப்பார்கள்.

மரம் நட்டு பயிரிடவேண்டிய காலம் சமீபிக்கிறது. இதற்கு லாயக்கான அநேக ஆயிரம் செடிகளை பிரதி வருஷமும் குடித்தனக்காரர்களுக்கு இனு மாக கொடுக்கப்பட்டு வருகிறது இந்த இரண்டு இலாகாவினுலும் கொடுக் கப்படும் சௌகர்யங்களைத் தயவுசெய்து அடையுங்கள். மேலும் மேலும் மரங் கள் வைத்து பயிராக்கி உங்கள் கிராமத்திற்கு மரங்களினுல் உண்டாகும் செல்வத்தை அபிவிருத்தி செய்துகொள்ளுங்கள்.

(மேழிச்செல்வம் மலர் 1 இதழ் 1 ல் இருந்து (1944 ஜுலை) எடுக்கப்பட்டது.)

மரங்களின் உபயோகம்?

(நபர் ஒன்றுக்கு சராசரி கன அடி)

தேசம்	மரம்	விறகு	மொத்தம்
வட அமெரிக்காவில்	57·56	13·77	71·88
ஓஷியானாவில்	32·84	3 ·78	64·62
தென் அமெரிக்காவில்	5·50	42·37	47·67
ஐரோப்பாவில்	13·77	14·83	28·60
மற்ற தேசங்களில்	12·36	9·18	21·54
ஆப்பிரிக்காவில்	1·47	7·77	9·18
ஆசியாவில்	1·77	2·12	3·89
இந்தியாவில்	0·35	0·71	1·6

(F. A. O. வன பொருள்கள் புள்ளி விபரத்திலிருந்து எடுத்தது)

வெள்ளையர் நாளிலும் வனமகோத்சவம்!

1944-ம் வருடம் மே மீ 15 உ நாற்றுவிட்டு செப்டம்பர் மீ 15 உ மரம்நடுவாரமாக கொண்டாடப்பட்டபோது சேலம் ஜில்லாவில்மட்டும் நட்ட மரங்களின் எண்ணிக்கை 107928, விதைகளாக நட்டது 660432, அதற்கு முந்தின ஆண்டில் நடப்பட்டவைகளில் பிழைத்த மரங்களின் எண்ணிக்கை 95241 ஆகும். (மேழிச்செல்வம் 1944)

பூவரசமரத்தின் கிளைகளை வெட்டி நேர் செங்குத்தாக நடுவது வழக்கம். ஆனால் பாலூர் பண்ணையில் டை கிளைகளை சிறு துண்டுகளாக (2’ – 2½’) வெட்டி கரும்பு நடுவதுபோல் பூமியில் பதியவைத்து நட்டதில் 100—100 துளிர்த்து நேரான கிளைகள் வளர்ந்துள்ளதாம். இம்முறையினால் சிறிய துண்டுகளைக்கொண்டு அதிக மரம் உற்பத்தி செய்யமுடியும்.

சீழ்பிடித்தலை தடுப்பது?

தீப்புண், கொதிநீர் ரணங்களில் சீழ்பிடிக்காமல் இருக்க புண்களை சுத்தமாக கழுவி பெனிசிலின் க்ரீம் பூசி நல்ல சன்னமான காரத்துணி பஞ்சு களால் மூடி பாண்டேஜ் துணியால் கட்டுபோடவேண்டும். வாரம் ஒரு முறை கட்டினால் போதுமானது. இப்படி கட்டுபோடுவதினால் விஷக்கிருமி கள் புண்களை அண்டுவது துர்லபமாகிறதுடன் சீழ்பிடிக்காமல் ஆறுவதற்கு உதவிசெய்கிறது.

ஆணா? பெண்ணா?

கர்ப்பத்திலுள்ள குழந்தை ஆணா பெண்ணா என்பதை அறிய ஜெர்மன் டாக்டர் புதுவழி கண்டுபிடித்துள்ளார். கர்ப்பிணியின் வலது கண் இடது கண்ணைவிட அதிக ரத்தத்துடன் இருந்தால் பிள்ளை பிறக்குமாம். இடது கண் அதிக ரத்தத்துடன் இருந்தால் பெண் பிறக்குமாம்.

அங்கும்! **இங்கும்!!** **எங்கும்!!!**

பாரதநாட்டின் பயிர்த்தொழில் செய்திகள்

சென்னை ராஜ்யம்

ராஜ்யத்தின் விறகுத் தேவையை சரிக்கட்ட வீடு, வயல்களில் விறகுக்காகவோ, உயிர் வேலியாகவோ நட்டு விர்த்திசெய்ய சீமை வேலன் விதையை (புரோசாபிஸ் ஜூலிப்ளோரா) வினியோகிக்க சர்க்கார் விவசாய இலாகா தீர்மானித்துள்ளது. இம்மரம் துரிதமாக வளருகிறதாம். ஆடுமாடுகள் மேய்வதில்லையாம், வரட்சியை தாங்குகிறதாம், காய்கள் கால்நடைகளுக்குத் தீவனமாவதுடன் பூக்களிலிருந்து நிறைய தேனும் கிடைக்கிறதாம். ஆரம்பத்தில் புறம்போக்குகள், கரைகள், ரயில் ரோட்டுகள் முதலிய இடங்களில் நடப்படுமாம்.

தழை உரம் பெருக 1953-ம் வருடம் அக்டோபர்மீ 20உ முதல் 27உ வரை கிளீரிசிடியா (எருத்தழை) உற்பத்தி வாரம் கொண்டாட சென்னை

இயற்கையின் அதிசயம் ?

ரத்னகிரியில் ஒருவருடைய தோட்டத்திலிருக்கும் **பர்ணபுஷ்பி** என்ற புஷ்பச்செடியின் இலையில் தினமும் மாலை வேளைகளில் பூக்கள் பூக்கின்றனவாம். பூக்கள் பெரியதாத இருக்கிறதுடன் நடு இரவில் வாடிப்போகின்றனவாம்.

பாரதநாட்டின் பரப்பளவு ?

		பாரத நாட்டின்		சென்னை* ராஜ்யத்தின்	
(1)	மொத்த நிலப்பரப்பு	12,66,842	ச. மைல்	1,27,790	ச மைல்
(2)	காடுகளின் விஸ்தீரணம் :				
	(a) சர்க்காருடையது	1,82,539	,,	18,825	,,
	(b) தனி நபருடையது	58,196	,,	14,871	,,
	மொத்தம்	2,42,104	,,	33,696	,,
(3)	மொத்த விஸ்த்தீரணத்தில் காடுகளின் சதவீதம்	19·1%		26·4%	
(4)	மொத்த ஜனத்தொகை (1951 ஜன சங்கியைப்படி)	361688	(ஆயிரம்)	56952	(ஆயிரம்)
(5)	கிடைக்கும் மரங்கள் (உபயோகப்படுத்தியது)	3,56,013	(1000 கன அடிகள்)	56,952	(1000 கன அடிகள்)
(6)	நபர் ஒன்றுக்கு சராசரி வீதம்	1·1	கன அடி	0·4	கன அடி

* ஆந்திரா உள்பட சென்னை ராஜ்யம்.

விவசாய இலாகா முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்படி முதல் ஆண்டில் ஜில்லாவுக்கு ஒரு கிராமமும் இரண்டாவது ஆண்டில் 10 கிராமங்களும் 3-வது ஆண்டில் ஜில்லா பூராவுக்கும் இச்செடிகள் நடப்படவேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி 3 ஆண்டுகளுக்குள் தழை உரத்தின் சுய நிறைவு எல்லையை அடையக்கூடுமென எதிர்பார்க்கிறார்கள்.

கால்நடைகளை கண்டபடி மேயவிடுவதைத் தடுக்க சர்க்கார் கடும் நடவடிக்கை எடுக்க 1871-ம் வருடத்திய சட்டத்தைத் திருத்தியுள்ளார்கள். அதன்படி பவுண்டில் அடைக்கப்படும் கால்நடைகளை திரும்பி மீட்டுக்கொள்ளும்போது அதன் சொந்தக்காரர் ஒரு ஜாமீன் பத்திரம் எழுதிக்கொடுத்து ஒரு குறிப்பிட்ட தொகையையும் ஜாமீன் கொடுக்கவேண்டும். 6 மாத காலத்திற்குள் பணம் கட்டியவரின் கால்நடை பவுண்டிற்கு வராமலிருந்தால் தொகையை வாபீஸ் வாங்கிக்கொள்ளலாம். மீண்டும் பவுண்டிற்குள் வருமாயின் ஷை தொகை பறிமுதல் செய்யப்பட்டு மீண்டும் ஜாமீன் வாங்கப்படும்.

இவ்வருஷ வனமகோற்சவத்தின்போது உயர்ந்தபக்ஷம் 60 லக்ஷம் மரங்கள் நட இந்த ராஜ்ஜியத்தில் ஏற்பாடு செய்திருக்கிறது. விதைகள் செடிகள் விவசாய, வன இலாகாக்களில் குறைந்த விலைக்கு கிடைக்குமாம்.

சாலை மரங்களின் பாதுகாப்புக்காக ஒரு சட்டம் இயற்ற உத்தேசித்துள்ளது சென்னை ராஜ்யம். இதைப்பற்றி சட்டம் செய்யுமுன் பொதுமக்களின் கருத்தை அறிய ஒரு கேள்வித்தாள் தயாரித்து அக்கரையுள்ளவர்களுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளனர்.

டில்லி ராஜ்யத்தில் :

வனமீட்சி திட்டத்தின்கீழ் 3000 எக்கர் நிலத்தை சர்வேசெய்து 50 எக்கர் நிலத்தில் வனங்களை விருத்தி செய்யப்பட்டு வருகிறது. வனமகோத்சவத்தின்போது ஒரு வாரத்தில்மட்டும் நட்டது 1500 செடிகளாகும்.

ராஜஸ்தானில் தங்கார்பூர் அபிவிருத்தி வட்டத்தில் 50 ஆயிரம் செடிகள் நடப்பட்டிருக்கிறது. மாதம்கந்தி என்ற கிராமத்தில் மட்டும் நடப்பட்ட செடிகளின் எண்ணிக்கை 16 ஆயிரம். இவ்வட்டத்தில் இவ்வாண்டு நட உத்தேசிக்கப்பட்டுள்ள செடிகள் 2 லக்ஷம்.

வனமகோத்சவ வாரத்தில் 100 மைல் நீளத்திற்கு சாலையின் இருபக்கங்களிலும் கருவேல் மரங்கள் நடப்பட்டது. 1500 பைகா (750 ஏகர்) நிலத்தில் தோப்பாக விதைக்கப்பட்டது. பல கிராமங்களிலும் கிராமம் ஒன்றுக்கு 12 ஏகர் வீதம் தோப்புகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 1௳ முதல் செப்டம்பர் 30௳ முடிய 9 மாத காலத்தில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட அன்னியநாட்டு உணவுப்பொருள்கள் 17,81,200 டன் இதன் மதிப்பு ஏறக்குறைய 85 கோடி ரூபாயாகும்.

கோதுமை	...	15,09,800	டன்
,, மாவு	...	65,950	,,
அரிசி	...	1,89,750	,,
இதர தானியம்	...	15,700	,,
மொத்தம்	...	17,81,200	,,

உணவும் விஞ்ஞானமும்

உணவுப்பொருள் தட்டுப்பாடாக உள்ள இக்காலத்திலும் ஊட்டசத்துள்ள உணவுப்பண்டங்கள் ஏராளமாக வீணாகிக்கொண்டுதானிருக்கின்றன. இவ்விதம் பலவழிகளிலும் வீணாகாமல் தடுத்து, நமக்கு உபயோகப்படும் வகையில் முயற்சி செய்வதே மைசூரிலுள்ள மத்திய உணவு ஆராய்ச்சி கழகத்தின்* வேலையாகும்.

நம் நாட்டில் ஏராளமாக வீணாகிவரும் ஊட்டசத்துள்ள உணவுப் பொருள்களில் முதன்மையானது பழவர்க்கங்களாகும். இப்பழ வர்க்கங்களில் அதிக விஸ்தீரணத்தில் சாகுபடியாவதும் பலவிதமான பிரயோஜனமுள்ளதும் மாங்காய், பழம் இவைகளாகும். இக்காய், பழம் ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் கிடைக்குமாதலாலும், அக்காலத்தில் இவை ஏராளமாகவும் மலிவாகவும் கிடைக்குமாதலால், இவைகளை கெடாமல் பதப்படுத்தி வைத்துக் கொள்வதின்மூலம் இதன் உயர்ந்த சத்துக்களை எக்காலத்திலும் அடையச் செய்வதற்காகவே இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது. இதுபோல் பல கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுவரும். (ப—ர்)

(1) எண்ணெ மாங்காய்.

இதற்கு நன்றாக பருத்துள்ளதும், சதைப்பற்றுள்ளதும் பழுக்காததுமான காயாக எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு தொட்டியில் நிறைய ஜலத்தைக்கொட்டி, அதில் இக்காய்களை போட்டு, இரண்டு கையினாலும் தேய்த்து சுத்தமாக கழுவி எடுத்துக்கொள்ளவேண்டும் பிறகு காய்களை நீண்ட அளவில் 4 பாகங்களாக துருப்பிடிக்காத (Stainless Steel) கத்தியினால் துண்டுசெய்து, அத்துண்டுகள் கருப்படையாதிருக்க (Brine solution) தண்ணீரில் சிறிதுநேரம் ஊரப்போட்டு வைத்திருக்கவேண்டும்.

பிறகு உப்பு மிளகாய் பொடியை கொட்டி நன்றாக கலக்கும்படி கிளறி அல்லது குலுக்கவேண்டும். பிறகு ஒருஜாடி அல்லது கண்ணாடி சீசாவில்போட்டு 4—5 தினங்கள் சூரிய உஷ்ணத்தில் வைத்திருக்கவேண்டும். பிறகு இதர சாமான்களின் தூளையும் கொட்டி, அது பூரவும் முழுகும்படி நல்லெண்ணெயை ஊற்றி கிளறி விடவேண்டும். பிறகு அதை காற்றுபுகாத ஜாடிகளில் மூடிவைத்துக் கொள்ளவேண்டும். அடிக்கடி அதை பரிசோதித்து பார்த்தும் தண்ணீர் சம்பந்தமில்லாத எண்ணெ தேவையானால் சிறிதுபோட்டு வைத்துக்கொள்ளவேண்டும்.

தேவையான பொருள்களின் விபரம்.

மாங்காய் துண்டுகள் (விதை நீங்கியது)	2	ருத்தல்
உப்பு	8	அவுன்ஸ்
வெந்தியத்தூள்	4	அவுன்ஸ்
மஞ்சள் தூள்	1	அவுன்ஸ்

---

* மைசூரிலுள்ள இம்மத்திய உணவு ஆராய்ச்சி கழகத்தைப்பற்றிய விரிவான கட்டுரை கிருஷிகன் ஏப்ரல் இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மிளகாய்தூள்	1	அவுன்ஸ்
மிளகுத்தூள்	1	அவுன்ஸ்

நல்லெண்ணெய் (ஈரமில்லாதது) தேவையான அளவு.

சிறிதளவு காயம் தேவையானல் சேர்த்து அடுப்பில் சுடவைத்துக் கொண்டால் எண்ணெயில் ஈரமிருக்காது.

குறிப்பு:—ம. உ. ஆ. கழக துண்டு பிரசுரம் நெ. 25ன் மொழிபெயர்ப்பு.

2. மாங்காய் சட்னி (தித்திப்பு)

தேவையான பொருள்கள்.

1.	மாங்காய் துண்டுகள் (அ) துருவல்	1 பவுண்டு
2.	சக்கரை	1 பவுண்டு
3.	உப்பு	¾ அவுன்ஸ்
4.	ஏலம் வகையரா	½ அவுன்ஸ்
5.	மிளகாய்தூள்	¼ அவுன்ஸ்
6.	இஞ்சி	¼ அவுன்ஸ்
7.	வெங்காயம்	1 அவுன்ஸ்
8.	வெள்ளைப்பூண்டு	¼ அவுன்ஸ்
9.	காடி	3 அவுன்ஸ்

நன்கு முற்றியதும் சதை மஞ்சளாகவுள்ளதுமான மாங்காய்களை எடுத்து, முன்கூறியதுபோல் சுத்தமாக கழுவி எடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு மேல் தோல்களை நீக்கி சதையை மெல்லிய துண்டுகளாக்கிக்கொள்ளவேண்டும். பிறகு சக்கரையையும் உப்பையும் இத்துடன் சேர்த்து குலுக்கி, நன்கு கலந்துகொள்ளும்படி வைத்திருக்கவேண்டும். உப்பும் சக்கரையும் மாங்காய் துண்டுகளுடன் கலந்துகொண்ட பிறகு, அதை நெருப்பிலேற்றி கெட்டியாகும்வரை கிளறிவிடவேண்டும். 4—8 வரை உள்ள சாமான்களை ஒரு மஸ்லீன் துணியில் கட்டி (மாங்காயுடன்) அதற்குள் வைத்திருக்கவேண்டும். பிறகு அதை எடுத்து அதன் ரசத்தை ஷை மாங்காயில் பிழிந்துகொள்ளவேண்டும். போதிய அளவு கெட்டியானதும் காடியை சேர்க்கவேண்டும், அடுப்பிலிருந்து இறக்கிவைத்து ஆறிய பிறகு வாயகன்ற ஜாடியில் போட்டு வைத்துக்கொள்ளவேண்டும்.

இது ம. உ. ஆ. கழக துண்டு பிரசுரம் நெ. 20ன் மொழிபெயர்ப்பு

[89-ம் பக்கம் பார்க்க]

கண்காக்ஷியிலே மாங்காய்.

டில்லியிலுள்ள பூசா விவசாயக் கலாசாலையில் மாங்காயும் மாங்காயிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காக்ஷியும், இந்தியாவிலேயே முதல்தடவையாக நடத்தப்பட்டது. அப்போது ஸ்ரீகள் கழகத்தால் மாங்காயிலிருந்தே தயாரிககப்பட்ட 100 வித உணவுப்பணடங்கள் கண்காக்ஷியிலே வைக்கப்பட்டிருந்ததாம். மத்திய மந்திரி ஸ்ரீதேஷ்முக் உள்பட பலர்விஜயம் செய்து ஷை உணவுப்பண்டங்களை நன்கு பாராட்டியதாகவும் தெரிகிறது.

[நாட்டில் மரங்களழிந்ததால் மழை பெய்வது நிச்சயமற்றதாகிவிட்டது. அதனல் நீர்பாசன வசதி சீரழிந்து உற்பத்தி குறைந்து பஞ்சமும் மிகுந்துள்ளது. அதிக மழை பெய்து நீர்ப்பாசன வசதிகள் விருத்தியடைந்து உற்பத்தி பெருகி உணவுப்பஞ்சம் ஒழிய அதிக மரங்கள் நட்டு **பாலை வனங்களை சோலைவனங்களாகச் செய்வது சாத்தியமா?** என்பதே நமது பிரச்னை. அது சாத்தியமே என்கிருர்கள் நமது ஆராய்ச்சியாளர்கள்.]

சாத்தியமா?

ராஜஸ்தானத்தின் பாலைவனத்தை சோலைவனமாக்கும் 6 அம்ச திட்டத்தைப்பற்றி உணவு மந்திரி ஸ்ரீ கித்வாய் பார்லிமெண்டில் வளக்கி கூறியதாவது :—

1. 5 மைல் அகலத்திற்கு 400 மைல் நீளத்திற்கு மேற்கு கரையின் ஓரமாக 10 ஆண்டுகளில் மரம்நட்டு வனப்பிரதேச மாக்குதல்; இதற்கு எதிரிகளாகஉள்ள கால்நடைகளை, (செம்மறியாடு வெள்ளாடு ஒட்டகம் ஆகியவைகளை) கட்டாயமாக அப்பிரதேசத்திலிருந்து வெளியேற்றுதல்.

2. மரம், செடி, கொடி, புல் ஆகிய தாவரவர்க்கங்களை விருத்திசெய்வதின்மூலம் மணல் பிரதேசங்களை மாற்றுதல்.

3. பள்ளிக்கூடங்கள், தபாலாபீஸ்கள், ரயில்வே ஸ்டேஷன்கள், தாலூகாபீஸ் முதலியவைகளை அங்கங்கே ஏற்படுத்தி அதைச்சுற்றி வனச்சோலைகளை (ஓயசீஸ்) ஏற்படுத்துதல்.

4. ரோடுகள் ஏற்படுத்தல்; இரு பக்கங்களிலும் நிழலுக்கும், காற்றைத் தடுக்கவும் மரங்கள் நட்டு விர்த்தியாக்குதல்.

5. அங்கங்கே மேய்ச்சல் புல் தரைகளும், தோப்புகளும் ஏற்படுத்தி விருத்திசெய்தல்.

6. அபிவிருத்திக்குத் தேவையான விதைகள், நாற்றுகள் எல்லாபொது மக்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் வினியோகம் செய்தல்.

மேல்கூறிய 6-அம்சங்களையும் செய்வதின் மூலம் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் ஷை ராஜஸ்தான் பாலைவனத்தின் பெரும்பகுதியை வளமுள்ள நிலமாக மாற்றிவிடுவது சாத்தியமென்று இறுதியில் கூறினர்.

ஏன்? நீங்களும் செய்து பாருங்கள்

நமக்கும் நல்லது — நாட்டுக்கும் நல்லது

உழவினைச் செய்திடுவோம்

(வித்துவான், நி. மு. சங்கரலிங்கம், தமிழாசிரியர்)
கௌமார மடாலயம், திருவாமாத்தூர், விழுப்புரம் P. O.

பல்லவி

உழவினைச் செய்திடுவோம்!—நாமும் நன்கு
உவப்புடன் வாழ்ந்திடுவோம் (உழவினை)

அநுபல்லவி

தழைமுத லாம்உரங்கள் தனைநிலத் தினிலிட்டு
விழைபொருள் பலபெற்றிம் மேதினியில் வாழ (உழ)

சரணம்

பசியென்னும் பிணிபற்றிப் பாழாகிப் போகாமல்
பண்புறும் விவசாயப் பண்ணையார் சொற்கேட்டு
புசிக்கும் உணவுப்பொருள் பொலிவுறப் பயிர்செய்து
பூவுல கினில்யாரும் பூரிப்புடன் வாழ (உழ)

வறுமைப் பிணியொழிய வஞ்சகர் தாம்அழிய
வாழ்வினில் மனமுவந்து வளர்அறம் பலசெய்யச்
சிறுமைகள் ஒழிந்தோட செம்மையுற் றேவாழ
தேக வலிமையுறத் தினமும்சோம் புதலின்றி (உழ)

மழைமுத லாம்வளங்கள் மாநிலத்திற் பெருக
மக்களெலாம் நாளும் மகிழ்வுடன் வாழ்ந்திடக்
கழைமுத லாம்பொருள்கள் காசினியிற் பெருக்கிக்
கடவுளின் இணையடி கனிவுடன் தொழுதேத்தி. (உழ)

இயற்கையின் செல்வம்

"காடுகளில் இயற்கைச் செல்வம் நிறைந்து கிடக்கிறதென்பதை யாரும் மறக்க முடியாது. இவற்றை நாம் நன்கு பயன்படுத்துவோமாஞல் தேசத்தின் செல்வம் சீரோங்கி வளருமென்பதில் ஐயமில்லை. காடுகள்தான் நாட்டின் செல்வ வளர்ச்சிக்கான ஊற்றுகள் நல்ல மழை பெய்வதற்கு காடுகள் அவசியம். நமது நதிகளுக்கு ஜீவாதாரங்களாக தொடர்ந்து தவருது தண்ணீர் கொடுக்கும் ஊற்றுகளும் காடுகளையே நம்பி இருக்கின்றன. இயற்கை செல்வங்கள் போற்றி ஈனும் ஆதாரமும் காடுகளே".

—ஸ்ரீ குமாரசாமி ராஜா.

விருக்ஷங்களும் சோதிட சாஸ்திரமும்

(1) 27 நக்ஷத்திரத்துக்குறிய மரங்கள்

அசுவனி—எட்டி	மகம்—ஆல்*	மூலம்—மரா *
பரணி—நெல்லி	பூரம்—முருக்கம்*	பூராடம்—வஞ்சி
கார்த்திகை—அத்தி*	உத்திரம்—இலந்தை*	உத்திராடம்—பலா*
ரோகணி—நாவல்*	அஸ்தம்—ஆத்தி*	திருவோணம்—பூவரச்
முருகசீரிடம்—கருங்காலி	சித்திரை—வில்வம்	அவிட்டம்—வன்னி
திருவாதிரை—வேப்பமரம்	சுவாதி—மருது	சதயம்—கடம்பு
புனர்பூசம்—மூங்கில்	விசாகம்—விளா	பூரட்டாதி—மாங்காய
பூசம்—அரசு	அனுஷம்—மகிழம்	உத்திரட்டாதி—சந்தன வேம்பு
ஆயில்யம்—புன்னை	கேட்டை—பாக்கு	ரேவதி—இலுப்பை*

* பாலுள்ள மரங்கள்

ஷை நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் அந்தந்த நக்ஷத்திரத்திற்குறிய மரங்களை வெட்டுதல் கூடாது. அம்மரத்தை நட்டு பக்தி சிரத்தையுடன் வளர்த்துவந்தால் ஆயுள் விருத்தியடைந்து சத்துரு ஜெயமேற்படும்.

(2) நலந்தரும் நல்லமரங்கள்

வேம்பு, அசோகு, புன்னை, வாகை இவைகளை வீட்டின் கொல்லை ஓரங்களில் விதைப்போட்டு பயிர் செய்தால் கிரகத்திற்கு சுபத்தைகொடுக்கும்.

(3) வீட்டில் இருக்கத்தகாத விருக்ஷங்கள்

பருத்தி, அகத்தி, பனை, நாவல், நெல்லி, எருக்கு, குமிழி இவைகளை வீடுகளில் வளர்த்துவந்தால் இன்னல்கள் பல சம்பவிக்கும் ஆதலால் இவைகளை தோப்புகளிலும் வயல்களிலும் தவிர வீடுகளில் வைத்தலும் வளர்த்தலும் கூடாது

(தன்வந்திரி)

காதலியின் துணைவன்

"தோழி! என்காதலன் என் அருகில் இல்லாதபோது இந்த புஷ்பச் செடிகள் பழமரங்கள் இவைகள் தான் என்பக்கத் துணையாக இருக்கின்றன. ஆதலால் தண்ணீர் ஊற்றி ஜாக்கிறதையாக காப்பாற்றிவா"

—சகுந்தலை.

மரம் செடி செழிக்கச் செய்யும் மந்திரப் பிரார்த்தனை

செடிகள், மரங்கள் நடுவதற்கு முன் பூதேவியைப் பார்த்து பின்வருமாறு பிரார்த்தனை செய்யவேண்டும்.

"தாயே, பூதேவி, தவநிதியையும் தாங்கி விளங்கும் வசுதேவி குளிர்ந்த மேனி வாய்ந்த அன்னாய், புண்ணியத்தை அளிக்கும் திருமேனியே தாராதேவியே நல்லபாக்கிய முடையவளே, பூதேவித்தாயே உனதருளால் இந்த மரம், செடி, கொடி நன்றாக செழித்து வளர்வதாக"

"ஓம் வசுதேதிச, சீதேதி, புண்யதேதி, தரேதிச! நமஸ்தே சுபகே தேவி, திருமோசயம், வர்த்ததாம்" இவ்விதம் நடும் செடிக்கு வேரில் நெய் தடவினால் சீக்கிரம் வளரும்; ஒரு இடமிருந்து மற்றோரிடம் பெயர்த்து வந்த செடியானால் அது முன்னர் எந்த திசைமுகமாக வளர்ந்ததோ அந்த திசை முகமாகவே இங்கும் நடவேண்டும். சிதைந்த கிளைகளிலும் வேர்களிலும் சாணமும் நெய்யும் கலந்து பூசவேண்டும். இது காயம்பட்ட மனிதர்களுக்கு மருந்து பூசுவதுபோல் என்கிறார் பிருகத்சம்ஹிதை ஆசிரியர்.

(இது மாத சோதிடத்திலிருந்து எடுக்கப்பட்டது)

விருக்ஷங்கள் நட நல்ல நக்ஷத்திரங்கள்

அசுவினி, மகம்	— பாக்கு, தென்னை	உத்திரம்	— மாமரம்,
மிருகசீரிஷம்	— பல மரங்கள்	உத்திராடம்	— சோலை
புனர்பூசம்	— தென்னை,	திருவோணம்	—மழமரங்கள்

எது குற்றம் ?

மரம் நடும் வாரம் (வனமகோத்சவம்) ஜூலை மீ 1உ ஆரம்பமாகி அக்டோபர் மீ முடிவடைகிறது; மரங்கள் நடுவதால் பூமி உறுதியடைகிறது. கால்நடைகளுக்கு தீவனம், எரு, எரிபொருள், நிழல், பழம் முதலியவைகள் கிடைக்கிறது. வனமகோத்சவத்தின்போது நடப்படும் மரங்கள் பிற்பாடு கவனிக்கப்படுவதில்லை யென கூறப்படுகிறது. மரம்நட்டு அதைகவனியாமல் விடுவது குற்றம்தான். ஆனால் மரமே நடாமல் இருப்பது அதைவிட குற்றமே. மரம் நடுவதற்குமுன் பராமரிப்புக்கான ஏற்பாடுகள் செய்து கொள்ளவேண்டும். நட்டபின் கண் இமைபோல் பாதுகாக்க வேண்டும்.

—ஸ்ரீ நாகண்ண கௌட்

மரங்கள் சாலைகள் தோப்புகள் வைப்பதற்கான சில குறிப்புகள்

(1) இரும்பு முள் கம்பிவேலி போட:—

ஒரு சதுர	எக்கரின்	சுற்றளவு	835 அடி
ஒரு சதுர	எக்கர்	1 வரிசைபோட	50·7 ரூத்தல்
ஒரு சதுர	எக்கர்	1 பக்கம் போட	208·7 அடிநீளம்
ஒரு சதுர	அரை எக்கர்	போட	36 ரூத்தல்
ஒரு சதுர	அரை எக்கர்	சுற்றளவு	590 அடி
ஒரு சதுர	அரை எக்கர்	1 பக்கம்	147·5 அடி
ஒரு சதுர	கால் எக்கர்	போட	26 ரூத்தல்
ஒரு சதுர	கால் எக்கர்	சுற்றளவு	419 அடி
ஒரு சதுர	கால் எக்கர்	1 பக்கம்	104·75
1 சதுர	எக்கர்	சுற்றளவு	835 அடி
2 ,,	,,	,,	1180 ,,
3 ,,	,,	,,	1446 ,,
4 ,,	,,	,,	1670 ,,
5 ,,	,,	,,	1866 ,,
6 ,,	,,	,,	2045 ,,

(2) பரப்பளவுகளின் விபரம் :—

12" அங்குலம்	— 1 அடி	2 முழம்	— 1 கஜம்
9" அங்குலம்	— 1 ஜாண்	3 அடி	— 1 கஜம்
21" அங்குலம்	— 1 முழம்	226 கஜம்	— 1 பர்லாங்
2 ஜாண்	— 1 முழம்	8 பர்லாங்	— 1 மைல்
144 சதுர அங்	— 1 சதுர அடி	24 மனை	— ஒருகாணி
9 ,, அடி	— 1 ,, கஜம்	2400 ச. அடி	— 1 மனை
4840 ,, கஜம்	— 1 எகர்	22 க 66 அடி	— 100 லிங்க்ஸ்

1 எக்கர்—43560 ச. அடி, 4840 ச. கஜம்—100 செண்ட் 1,00,000 சதுர லிங்க்ஸ்

144 சதுர அடி	— 1 குழி	8 சேர் படி	— 1 மரக்கல்
100 குழி	— 1 எக்கர்		சுமார் 8 செண்டு
4 மா	— 1 காணி	3 படி	— 1 மரக்கால்
	1·32 செண்டு	30 மரக்கல்	— 1 கோட்டை
20 மா	— 1 வேலி	12 மரக்கால்	— 1 எக்கர்
	6·74 எக்கர்	24 அடி	— 1 கோல்
	121	576 ச. அடி	— 1 சதுரகோல்
3 மா	— 1 எக்கர்	100 குழி	— 1 காணி 1·32 செண்டு

சென்னை மாகாணத்தில்	1 ஏக்கர்	— 100 செண்டு
சிந்து, ஹைதராபாத், பம்பாய்	,,	— 40 குந்தா—1 பைகா
உத்தரபிரதேசம்	,,	— 5½ கச்சா பைகா
வங்காளம் மத்யபிரதேசம்	,,	— 3 பைகா
பாஞ்சாலம்	,,	— 2 பைகா
தஞ்சாவூர் ஜில்லா	,,	— 3 மா
திருநெல்வேலி	,,	— 12 மரக்கா

3. ஒரு ஏக்கர் நடுவதற்கு தேவையான மரம், செடிகளின் எண்ணிக்கை:—

ஒரு செடிக்கும் மற்றொரு செடிக்கு முள்ள தூரம்		தேவையான செடிகளின் எண்ணிக்கை சமசதுர அளவு	சமகோண அளவு
3 X 2	அடிகள்	4840	...
5 X 5	,,	1742	...
6 X 6	,,	1240	...
10 X 10	,,	435	504
15 X 15	,,	193	224
18 X 18	,,	134	154
20 X 20	,,	108	122
25 B 25	,,	70	82
30 X 30	,,	48	54
35 X 35	,,	35	40
40 X 40	,,	27	31

4. மரத்தின் உயரத்தை அளத்தல்:—

நமது உயரத்துக்கு மேல்பட்டு மிக உயரமான மரங்களை பார்க்கிறோம். அவைகளை அளக்க விரும்புகிறோம். ஆனால் அதற்கு சுலபமான வழி வேண்டுமல்லவா? அதற்கு ஒரு 6 அடி நீளமுள்ள கம்பு ஒன்றை எடுத்துக்கொள்ள வேண்டும். அதை சமமான தரையில் நேராக நிறுத்திவைத்து அதன் நிழலை முதலில் அளந்துகொள்ளவேண்டும். பிறகு ஷை மரத்தின்நிழலை ஷை கோலால் அளந்து கொள்ளவேண்டும். பிறகு மரத்தினுடைய நிழலை கோலினுடைய நீளத்தால் பெருக்கி கோலினுடைய நிழலால் வகுத்தால் வரும் ஈவுதான் ஷை மரத்தின் உயரமாகும்.

(உ-ம்) 6 அடி உயரமுள்ள கோவின் நிழல் 2½ அடியாக இருந்தபோது மரத்தின் நிழல் 45 அடியாக இருந்தால் மரத்தின் உயரம்—மநி x கோ. நீ— கோ. நி.—உயரம்—45 x 6 ÷ 2½ = $\frac{45 \times 6 \times 2}{5}$—$\frac{540}{5}$—108 அடி உயரம்.

5. மரம் செடிகள் நட்வேண்டிய அளவு

புளி, ஆல், அரசு ஒன்றுக்கொன்று இடையே தூரம்	50	அடிகள்
மாமரம், இலுப்பை,	30—40	,,
தென்னை	20—25	,,
ஆரஞ்சி, கொய்யா, பிலா, விளா	25—30	,,
எலுமிச்சை, பாதாம்	15—20	,,
பப்பாளி, மாதுளை, திராக்ஷை	5—10	,,
சவுக்கு	3—4	,,
இதர மரங்கள்	15—30	,,
வேலிக்காக நடும்போது	1—2	,,

6. செடியையோ, அல்லது மரத்தின் கிளையையோ ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்தில் நடும்போது அதன் வெரிலும், அல்லது வெட்டப்பட்ட பாகத்திலாவது பசும் சாணமும் நெய்யுது கலந்து தடவினுல் சீக்கிறம் வேர்விழும் (பிருத்த சம்ஹிதை)

7. வேண்டாத மரங்களை அழிப்பது எப்படி:—

சில சமயங்களில் அமிர்தமே நஞ்சாவதபோல் நமக்கு அத்யாவசியமாயுள்ள மரங்களே தெடுதலாகவும் இருக்கிறது. நமக்கு வேண்டாத மரங்களும்; வேண்டாத இடங்களில் முளைத்து விடுகிறது. உதார்ணமாக கட்டிடங்களில் பல மரங்கள் முளைத்து கட்டிடத்தை இடிக்கும்படி ஏற்படுகிறது. அவ்வித நிலமையில் மரத்தை சுற்றி 1' அகலத்திற்கு பட்டையை எடுத்து அதில் பூஞ்சாண மருந்தை (Agri Tree Killer) பூசி வைக்கவேண்டும் பெரிய மரமாக இருந்தால் 2—3 துவாரம்செய்து அதில் மருந்தைகொட்டி அடைத்து வைத்தாலும் பட்டுப்போகும்.

சபாஷ் சௌராஷ்டிரா

சௌராஷ்டிராவில் மரத்தை யாராவது வெட்டினுல் அது பெரிய குற்றமாகும். அதற்கென பொருப்புள்ள அதிகாரியின் அனுமதியின்றி இலைகளையும் கிளைகளையும்கூட வெட்டக்கூடாது. அத்துமீறி வெட்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் 1000 ரூபாய் வரை அபராதம் விதிக்கவும் கூடும். மரங்களை வெட்டுபவர்கள்பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு அபராதத்தொகையில் 4ல் ஒருபங்கு இனுமளிக்கப் படுகிறதாம்.

(தினமணி 24)

சாலை, விறகு, மரவேலை, வேலி
இவைகளுக்கேற்ற மரங்களின்
அட்டவணை.

1. அரசமரம் (Ficus religiosa) Peepul போதி விருக்ஷம், விஷ்ணுமரம் இது எல்லா இடங்களிலும் வளரக்கூடிய மிக உயர்ந்தமரம். மரங்களிலே உத்தமமான மரமென கூறப்பட்டுள்ளது. இதில் பகவான் இருப்பதாக நம்பிக்கையானதால் பல பாகங்களிலும் இதை தெய்வமாக வணங்கப்பட்டு வருகிறது. கோவில், ஆற்றங்கரை, குளக்கரை, சாலைகளில் நட்டுவளர்ப்ப தால் வரட்சி குறையும். விதையைக்கொண்டு நட்டு உற்பத்திச் செய்ய வேண்டும்.

2. அத்திமரம் (Ficus macrocorpa) சீக்கிரமாக வளரும். வரட்சி யான இடங்களிலும், கல் கண்டங்களிலும் கூட நன்ருகவளரும். இலை, கொழுந்து கால்நடை தீவனமாகும். தழையுரமாகும் மரம் விறகுக்கும் சில வேலைகளுக்கும் ஆகும் விதை, தண்டு இவைகளை கொண்டு உற்பத்தி செய்யலாம். காய்கள் உணவாகும்.

3. அகத்திகீரை (Sesbania grandiflora) வீட்டுப்புறங்கள், தோட்டக் கால், வரப்பு, வயல்கரை முதலிய இடங்களிலும் கொடிக்கால்களிலும் பயிரி டப்படுகிறது. இலை கறியுணவாகும். கால் நடைகளுக்கும் நல்ல உண வாகும் சீக்கிரம் வளரக்கூடியது. தழை உரத்துக்குமாகும். விதையைக் கொண்டு உற்பத்திச் செய்யவேண்டும்.

4. அயினி (Artocarpus hirsutalam) wild Jack, காட்டுபலா, பேய்பலா, அயினிப்பலா என்றும் பெயர் உண்டு. மேற்கு கரையோரம், வயநாடு, மைசூர், திருவாங்கூர் குடகு முதலிய பிரதேசக் காடுகளில் ஏராள மாக உள்ளன. மிகவும் உறுதியானமரம். கரையான் தாக்காது. கட்டிட வேலை, ஓடம்செய்தல் முதலிய பல வேலைகளுக்கு ஏற்றது. விதையைக் கொண்டு உற்பத்திச் செய்யப்படுகிறது.

5. அழிஞ்சில் (Alangium Lamarckii) Stonemango ஏரழிஞ்சில், கருப்பழிஞ்சில், இறங்கழிஞ்சில் எனவும் உண்டு. ஒருதரம் வேர்விழுந்து விட்டப் பிறகு பல ஆண்டுகள் மரம் அழிவதேயில்லை வெட்ட வெட்ட துளிர் விட்டு கொண்டே இருக்கும் விவசாயக் கருவிகளுக்கும் விறகுக்கும் ஆகும். வேலியோரங்களிலும் மேய்ச்சல் தரைகளிலும் வளர்க்கலாம் தழை சில சமையங்களில் மருந்தாக உபயோகப்படுகிறது. இதன் கொட்டை தேள் கடிககு மருந்தாகும். வித்தைக்கொண்டு உற்பத்தி செய்யலாம்.

6. ஆலமரம் (Ficus bengalensis linn) மரங்களிலே மிக பெரியது நீண்டகாலம் இருக்கக்கூடியது. முக்கியமாக சாலைகள், குளக்கரைகள், முதலிய இடங்களுக்கு ஏற்றது. கிளைகளிலிருந்து இறங்கும்வேர் (விழுது) களும் பூமியில் வேர் இறங்கி மரமாக வளரக்கூடியது. மரம் வேலைக்கு ஏற்றது. மருந்து குணம் உள்ளது. விதையிலிருந்தும் கட்டை வெட்டி நட்டும் வளர்க்கலாம்.

7. ஆச்சாமரம் (Hardwickia binata Roxb) வரட்சியான பிரதேசங்களிலும் வளரக்கூடிய பெரிய மரம். மரங்கள் கட்டிட வேலை கைத்தறி சாமான்கள், கிணறுவிட்டம், விவசாயக்கருவிகள் முதலியன செய்ய உபயோகமுள்ளது பட்டையிலிருந்து நாறும் தோல் பதனிடவும் உபயோகப் படுகிறது. வித்திலிருந்து நாத்துவிட்டு நடவேண்டும்.

8. ஆடமருது (Terminalia belirica) தான்றிக்காய், தானிக்காய். இது எல்லா இடங்களுக்கும் ஏற்றது. பெரிய மரமாக வளரும். இலை கால்நடைத் தீனியாகும். காய், பட்டை மருந்து ஆகும். வித்தைக்கொண்டு உற்பத்தி செய்யவாம். வேலைக்கும் உபயோகமுள்ளது.

9. ஆனைக் குண்டுமணி (Adananthera pavonina) சீக்கிரமாக வளரக் கூடியதும் தழை அடர்ந்ததுமான சிறியமரம். வித்தைக்கொண்டு உற்பத்திச் செய்யலாம். தழை உரத்துக்கும் விறகுக்கும் ஆகும்.

10. இருள் (Xylia Xylocarpa Tamb) Iron wood, மிகப் பெரிய மரம். கட்டிட வேலைகள், ரயில ஸ்லீப்பர்கள், பாலங்கள் தந்தி—மின்சார சம்பங்கள், வண்டி சாமான்கள், விவசாயக் கருவிகள் இவைகளுக்கு ஏற்றது. வித்தைக்கொண்டு உற்பத்திச் செய்யலாம்.

11. இலுப்பை (Bassia longifolia) Mohwa எல்லா இடங்களிலும் வளரக்கூடிய பெரியமரம். மரங்கள் பல வேலைக்கும் விறகுக்கும் ஆகும். பூ இனிப்பான உணவுப்பொருளாகும். வித்திலிருந்து எண்ணை (நெய்) எடுக் கப்படுகிறது. இது கோவில்களில் விளக்கெரிக்க உபயோகப்படுகிறது. இலை, பூ, காய், பழம் முதலியன கால்நடைத் தீனியாகும். புண்ணாக்கு அரப்பாக வும் உரமாகவும் உபயோகப்படுகிறது. வித்தைக்கொண்டு உற்பத்திச் செய்யவேண்டும்.

12. ஈட்டி (Dalbergia latifolia) Black wood. சென்னை மாகாணம் பூராவும் உற்பத்தி செய்யப்படும். உறுதியான மர வகையை சேர்ந்தது. நீண்ட காலம் உழைக்கக்கூடிய உயர்தரமான கருஞ்சிகப்பு நிறமுள்ள மரம். பர்னிச்சர்கள், விவசாய கருவிகள், துப்பாக்கி கருவிகளின் கைப்பிடிகள் முதலியன செய்ய லாயக்குள்ளது வித்தினால் உற்பத்தி செய்யவேண்டும்.

13. உசில் (Albizzia amara) உசிலை, ஊஞ்சா, துரிஞ்சல், அரப்பு எனவும் பெயர்கள் உண்டு. வரட்சியான இடங்களிலும் நன்கு வளரும் மேய்ச்சல் தரைகளுக்கும் வேலி ஓரங்களுக்கும் ஏற்றது. மரம் விறகுக்கும் உழுகருவிகளுக்கும் ஏற்றது. தழை அரப்பாகவும், உரமாகவும் உபயோகப் படுகிறது. கோந்தும் கிடைக்கும் வித்தினால் விர்த்தியாக்கப்படவேண்டியது.

14. உடை (Acacia plonifrons) குடை வேலன், குடை மரம், என்றும் பெயர்கள் உண்டு ராமநாதபுரம், திருநல்வேலி ஜில்லாக்களில் ஏராள மாக காணப்படுகிறது. வேலமர இனத்தை சேர்ந்தது. நீண்ட வெண்மை யான முள்களையுடையது. வெள்ளை முள்மரமென்ற காரணப் பெயரும் உண்டு. வரட்சியானதும் மணற்பாங்கான இடங்களிலும் நன்கு வளரு கிறது. விவசாயக்கருவிகள் கால்நடை தீவனம், விறகு இவைகளுக்கு ஏற்றது. வித்தைக்கொண்டு உற்பத்திச் செய்யலாம்.

15. எட்டி (Strychmos nnx-Vomica) இதை விஷமுட்டிமரம்என்றும் சொல்லுவார்கள். "எட்டி மரமானாலும் பச்சைமரத்தை வெட்டாதே" என்ற பழமொழியும் வழங்கிவருகிறது. இதன் மரம், காய், பழம், இலை, பூ இவைகள் அவ்வளவு உபயோகப்படுத்துவதில்லை. ஆனதுப்பற்றியே உப யோகமில்லாத எட்டிமரமானாலும், பச்சை (உயிருள்ள) மரத்தை வெட்டக் கூடாது என்பதுதான்கருத்து. இதுசாதாரணமாக எங்கும் வளரக்கூடி யது; வித்தைக்கொண்டுபயிராக்க வேண்டும். இம்மரத்தைக்கொண்டு செய்யப் பட்ட கலப்பையினால் உழுதால் கோரைப்புல் அழிவதாக கூறப்படுகிறது.

16. எலந்தை (Zizyphus Jujuba) Indian plum) இது வரட்சியான பிரதேசங்களிலும் எல்லாவகை மண்ணிலும் வளரும். வேர் பூமியில் ஊன்றி விட்டால் பிறகு கவனிக்கவேண்டியதே இல்லை. பழங்கள் நல்ல உண வாகும்; மருந்து குணமுள்ளது. மரம்விறகுக்கும் வேலைக்கும் ஏற்றது; ஆடு களுக்கும் தீவனமாகும்; நிறைய முள்ளுள்ளது; வித்தைக்கொண்டு உற்பத்தி செய்யலாம்.

17. எலவன் (Bombax Malabaricum) இம்மரங்களை வேலிகளிலும் தோப்புகளிலும் உற்பத்தி செய்யலாம். இதன் மரம் தீப்பெட்டி, பிளைவுட் பாக்கிங்பெட்டிகள் போன்ற பல கைத்தொழில்களுக்கு ஏற்றது. ஏரோப் பிளேன் கட்டுவதற்கும் பயன்படுகிறது. இதன் காயிலிருந்து பஞ்சு எடுக்கப் படுகிறது. அதுபடுக்கை, தலையணை போன்றவைகளுக்கும் பயன்படுகிறது. விதையிலிருந்து எண்ணெ எடுக்கலாம். புண்ணாக்கும் உபயோகமுள்ளது இதிலிருந்து கோந்தும் கிடைக்கிறது. விதையைக்கொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

18. ஒதியன் (Ddina wodier Roxb) எல்லாவகை மண்ணிலும் வளரும். வேறு வேலைகளுக்கு உபயோகமில்லாத மரமாக இருந்தாலும் கிணற்றருகில் துலை மரமாகவும் பிடிமரமாகவும் வளர்க்கப்படுகிறது. வேலி களிலும் நடப்படுகிறது. தழை உரத்துக்கும் மரம் விறகுக்கும் ஆகும். சீக்கிரமாக வளரக்கூடியது. வித்தைக்கொண்டும் கட்டைவெட்டி நட்டும் பயிராக்கலாம்.

19. கருங்காலி (Accacia Catechu) வரட்சியானதும் சரளை மண்பூமி களிலும்கூட நன்கு வளரும். இதன் மரங்கள் உயர்ந்த வேலைப்பாடுகளுக்கு ஏற்றது; விறகுக்கும் ஆகும். வித்தைக்கொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

20. கருவேல் (Acacia arabica willd) Babool tree வேலன், கருவை:— கெட்டியான மண், வரண்ட பிரதேசம் நீர்தாழ்ந்த பூமி, களர் மண் எல்லா இடங்களிலும் நன்கு வளரும். எரிக்கரைகளிலும், கால்வாய் கரைகளிலும் எரி உள்வாய்களிலும் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. மிகச் சுலபமாகவும் சீக்கிறமாகவும் வளர்க்கக்கூடிய மரம். பெரும்பாலும் தானாகவே உற்பத்தியாகக்கூடியது. இலை, காய்கள் கால்நடைகளுக்கு சிறந்ததீவனம். இதன்மரம் மிக உறுதியானது. விவசாயிகளுக்கு பலவகைகளில் உபயோகப் படுகிறது. பட்டையிலிருந்து சாயம் எடுக்கப்படுவதுடன்-தோல்பதனிடவும் உபயோகப்படுகிறது கோந்தும் கிடைக்கும்.

21. கருங்கொன்றை (Cassia Siamea) சீக்கிறமாக வளரும் நிறைய தழையுடையமரம். சாலை ஓரங்களிலும் குளம், கரைகளிலும் வளர்க்கலாம் எல்லா இடங்களுக்கும் ஏற்றது. வித்திலிருந்து உற்பத்தி செய்யவேண்டும்.

22. கரும்பொரசு (Chloroxylon Swielenia). Sabin wotd வரட்சி யான இடங்களிலும் வரும். சாதாரண உயரமுள்ளது. உறுதியானது விவசாயக்கருவிகள், பர்னீச்சர்கள், செக்கு, வண்டிச்சாமான்கள் முதலியன செய்யலாம். இளம் மஞ்சள் நிரமுள்ளமரம். வெளிநாடுகளுக்கும் ஏற்று மதிச்செய்யப்படுகிறது

23. கருமருது (Terninala Crenulata Roth) கலிமருது, கருப்புமருது:- 4000 அடிவரை உயரமுள்ள பூமிகளில் வளரும். பெரியமரம் விவசாயக் கருவிகள், கப்பல்தளம, கட்டிட சாமான்கள் இவைகளுக்கு ஏற்றமரம். பட்டை தோல்பதனிட சாயம் எடுக்கவும் உபயோகப்படும். விதையைக் கொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

24. கருவாகை (Albizzia moluccana) இது உயரமாக வளரக்கூடிய இனத்தை சேர்ந்தது. இதன் பூர்வீகம் மடகாஸ்கர் என கூறப்படுகிறது. இது இலங்கையில்; அதிகமாக பயிரிடப்படுகிறது. சுமார் 100 அடி உயரம் வரை வளருகிறது சாலைகளிலும் நிழலுக்கும் பயிரிட ஏற்றது. விதையைக் கொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

25. கொடுக்காப்புளி (Pithecolobium dulce) Madras Thorn, காட்டுப்புளி கோணப்புளி எனவும் வழங்கும். வரண்ட பாகங்களிலும் வளரும். காய் உண்ணலாம். காய், இலை கால் நடைகளுக்கு தீவனமாகும். சிறந்த உயிர்வேலியாகும். மரம் விவசாயக்கருவிகள், வண்டிசாமான்கள், கட்டிட வேலைகள் கிணர் விட்டம் இவைகளுக்கு பயன்படும். விதையைக்கொண்டு உற்பத்திச் செய்யவேண்டும்.

26. கொன்னை (Cassia fistula) இதன் பிளப்பிடம் இந்தியாவே. இதில் பலவகையுண்டு. சீக்கிறம் வளரக்கூடிய வகையைச் சேர்ந்தது. விறகுக்கும் கால்நடை தீவனத்துக்கும் தழை உரத்துக்கும் ஆகும். தோல் பதனிடவும் உபயோகமுள்ளது. சாலைகளிலும் சோலைகளிலும்கூட வளர்க்கலாம் விதையைக்கொண்டு உற்பத்திச் செய்யவேண்டும்.

27. சடச்சி:— (Crewia tiliacfolia) இது சுமார் 4000 அடிவரை உயரமுள்ள பிரதேசங்களில் வளரக்கூடிய சாதாரண உயரமுள்ள மரம். விவசாயக் கருவிகள் வண்டியின் பாகங்கள் தழை உரம் இவைகளுக்கு ஏற்றது. விதையைக் கொண்டு பயிரிடவேண்டும்.

28. சவுக்கு (Casuarina equisetifolia) மணல் பாங்கான மண்ணில் வளமாக வளரும் கடற்கரை ஓரங்கள் ஆற்று படுகைகள் இவைகளில் மிகுதியாக காணப்படும் விறகுக்கும் கூரை வீடுகள், கால்நடை தொழுவம் இவைகளுக்கு ஏற்றது. குறைந்த காலத்தில் அதிக வருமானம் தரக்கூடியது. விதையை நாட்றுவிட்டு நடவேண்டும் 3 x 3 அடிக்கொரு நாற்று வீதம் நடவேண்டும்.

29. கோங்கு (Hopea parviflora) கீர்கோங்கு வெள்ளை கோங்கு எனவும் உண்டு. மலையாளம், தென் கன்னடம் மலைக்காடுகளில் அதிகம் உண்டு. உயரமான அழகிய மரம். இதன் மரம் கட்டிடங்கள், ரயில் ஸ்லீப்பர் கட்டைகள் முதலியவைகளுக்கு ஏற்றது. விதையைக்கொண்டு உற்பத்திச்செய்யவேண்டும்.

30. சவுண்டல் (Lewceana glauca) தகரை, பெரிய தகரை:—எல்லா பூமிகளுக்கும் ஏற்றது. சீக்கிரமாக வளரக்கூடியது நிறைந்த தழையைக் கொடுக்கும். வெட்ட வெட்ட தழைக்கும் வேலி ஓரங்களிலும் மேய்ச்சல் தரைகளிலும் வளர்க்கலாம் நல்ல மண் கண்டமும் மழை வளமுள்ள இடங்களில் செழிப்பாக வளரும். கால் நடைகளுக்கு தீவனமாகும். விறகு, கழிகளுக்கும் உபயோகமுள்ளது. கெட்டியானது. விதையைக்கொண்டு உற்பதி செய்யவேண்டும்.

31. சந்தனவேம்பு (Cedrela Toona Roxb) Red Cedar சுமார் 4000 அடி வரை உயரமுள்ள பிரதேசங்களில் வளரும் சீக்கிரமாக வளரக் கூடிய இனத்தை சேர்ந்தது. அடர்த்தியான தழையையுடையது. மரம் பிளைவுட், பெட்டிகள், கட்டிடவேலை விளையாட்டுக் கருவிகள் செய்ய மிகவும் ஏற்றது. கரையான் அரிக்காது. விதையைக்கொண்டு உற்பத்தி செய்ய வேண்டும்

32. சீமை நூக்கு (Swietenia Mahagoni) மஹாகோனி மரம். இது மழையில்லாத காய்ச்சல் பிரதேசங்களிலும் நன்ருக வளரும். மர வேலைகளுக்கு சிறந்த மரத்தை தருகிறது. அலங்காரத்தழைமரம் மிகவும் உறுதியானது எல்லா இடங்களுக்கும் பொருத்தமானது. விதையைக்கொண்டு வளர்க்கவேண்டும்.

33. சீமைவேலன் (Prosophis Juliflora) சீமை வன்னி என்றும் "மஸ்கித்பீன்" (Mesquit bean) என்றும் சொல்லப்படும் வேலிக்கும் விறகுக்குமாகும். வரட்சியான பூமியிலும் நீர் தாழ்ந்த பிரதேசத்திலும்கூட நன்ருக வளரும் இதன் காய்கள் கால்நடைகளுக்கு தீவனமாகும். வெட்ட வெட்ட கிளைகள் முளைத்துக்கொண்டே இருக்கும். ஆடுமாடுகள் அழிக்காது வித்தைக்கொண்டு உற்பத்திச் செய்யவேண்டும். அதிக கவனிபபின்றி முளைக்கக்கூடியது.

34. சீமை ஆவாரை (Gliricidia Maculata) இதைப்பற்றி விரிவான கட்டுரை பிரிதோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதன் தழை உரத்துக்கும் கட்டைகள் விறகுக்கும் ஏற்றது. வித்தைக்கொண்டும் கட்டையை நட்டும் பயிரிடலாம்.

35. தணக்கம் (Gyrocarpus Jacquni Roxb) கொட்டை தணக்கு முட்டை கோங்கு, வெள்ளை தணக்கு எனவும் உண்டு. மரம் மிகவும் லேசானது ஆனல் உறுதியானது. பலகை அறுக்கலாம் தெப்பம், ஓடம் செய்யவும். உபயோகப்படும் தழையுமாகும். வித்தியிலிருந்து உற்பத்தியாகிறது.

36. தானிக்காய் (Terminalia belerica) ஆடுமருது. தான்றிக்காய்:— பெரிய மரமாகவளரும். எல்லா இடங்களுக்கும் ஏற்றது. இலை கால்நடை தீனியாகும். காய்பட்டை இவைகள் மருந்துகளாகும். வித்தைக்கொண்டு உற்பத்திச்செய்யலாம். மரவேலைக்கு உபயோகப்படும்.

37. தூங்குமூஞ்சி (Enterolobium Saman) Rain Tree சீமைவாகை எல்லா இடங்களுக்கும் ஏற்றது. சீக்கிரமாக வளரக்கூடியது. காய் இனிப்பாக இருப்பதால் கால் நடைக்கு தீவனமாகும் தழை உரத்துக்கும் தீவனத்துக்குமாகும். மரம் வேலைகளுக்கும் விறகுக்கும் ஆகும். விதையைக் கொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

38. தென்னை (Cocos nucifera) தேங்காய்மரம். இதைப்பற்றி அறியாதார் யாருமிரார். இதை கற்பக விருக்ஷமெனச் சொல்வார். இதன் காய், நீர் உணவுப்பொருளாகும். ஆண்டவனுக்கு நிவேதனம் செய்வதற்கு உயர்ந்த பொருள். இதிலிருந்து எண்ணை, சோப்பு, சர்க்கரை, கயறு போன்ற பலதொழில்கள் விருத்தியடைந்துள்ளன. சுருங்கக்கூறினல் மனிதனின் அன்றாடத்தேவைக்கு வேண்டிய பல பொருளை உற்பத்தி செய்து தரக்கூடியது தென்னை தான். முழுகாய்களை நட்டு வளர்க்கவேண்டும்.

39. தேவதாரு (Guazama tomentosa) Hontey fruitlree தேன்பழக் காய், தேன்காய், தூபக்காய், ருத்திராக்ஷக்காய் மரம் என்றும் வழங்கப்படு கிறது. எல்லா மண்களிலும் வளரும். தழை அடர்த்தியாக இருக்கும் வேலிகளிலும் உண்டாக்கலாம் மேய்ச்சல் தரைகளிலும் உண்டாக்கலாம். பார்ப்பதற்கு அழகான சிறுமரம். விதையைக்கொண்டு உற்பத்தி செய்ய வேண்டும்.

40. தேக்கு (Tectona grandis) Teak tree மரங்களுக்கெல்லாம் ராஜாபோன்றது. உயரமாக வளரக்கூடியது. பெரியதாகவும் வளரும். எல்லாவித வேலைகளுக்கும் ஏற்ற உயர்தரமானமரம் பிளைவுட், பாக்கிங் பெட்டி, தரிசாமான்கள், விவசாயக்கருவிகள் பர்னீச்சர்கள், ரெயில் மோட்டார் பெட்டிகள் முதலிய எல்லாவித வேலைகளுக்கும் ஏற்றமரம். விதை நாற்றுவிட்டு நடலாம். சாலைகள், சோலை, வேலி ஓரங்களிலும் நடலாம்.

41. தோதகத்தி (Dalbargia Sissoides) உயரமாக வளரக்கூடியது. நல்லமண்கண்டம் உள்ள இடங்களில் மிக உயரமாகவளரும்; இதன் மரம் விறகுக்கும் தழை ஊரத்துக்கும் உபயோகப்படும். வித்தைக்கொண்டு பயிரிடவேண்டும்.

42. நாவல் (Egunia Jambulana) Blach plwm எல்லாமண்களுக்கும் ஏற்றது. பெரியமரம். பழங்கள் தின்னலாம். தழை பழம் கொட்டை இவைகள் கால்நடை பன்றி இவைகளுக்கு தீவனமாகும். மரம் விவசாயக் கருவிகள், கட்டிடவேலைகள் கிணறு விட்டம், பலகை இவைகளுக்கு மிகவும் ஏற்றது. விதையைக்கொண்டு உற்பத்தி செய்யவேண்டும். பட்டை மருந்துக்கும் தோல்பதனிடவும் உபயோகமுள்ளது.

43. நுணாமரம் (Morinda tintoria Roxb) மஞ்சநாரி, மஞ்சநத்தி, மஞ்சள் நுணா என்றும் சொல்லப்படும்—இதிலிருந்து உயர்தரமான சாயம் எடுக்கப்படுகிறது. தழை ஊரத்துக்காகும். மரம் விவசாயக்கருவிகள் மர பாதரக்ஷைகள் (கால்கட்டைகள்) இவைகளுக்கு உபயோகமுள்ளது. விதையைக்கொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

44. நெல்லி (Phylanthus Embellica) நாட்டுநெல்லி, காட்டுநெல்லி, சிறுநெல்லி. பெருநெல்லி. எனப்படும். இதன் காய்கள் சிறந்த குணம், சத்து உள்ளமருந்துகளாகும். பட்டை தோல் பதனிடவும் சாயம்போடவும் உதவுகிறது. இதன் மரம் விறகுக்கேற்றது.

45. நெட்டிலிங்கம் (P. Longifolia) மிகவும் வளமாக வளரக்கூடியது. நிழலுக்காகும் அழகானமரம். சாலைகளிலே வளர்க்கலாம். விறகுக்காகும்; விதையைக்கொண்டு உற்பத்திச்செய்யவேண்டும்.

46. பலாமரம் (Artocorpus integrifolia Linn) Jach இதுபழ வகையை சேர்ந்தமரம். பிஞ்சு, பழம், கொட்டை இவைகள் உணவுப் பொருள்களாகும். தழை கால் நடைத் தீனியாகும். மரம் பிளவுட்பலகை, வீட்டுவேலை, பர்னீச்சர் போன்ற வேலைகளுக்கு ஏற்றது. பட்டையிலிருந்து நாரு, கோந்து கிடைக்கும். விதையை நட்டு வளர்க்கவேண்டும்.

47. பனை (Borassus Flabillifer) Palmyra tree இந்த ராஜ்யம் பூராவும் உள்ளது. வரட்சியான இடங்கள், நீர் தாழ்ந்த பூமி எங்கும் நன்கு வளரும். மணல் பாங்கான இடங்களில் வளமாக இருக்கும். இதன் பழம் சாறு உணவாகும், சாரிலிருந்து வெல்லம், சர்க்கரை, கல்கண்டு, செய்யப்படுகிறது. ஓலைகள் தட்டி, சம்பு பாய், நாற்காலி, கட்டிலுக்கு நாறு பட்டை இவைகளும் கிடைக்கின்றன. மரம் வீடுகளுக்கு வாரை நீர்கால்கள் தோணி ஆகிறது. இந்த மரம் நாட்டின் குடிசைத் தொழில்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து லக்ஷக்கணக்கான மக்களுக்கு வேலையும் தருகிறது. இதை தோப்புகளாகவும் வேலி ஓரங்களிலும் ஏரிக்கரைகளிலும் நட்டு பயிராக்கலாம். கொட்டைபோட்டு பயிராக்கவேண்டும்.

48. பாதாம் (Terminalia Catapa) Wild almond நாட்டு வாதுமை சீக்கிரமாக வளரக்கூடிய சிறிய அழகானமரம். எல்லா இடங்களிலும் வளரும். கொட்டை தின்பதற்காகும் சாலைகளிலும் சோலைகளிலும் நடலாம் விதையைக்கொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

49. பாதரி (Stereospermum Chilonoidss) 4000 அடிவரை உயரமுள்ள பூமிகளில் நன்கு வளரும், விசேஷமான மரம். தோட்டங்களிலும் ரோடு ஓரங்களிலும் வளர்க்க லாயக்கானது விதைகளின்மூலம் விருத்தி செய்யவேண்டும்.

50. பாலை (Munusops Kanki) இது 4000 அடிவரை உயரமுள்ள பூமிகளில் வளரும் இதன் இலை தழை உரம், சாயம் கொடுக்கும் வேர் மருந்துக்காகும், கொழுந்து, பிஞ்சு தீவனமாகும் விதையை நட்டு பயிராக்கலாம்.

51. பில்லமருது (Terminala paniculata) வெண்மருது வெள்ளை மருது பூ மருது என்றும் பெயர் உண்டு 2000 அடிவரை உயரமுள்ள பிரதேசங்களில் நன்ருக வளரும். மிகவும் கெட்டியான மரம். உத்திரங்கள், கதவு, ஜன்னல், பலகை முதலிய கட்டிட வேலைக்கு ஏற்றது. வித்தைக் கொண்டு வளர்க்கவேண்டும்.

52. புங்கன் (Pongamia glabara) இந்திரிய சத்துள்ள தழை மரம். கெட்டியான மரம், விவசாயக்கருவிகள் மற்ற வேலைக்கும் உபயோகமுள்ளது. தழை வெட்ட வெட்ட தழைக்கும் இதன் கொட்டையிலிருந்து எண்ணை கிடைக்கும் புண்ணாக்கு உரமாகும். சாலைகளில். ஏரி உள்வாயில் கரைகளில் உற்பத்தி செய்யலாம். வித்திலிருந்து உற்பத்திச் செய்யவேண்டும் எல்லா ஜில்லாக்களுக்கும் ஏற்றது.

53. புன்னை (Calophyllum tomentosum) இது பசுமையான தழை அதிகமுடைய மரம். மணற்கண்டங்களிலும் சமுத்திரக்கரையோரங்களிலும் நன்கு வளரும்; நிழலுக்கு ஏற்றது. சாலைகளிலும் பயிரிடலாம். இதிலிருந்து எண்ணை எடுக்கலாம் விதையைக் கொண்டு பயிரிடவேண்டும்.

54. புளியமரம் (Tamarindus Indica) Tamarind பரந்து வளரும் சிறி இலைகளை உடையது. வரட்சியான இடங்களுக்கும் ஏற்றது. மிக உறுதியானமரம். கரும்பாலை, எண்ணை செக்கு, உலக்கை முதலியவை களுக்கு ஏற்றது. சிறந்த விறகு ஆகும். பழம் உணவு ஆகும் ஓடு, கொட்டை இவைகளிலிருந்து பல உபப்பொருள்கள் தயாரிக்கபபடுகிறது. ரோடு ஓரங்களில் (சாலைகள்) ஆறு. வாய்க்கால் கரைகளில் வளர்க்கலாம். விதையைக்கொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

55. பூவரசு (Thespesia populnea) சீக்கிறமாக வளரக்கூடியவகை மணல்பாங்கான சமுத்திரக்கரை ஓரங்களில் நன்கு செழித்து வளரும். மரம் கட்டிடவேலை, பர்னீச்சர், விறகு இவைகளுக்கும் இலை தழை உரத்துக்கும் ஆகும். கட்டைகளை (துண்டு கிளைகளை) நட்டு உற்பத்தி செய்யவேண்டும்.

56. பொரசு (Butea frondosa) Dhak. காட்டுரோஜா, வனராணி என்றும் சொல்லுவார்கள் நீர்தாழ்ந்த பூமிகள், களர். உவர்மண் பூமிகளிலும் கூட நன்கு வளரும். இதன் இலைகள் இலை தைப்பதற்கும், கால்கடை தீவனத்துக்கும் ஆகும் மரம் விறகுதரும். வித்தை கொண்டும் கட்டையை நட்டும் பயிரிடலாம்.

57. மந்தாரை (Bauhinia Purpuria) பார்வைக்கு மிக அழகான மரம் இதன் இலைகள் கால்நடை தீவனத்துக்கு ஆகும். இலையும் உணவுக்கலத்திற்கு உபயோகப்படும் விதையை கொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

58. மஞ்சங்கடம்பை (Adina cordifolia hook) எல்லா மண்களிலும் வளரக்கூடியது. மஞ்சள் நிறமுள்ளது. மரம் விவசாயக்கருவிகள் கடசல் வேலை, கைத்தரிகருவிகள், பிளைவுட், பாக்கிங்பெட்டிகள் முதலிய பலவேலைகளுக்கும் ஏற்றது. எதிர்காலத்தின் தேவை அதிகமானதால் இதன் உற்பத்தி அவசியம். விதையைகொண்டு பயிரிடவேண்டும்.

59. மயில்கொன்னை (Poinciana rigia) பரவக்கூடிய தன்மையுடன் கூடிய மரம். சீக்கிறம் வளரும் ஈரமுள்ள பூமி, காய்ச்சல் தரை கடற்கரை ஓரங்களிலும் நன்குவளரும். சாலைகளுக்கு ஏற்றது. விதைகளிலிருந்து உற்பத்தி செய்யவேண்டும்.

60. மலைப்பூவரசு (Hibiscus tiliaceus) தழை அடர்ந்து சீக்கிறமாக வளரும். மரம் ரோடு ஓரங்களுக்கு ஏற்றது. தழை உரத்துக்கும் மரம் விறகுக்கும் ஆகும். மணற்பாங்கான இடங்கள் கடற்கரை ஓரங்களுக்கு ஏற்றது முக்கியமாக மதுரை ராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களில் மிகுதியாக காணப்படுகிறது விதையைக்கொண்டும், கட்டைவெட்டி நட்டும் பயிரிடலாம்.

61. மலைவேம்பு (Melia Composita Wild) Hill neem நல்ல மண் கண்டமுள்ள இடங்களில் நன்கு வளரும். இதன் தழை உரத்துக்கும் மரம் பல வேலைகளுக்கும் உபயோகம் உள்ளது. விறகுக்கும் ஏற்றது. வித்தைக் கொண்டு பயிரிடவேண்டும்.

62. மாவிலிங்கம் (Crataeva religiosa) எல்லா இடங்களிலும் வளரக்கூடிய மரம். தழை உரத்துக்கு விசேஷமானது. மரம் வாகனங்கள்

முதலிய சித்திர வேலைக்கு ஏற்றது. வேலி ஓரங்களிலும் மேய்ச்சல் தரைகளிலும் வளர்க்கலாம். வித்தைக்கொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

63. மா மரம் (Mangifera indica) Mango நமது ராஜ்ஜியத்தில் அதிகமான அளவில் எங்கும் பயிரிடப்பட்டுள்ள மரம் இது ஒன்றுதான். பழ வகைகளில் சிரேஷ்டமானது. பழங்கள் உணவுப்பொருள்களாகும். கடல் மட்டத்திலிருந்து 2000 அடி வரை உயரமுள்ள பிரதேசங்களில் நன்ருக வளரும். இதன் மரம் கதவு, ஜன்னல், பிளைவுட், பாக்கிங் பெட்டிகள், தீப்பெட்டி, விளையாட்டு சாமான்கள் முதலிய செய்ய உபயோகமுள்ளது. ஏராளமான பழங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாவதின் மூலமும் நம் நாட்டு பொருளாதாரம் அபிவிருத்தியாகிறது. இதில் அனேக வகைகள் உள்ளன. விதையைக்கொண்டும் கட்டைகளை வெட்டி ஒட்டு சேர்த்தும் பயிரிடலாம். சாலைகளுக்கு ஏற்றது, தோப்புகளாகவும் வைக்கலாம். கொட்டைகள் உணவுப்பொருள், கால்நடை தீவனம் மருந்து ஆகின்றன. எல்லா ஜில்லாக்களுக்கும் ஏற்றது.

64 முந்திரி (Anacardium occidentale) Cashew nut இதுவும் பழ வகையை சேர்ந்த மரம். இதன் கொட்டை ஏராளமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாவதால் இதற்கு டாலர் காய்க்கும் மரம் என்றும் பெயர் உண்டு. நாட்டின் கைத்தொழில் வளர்ச்சிக்கு இதுவும் முக்கியமான மரங்களில் ஒன்று. இதன் ஓட்டிலிருந்தும் எண்ணை மருந்து இவைகள் எடுக்கப்படுகிறது. பழம் உணவுப்பொருளாகும் விதையைப்போட்டு வளர்க்கவேண்டும்.

65. முருங்கை மரம். இந்த மரம் சமவெளிகள் பூராவும் நன்கு வளரும. காயும் இலையும் சத்துள்ள உணவுப்பொருள்கள் கோந்தும் கிடைக்கும். பூ, விதை, கோந்து, பட்டையும் மருந்து ஆகும். விதையைக் கொண்டும், கட்டையை வெட்டி நட்டும் பயிரிடலாம் மிக துரிதமாக வளரக் கூடியது. தோட்டங்களிலும் வேலி ஓரங்களிலும் நடலாம்.

66. முள்ளுமுருங்கை (Erynthrina indica) கலியாணமுருங்கை இது குளிர்ச்சியான இடங்களிலும் வரட்சியான இடங்களிலும் வளரும். இலைகள் கால்நடை தீவனமாகும் தழை உரமாகும். திராக்ஷை முதலிய கொடிகளுக்கு பந்தல் கால்கள் ஆகும் உயிர் வேலிக்கு ஏற்றது அடிக்கடி கவாத்து செய்யலாம். வித்தைக்கொண்டு பயிரிடவேண்டும்; கட்டையை வெட்டியும் நடலாம்.

67. மூங்கில் (Bambusa arundinacea) மூங்கில் வகையில் கெட்டிமூங்கில், தட்டி மூங்கில், சிறு மூங்கில் என பலவுண்டு. இதன் இலைகள் கால்நடைகளுக்கு சிறந்த தீவனம் ஆவதுடன் மரம் வீடுகள்கட்ட, கூடை தட்டி பின்ன உதவுகிறது. சிறு குடிசைத்தொழிலபிவிருத்திக்கேற்றதாக இருப்பதுடன் காகிதம் செய்தல்போன்ற பல பெரிய கைத்தொழில்களும் இதனுல் அபிவிருத்தியாகிறது. லக்ஷக்கணக்கான மக்கள் இதனுல் ஜீவிக்கிருர்கள். காடுகளில் பெருமளவு உற்பத்தியாகிறது. வேலிகளில் நட்டு வளர்க்கலாம். வித்தைக்கொண்டு உற்பத்தி செய்யவேண்டும் தூர் எடுத்தும் நடலாம். தாஞகவே பக்கக்கிளைகள்விட்டு விருத்தியாகிக்கொண்டே இருக்கும்.

68. வரிமாரை (Cassia marginata) வரிக்கொன்றை. வரண்ட இடங்களிலும் நன்கு வளரும். வித்தைக்கொண்டு பயிரிடலாம். தழை கால்

நடைக்கு தீவனம், உரம் ஆகும்; மரம் விறகுக்கு ஆகும்; சாலைகளில் நட்டு வளர்க்கலாம்.

69. வலம்புரி (Helicberes isora) Deers' horn tree. இது துரிதமாக வளரக்கூடியது. தழை உரத்துக்கும், மரம் கிளைகள் விறகுக்கும் ஆகும். வரட்சியையும் தாங்கக்கூடியது வித்தைக்கொண்டு பயிரிடவேண்டும்.

70. வாகை (Albizzia lebbek) Indian Walnut பெரியமரம் தென் இந்தியாவின் வரட்சியான பாகங்களில் எல்லாம் மிகுதியாகக் காணப்படும் மரம. தண்ணீர் தங்குமிடங்களிலும் வளரும். தழை சிறந்த உரம் கால் நடைகளின் தீவனமாகும். மரம் சிறந்த விவசாயக் கருவிகள் வண்டியின் பாகங்கள் எண்ணிகைக்கு பிளவுட் முதலிய வேலைகளுக்கு எற்றது. வித்தைக்கொண்டு பயிரிடவேண்டும். புஞ்சைநில வேலிகளில் அதிகமாக பயிரிடப்படுகிறது.

71. வாதநாராயணம் (Belonix eleta) எல்லா மண் கண்டங்களிலும் வளரும் சீக்கிரமாக வளரக்கூடியது. வித்தைக்கொண்டும் பயிரிடலாம். கிளைகளை (சட்டை துண்டுகள்) நட்டும் வளர்க்கலாம். தழை உரத்துக்கு எற்றது. மரம் விவசாயக்கருவிகள். விறகுக்கேற்றது. வேலிகளிலும் சாலைகளிலும் நட்டு வளர்க்கலாம்.

72. வாலைகுந்தரீகம் (Veteria Indica Roxb) வெள்ளை குந்திரீகம் எப்போதும் பசுமை மாறுத பெரிய மரம். மேற்கு கடற்கரையோரங்களிலும் தென் ஜில்லாக்களிலும் எராளமாக வளர்க்கப்படுகிறது முக்கியமாக தென் கன்னட ஜில்லாக்களில் சாலைகளில் கம்பீரமாக தோற்றமளிக்கிறது. கிளைகளிலிருந்து பிசின்போன்ற திராவகம் விதையிலிருந்து எண்ணையும் கிடைக்கும் வித்திலிருந்து விருத்தி செய்யவேண்டும்.

73. விளா (Feronia elephantanum) தமிழ்நாட்டில் எல்லா ஜில்லாக்களிலும் பயிராக்கலாம். இதன் பழம் (விளாங்கனி) உணவுப் பொருளாகும் வேர்பட்டை மருந்து சரக்காகும்; தழை கால்நடை தீவனமாகும்; மரம் வேலைக்கும் விறகுக்குமாகும்.

74. வில்வம் (Aegle marmelos) Stone apple வரண்ட இடங்களிலும் நன்ருக வளரும். இதன் காய் வேர் பட்டை மருந்தாகும். கால்நடைகளுக்கும் தீவனமாகும் காற்றை மறைக்க வேலிகளில் நட்டு பயிராக்கலாம். இம்மரத்தை காலையில் பிரதிதினமும் வணங்கிவந்தால் ஈசுவரகாடக்ஷமுண்டு என்றும் சொல்வார்கள் விதையைக்கொண்டு வளர்க்கவேண்டும்.

75. விடத்தாரை (Dicherostachya cinerea) வெடத்தாலை:— தமிழ் நாட்டு காடுகளில் வரட்சியான பாகங்களில் மிகுதியாக காணப்படுகிறது. விவசாயக்கருவிகளுக்கு எற்ற உறுதியான மரம்; வித்தைக்கொண்டு பயிரிடவேண்டும்.

76. வெப்பாலை (Wright tinltoria) சாதாரண அளவுள்ள தழைமிகுந்த மரம். இதன் மரம் விவசாயக்கருவிகள் நுகத்தடி முதலிவை செய்ய எற்றது வரண்ட இடங்களிலும் நன்ருகவளரும். விதையைக்கொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

77. வெள்ளை நாகம் (Anogeissws latifolia) வெள்ளை நாவல், வெக்காலி:— 4000 அடிவரை உயரமுள்ள பிரதேசங்களில் வளரும். உறுதியானமரம் விவசாயக்கருவுகள், வீடுகட்ட இதர வேலைகளுக்கு ஏற்றது. தழை கால்நடை தீவனமாகும்; சாலைகளுக்கு ஏற்றது. வித்தைகொண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

78. வெள்வேலன் (Acacia luco phloea wild) வெள்வேல், சாராயப்பட்டை (whte babul):— வரட்சியான இடங்களிலும் சீக்கிறமாக வளரும்; இலை, காய் இவைகள் கால்நடை தீவனமாகும். மரம், வீடுகட்ட கதவு, நிலை, விவசாயக்கருவிகள் முதலியன செய்வதற்கு ஏற்றது. பட்டையில் நார் எடுக்காலம்; கோந்தும் கிடைக்கும்; வேலிகளிலும் மேய்ச்சல் தரைகளில் பயிரிடலாம். விதையைக்கொண்டு பயிரிடவேண்டும்.

79. வெள்ளை அகில் (Dysoxylum malabaricum) white cedar சுமார் 120 அடி உயரம் 5 அடிகனம் வளரக்கூடிய மரம். பர்னீச்சர் முதலிய சாமான்கள் செய்யலாம். விதையைக்கொண்டு வளர்க்கவேண்டும்.

[71-ம் பக்கத் தொடர்ச்சி]

மாங்காய் சட்ணி (காரம்).

தேவையான பொருள்கள் :—

மாங்காய் துருவல்	2 ரூத்தல்	மிளகாய்த்தூள்	1 அவுன்ஸ்
உப்பு	8 அவுன்ஸ்	மிளகுதூள்	1 அவுன்ஸ்
		இஞ்சிதுண்டுகள்	2 அவுன்ஸ்
வெந்தியதூள்	4 அவுன்ஸ்	பச்சமிளகாய்	8 அவுன்ஸ்
மஞ்சள் தூள்	1 அவுன்ஸ்	கடுகு	1 அவுன்ஸ்
நல்லெண்ணை	8 அவுன்ஸ்	உ. பருப்பு	1 அவுன்ஸ்
		காயம்	சிறிதளவு

செய்முறை:

நன்கு முற்றியதும் பழுக்காததுமான மாங்காய்களை எடுத்துக்கொண்டு சுத்தமாக கழுவி தோலை நீக்கிக்கொள்ள வேண்டும். பிறகு அதை துருவி உப்பை பொடிசெய்து கலந்துவைத்துக் கொள்ளவேண்டும். வெந்தியம், மிளகு, மிளகாய் இவைகள் தனித்தனியாக எண்ணையில் வருத்து பொடி செய்து வைத்துக் கொள்ளவேண்டும். இஞ்சி, பச்சமிளகாய் இவைகளை துண்டுகளாக்கி கொள்ளவேண்டும்.

பிறகு எண்ணையை அடுப்பிலேற்றி கடுகு, உளுத்தம்பருப்பு, காயம் இவைகளைபோட்டு தாளிதம்செய்து, அதில் இஞ்சி, பச்சமிளகாய் துண்டுகளைபோட்டு வதக்கவேண்டும். பிறகு மாங்காய் துருவலையும்போட்டு தண்ணீர் சுண்டிப்போகும் வரை கிளறிக்கொண்டே இருக்கவேண்டும். பிறகு மிளகாய் முதலிய தூள்களையும் கொட்டி கிளறிக்கொண்டிருந்து ஈரப்பசை பூராவும் நீங்கியதும் அடுப்பிலிருந்து இறக்கி சிறிது எண்ணையை கலந்து, ஆறியதும் ஜாடிகளில் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

80. வெண்தேக்கு (Lagerstroemia lanceolata) white teak தக்காணம், மேற்குகரை வனப்பிரதேசங்களில் ஏராளமாக உள்ளது கட்டிட வேலைகள், பலகை இவைகளுக்கு ஏற்றது. விவசாயக் கருவிகளுக்கும் ஏற்றது. வித்தை கொண்டு பயிரிடவேண்டும்.

81. வேங்கை (Plerocarpus marsupium) Kinorree எல்லா இடங்களிலும் வளரக்கூடிய பெரியமரம். உறுதியான ரகத்தை சேர்ந்ததுமாகும் கட்டிட வேலைகள், விவசாயக்கருவிகள் பர்னீச்சர்கள், இவைகளுக்கு மிகவும் ஏற்றது. விதையை நாத்துவிட்டு ஏகருக்கு 150—200 நாத்துகள் நடலாம்.

82. வேம்பு (Azadirachata indica) Neem, margosa வேப்பமரம்:— எட்டோதும் பசுமையாக தோன்றும்; எல்லா இடங்களுக்கும் ஏற்றது; தழை உரத்துக்காகும்; மரம் வீடுசெட்ட, விவசாயக்கருவிகள் முதலியான செய்ய ஏற்றது. கொட்டையிலிருந்து எண்ணை எடுக்கப்படுகிறது. சோப்புசெய்யப்படுகிறது. உரங்களாகும் மருந்து சத்துள்ளது. சாலைகளுகசும் வீடுகளை சுற்றியும் நடலாம். வேலிகளில் காற்றை மறைக்கவும் நடலாம். இதற்கு வியாதிகளை போக்கும் குணமும் உண்டு. விதை நட்டு விருத்திசெய்ய வேண்டும்.

83. கிடியா கேலிசினு (Kydia caliciana) தழைநிறைந்தது. சீக்கிறம் வளரும் சிறியமரம். காய்ச்சல் தாங்கக்கூடியது. பசுங்கட்டைகளை நட்டு வளர்க்கலாம். கல்கண்ட பூமிகளிலும் நன்ருக வளரும். இதன் மரம் பிளைவுட், தீப்பெட்டி இவைகள் செய்யவும் ஏற்றது.

84. Lettuce லெட்டுஸ்மரம். பெரியதும் தழைநிறைய உள்ள மரம். கட்டைகளை நட்டும் பயிரிடலாம். சமுத்திரக்கரை பிரதேசங்களில் வளர்க்கலாம். இலையை சமைத்து உண்ணலாம்.

85. Plumerili பாமரளி சீக்கிரம் வளரக்கூடிய சிறியமரம் மஞ்சள் நிறப்பூவும் நிறைந்த தழையும் கொண்டது. எல்லாவகை மண்ணிலும் வித்தைக்கொண்டு பயிரிடலாம்.

86. Sweitenia Mahagoni மஹாகனி சந்தண வேம்பைபோல் அழகியமரம். அலங்காரத்தழைமரம். நந்தவனங்களுக்கு ஏற்றது. சாலைகளிலும் நடலாம். மரம் பலவித உபயோகங்களுக்கும் ஏற்றது. விதையைக் கொண்டு பயிரிடவேண்டும்.

87. Delonix rigia கோல்டு மோஹர் சீக்கிரம் வளரக்கூடியது. நிறையதழை உடையது. அழகானமரம். செந்நிறப்பூக்களை உடையது. சாலைகளிலும் சோலைகளிலும் வளர்க்கலாம். எல்லாவித மண்ணுக்கும் ஏற்றது. வித்தைக்கொண்டு பயிரிடவேண்டும்.

88. Thevetia neriufolia Juss மஞ்சள் அரளி. எப்போதும் பசுமையுடன் இருக்கக்கூடியது. விதையிலிருந்து உற்பத்திச் செய்யக்கூடியது. மஞ்சள் நிறமான பூக்களையுடையது. இச்செடியிலுள்ள பால் விஷத்தன்மையுடையது. ஆனதால் கால் நடைகள் தொடுவதில்லை. வரட்சியான பிரதேசங்களிலும், எல்லாவித மண்களிலும் நன்கு பயிரிடலாம் நெருக்கமாக பயிரிடுவதால் வேலிகளுக்கு மிகவும் ஏற்றது. இதன் விதைகளிலிருந்து பூச்சிநாசினி மருந்து உற்பத்தி செய்யலாம் சுமார் 15 அடிவரை வளரும்.

89. காட்டு மந்தாரை Bawhinia tomentosa L பெரிய இலைகளை உடையசெடி. சீக்கிரமாக வளரக்கூடியது. எல்லா மண்களிலும் வளரக் கூடியது. தண்ணீரும் எருவும் தேவை தோட்டங்களுக்கும் பங்களாக்களுக் கும், வேலிகளிலும் பயிரிடலாம். விதைகளிலிருந்து உற்பத்தி செய்ய வேண்டும். மஞ்சள் நிறமான பூக்களையுடையது.

90. Divi Divi (டிவிடிவி) இது தென் அமெரிக்காவை சேர்ந்ததாக இருந்தபோதிலும் தென் இந்திய மண்ணிற்கும் சீதோஷ்ணத்திற்கும் ஏற்ற தாகிவிட்டது. 3500 அடிவரை உயரமுள்ள சாதாரண மண்களிலும் கூட வளரும் சிறியமரம் காய்களின் தோல் பதனிட உபயோகம் உள்ளது. தரை மட்டத்திலிருந்தே கிளைக்கும் தன்மையுடையது ஆனதால் வேலிக்குமிகவும் ஏற்றது. விதையைக்கொண்டு உற்பத்திச் செய்யவேண்டும்.

91. Rhizophora mucronata காந்தல், சொரிப்பின்னை; எக்காலத்தி லும் பசுமை நிறைந்த மரம். வயல்களுக்கு பசுந்தழை உரத்துக்கு ஏற்றது. வருடத்தில் 3—4 தரம்தழை வெட்டி எடுக்கலாம். நிறை தழையையும் விறகும் கிடைக்கும். நாற்றைக்கொண்டு வளர்க்கவேண்டும்.

92. நீர்பருத்தி Hibiscus tilaceous மணல்பாங்கான இடங்களிலும் சமுத்திரக்கரை பிரதேசங்களிலும் நன்கு வளரக்கூடியது. நிறையதழை கொடுக்கக்கூடியது. விதைகளைக்கொண்டும் கிளைத்துண்டுகளைக் கொண்டும் நட்டு பயிராக்கலாம். வருடத்தில் 2–3 தடவை தழைகளை வெட்டி சேகரித்துக் கொள்ளலாம் தழை உரத்துக்கானது.

93. பாலிகா Grewia asiatica Palica இதன் தழை கால்நடைத் தீவனமாகும். மரம் வேலைகளுக்குதவும். பழம் உணவாகும் நல்லமழை கொண்ட வண்டல்மண் பிரதேசங்களில் நன்கு வளரும். விதையினுல் உற்பத்தி செய்யவேண்டும்.

94. கலிசி Ficus retusa பெரிய மரமாக வளரும். பட்டை மிருது வாக இருப்பதுடன் நார் எடுக்கவும் உபயோகமுள்ளது எல்லா இடஙகளுக் கும் ஏற்றது. விதையையும், கட்டையையும் கொண்டு நட்டு உற்பத்தி செய்யலாம் சாலைகளுக்கு ஏற்றமரம்.

95. Erythrina lithosperma (Dadap) முள்ளிலா முருங்கை. நிறைந்ததழை கொடுக்கக்கூடிய சாதாரண அளவுள்ள மரம். நட்டு 2 வருடங களுக்கு பிறகு வருடம் இருமுறை தழை வெட்டிக்கொள்ளலாம். தழை உரத்துக்கானது கட்டைவெட்டி நடவேண்டும். வெட்டியதினமே நட்டு வளர்க்கவேண்டும் 16—18 அடிக்கொள்ளுக நட்டுவளர்க்கலாம்.

96. கிளுவை (Balamodendron caudatum)— குறைந்த அளவு தழையும், நிழல் அதிகம் கொடுக்காததும், வேர் அதிகமில்லாததுமான மரம். முந்திரி, அவரை, புடல்போன்ற தோட்டங்களில் பந்தல் கால்களுக்கு ஏற்றது. வேலிகளிலும் நடலாம். விதைக்கொண்டு உற்பத்தி செய்யலாம் கட்டைவெட்டி நட்டும் வளர்க்கலாம்.

97. கொட்டை முத்து (Castor seed tree) இது சுமார் 10—15 அடிவரை வளரக்கூடிய சிறுமரம். நட்ட முதலாண்டிலிருந்து மகசூல்

கொடுக்க ஆரம்பிக்கும் இதன் விதையிலிருந்து எண்ணெ எடுக்கலாகும். சுமார் 15 அண்டுகள் வரை மசூல் கொடுக்கும் உயர்ந்த பிரதேசங்களிலும் நல்ல மழை நீர்பாசன வசதி உள்ள இடஙகளிலும் பயிரிடலாம்.

98. காட்டாமணக்கு (Jatropa curcas) வேலிக்காக பயிரிடலாம். சீக்கிறம் வளரக்கூடியது. பச்சைசெடியும் தீப்பிடித்து எரியும். வித்தைக் கொண்டும் கட்டைவெட்டியும் நட்டு வளர்க்கலாம்.

99 கொட்டைக்களா Carissa carandas L. எப்போதும் பசுமை நிறைந்த தழையுடை சிறுமரம். இதை வேலிகளில் உற்பத்திச்செய்யலாம் வெட்டிவிட்டால் அழகானபசும் உயிர்வேலியாகும் சீக்கிறமாக வளரக்கூடியது. காற்றை மறைக்கவும் உபயோகமுள்ளது எல்லா இடங்களுக்கும் ஏற்றது இதன் காய்கள் ஊருகாய்போட ஏற்றது. ருசியுள்ளது. வித்தைக் கொண்டு பயிராக்கலாம்.

100. Spathodea campanulata ஸ்பாதிடியா கம்பானுலேடா. அழகிய பெரிய மரம் சருஞ்சிவப்பு நிறப் பூ கொண்டது நிழல் கொடுக்கத் தக்கது. சாலைகளிலும் சோலைகளினும் நட்டு வளர்க்கலாம். வித்தைக் கொண்டு பயிரிடவேண்டும்.

கடமையில் கருத்து !

"கொடுத்தவன் கேளாத கடனும், உடையவன் பாராத பயிரும் பாழ்" என்றபடி எவ்வளவு வேலைக்காரர்கள் இருந்தபோதிலும் நாமே நேரில் கவனிக்காவிட்டால் தோட்டம் கெட்டுப்போகும். செடிகளுக்கு ஜலம்விடுவது, எருவு போடுவது, வேலிகளை சரிப்படுத்துவது முதலிய வேலைகளை அவ்வப்போதே செய்யவேண்டும். இல்லாவிட்டால் சிறிய தாமதமேகூட பெரிய நஷ்டத்தை உண்டுபண்ணும். பிறகு சரிப்படுத்துவதும் கஷ்டமாகும்."

சிறுகதை பகுதி

உழைப்பின் பலன்

மூலம்

வள்ளி! எ வள்ளி! உம்ம்......அப்பா அம்மா...... வள்ளி! இப்படிவா யேன் என்று முக்கலும் முனகலுமாகக் கூப்பிட்டான் கந்தன்.

என்னுங்க! அந்த வலி வந்திடுச்சா என்று கேட்டுக்கொண்டே வள்ளி அவன் மார்பில் கை வைத்துப் பார்த்தாள்.

'வள்ளி! என் வீணுகக் கவலைப்படுகிருய்? நான் இனி பிழைப்பது துர்லபம். வள்ளி! இப்படி உட்கார். இன்னும் சில மணி நேரங்கள்தான் நான் மூச்சுடன் இருப்பேன். ஆச்சு! நெருங்கிவிட்டது.'

'ஐய்யோ! அந்த வார்த்தை சொல்லாதீங்க மச்சான், எனக்கு ஒண்ணுமே புரியலையே. மயக்கமா வருதே'.

'வள்ளி! இதோ பார். மனுசன் எண்ணைக்காவது ஒருநாள் கண்ணை மூடவேண்டியதுதானே. என் கவலையெல்லாம் நம்ப பிள்ளைகளைப்பற்றித் தான். தத்தாரிப்பயலுவ. திங்கறதும் தூங்கறதுமா காலந் தள்ளுறுனுவ. பெரியவங்க தேடிவச்ச சொத்து என்ன இருக்குது. அந்த மாந்தோப்பு ஒண்ணுதானே நமக்கு சீவநாடி அதை இந்தப் பயலுவ நல்லா கவனிச்சாப் போதுமே; என்று புலம்பினுன் கந்தன்.

கந்தன் ஆூரில் ஒரு விவசாயி அவனுக்கு உள்ளதெல்லாம் அரை எக்கர் நிலம். கந்தனின் மாந்தோப்பு பெயர்பெற்றது. அருமையானதும் உயர்ந்த ரகமான மாங்கனிகள் கொடுக்கும் மரங்கள் நிறைந்தது அது. அதைத் தன் கண்கள்போலக் காப்பாற்றி வந்தான் கந்தன்.

ஆனுல் பிள்ளைகளோ ஊர்சுற்றிகளாகக் காலங்கழித்து வந்தார்கள்.

'உங்கப்பன் சாகக்கிடக்கிருன் சோம்பேறிக் கழுதைகளா குசாலாய் ஊர் சுற்றுங்களடா. பிள்ளை பிள்ளை என்று வாய் ஓயாமல் கூவிக் கொண்டிருக்கிருனே அந்தக் கிழவன்' என்று வள்ளி சத்தம்போடவே பையன்கள் சீட்டாட்டத்தை நிறுத்திவிட்டு தகப்பனிடம் ஓடினுர்கள்.

கந்தன் கண் திறந்தான் 'குழந்தைகளா—நான் கண்ணைமூட இன்னும் கொஞ்சநேரமிருக்கிறது. என்னமோ இந்தக்கிழவன் உளறுகிருனே யென்று அசட்டை செய்யாதீர்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். அதோ என் தோப்பு—என் கண்கள்—அதை நான் காப்பாற்றி வந்தது நீங்களும் செய்யுங்கள். அதில் தான் என்சொத்து இருக்கிறது. நன்ருக மண்ணைக்கொத்துங்கள், தண்ணீர் பாய்ச்சுங்கள், அந்த சொத்துகிடைக்கும் என்ருன் கிழவன்.

அப்படியே செய்வோம். நீங்க கவலைப்படாதிங்க என்ற ஒருமித்த குரலைக்கேட்ட கிழவனுடைய உதடுகள் மகிழ்ச்சியால் மலர்ந்தன. உயிரும் நிம்மதியாகப்பிரிந்தது.

கந்தனுடைய பிள்ளைகளின் குருட்டு எண்ணம் உருவமெடுத்தது. அப்பா என்னவோ புதையல் வச்சிருக்கிறாரடா—என்றான் ஒருவன் 'ஆம்' சோதனைசெய்து பார்க்கணுமடா என்றார்கள் மற்ற இருவரும் ஏக காலத்தில். ஒருவன் தோட்டத்தைச்சுற்றி வேலி அடைத்து காபந்துசெய்தான். மற்றொருவன் தண்ணீர் பாய்ச்சி நிலத்தை ஈரபடுத்தினான். மூன்றாமவன் கொத்த ஆரம்பித்தான். இப்படியாக பூமியை சோதனைச் செய்யப்போக தோட்டம் வளம்பெற்றது.

அந்தவருடம் நல்லமழை வேறு. காய்கள் காய்த்துக் குலுங்கின. ஏராள மான மகசூல் கண்டது. விலைவாசிகள் ஏறியதால் நல்லவிலை விற்றது மாங்கனிகளும் காய்களும். அதுவரை கண்டிராத பலன் கண்டார்கள் கந்தனின் பிள்ளைகள். பணம் குவிந்தது. கடைக்குட்டியான் கண்ணுசாமி பாடிக்கொண்டே :—

பூமியில் புதையலென்று சாமியை வாழ்த்தினோம்
புதையல்தனம் உழைப்பில்தான் என்று உண்மை கண்டோம்
இன்றுதான்.

நெற்றிவியர்வை நிலத்தில்விழ நேர்மையாக உழைத்திட்டால்
பற்றாக்குறை என்றபேச்சு பறந்திடுமே எங்கிலும்! என்றான்

[24-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும். பெரியதானபின் அதன் பலனை அனுபவிக்கத்தான் வேண்டும். பலன், அதினின்றும் கிடைக்கும் பொருளாகவோ—மரங்களாகவோ தேவைக்கும், மரத்திற்கும் தக்கபடி இருக்கும்—சிலசமயங்களிலே மரங்கள் இருக்கும் இடம் வேறு அத்தியாவசியமான காரியத்துக்கு தேவையிருக்கலாம்-அல்லது அதனால் இடைஞ்சலாக இருக்கலாம்; அச்சமயத்தில் அதை களையவேண்டியது அவசியமே. தழை, உரம், விறகு, மாம் இவைகளை வெட்டிக்கொள்ளத்தான் மரங்களை உற்பத்திச்செய்வது. அப்படி வெட்டும்போது அதற்கு பதில்மரங்களை நட்டு வளர்க்க வேண்டுமென்பதுதான் இவ்வன (மகோத்வ) வளர்ச்சி திட்டத்தின் நோக்கம். ஆகவே இத்திட்டத்தை குறைகூறும் தினத்தந்தி, விடுதலை இவர்களின் பேச்சும் போக்கும் நாட்டிற்கு நல்லதா அல்லது ஒப்புக்கொள்ளத்தக்கதா?

அவர்கள் உண்மையில் மக்கள்—நலனில் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கரையுள்ளவர்களாக இருப்பின் இவ்வியக்கம் வெற்றிபெற—மக்களிடையே உணர்ச்சியுண்டாக்க பிரசாரம் செய்தும், இவ்வியக்கத்திலுள்ள குறைகளை களைய யோசனைக்கூறியும், இவ்வியக்கத்தை ஆதரிக்கவும், வேண்டியதல்லவா கடமை. அவ்விதம் செய்யாது இவ்வியக்கத்தைப்பற்றி குறை கூறி கேலியும் கிண்டலும் செய்வதேன்?

இது மரங்களுடைய சிறப்பையும், அதன் அவசியத்தையும், அதை நட்டு வளர்ப்பதின் தத்துவத்தையும் பற்றிய அவர்களின் அறியாமையா? அல்லது இவ்வியக்கத்தை நடத்தும் இன்றுள்ள சர்க்கார் (காங்கிரஸ் கக்ஷி) மீதுள்ள ஆத்திரமா? இதுதான் நமதுவினா.

தங்கப்பழம்

(சிறு நாடகம்)

ரா. வை.

காட்சி—1

இடம்:—அஞ்சனபுரத்து அரண்மனை காலம்:—பகல்

தர்பார் மண்டபத்தில் விஜயஸிம்மன், மந்திரி பிரதானிகள் சூழ ராஜ்ய காரியங்களை விசாரித்துக்கொண்டிருக்கிறான்.

விஜயசிம்மன்:—மதிவாணரே நமது குமாரன் ராஜசிம்மனுக்கு இளவரசு பட்டம் கட்ட உத்தேசித்துள்ளோமே அதற்கான ஏற்பாடுகளெல்லாம் ஆகிவிட்டதா?

மதிவாணர்:—ஆம் மஹாராஜா! அதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்து கொண்டுதான் இருக்கிறோம். மிகவும் விமரிசையாக நடத்தவே நமது குடிமக்களும் விரும்புகிறார்கள். அதற்கான விசேஷ வரி கூட ஒன்று போட்டு வசூல் செய்துவருகிறோம்.

வி. சி:—சரி, நீர் இப்போது—(ஆராய்ச்சி மணியடிக்கும் சப்தம் கேட்கிறது. விஜயசிம்மன் திடுக்கிட்டு) மதிவாணரே என்ன அது? என்றுமில்லாத ஆராய்ச்சிமணி இன்று சப்திக்கிறது?

(காவல்காரன் ஓடிவருகிறான்)

காவல்காரன்:—மகாராஜா! (வணங்குகிறான்)

மதி:—என்னடா சப்தம் அங்கே? ஆராய்ச்சிமணியை யார் அடித்தது?

கா-ன் :—பிரபு! நமது குடிஜனங்கள் மகாராஜாவைக் காணவேண்டுமென்று கூட்டமாக வந்திருக்கிறார்கள். அவர்கள்தான் ஆராய்ச்சிமணியை அடித்தது, அதைச் சொல்லவே நான் ஓடிவந்தேன்.

வி. சி:—சரி, ஓடு அவர்களில் முக்கியமான சிலரைமட்டும் உள்ளே அழைத்து வா—போ.

கா-ன்:—உத்தரவுமகாராஜா! (காவல்காரன் போய் சில குடிஜனங்களை அழைத்துக்கொண்டு வருகிறான்)

குடிகள்:—மகாராஜா வணக்கம் (வணங்குகிறார்கள்)

வி. சி:—அன்பான குடிமக்களே! எழுந்திருங்கள்! உங்களுக்கு நேர்ந்த குறை யாது? எங்கே வந்தீர்கள்? என்ன வேண்டும்?

1-வது குடி:—மகாராஜா! நமது ராஜ்யத்தின் வட பாகத்தில் நந்தபுரம் வட்டத்தைச் சேர்ந்த குடிகள் நாங்கள், அங்கு 3 வருடங்களாக மழையே கிடையாது. ஏரி, குளம், கிணறு எல்லாம் வரண்டுவிட்டது.

2-வது குடி:—மஹாராஜா! 3 வருடமாக பயிரிட்டவை யெல்லாம் சாவி யாகிவிட்டது. நகை நட்டை வித்தோம், ஆட்டேமாட்டே வித்தோம். மரம் மட்டையெ வெட்டி வித்தோம். கடைசியாக நிலத்தகூட வித்து விடும்படியா போச்சு.

3-வது:— மஹாராஜா! மக்களுக்கு உண்ணஉணவில்லே! குடிக்க தண்ணி யில்லே, உடுக்க உடையில்லே. உதவி செய்வாரும் யாருமில்லே.

4-வது:— ஜனங்க பஞ்சத்தாலும், பட்டினியாலும், செத்துமடியுதுங்க இந்த சமயத்துலே அரமனே அதிகாரிங்கவேரே வரி வரிண்ணு வழி மடக்கி கசக்சி பிழியிருங்க.

5-வது குடி:— என்ன செய்வோம் மஹாராஜா! எழைங்களே காப்பாத்துங்க.

வி. சி:— மஹாஜனங்களே! பயப்படாதீர்கள். தெரிந்து கொண்டோம் உங்கள் கஷ்டங்களே. உங்களுக்கு என்ன செய்யவேண்டும்.

1-வது குடி:— பிரபு! வரிகளே தள்ளவேண்டும்.

2-வது குடி:— பயிரிடவும், குடிக்கவும் தண்ணீருக்கு வழி செய்யணும்.

3-வது குடி:— ஆடுமாடு வாங்கணும்.

4-வது குடி:— வெரெ வித்து வாங்கணும்.

5-வது குடி:— இதுக்கெல்லாம் பணகாசி கொடுத்து ஒத்தாசை பண்ண ணுங்க.

வி. சி:— குடிகளே கவலேவேண்டாம்! நாமே நேரில் வந்து உங்கள் குறை களே தீர்க்கிறோம்! நீங்கள் போகலாம்.

குடிகள்:— சந்தோஷம் மஹாராஜா! எழே மக்களே காப்பாத்துங்கோ. ஆண்டவன் உங்களே காப்பாத்துவார் (வணங்கிவிட்டு போகிறார்கள்)

வி. சி:— மதிவாணரே பயணத்துக்கு எற்பாடு செய்யுங்கள்.

மதி:— மஹாராஜா உத்தரவு! (போகிறார்)

திரை.

காக்ஷி—2

இடம்:—நந்தபுரத்து வெளிப்புரம் காலம்:—கடும்பகல்

(விஜயசிம்மனும் மதிவாணரும் குதிரைமீது வந்துகொண்டிருக்கிறார்கள்.)

வி. சி:—மதிவாணரே இதென்ன கொடுமை! எங்குபார்த்தாலும் வெட்ட வெளியாகிவிட்டதே. கிணறு, குட்டைகளெல்லாம் வறண்டுபோய் இருக்கிறது. மரம்மட்டைகளெல்லாம் பட்டுப்போயும், வெட்டப் பட்டுமிருக்கின்றனவே பூமிகளோ பாளம்பாளமாக வெடித்துப்போய் இருக்கிறது. பச்சைப்பாய் விரித்ததுபோன்ற அழகான இடம் இன்று சுடுகாடுமாதிரி காணப்படுகிறதே!

மதி :—ஆம் மஹாராஜா! அதனாற்றான் மக்கள் வீடு வாசல்களையெல்லாம் விட்டுவிட்டு வெளிதேசத்திற்கு போய்விட்டிருக்கிறார்கள். என்ன செய்வார்கள் பாபம்!

வி. சி :—அப்பப்பா! வெய்யலின் கொடுமை தாங்க முடியவில்லையே! களைப்பாக இருக்கிறது.

மதி :—எதாவது ஊர் தெரிகிறதாஎன்று இன்னும் சிறிது தூரம் சென்று பார்ப்போம்.

வி. சி :—உம்! (கொஞ்சதூரம் போகிறார்கள்) ஐயையோ--இனி என்னால் ஒரு அடிகூட நகராமுடியாது பசியும், தாகமும் வாட்டுகிறது! நீர் போய் பசிக்கும், தாகத்துக்கும் எதாவது கொண்டுவாரும்! உம்--போம் போம்! ஓடும் உம்!

மதி :—மஹாராஜா! கொஞ்சம் பொருத்துக்கொள்ளுங்கள். (சுற்றி பார்க்கிறார்) இதோ! நந்தபுரத்தருகே வந்துவிட்டோம. ஆம்! அதோ ஒரு தோபபு தெரிகிறது அங்கேசென்று இளைப்பாருங்கள்; நான் ஊரில் சென்று எதாவது கிடைக்குமா என்று பார்த்துக்கொண்டு வருகிறேன்.

வி. சி :—உம்–சரி–போவோம்! (மெதுவாக தோட்டத்தருகில் வந்து சேருகிறார்கள். ஒரு கிழவன் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிக்கொண்டிருக்கிறான்)

மதி :—எ பெரியவரே! எய்!

(கந்தன் என்கிற கிழவன் இருகைகளையும் கண்களுக்கருகில் பிடித்துக் கொண்டு உற்று பார்க்கிறான்)

கந் :—யாரைய்யா கூப்பிடறது?

மதி :—எ! பெரியவரே உன்னைத்தான்! இங்கே வா.

(கிழவன் தள்ளாடிக்கொண்டே அருகில் வருகிறான்)

மஹாராஜா மிகவும் களைப்புடன் வந்திருக்கிறார் நல்ல பழஙகளும் தண்ணீரும் வேண்டும்—சீக்கிறம் கொண்டுவாய்யா

கந் :—யாரு யாரு! மவாராசாவா! நம்மவாராசாவா! நா எம்மா புண்ணியஞ் சேஞ்சிருக்கேனய்யா! உக்காருங்கய்யா இதோ நொடியிலே வந்துடுரேன்.

[கிழவன்போய் ஒரு கூடையில் தங்க நிறமுள்ள மாம்பழங்களும், ஆரஞ்சு, கொய்யா முதலிய பழங்களும், இளநீரும், ஒரு பானையில் சுத்தமான தண்ணீரும் எடுத்துக்கொண்டு வருகிறான்.]

கிழ:—இந்தாங்கய்யா—சாபபிடுங்கய்யா! (அரசன் முன்னிலையில் வைத்து வணங்கி தூரநிற்கிறான்). விஜயசிம்மனும் மதிவாணரும் பழங்களை சாப்பிட்டு இளநீரை குடிக்கிறார்கள்)

வி.சி:—ஆஹா! பேஷ் பேஷ்! அருமையான பழங்கள் இனிமையான இளநீர் என்ன ருசி! என்ன ருசி! அபபாடி–பசியும் தீர்ந்தது தாகமும் பறந்தது! உயிரும் வந்தது? உணர்ச்சியும் பெற்றேன்—

மதி:—மஹாராஜா இளநீரைவிட ருசியாக இருக்கிறது இந்த தண்ணீர்— இவைகளெல்லாம் இக்கிழவனின் உழைப்பால் கிடைத்த பொருள்கள். உழைப்புதான் இனிக்கிறது மஹாராஜா!

வி. சி:— ஆமாம்! எங்கே பார்த்தாலும் வறண்டுபோய், சுடுகாடு மாதிரி இருக்கும்போது இந்த தோட்டம் மட்டிலும் இவ்வளவு நன்ருக இருக்கிறதே! அது எப்படி? ஒரு இடத்தில்கூட ஒரு சொட்டு தண்ணீர்காண வில்லே. இந்த தோட்டத்தில் மட்டும் இவ்வளவு இனிமையான ஜலம் இருக்கிறதே அது என்?

கந்:— தண்ணீருக்கு மரங்கதான் ஆதாரம்! மரங்களுக்கு தண்ணிதான் ஆதாரம் கெணத்துலே இருக்கர தண்ணியே மரங்க வாடி வதங்கி போகாமே மொண்டு ஊத்திவரேன். காத்து வெய்யிலு அடிச்சி கிணத்துலே ஊத்து நின்னுபோய், தண்ணி வரண்டுபோகாமெ மரங்க காப்பாத்திக்கிட்டு வருது. மரத்தெ கெணரு காப்பாத்துது—கிணத்தெ மரம் காப்பாத்துது. இதெ தெரிஞ்சுகாதே நம்ம செனங்க மரத்தெயெல்லாம் அழிச்சி புட்டாங்க, அவங்களும் கெட்டுபுட்டாங்க, மாவா ராசா!.

வி. சி:— சரிதான். இந்த சின்னச்செடிகளே நட்டுக்கொண்டிருக்கிறீரே இவைகள் எப்போது பலன் கொடுக்கும்.

கந்:— இதுக்கு இன்னும் அஞ்சு வருசம் போவணுங்க.

வி. சி:— இப்போது உமக்கு வயதென்ன?

கந்:— அறுவத்தஞ்சி ஆயிபோச்சுங்க!

மதி:— சரிதான் (நகைத்துக்கொண்டே) எனய்யா பெரியவரே! 65 வயதில் செடியை நடுகிறீரே இன்னும் 5 வருடங்கள் உயிருடன் இருந்து இதன் பலனே அனுபவிக்க முடியுமா.

கந்:— ஐயா! நான் இண்ணும் அஞ்சுவருசம் உசுருடன் இருப்பேனுண்ணு நெனச்சிகிட்டு இந்தச்செடியே நடவிங்க. அதோ தெரியுதே அந்த மரமெல்லா எங்கப்பென், பாட்டன் நட்டதுங்க! அவங்க அனுபவிச்சாங்களோ இல்லியோ எனக்கு தெரியாது. ஆனு நான் இதுலே தழெயெ வெட்டினேன்; காயா, பழமா சாப்பிட்டேன்; மழெமாரி இல்லாதப்போ கட்டையா வெட்டி வித்தேன்; இந்த மாத்தே நம்பியே எங்காலத்தெ தள்ளிபூட்டேன்; பெரியவங்க இந்த மரத்தெயே வச்சிருக்காட்டி, நானு மானமா பொளச்சிருக்கவே முடியாதுங்க!

வி. சி:— ஆமாம்! அதற்கும் நீ மரம் நடுவதற்கும் என்ன சம்பந்தம்'

கந்:— சாமி எனக்கோ வயசு ஆயிபோச்சு. இண்ணிக்கோ நாளேக்கோ செத்துப்போவலாம். அந்த மர்த்துக்கும் வயசு ஆயிடுச்சு நாளேக்கோ பின்னிக்கோ காய்க்காமெ பூடும் அல்லாட்டி பட்டுப்போவலாமுங்க.

வி—சி:—அதனல்?

கிழ:—அதனுலெதானுங்களெ இந்த செடிங்களே நட்டுகிண்ணிருக்கேன்.

மதி:—அதெப்படி?

கந்:—இந்த தோட்டம் எங்க பரம்பரெ சொத்துங்க. பத்து தலெமொறையா மாறி மாறி வருதுங்க. இப்பொ நானு செத்துப்போயி, இந்த மரங்களு பட்டுப்போச்சுன்னு இந்த தோட்டம் அழிஞ்சி சுடுகாடு மாதிரி ஆயி பூடுங்க. அப்பொ என் தலெமொறையிலே இந்த தோட்டம் அழிஞ்சிப் போச்சின்னு பேரு வந்துடுங்க! பெரியவங்க ரொணத்தெ சாப்பிட்டு அவங்கபேரெ காப்பாத்தாதபோனு அவங்க சேஞ்ச உவகாரத்தெ மறந்த பாவம் வந்துடுங்க. இந்த தோட்டத்தெ அழியாமெ என் வாரிசுகிட்டெ ஒப்புகொடுக்காட்டி என் புள்ளெங்களுக்கு செய்யவேண்டிய கடெமெயெ செய்யாத பாவம் வந்து சேருங்க. இந்தச்செடிகளை நட்டு, தோட்டத்தெ அழியாமெ காப்பாத்தி வந்தா—உசிரோடே இருந்தா நானனுபவிச்சுடு வேன், செத்துட்டா என் புள்ளெங்கெ அனுபவிப்பாங்க எனக்கும் நல்ல கதி கிடைக்குமுங்க.

வி—சி:—அதென்னப்பா நல்ல கதி?

கந்த:—மரங்க நட்டா, மனுசருக்கு, மிருகங்களுக்கு, பக்ஷிங்களுக்கெல்லா உப காரமுண்ணுசொல்வாங்க; அந்த மரங்க உசிரோடே இருநது பூ, காய், பழம் காய்க்கறெவரெ நட்டவங்க மோச்சத்துலே இருப்பாங்கண்ணு பெரியவங்க சொல்லியிருக்காங்களே மரம் நட்டு உசுரோடே இருந்தா எனக்கு மாசூலு கெடைக்கும்-செத்துப்போன மோச்சம் கெடைக்கும் இல்லிங்களா?

வி—சி:—நன்று நன்று! கந்தப்பா உன் செயலை மெச்சினேம்! உனது உயரிய நோக்கம் வெற்றியடைவதாக. இந்த தள்ளாத வயதிலே நீ என் தனியா கஷ்டப்படுகிறாய் உனக்கு பிள்ளைகுட்டி இல்லையா பாவம்.

கந்தப்பன்:—மவாராசா! என் பிள்ளைகுட்டிங்க எல்லாம் பஞ்சத்துலெ பொளப்பே தேடி போயிட்டாங்க—இந்த வேலையெவிட வண்டி இளுக்கறதும் மூட்டெ தூக்கறதும் மேலுண்ணு நெனச்சிகிட்டாங்க. இங்கெ கஷ்டப்பட்டு சொந்தமா கால் வயிறு சாப்பிடறதெவிட அங்கெ வண்டியிழுத்து நாலணு சம்பாரிச்சி அரெவயிறு சாப்பிடறது சொவம்ணுபூட்டாங்க. நானும் எம் பொஞ்சாதியுந்தான் இங்கே இருக் கோம். மருமவவந்தா எம்புள்ளே எனக்கு சொந்தமில்லாதெ போச்சு—பஞ்சத்துலே தனம் தவசமெல்லா போச்சு—சொந்தக்காரரெல்லா போயிட்டாங்க. ஆனு இந்த மரங்க என்னெவிட்டு போவல்லிங்க. அதனுலெ மரங்களெவிட்டு நாபோவலிங்க. இந்த மரங்கதான் எனக்கு புள்ளெகுட்டி, சொந்தக்காரு எல்லா என் உயிரே அதுவெதானுங்க. இன்னுரண்டு பழங்க கொண்டாரட்டுங்களா?

வி. சி:— போதும் போதும் வேண்டாம். கந்தப்பா உன்னைப்போல் ஊருக்கு ஒருவர் இருந்தால்போதும் பஞ்சம் பட்டினியும் பறந்தோடிப் போகும்.

கந்த:— மவாராசா! இந்த எழெதோட்டத்து இம்புட்டு தூரம் வந்ததே எம்புண்ணியம் இன்னும் வேறே புகழ்றீங்களே—

வி. சி:— இல்லை கந்தப்பா! நான் அரசன்தான் வெண்டிய செல்வமிருக் கிறது. இட்டவேலையைச் செய்யவேண்டிய ஆட்களிருக்கிறது. ஆனல் இந்த சமயத்திற்கு அவைகள் உபயோகப்பட்டதா?-இல்லையே- என்பசியும் தாகமும் தீர்ப்பதற்கு உம்முடைய உழைப்பும், தோப்பு தான் உதவியது இல்லையா?

கந்த:— மஹாராசா—

அ. சி:— கந்தப்பா! நீ ஏன் இங்கு தனியாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். இங்கு வேறுயாராவது ஆட்களை வைத்துவிட்டு என்னுடைய அரமனைக்கு வந்துவிடேன்.

கந்த:— இல்லெ மவராசா! மன்னிக்கணும். அது மட்டும் என்னாலாகாது, தலைமுறை தலைமுறையாக பாதுகாத்துவந்த இந்த தோட்டம் தான் என் உயிர் "உடையவன் பாக்காத பயிரும் கொடுத்தவன் கெக்காத கடனும் வீணு" ன்னு சொல்லுவாங்க நூறு ஆளு இருந்தாகூட நாஒருத்தன் செய்யறவேலெ செய்ய மாட்டாங்க. அம்மா அக்கரையா பாக்க மாட்டாங்க. இந்த பஞ்சகாலத்தில் எம்புள்ளேங்கே கூட பூட்டாங்க நாஒருத்தன் போகாதெ இங்கே இருந்து இதெ காப்பாத்தி வைச்சதாலெதானே உங்களுக்கு உதவியாக இருந்துச்சுஙக—இல்லிங்களா மவாராசா?

வி. சி:— பேஷ் நீ சொல்லுவது சரிதான்! கந்தப்ப! நீயே உண்மை உழைப்பாளி சந்தேகமே யில்லெ, இந்த தோட்டத்திலிருக்கும் உன் பற்றுதல்—மரங்களின் மேலுள்ள உனது அன்பு, எவ்வளவு என்பதை நன்ருக தெரிந்துக்கொண்டேன்.—(மந்திரியைப் பார்த்து) என்ன மதிவாணரே! உமது அபிப்பிராயம் என்ன?

மதி:— ஆம் மஹாராசா கந்தப்பனின் தங்கமான பழங்கள் தான் நமக்கு இப்போது பிரயோசனப்பட்டது. இந்த வெட்டவெளியிலே இந்த தோட்டமல்லவா நமக்கு உதவியது. இம்மாதிரி தோட்டங்கள் எங்குமிருந்தால் எவ்வளவு சௌகர்யமாக இருக்கும்.

வி. சி:— அதற்கு என்ன யோசனை செய்கிறீர்.

மதி:— இம்மாதிரி தோட்டங்களை விருத்தி செய்ய நமது ராஜ்யத்தில் எல்லாருக்கும் உதவிசெய்து ஊக்கமளிக்கவேண்டும்; நல்ல தோட்டங்களை விருத்தி செய்பவர்களுக்குள் போட்டிவைத்து பரிசுகள் வழங்கவேண்டும் மரங்களை வெட்டி அழிப்பவர்களை தண்டிக்கவேண்டும். அப்போது தான் பாலைவனங்கள் மாறி எங்கும் இம்மாதிரி சோலை வனங்களாகும்.

வி. சி:— பேஷ்! மதிவாணரே சரியானயோசனை — அந்த முதல் பரிசு நமது கந்தப்பனுக்கே அளிப்போம்.

மதி:— ஆம்—மஹாராஜா! நல்ல முடிவு.

வி. சி:— கந்தப்பா அடுத்தமாதம் பௌர்ணமியன்று நடக்கும் கொண்டாட்டத்திற்கு உன் தோட்டத்திலுள்ள பழங்களைக்கொண்டு வரவேண்டும்.

கந்த:— உத்தரவு மவாராசா. அப்படியே. இந்த தோட்டத்து பழங்களெல்லாம் உங்க காலடியிலேயே காணிக்கையா வச்சுடறேன்-உங்கள் சித்தம் என்பாக்கியம்.

வி. சி:— மதிவாணரே புறப்படும் (கந்தப்பனை பார்த்து) கந்தப்பா போய் வருகிறோம் (போகிறார்கள்)

காக்ஷி—3

இடம்:—அஞ்சனபுரம் அரண்மனை காலம்:—பகல்

(அரச சபை அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. இளவரசனின் பட்டாபிஷேக விழா மிக கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. அநேக பிரபுக்களும், அரசர்களும், குடிஜனங்களும் காணிக்கைகளை கொண்டுவைத்து குவித்துக்கொண்டிருக்கின்றனர்.)

வி—சி:—நடனம் நடக்கட்டும்.

நாட்டி:— ஆடுவோமே பள்ளு பாடுவோமே—நாம்
ஆனந்த சுதந்திர மடைந்தோமென்று (ஆடு)
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்.

[நாட்டியமாடிக்கொண்டிருக்கிறாள் சபையிலுள்ளோர் மெய் மறந்து நாட்டியத்திலேயே லயித்துப்போயிருக்கிறார்கள். ஒரு காவலாளி ஓடி வருகிறான்]

காவ:—மகாராஜா! (வணங்குகிறான்)

வி—சி:—என்னடா அது—என்ன சமாசாரம்?

கா—ன்:—அரசே! யாரோ ஒரு கிழவன் ஒரு கூடையுடன் வாயிலில் காத்திருக்கிறான். காவலாளிகள் உள்ளே விடவில்லை. அவன் மகாராஜாவை பார்க்கவேண்டுமென்று பிடிவாதம் செய்கிறான். பயித்தியக்காரன்போல தோன்றுகிறது.

சேனாதிபதி:—சே, சே போடா! இதென்னடா பூசை வேளையில் கரடி...... போ, அந்தப் பயித்தியத்துக்கு பிச்சை போட்டனுப்பு—போகாவிட்டால் உதைத்து அனுப்பு . போ.

உங்களுக்குத் தெரியுமா?

"மரம் எத்தனையோ வழிகளில் பயன்படுகிறது. அதனால் தேவையும் அதிகம். காடுகள் அழிந்துபோகாமல் காக்க விவசாயிகளும் பொதுமக்களும் ஒத்துழைக்கிறார்கள். இம் முயற்சியிலே 1941-ல் வாஷிங்டன் ராஜ்யத்திலே ஒரு கம்பெனி மரம் வெட்டிய இடத்தில் மரம் நடும் 'மரப்பண்ணை' திட்டமொன்றை ஆரம்பித்தார்கள். பழைய மரங்களை வெட்டிய இடத்திலே புதியமரம் வைத்து வளர்ப்பதின் நோக்கம் என்னவென்பதை எழுதி விளம்பரங்கள் போட்டார்கள். அதுமுதல் அந்நாட்டிலே மரப்பண்ணைகள் ஏராளமாக ஏற்பட்டு பிரதிவருடமும் 30 லக்ஷம் ஏக்கரில் மரங்கள் நடப்படுகின்றனவாம்."

வி—சி:—என்ன என்ன! (காவலாளியைப் பார்த்து) எய் இரு! (மந்திரியைப் பார்த்து) கந்தப்பனுக இருக்குமோ, மதிவாணரே! போய் பார்த்து அழைத்துவாரும்.

மதி:—அப்படியே மகாராஜா! [மதிவாணர் போய் பார்க்கிறுர் கந்தப்பன் கூடையுடன் இருக்கிறுன் மந்திரியாரைக் கண்டதும் காவலாளிகள் விலகிப்போகிறுர்கள் கந்தப்பன் வணங்குகிறுன்—கந்தப்பனே சபைக்குள் அழைத்து வருகிறுர்—சபையிலுள்ளவர்கள அருவருப்புடன் இமை கொட்டாது கிழவனேயே பார்க்கிறுர்கள்].

வி. சி:—கந்தப்பா வா! எங்கே உன் பழங்கள் ?

கந்த:— மகாராஜா! இதோ கொண்டுவந்திருக்கிறேன்! (கூடையிலுள்ள தங்கநிறமான பழங்களே அரசன்முன் எடுத்து வைக்கிறுன்) ஏழையின் காணிக்கையை ஏற்றுக்கொள்ளுங்கள் மகாராஜா! (வணங்கி பயபக்தியுடன் ஒதுங்கி நிற்கிறுன்)

அ—சி:—கந்தப்பா சந்தோஷம்! இந்த ஆசனத்தில் அமர்ந்துகொள் (கந்தப்பன் ஒரு நாற்காலியில் உட்காருகிறுன்)

வி- சி:—சபையோர்களே! இன்றைய கொண்டாட்டத்திற்கு அன்புடனளித்த காணிக்கைகளுக்கு மிக்க வந்தனம் ஆனுல் ஒரு விஷயம் இந்தக் காணிக்கைகளுள் மிகச் சிறந்தது இந்தக்கூடையில் உள்ளவை தான். அவை உங்களுக்குச் சாதாரணமாகத் தோன்றலாம். ஆனுல் அவை எனக்கு மிக உயர்ந்தவையாகும். அவை இந்தக் கிழவருடைய உழைப்பினுல் கிடைத்த உயர்ந்த கனிகளாகும். அது இபபொற்கனிகளேவிட உயர்ந்தவையாகும். இவரை நமது புத்திசாலி காவலாளிகள்

விஞ்ஞான அதிசயம் !

இன்று நமக்கு வேண்டிய வர்ணங்களே மரங்களின்மேல் அல்லவா பூசி வருகின்ருேம். ஆனுல் ரஷிய விஞ்ஞானி ஒருவர் இயற்கையாகவே வேண்டிய வர்ணங்களே (பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள்) கொடுக்கும் முறையொன்றை கண்டுபிடித்துள்ளாராம். அதாவது நமக்கு விருப்பமுள்ள (பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள்) வர்ணங்களே ஒரு தொட்டியில் கரைத்து மரத்தின் அருகில் வைத்துக்கொள்ளவேண்டும், பிறகு ஷி மரத்தின் கர்ப்பம்வரை துவாரம் ஒன்று செய்து அதில் ஒரு ரப்பர் குழாயை பொருத்தி கார்க்கினுல் கெட்டியாக அடைத்துவிடவேண்டும். ஷி குழாயின் மற்ருெரு முனையை சாயத் தொட்டியில் பொருத்திவிடவேண்டுமாம். நாளடைவில் ஷி சாயத்தொட்டியில் உள்ள சாயத்தை ஷி மரம் உறிஞ்சிக் கொண்டு, அந்த மரம் பூராவும் தொட்டியிலுள்ள சாயத்தைப் போன்ற நிறமுள்ளதாகிவிடுகிறதாம். இவ்விதமே வேண்டிய மரத்தில் வேண்டிய நிறத்தை ஏற்றிக்கொள்ளலாம் எனக் கூறப்படுகிறது.

பயித்தியமென்றார்கள், இவர் பயித்தியமல்ல. இவரை பிடித்திருப்பது தான் மரப்பைத்தியம். இந்தப் பயித்தியமே உதவியிராவிட்டால் நான இன்று இங்கு இருக்கவும் முடியாது. இந்தக் கொண்டாட்டம் கொண் டாடவும் முடியாது. இந்த உண்மை உழைப்புக்குத்தான் பைத்தியக் காரப்பட்டம்! இம்மாதிரி பைத்தியம் நம் நாட்டில், கிராமத்துக்கொன்று- வீட்டுக்கொன்று இருந்தால் இன்றைய உணவுப்பஞ்சம் நம் நாட்டில் தலைகாட்டியிருக்கவே முடியாது. நாகரீகமும் சோம்பேரித்தனமும் நம்மை மேடையேற்றி நகைக்கிறது. உழைப்பும் ஊக்கமும் இருந்தால் உண்ண உணவும் உடையும் கிடைக்காமலா போகும்? நமது நாடு விவ சாய நாடு; விவசாயத்திற்கு இன்றியமையாதது தண்ணீர்—தழை உரம் மண் வளம்—தண்ணீரை (மழையை) விருத்தி செய்வது மரம்—தழை உரம் தருவது மரம்—மண் அரிப்பை தடுத்து மண்வளத்தை விருத்தி செய்வது மரம். ஆரோக்கியமான காற்றைத்தருவது மரம்—சத்துள்ள பழ உணவைத் தருவது மரம்; கோடையில் இளைப்பார உதவுவதுமரம்; குளிர்ந்த பானத்தை (இளநீர்—நுங்கு) தருவது மரம்; ஆனால் இவ்வளவு பெருமையுள்ள மரத்தை வெட்டி பாழாக்கிவிட்டோம். அதன் பெரு மையை உணர்ந்து புதிய மரங்களை நட்டு வளர்த்தோமில்லை: நாட்டின் உயிர்நாடி மரம்தான். மரம் செழிக்க மழை பொழியும்—மாநிலம் செழிக்கும்; இந்த உண்மையை உணர்த்தியவர் உங்கள் மத்தியில் இருக் கும் இபபைத்தியந்தான்—என உயிரை காபபாற்றியதும் இந்த பைத்தி யம்தான். ஆகவே இந்தப் பைத்தியத்திற்கு பரிசாக இந்த **தங்கப் பழத்தை** அளிக்கிறோம்'' (ஒரு தங்க மாம்பழம் பரிசாக கந்தப்ப னுக்கு அளிக்கப்படுகிறது.)

சமீபத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது, மரத்தை வெட்டாதீர்கள். பழுக்கவிடுங்கள், பழுத்தால் அனை வரும் பகிர்ந்து சாப்பிடுவோம் என்று கூறினாரல்லவா? அதைத் தான் நமது சைத்திரிகர் சித்தரிக்கிறார்.

மதி:—சபையோர்களே நமது ராஜ்யத்தில் பிரதிவருடமும் வைகாசி பௌர்ணமியன்று இந்த தங்கப்பழக் கொண்டாட்டம் நடத்தப்படும்—நமது ராஜ்யத்தில் அதிகமான மரங்களும் நல்ல உயர்ந்த கனிகளும் உற்பத்தி செய்பவருக்கு ஒரு தங்கப்பழம் பரிசாக அளிக்கப்படும். நமது பிரஜைகள் எங்கும் மரங்கள் நட்டு தங்கமான பழங்களை உற்பத்திசெய்து தங்கப் பழத்தை பரிசு பெறுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

(உட்காருகிறார்)

சேனாதிபதி:—(ராஜபிரகடனத்தை படிக்கிறார்.)

இதனால் அஞ்சனபுர சாம்ராஜ்ய மக்களுக்கு அறிவிப்பது யாதெனில்:—இன்றுமுதல் நமது ராஜ்யத்துக்குள் எவரும் உத்திரவன்னியில் கனி தரும் மரங்களை வெட்டக்கூடாது. அப்படி ஒரு மரம் வெட்டவேண்டுமானால் 2 மரங்களை உற்பத்திசெய்து காட்டி, அனுமதி பெற்றுத்தான் வெட்டவேண்டும். ஒவ்வொரு ஏகர் நிலத்திலும் குறைந்தது 2 மரம் வைத்திருக்கவேண்டும், ஒவ்வொரு கிணற்றைச்சுற்றியும் 2 மரங்கள் வைத்திருக்கவேண்டும். சாலைகள், குளம் முதலிய பொது இடங்களிலுள்ள மரங்களை வெட்டுவது பெருங் குற்றமாக பாவித்து கடுந் தண்டனை விதிக்கப்படும். ஒவ்வொரு வருடமும் இன்றைய தினம் போல் ஒரு சபை கூடும் நல்ல மரங்களையும், அதிக மரங்களையும் நட்டவர்களுக்கு சன்மானங்கள் வழங்கப்படும். முதன்மையாக மதிக்கப் படுபவருக்கு ஒரு தங்கப்பழம் சன்னதாக அளிக்கப்படும்.

—விஜயசிம்மர்

நாட்டி:—உழைப்பும் உண்மையும் உண்டானபோது,
உலகம் செழிக்கும் உண்மையான நீதி,
விவேகமும் வீரமும் விளங்கிய விஜயன்,
விளக்கினான் பெருமையை விழிப்புறச் செய்தான்,
ஆதலால் அன்பர்காள் ஆர்வமுடன் உழையுங்கள்,
ஆண்டவன் அருளால் அடைவீர் இன்பத்தை.

எல்லோரும்:—ஜயவீஜயீபவ! மங்களமுண்டாகட்டும்!

(எல்லாரும் எழுந்திருக்கிறார்கள். சபை கலைகிறது)

திரை விழுகிறது.

சுபம்.

Reg. No. M. 5790 KRISHIKAN (NEW SERIES) JULY–OCT. 195

நாடும் நாமும் செழிக்க

இன்றே

★ உரத்துக்குத் தழை

★ உலைக்கு விறகு

★ உண்ணக் கனிகள்

★ உழவுக் கருவிகள்

★ உயிர் வேலிகள்

★ ஊற்றுக்கண் பெருக

மரம் நடுவோம் வாரீர்.

பல தினுசு மரங்களின் விதைகள், செடிகள்
எருதுகளால் வேலை செய்யப்படும் கவலை
பம்பு செட்டுகள், விவசாயக் கருவிகள்
புஷ்பம், காய்கறி விதைகள்
தேவைக்கு எங்களிடம்
விசாரிக்கவும்

மானேஜர்
"பயிர்த்தொழில் பண்ணை"
ஹனுமந்தபுரம் - அன்னியூர் P. O., - விழுப்புரம் S. I. R.

Edited and Ppublished by A. S. Venkata Rao (Payirthozil Pannai)
Hanumanthapuram, Anniyur P. O., Villupuram S. I. R.
Printed at the Hanuman Printing Works, Villupuram.